ஓம்

பரப்பிரஹ்மணே நம:

பிரபுலிங்கலீலை வசனம்

இது

காஞ்சிபுர நிவாஸி

வித்வ சிரேஷ்டராகிய

ஸ்ரீமாந்-இராமயோகிகள் அவர்களால்

வசனரூபமாக எழுதப்பெற்றது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

[3-வது பதிப்பு]

1921

விலை ரூபா 1

[All Rights Reserved]

உ

சிவமயம்

முகவுரை

அநாதிமுத்த சித்துருவாயுள்ள பரசிவப் பிரபுவை அநாதிபெத்த சித்துருவாயுள்ள ஜீவர்கள் அவிச்சையினின்று நீங்கி யடைந்தொன்று யாநந்தமயமாய் விளங்கும் வகையை யடைவுபடக் கூறும் நூல்கள் வேதாகமங்களாம். இவைகளே முதனூலெனப்படும்.

இம் முதனூல்களின் கருத்தை வடமொழியில் வல்லா ரல்லாதாரும் உணர்ந்து நன்னெறியைக் கைக்கொண்டொழுகி யுய்யுமாறு, வடமொழியிலும் தேசபாஷையிலும் வல்ல மகான்கள் வடமொழியிலே யன்றித் தேசபாஷையிலும் வழிநூலும் சார்புநூலும் அருளியதோடு, தம்முடைய கருத்தை நியாயவாயிலாக ஸ்தாபிப்பதாயும், தம்முடைய கருத்திற்கு மாறுபட்டவர்களது கருத்தை நியாயவாயிலாக மறுப்பதாயுமுள்ள எதிர் நூலும் செய்தும் வைத்தனர்.

இவ்வாறுள்ள நூல்களில். பிரபுலிங்கலீலையும் ஒன்று. இதற்கு முதனூல் கன்னடபாஷையி லுள்ளது. அதனது காலமும் ஆசிரியர் பெயரும் அறிதற்கேது கிடைக்கவில்லை.

தமிழிலுள்ள பிரபுலிங்கலீலையின் காலம் ஏறக்குறைய 290-வருஷங்களா மென்று தெரியவருகின்றது. இதனை,

"பார்கெழு சகாத்த மூவைஞ் ஞூற்றெழு பானான்காவ
தாகிய கரநா மங்கொ ளாண்டுறு விடை ஞாயிற்றிற்
சீர்கெழு மல்ல மன்றன் றிருவிளை யாடற் காதை
கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண் டியம்பி னேனே.

என்று பிரபுலிங்கலீலை மான்மிய கதியிற் கூறுவதாலறிக.

இந்நூலை ஆக்கியோர் துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகள். இவர் கவிச்சக்கரவர்த்திக ளென்று எண்ணப் பட்டவர்களுள் முதன்மையாக வைக்கக் கூடியவர்களி லொருவராவர். இம்மகான் செய்தருளிய நூல்களொவ்வொ ன்றும் மிகுதியும் காப்பியத்திற் குரியதென்னும் வியஞ்சக த்தை யுடைத்தாயிருக்கும். இப்பெரியார் வீரசைவத்தில் அபேதவாதத்தை (அதாவது அத்துவித சித்தாந்தத்தை) மேற்கொண் டொழுகி, அதனது ஏற்றத்தைப் பல்லாற்றா னும் உலகிற்கு விளக்கிக் காட்டியவர். இத்தகைய இச் சிரியர் இப் பிரபுலிங்கலீலையில் பெரும்பான்மையும் திருக் குறளை மேற்கோளாகக் கொண்டிருக்கின்றனர். இந்நூலில் குணம் அலங்காரமென்னும் சொற்சுவையும், காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தமென்னும் பொருட்சுவையும் நிரம்பி யிருக்கின்றன வென்பது இதனைச் செவ்வனே படித்துணர்ந்தா ரொவ் வொருவரும் அறிவாரென்பது வெள்ளிடைமலையாம். துக்க நிவிர்த்தியும், பரமாநந்தப் பிராப்தியுமான மோட்சத்தை மக்க ளடைதற்கு நேர் சாதனமாயுள்ள தத்துவஞானத் தைப் பெறும் வழியை மிகுதியாகக் கூறுதல்பற்றி இந்நூல் தத்துவவிசாரஞ் செய்பவர்களால் பொன்னேபோல் போற் றப்படுகின்றது.

இந்நூலைப் படிப்பதால், சிவதத்துவத்திற்குச் சத்தி தத்துவம் மேற்பட்ட தன்றென்பதும், மாயையின் வரலா றும், அதனை யொழிக்கும் வகையும், சத்துவகுணத்தா லன்றி வேறு குணத்தாலும் வேறெதனாலும் பரம்பொ ருளை யறிய முடியாதென்பதும், ஸ்திரீகளும் மோக்ஷமடை தற் கதிகாரிகளாவ ரென்பதும், புறப்பூசையினும் உட் (மனோ) பூசையே சிறந்ததென்பதும், அன்புடையார்க்கே அரனருள் வாய்க்குமென்பதும், தத்துவஞானியர் பலவகை யொழுக்கத்தை யுடையராயிருப்ப ரென்பதும், சிவனடி யார்களுள் ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடாது என்ப

னும், காண்பான் காட்சி காணப்படும் பொருளென்னும் திரிபுடியுள்ள நிலை எந்நிலையதாயினும் அந்நிலை பந்தநிலையாகுமே யன்றி முத்திநிலை யாகாதென்பதும், தன்னை உயர்த்திக்கொள்ளுவதற்கும், தாழ்த்திக்கொள்ளுவதற்கும் தன்மனமே காரணமா மென்பதும், பிறவு முணர்ந்து கொள்ளலாம்.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த இந்நூலின் பொருளை இலக்கிய வுணர்ச்சி யில்லாதாரும் எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு காஞ்சிபுர நிவாஸி வித்வசிரேஷ்டராகிய ஸ்ரீமாந் - இராமயோகிகள் அவர்களைக்கொண்டு தெள்ளிய செந்தமிழ் வசனநடை எழுதுவித்து, கதைத்தொடர்ச்சியின்மைபற்றித் துதிக்திக்குப் பதவுரையும் சேர்த்து, இந்நூலாசிரியரது சரித்திரத்துடன் இந்நூல் அச்சிடப்பட்டது.

பிரபுலிங்கலீலை

பிரபு எனல் - யாவர்க்கு மேலாயிருக்குந் தன்மை; லிங்கமெனல் - சிவம்; லீலையெனல் - பற்றின்றிச் செய்யும் விளையாட்டு; எனவே யாவர்க்கும் மேலாயிருக்கும் சிவத்தினது திருவிளையாட்டை யுணர்த்தும் நூலெனப் பொருள்பட்டு, ஆறும் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் இந்நூலுக்குக் காரணக் குறியாயிற்றென்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பிரபுலிங்கலீலை வசன

கதியின் அட்டவணை

கதியின் தொகை	கதியின் பெயர்	பக்கம்
1	ஆதி கதி	11
2	கைலாச கதி	22
3	மாயையினுற்பத்தி கதி	33
4	மாயை பூசை கதி	47
5	பிரபுதேவர் வந்த கதி	59
6	விமலை கதி	77
7	மாயை கோலாகல கதி	85
8	வசவண்ணர் வந்த கதி	98
9	அக்கமாதேவி உற்பத்தி கதி	103
10	அக்கமாதேவி துறவு கதி	109
11	கொக்கிதேவர் கதி	117
12	முத்தாயியம்மை கதி	122
13	சித்தராமையர் கதி	125
14	வசவண்ணர் கதி	133
15	மருளசங்கர தேவர் கதி	137
16	இஷ்டலிங்க கதி	141
17	கதலிவன கதி	145
18	சாதகாங்க கதி	147
19	கோரக்கர் கதி	150
20	முனிவரர் கதி	154
21	சூனிய சிங்காதன கதி	157
22	சூனிய சிங்காதனத்திலிருந்த கதி ...	158
23	ஆரோகண கதி	161
24	மனோலய கதி	165
25	மான்மிய கதி	167

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள் சரித்திரம்

தொண்டைநாட்டிலே சப்தபுரிகளுள் ஒன்றாய் விளங்குகின்ற காஞ்சீபுரியிலே சுமார் ௨௦௦ வருஷத்துக்கு முன் தொண்டைமண்டலத்தார் மரபிலுள்ளோருக்குக் குருவாக விருந்த குமாரசுவாமி பண்டாரமென்பவர் திருக் கார்த்திகைக்குத் திருவண்ணாமலை யாத்திரை போகும்போது, வழியில் ஒரு நந்தவனத்திற் பகலிறங்கிச் சிவபூஜை செய்து அன்று சாயங்காலம் அந்தத் தலம் போய்ச்சேர்ந்து ஈசானிய தீர்த்தத்தில் அநுஷ்டானஞ் செய்துகொண்டு "பூசைப்பெட்டக மெங்கே?" என்று தம்முடைய பரிகாரகரைக் கேட்க, அதற்கவர்கள் பகலிறங்கியிருந்த விடத்திற்றானே வைத்து மறந்து வந்ததாக விண்ணப்பஞ்செய்ய, அப்பொழுது அவர் மிகவும் வியாகுல முற்றவராய், அந்தப் பரிசாரகரோடு உள்ளூர் மனிதனொருவனைக் கூட்டிப் பகலிறங்கியிருந்த இடம்வரைக்கும்போய்ச் சோதனைசெய்து வரும்படி சொல்லியனுப்பிப் பின்பு தாமும் தமது மனைவியும் ஓரிடத்திற் றங்கியிருந்து நம்முடைய ஆத்மார்த்தமாகிய உடையவரைப் பிரியும்படி நேரிட்டதேயென்று சஞ்சலப்பட்டுக்கொண்டு அன்றிராமுழுதும் துயிலின்றிச் சிவத்தியானம் பண்ணிக்கொண் டிருக்கும்போது, இவரது புண்ணிய முதிர்ச்சியினாலே அண்ணாமலையார் ஒரு சங்கமராகத் திருவுருக்கொண்டு இவரிடத்திற்கு எழுந்தருளி, "நீர் மனோதுக்க மடையவேண்டியதென்ன?" என்று கேட்க, இவர் தமக்கு நேரிட்டிருக்கும் ஆபத்தை விண்ணப்பஞ்செய்ய, அதற்குச் சுவாமியானவர், "நீர், அங்கம் வேறு இலிங்கம்

வேறாக விருத்தலால் பிரியலாயிற்று. லிங்காங்க சம்பந்தியா யிருந்தால் இப்படிக்கு நேரிடமாட்டாதே'' என்று வீர சைவ சமயாசார நெறிகளைக் கிரமப்படி போதித்து ''உமது பூசைப்பெட்டகம் உதயத்தில் வந்து சேரும்; ஆகி லும் நீர் இதுமுதல் லிங்கதாரணஞ் செய்துகொள்ளும்'' என்று அநுக்கிரகிக்க, அதற்கிவர் ''எனது சிஷர் பந்துக்கள் முதலானவர்களுக்கு இச்செய்கை விரோதமாக இருக்கும்'' என்று விண்ணப்பஞ் செய்ய, அதுகேட்டுச் சுவாமியானவர் ''இந்தச் சிஷர் முதலியோரால் உமக்கு யாதொரு பயனு மில்லை. ஆதலால், நாமுரைத்தபடியே சிவலிங்கதாரணஞ் செய்துகொண்டால் உம்மிடத்தில் மூன்று புத்திரரும் ஒரு புத்திரியும் அவதரிப்பார்கள். அவர்களால் இகபர சாதக முண்டு'' என்று அருளிச்செய்ய, அதற்கிவ ருடன்பட்ட னர். அப்போது சுவாமியானவர் ''இந்த ஆலயத்திற்குத் தெற்கு வீதியிலிருக்கும் குருதேவரிடத்திற்குச் சென்று தாரண தீக்ஷை செய்துகொள்ளும்'' என்று அநுக்கிரகித்து இதைக் குருதேவருக்குந் தெரிவித்து அந்தர்த்தானமானார்.

பின்பு விடியற்காலத்திற் பூசைப்பெட்டகம் வந்து சேர்ந்தது. அப்பொழுது குருதேவர் உத்தரவின்படி அவ ரது அடியார்கள் இவரைத் தேடிவந்தழைக்க அவர்களுட னே மடம்போய்ச் சேர்ந்து குருதேவரைத் தரிசித்து, அவ ராலே தாரணதீக்ஷை அநுக்கிரகிக்கப் பெற்றுத், திருக்கார்த் திகைத் திருவிழா நிறைவேறிய பின்பு கச்சிப்பதிக்கு வந்து சேர்ந்து தமது அநுஷ்டானத்தின்படியே சிஷருக் கும் தாரணதீக்ஷை செய்துகொண்டிருக்குங் காலத்தில், முன்பு அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடியே மூன்று புத் திரர்களும் ஒரு புத்திரியும் அவதரித்தார்கள். அவர்களு க்கு முறையே சிவப்பிரகாச மென்றும், வேலாயுதமென் றும், கருணைப்பிரகாச மென்றும், ஞானம்பையென்றும் நா மகரணஞ் செய்து உரியபருவத்தில் வித்தியாரம்பஞ் செய் வித்து வளர்த்துவருங் காலத்தில், தந்தையாகிய குமார

சுவாமியையர் சிவலிங்கயிக்கியமானார். பின்பு ஜேஷ்டராகிய சிவப்பிரகாச சுவாமிகள் தமது தாயாரையும் சகோதரர்களையும் அழைத்துக்கொண்டு அருணாசலம் போய்ச் சேர்ந்து குருதேவரைத் தரிசித்து, அவ்விடத்திற் சிலகாலம் வாசஞ் செய்யும் நாள்களுள், ஒருநாள் அந்தச் சோணசைலத்தை வலம் வரும்போது சோணசைல மாலையென்று நூறு செய்யுள் தோத்திரஞ் செய்தருளினார்.

இன்னும் இலக்கணப் பயிற்சிக்காகத் தக்ஷிணம் போக வெண்ணித் தமது சகோதரர்களுடனே புறப்பட்டு வாலிகண்டபுரத்துக்குத் தெற்கே ஐந்துகடிகை தூரத்தில் துறைமங்கல மென்னும் கிராமத்துக்கு வடதுபக்கத்திலிருக்கும் ஓர் நந்தவனத்தி லிறங்கிச் சிவபூசை செய்து கொண்டிருந்த செய்தியை அந்தக் கிராமாதிபராகியும், லிங்கதாரண முடையவராகியும், சங்கமத்தினிடத்தில் மிகுந்த அன்புள்ளவராகியு மிருந்த அண்ணாமலை ரெட்டியார் கேள்வியுற்று, அந்த நந்தவனத்துக்கு வந்து அவரைத் தரிசித்தமாத்திரத்திலே, அவருக்குப் பணிவிடை செய்து அநுக்கிரகம் பெறவேண்டு மென்றெண்ணிச் சுவாமிகளை நோக்கி, "இவ்விடத்திற் சிலகாலம் வாசஞ்செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து, சுவாமிகளது அநுமதி பெற்றுத் தங்கள் குருவாகிய சென்னபசவையர் மடத்துக்கு அடுத்த மேல்புறத்தில் ஒரு திருமடங் கட்டிக்கொடுத்துத் தாமும் அவருக்குப் பக்தி செய்துகொண்டு வந்தார்.

சுவாமிகளும் அங்கே இரண்டு வருஷகாலம் வரையில் அண்ணாமலை ரெட்டியாருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டிருந்து, தாம் கொண்ட கருத்தை நிறைவேற்றவேண்டித் "தக்ஷிணம் போய்வரவேண்டும்" என்று ரெட்டியாரிடத்திற் சொல்லிக்கொண்டு திருநெல்வேலிக் கெழுந்தருளியபோது, அதன் கீழ்ப்புறத்தில் தாம்ரபர்ணி நதியின்கரையி லிருக்கின்ற சிந்துபூந்துறையில் தருமபுரத் தாதீனத்தைச் சார்ந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரா

னென்பவர் இலக்கணத்தில் மிகுந்த வல்லவரா யிருக்கின்றா ரென்பதைக் கேள்வியுற்று அவ்விடத்திற் சென்று அவ ரைக் கண்டமாத்திரத்தில் அவர் சிவப்பிரகாச சுவாமிகளைப் பார்த்து, "நீங்கள் நம்மிடத்திற்கு வந்த காரியம் என்ன?" என்று வினவ, அதற்குச் சுவாமிகள் "இலக்கணங் கற்க வேண்டி வந்தோம்" என்று சொல்ல, அப்போது தம்பிரான் இவரது இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு '(கு) என்றெடுத்து (ஊருடையான்) என்று' இடையில் வைத்துக், குவ்விறுதியாக ஒரு வெண்பா முடித்துக்காட்டுக" என்று கேட்க, அதற்குச் சுவாமிகள் அருளிச்செய்த

வெண்பா

"குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்ன மணிவார்க்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள
வூருடையா னென்னு முலகு."

என்று அருளிய வெண்பாவில் வடக்கோடு தேருடையா னென்றதற்குத் தம்பிரான் மிகவும் வியந்து, சிவப்பிரகாச சுவாமிகளைத் தழுவிக்கொண்டு, தமது ஆசனத்திற் சமமாக விருக்கச்செய்து, அவருடைய சகோதரர்களுக்கு ஐந்திலக் கணங்களையும் ஒரு பக்ஷத்துக்குள்ளே பாடஞ்சொல்லி நிறைவேற்றிய பின்பு சுவாமிகள் தங்களுக்கு அண்ணாமலை ரெட்டியார் கொடுத்த முந்நூறு பொன்னையும் குருதக்ஷிணை யாக வைப்பித்து உபசாரஞ் சொல்ல, அதற்குத் தம்பிரான் "நமக்கிது வேண்டாம்; திருச்செந்தூரில் ஒரு தமிழ்ப்புல வர் நம்மைத் தூஷித்துக்கொண்டிருக்கிறார்; அவரைக்கல்வி யினால் வென்று நம்மிடத்தில் வந்து வணங்கும்படி செய் விக்கவேண்டும்" என்று சொல்ல, சுவாமிகள் அதற்கிசை ந்து, தம்பிரானால் அனுப்பப்பட்ட மாணாக்கரோடு தாமும் திருச்செந்தூருக்குப் போய் முருகக்கடவுளைத் தரிசனஞ் செய்து பிரதக்ஷிணம் வரும்போது, அந்தத் தமிழ்ப்புலவர் சுவாமிகளோடு கூடவந்த மாணாக்கரைக் கண்டு "இவர் யார்?" என்று கேட்க, அதற்கவர்கள் "தம்பிரானிடத்திற்

பாடங் கேட்டவர்" என்று சொன்னபோது, அந்தப் புலவர் தம்பிரானைத் தூஷிக்க, ஒருவருக்கொருவர் கலகம் நேரிட்டு, அப்போது புலவர் சிவப்பிரகாச சுவாமிகளோடு நூதனமாகப் பாடி வெற்றிகொள்வோ மென்று நினைத்து, "நிரோட்டகயமகமாகப் பாடுகிறது" என்றும், "அப்படிப் பாடுகையில் நம்மிருவருள் தோல்வி யடைகிறவர் பாடி முடித்தவருக்கு அடிமையாகிறது" என்றும் பேசிக் கொண்டு இருவரும் பாடத் தொடங்கினார்கள். அப்போது சிவப்பிரகாச சுவாமிகள் திருச்செந்தி னிரோட்டக யமகவந்தாதி யென (௩௦) கலித்துறை தோத்திரஞ்செய்து உடனே முடித்தார். அப்புலவருக்கொருபாடலும் நிரம்பாமையால் தோல்வி யடைந்து, சுவாமிகளை வணங்கி, "அடிமையாயினேன்" என்று சொல்ல, அப்புலவரையுங் கூட அழைத்துக்கொண்டு தம்பிரானிடத்திற்கு வந்து அடிமை யாக்ச் செய்வித்ததால் தம்பிரான் திருவுளமகிழ்ந்து சுவாமிகளைப் பார்த்து, "தேவரீர் சிதம்பரத்தில் சிலகாலம் வாசஞ் செய்யவேண்டும்" என்று கேட்க, அதற்கு உடன்பட்ட சிவப்பிரகாச சுவாமிகள் அவரிடத்தில் விடை பெற்றுக் கொண்டு அவ்விடத்திலுள்ள சிவஸ்தலங்கடோறுஞ்சென்று தரிசனஞ் செய்தபின்பு, துறைமங்கலம் வந்து சேர்ந்து அண்ணாமலைரெட்டியாருக்கு முன்போலவே அநுக்கிரகித் துக்கொண் டிருக்கும்போது, தமதன்பராகிய அண்ணாமலை ரெட்டியார் பொருட்டு அவரது கம்பத்தக் கிராமமாகிய வாலிகண்டபுரத்துக்கு வாயுமூலையிலிருக்கும் வெங்கைமாநகரத்தில் வங்தெழுந்தருளிய பழமலைநாதர்மீது தோத்திரமாக வெங்கைக்கோவை, வெங்கைக்கலம்பகம், வெங்கை யுலா, வெங்கையலங்காரம் என்னும் நான்கு பிரபந்தமுஞ் செய்தருளிய பின்னர், அண்ணாமலை ரெட்டியாரை அழைத் துக்கொண்டு சிதம்பரத்திற்குப் போய் ஒரு திருமடங் கட்டுவித்து அதிற் சிலகாலம் வாசஞ்செய்திருந்து, பின்பு விருத்தாசலத்துக் கெழுந்தருளி பழமலைநாதர்பேரில் அந் தாதியும், பிக்ஷாடன நவமணிமாலையும், கொச்சகக் கலிப்பா

வும், பெரியநாயகி யம்மைபேரில் (கக) கலித்துறையும், (க0) கழிநெடில் விருத்தமும் திருவாய்மலர்ந்தருளிச் சில காலம் அவ்விடத்தில் வாசஞ் செய்யும்போது, ஒருநாள் மணிமுத்தாநதியின் கரையிலிராநின்ற தோட்டத்தி லுதிர்ந்து கிடந்த மனோரம்மியமாகிய ஒரு மாம்பழத்தைச் சிவ நைவேத்தியஞ்செய்யத் தக்கதென்று கையி லெடுத்துக் கொண்டு வருகையில், அதைக் கண்ட தோட்டக்காரன் சுவாமிகள் மனவருத்த முறும்படி கோபித்தபோது அருளிச்செய்த

வெண்பா

"அடுத்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளா
லடர்த்ததுவுஞ் சத்தியமே யானா—லெடுத்ததொரு
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா நித்தன்வரத் தான்."

பின்பு வடதிசையை நோக்கிக் காஞ்சீபுரத்தைத் தரிசிக்க வரும்போது, பேரூரவிநாசியிலிருந்து சாந்தலிங்க சுவாமிகள் மார்க்கத்தில் வர, அவரைக் கண்டு கூடவே அழைத்துக்கொண்டு பொம்மையபாளையத்துக்குச் சமீபமாக வந்தபோது, சாந்தலிங்கசுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகளைப் பார்த்து, "நாம் சிவஞானபாலைய சுவாமிகள் சந்நிதானத்துக்குப் போய்த் தரிசனஞ் செய்யவேண்டு மாதலால் அவர்பேரில் தோத்திரமாகச் சிலபாடல்கள் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ததற்கு, "அடியேன் நரஸ்துதி செய்கிறதில்லை" என்று சொல்லி, அன்று இராத்திரி ஓரிடத்திற் றங்கியிருந்தபோது, இவரது ஸ்வப்னத்தில் முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி, ஒரு பாத்திரத்தில் விடுபுஷ்பங்களை வைத்து, "இம்மலரை மாலையாகத் தொடுத்து நமக்கணியவேண்டும்" என்று திருவாக்குச் செய்தபடியால், விடியற் காலத்திலே சிவப்பிரகாச சுவாமிகள் நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு தாம்கண்ட ஸ்வப்னத்தைச் சாந்தலிங்க சுவாமிகளுக்

கறிவிக்க, அதற்கவர் "தேவரீர் பாமாலை தொடுக்கக் கூடா தென்று சொல்லியபடியால் அப்பாமாலையே தொடுக்க வேண்டிக் குறிப்பித்தபடி" என்ற மாத்திரத்திலே, சிவ ஞானபாலைய சுவாமிகள்பேரில் தாலாட்டு, நெஞ்சுவிடு தூது, கலம்பகம் இம்மூன்று பிரபந்தமுஞ் செய்துகொண்டு போய்ச் சன்னிதானத்தி லரங்கேற்றி ஞானோபதேசம் பெற்று, அந்த ஞானாசாரியரது கட்டளையினால் தமது தங் கையாகிய ஞானாம்பையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு விவாகஞ்செய்து கொடுத்துப் பின்னர் காஞ்சீபுரம் வந்து சிலகாலம் வாசஞ் செய்துகொண்டிருக்கும்போது, மேற் சொல்லிய சுவாமிகள் பேரில் பிள்ளைத்தமிழும், திருப் பள்ளியெழுச்சியும், அதிசயப் பத்துஞ் செய்தருளினர். மற்றொரு காலத்தில் அண்ணாமலை ரெட்டியார் சுவாமிகளை விவாகஞ் செய்து கொள்ளும்படி பிரார்த்தித்தபோது அருளிய

கோச்சகக்கலிப்பா

"சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுடனே யரவப்
பாய்கொண்டான் வந்துதொழும் பட்டீச் சுரத்தரனே
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தளவிருந்தும்
பேய்கொண்டாலுங் கொளலாம் பெண்கொள்ளலாகாதே."

பின்பு கருணைப்பிரகாச சுவாமிகளை விவாகஞ் செய்து கொள்ளப் பிரார்த்தித்தபோது அவர் செய்தருளிய பாடல்,

"நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நசையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றாற்
காண லாவதோ ருருவமெய் நாரியைக் கண்டால்
பூணு வார்மயல் காளைய ரென்பறும் புதிதோ."

என்று சொல்லிய பாடலின் கருத்தைச் சுவாமிகள் அறிந்து தமது சகோதர ரிருவரையும் இல்லறத்தி லிருக் கச்செய்து தாம் துறவறமாக வெழுந்தருளியிருந்து, பிரபு லிங்கலீலை, சித்தாந்தசிகாமணி, வேதாந்தசூடாமணி, சிவப் பிரகாசவிகாசம், தர்க்கபரிபாஷை, திருக்கூவப்புராணம்,

சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை, நிரஞ்சனமாலை, கைத்தலமாலை, அபிஷேகமாலை, இஷ்டலிங்கப் பெருங்கழி நெடில், குறுங்கழிநெடில், நன்னெறி, சிவநாமமகிமை, அன்றியும் திருப்பதிகம் பெற்ற தலங்களொவ்வொன்று க்கு இரண்டிரண்டு வெண்பாக்களும் செய்தருளினார். இவர் சகோதரர் வேலையசுவாமிகள் நல்லூர்ப்புராணம், இஷ்ட லிங்கக் கைத்தலமாலை, கும்பகோணஞ் சாரங்கதேவர் சரித் திரமாகிய வீரசிங்காதன புராணம், குகநமச்சிவாய மூர்த் திகள் சரித்திரமென்னும் நமச்சிவாயலீலை, கிருஷ்ணசரித் திர பாரிசாதலீலை, மயிலத்திரட்டை மணிமாலை என்னும் இப்பிரபந்தங்கள் செய்தருளினார். இவரது கனிஷ்டராகிய கருணைப்பிரகாச சுவாமிகள் இஷ்டலிங்கவகவல், திருக் காளத்திப் புராணத்தில் சீகாளத்திச்சருக்கம் வரையினுஞ் செய்தருளி வெங்கைமா நகரத்தில் க௮-ஆம் வயதில் சிவ லிங்கயிக்யமாய்ச் சமாதியானார். அப்போது யாத்திரையாக வெழுந்தருளியிருந்து வந்த சிவப்பிரகாச சுவாமிகள் செய் தருளிய

விருத்தம்

"முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு கண்ட சுவை முதிர்ச்சியாலே, தன்னியலை முழுதுமுரைத் தமை யாமுன் னினைக்கவர்ந்து தடங்காளத்தி, மன்னவனுண் டா னெனது மாதவத்தின் வலிதீர மண்ணின்மீதே, யென் னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச னென்னுங் கோவே."

அப்பொழுது வேலையசுவாமிக ளருளிச்செய்த விருத்தம்

"ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினிற் றமை யனினு மதிகமென்றே, பூண்டவுல கதனினுள்ளோர் புகல் வதுகேட் டிருந்துமென்ன புதுமைதானே, காண்டகுகண் மணி!யேநல் விளங்கருணைப் பிரகாசக் காளாய்! நீதான், மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன் யானுமிகு வன்னெஞ்சனே."

பின்பு சிவப்பிரகாச சுவாமிகள் மிகவும் மகிமையோ டிருந்து காளத்திப்புராணத்தில் கண்ணப்பர் சருக்கமும்நக் கீரர் சருக்கமும் செய்தருளி ௩௨ - ஆம் வயதிலே நல்லாற் றூரில் சிவஞானபாலைய சுவாமிகளால் விடப்பட்டிருந்த மடத்திலே சிவலிங்கயிக்யமாய்ச் சமாதியாயினர்.

அப்போது வேலையசுவாமிகள் அருளிச்செய்த
வெண்பா

"அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்—முல்லை
யரும்பிற் பொலியு மணிமுறுவ லல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்."

பின்பு காளத்திப்புராணத்தைப் பாடி நிறைவேற்றிப் பெருமத்தூர் மடத்தில் எ௨-ஆம் வயதில் சிவலிங்கயிக்ய மாய்ச் சமாதியாயினர்.

சிவப்பிரகாசசுவாமிகள் சரித்திரம்
முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பிரபுலிங்கலீலை வசனம்

கணபதி காப்பு

சுரகு லாதிபன் றாமலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்.

(இதன்பொருள்) சுரகுலாதிபன்-தேவாது குலத்துக்குத் தலைவனாகிய இந்திரனது, தூ மலர் நந்தவனம் - தூயமலர்களையுடைய பூங்காவானது, பெருக - ஓங்கும்படியாக, வார் கடல் பெய்த வயிற்றினேன்-நெடியகடலைப் பெய்த வயிற்றையுடையோனாகிய அகஸ்திய முனிவனது, கரகநீரை - கமண்டலத்திலுள்ள நீரை, கவிழ்த்த - கவிழ்த்துவிட்ட, மதகரி - மதயானையினது, சரணம் - திருவடியை, நாளும் - எந்நாளும், தலைக்கு அணி ஆக்குவாம் - (யாம்) எமது தலைக்கு அணியாகச் செய்துகொள்ளுவாம் [எடுத்துக்கொள்ளப்பட்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு], எ-று.

துதிகதிமுதல் இருபத்தைந்து கதிகளாலே இந்நூல் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் முதலிலே துதிகதி சொல்லப்பட்டது. அதனுள் பூவாயென்பதுமுதல் பரவைகேள்வனென்பது ஈறாகிய பத்துப்பாட்டுகளாலே கடவுண் முதலியோரைக் குறித்துத் துதிசெய்து இதற்குமேல் அவையடக்க முதலிய் பிறவும் சொல்லப்படினும் தலைமைபற்றித் துதிகதி யெனப்பட்டது.

முதலாவது

துதிகதி

சிவ ஸ்துதி

பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்
கைகான் முடங்கு பொறியிலித
னாவா யொழுகிற் றெனவுலக
மளந்த மாலு நான்முகனுங்
காவா யெனநின் றேத்தெடுப்பத்
தானே யுவந்தெங் கரதலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்.

(இ - ள்) பூவாய் - மலர்கள் பொருந்திய, நெடுங்கோட்டு உறு-நெடிய மரக்கொம்பினது நுனியின்கண்ணே தங்கிய, பசுந்தேன் - பசியதேனனது, (தன்னைப்பெறத் தகுதியுடையவனுக்குக் கிடையாமல்) கைகான் முடங்கு பொறியிலிதன் - கைகளுங் கால்களு முடங்கிய அறிவில்லாதவனது, நாவாய் - நாவினிடத்தே, ஒழுகிற்று என- (தானேவந்து) ஒழுகினால் அதுபோல, உலகம் அளந்த மாலும்-உலகத்தையளந்த திருமாலும், நான்முகனும்-பிரமனும், காவாய் என - (அடியேங்களைக்) காத்தருளாயென்று, நின்று - (தன்னைப் பெறுதற்கு உரியவழியிலே) நின்று, ஏத்தெடுப்ப-துதிசெய்யாநிற்க, (அவரிடத்துச் செல்லாமல்) தானே உவந்து - தானே விரும்பி, எம் கரதலத்தில் - (தன்னைப்பெற முயலுதற்குச் சாதனங்க ளில்லாத) எமது உள்ளங்கையிடத்து, மேவா - பொருந்தி, அமர்ந்த-எழுந்தருளியிருக்கின்ற, மாமணியை - மாணிக்கத்தை, தொழுது - வணங்கி, வினைக்கு-(எம்மைப் பிறவியில் அழுத்தி வருத்துகின்ற) கருமத்திற்கு, விடை கொடுப்பாம் - செலவு கொடுப்போம், எ - று.

தேவி ஸ்துதி

ஆதி பகவன் றனதூட
றணிப்பான் பணிய வவ்விறைவன்
பாதமிறைஞ்சு மதற்கு நெற்றிப்
பகையு மல்குற் பகையுமாஞ்

சீத மதியு மரவும்விழுஞ்
செயற்கு முவகை செயாமலலை
மாது பணியு மதற்குமன
மகிழு முமையை வணங்குவாம்.

(இ-ள்) ஆதிபகவன் - கடவுள், தனது - தன்னிடத்துண்டாகிய, ஊடல்-பிணக்கை, தணிப்பான் - தணித்தற்பொருட்டு, பணிய-வணங்க, அவ்விறைவன் - அந்தத் தலைவன், பாதம் - தன்பாதங்களை, இறைஞ்சுமதற்கும்-வணங்குகின்ற செயலுக்காகவும், நெற்றிப்பகையும்-தனது நெற்றியினாலே பகைக்கப்பட்டதும், அல்குல் பகையும்-அல்குலினால் பகைக்கப்பட்டதும், ஆம்-ஆகிய, சீதமதியும்-குளிர்ச்சி பொருந்திய பிறையும், அரவும் - பாம்பும், விழுஞ்செயற்கும் - வணங்குகின்ற செயலுக்காகவும், உவகை செயாமல் - மகிழ்ச்சி செய்யாமல், அலைமாது - தன்மாற்றாளாகிய கங்காதேவி, பணியுமதற்கு - வணங்குகின்ற செயலுக்காகவே, மனமகிழும்-திருவுள மகிழ்கின்ற, உமையை வணங்குவாம் - உமாதேவியைத் தொழுவோம், எ - று.

கணபதி ஸ்துதி

மார னெடுத்து வளைக்குமொரு
கரும்பை யொடித்து மலர்சிதறி
நாரி யடுத்த வளிமாலை
குலையத் துரந்து நயந்தோடி
வீர மனத்து வினைப்பாகர்
குறிப்பி னொழுகி விளையாடு
மீர மதிச்செஞ் சடைக்களிநல்
யானை யிணைத்தா ளேத்துவாம்.

(இ - ள்) மாரன்-மன்மதனாலே, எடுத்து வளைக்கும் - எடுத்து வளைக்கப்பட்ட, ஒரு கரும்பை ஒடித்து - ஒப்பற்ற கருப்புவில்லை ஒடித்து, மலர் - (அவ்வில்லி னெய்யப்படும்) மலரம்புகளை, சிதறி - இறைத்து, நாரியடுத்த - (அவ்வில்லுக்கு) நாணாயடுத்த, அளிமாலை-வண்டுக்கூட்டம், குலைய-கலைந்துபோக, துரந்து-துரத்தி, நயந்து-விரும்பி, ஓடி - விரைந்து சென்று, வீரமனத்து வினைப்பாகர் - வீரத்தன்மை பொருந்திய மனத்தையுடைய இருவினையொப்பினராகிய பாகரது, குறிப்பினொழுகி-கருத்தின்படி சென்று, விளையாடும்-விளையாடுகின்ற, ஈரமதிச் செஞ்சடை - குளிர்ச்சிபொருந்திய பிறை

யைத் தாங்கிய செய்பசடையையும், களி - களிப்பையுமுடைய, நல் யானை - நல்ல யானையினது, இணைத்தாள் - உபய பாதங்களையும், ஏத்துவாம் - துதிசெய்வாம், எ - று.

சுப்பிரமணிய ஸ்துதி

பாக மொருபெண் குடியிருக்கும்
பரம னணியிற் பரித்தமணி
நாக நுழைவுற் றுடல்சுருண்டு
கிடந்து நகுவெண் டலைப்புழையிற்
போக மெல்லத் தலைநீட்டிப்
பார்த்து வாங்கப் போகுமொரு
தோகை மயில்வா கனப்பெருமா
டிணைத்தாட் கமலந் தொழுதிடுவாம்.

(இ - ள்) பாகம்-பாதியுடம்பின்கண்ணே, ஒருபெண் - பார்வதியானவள், குடியிருக்கும் - நிலைத்திருக்கப்பெற்ற, பரமன் - கடவுளாலே, அணியில் - ஆபரணம்போல், பரித்த - தாங்கப்பட்ட, மணி நாகம் - மணியையுடைய பாம்பு, நகு வெண்டலைப் புழையில் - சிரிக்கின்ற வெண்டலையினது துளையில், நுழைவுறறு-நுழைந்து, உடல் சுருண்டு கிடந்து—, போக - புறத்திற் போதற்பொருட்டு, மெல்ல - மெள்ள, தலை - தலையை, நீட்டிப் பார்த்து வாங்க - வெளிகாட்டி உள்வாங்காநிற்க, போகும் - (அக்கடவுளிடத்தே) செல்லுகின்ற, தோகை மயில்வாகனப் பெருமாள் - கலாபத்தையுடைய மயிலாகிய வாகனத்தையுடைய முருகக்கடவுளது, துணைத்தாள் கமலம்-இரண்டு பாதங்களாகிய தாமரைமலர்களை, தொழுதிடுவாம் - வணங்குவாம், எ - று.

அல்லமதேவ ஸ்துதி

கலையை மதிக்கும் புலவர்தமைச்
சித்தர் குழாத்தைக் கடவுளரை
நிலையை மதிக்கு முனிவரரைத்
திசைமா முகனை நிரைவளையாச்
சிலையை மிதிக்கு நெடியோனை
விழுங்கி யுமிழாத் திறன்மாயைத்
தலையை மிதிக்கு மல்லமன்செங்
கமல மலர்த்தா டலைக்கணிவாம்.

(இ - ள்). கலையை - அறுபத்துநாலு கலைகளையும், மதிக்கும்- உணர்கின்ற, புலவர்தமை - வித்வான்களையும், சித்தர் குழாத்தை - சித்தாது கூட்டத்தையும், கடவுளரை - தேவரையும், நிலையை - தத்துவநிலையை, மதிக்கும்-ஆராய்கின்ற, முனிவரரை - முனிவோரையும், திசைமாமுகனை - நான்முகனையும், நிரைவளையா - பெண் வடிவமாக, சிலையை - கல்லை, மிதிக்கும் - (அடியால்) மிதித்த, நெடியோனை - நாரணனையும், விழுங்கி - உட்கொண்டு, உமிழா - (பின்) உமிழ்தல் செய்யாத, திறல் - வலிமையையுடைய, மாயை - மாயையினது, தலையை - சிரத்தை, மிதிக்கும் - மிதித்து நிற்கின்ற, அல்லமன் - அல்லமதேவனது, செங்கமல மலர்த்தாள் - செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை, தலைக்கு-நமது தலையின்கண்ணே, அணிவாம் - சூடுவோம், எ-று.

வசவ ஸ்துதி

வெள்ள வேணிப் பெருந்தகைக்கி
யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த
கள்வ ரெல்லாம் களங்கமறு
முள்ள மோடு மெய்யடியா
ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாகும் வசவேசன்
மலர்த்தா டலையால் வணங்குவாம்.

(இ - ள்) வெள்ளவேணி - கங்கையைத் தாங்கிய சடையை யுடைய, பெருந்தகைக்கு - கடவுளுக்கு, யாம் செய் - எம்மாலே செய்யப்படுகின்ற, அடிமை - பொய்யடிமையானது, மெய் ஆக - மெய்யடிமை யாதற்பொருட்டு, கள்ள வேடம்-பொய்க்கோலத்தை, புனைந்திருந்த - தரித்துவந்திருந்த, கள்வர் எல்லாம் - திருடரெல்லாம், களங்கமறும் உள்ளமோடு - மாசற்ற நெஞ்சத்தோடு, மெய்யடியாராக - மெய்யடியாராகும்வண்ணம், உள்ளத்து - தனது திருவுளத்தில், உள்ளும் - நினைத்தருளிய, அருள் வள்ளல் ஆகும் - கருணைவள்ளலாகிய, வசவேசன் - வசவேசனது, மலர்த்தாள் - தாமரைமலர்போலுந் திருவடிகளை, தலையால் வணங்குவாம்-எமது சிரத்தினால் தொழுவோம், எ-று.

சென்னவசவ ஸ்துதி

பங்க வளற்று வழிமாற்றி
யொருநல் வழியைப் பகர்வார்போற்

றங்கண் மதியிற் பலபிதற் றுஞ்
 சமய ருரைக டமைநீக்கி
யங்க நிலையிற் றிலிங்கநிலை
 யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன
 வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

(இ - ள்) பங்கம் அளற்றுவழி - பழுதாகிய சேற்றுவழியை, மாற்றி - ஒழித்து, ஒரு நல் வழியை - ஒரு நல்லவழியை, பகர்வார்போல் - சொல்பவர்போல், தங்கள் மதியின் - தங்களுடைய புத்திகளுக்குத் தோன்றியவாறே, பல பிதற்றும்-(தேகதேகிகளைத் குறித்துப்) பலவகைப்படப் பிதற்றுகின்ற, சமயர் உரைகள்தமை - சமயவாதிகளுடைய சொற்களை, நீக்கி - ஒழித்து, அங்கநிலை - அங்கத்தினது நிலை, இற்று - இத்தன்மைத்து, இலிங்கநிலை - இலிங்கத்தினது நிலை, இற்று - இத்தன்மைத்து, என்று அருளும் - என்று தெரிவித்தருளிய, வீரசைவசிங்கம் - வீரசைவத்திற் சிறந்தோனாகிய, நிலைத்த அருள்-நிலைபெற்ற அருளையுடைய, சென்னவசவன் - சென்னவசவேசனது, திருத்தாள் - அழகிய பாதங்களை, சிரத்து-(எமது) முடியின்மீது, அணிவாம்-தரிப்பாம், எ-று.

மடிவாலமாச்சையர் துதி

வார்க்குங் குமமென் முலைபாக
 னடியா ரறுவை மாசடித்துத்
தீர்க்குஞ் செயல்போல் விச்சலமன்
 னவன்றன் சேனை செய்பிழையைத்
தாக்குங் கரவாள் கொடுசின்ன
 பின்ன மாகத் தடிந்திட்டுப்
போக்குங் கருணை மடிவால
 மாச்சன் பொன்னங் கழல்போற்றி.

(இ - ள்) வார் குங்கும மெல் முலை - கச்சிறுக்கிச் செஞ்சாந்தணியப்பெற்ற மெல்லிய முலையினளாகிய உமாதேவியினது, பாகன் - கூற்றினனாகிய சிவபெருமானுடைய, அடியார்-தொண்டரது, அறுவை - ஆடைகளிலுள்ள, மாசு - அழுக்கை, அடித்து - அவற்றைக் கல்லின்மேலறைந்து, தீர்க்குஞ் செயல்போல்-போக்குகின்ற செயல்போல், விச்சலமன்னவன்றன் - விச்சலராஜனது, சேனை-சேனையினாலே, செய்-செய்யப்பட்ட, பிழையை-குற்றத்தை,

தாக்கும் காவாள்கொடு - வெட்டுதற்குரிய கைவாளைக்கொண்டு, சின்னபின்னமாக தடிந்திட்டு - சின்னபின்னமாக வெட்டி, போக்கும் - போக்கிய, கருணை - அருளையுடைய, மடிவாலமாச்சன் - மடிவாலமாச்சையனது, பொன்னங்கழல் - பொன்போலுந் திருவடிகளை, போற்றி - துதிசெய்வாம், எ-று.

நால்வர் ஸ்துதி

பெண்ணிற் காசு தானுக
  வென்பு பெருநீற் றறைபிரச
வண்ணக் கமல மலர்ப்பொய்கை
  யாகச் செங்கன் மாழையாய்
நண்ணச் சிறிய நரிகண்முடங்
  குளைய பரியாய் நகர்புகுதப்
பண்ணற் குரிய வமுதுறழ்முத்
  தமிழ்நால் வரையும் பணிகுவாம்.

(இ - ள்) என்பு-எலும்பானது, பெண்ணிற்கு அரசாக-பெண்களுக்கு அரசியாகவும்,பெரு நீற்றறை-பெரிய சுண்ணவறையானது, பிரசவண்ணக்கமலமலர்ப் பொய்கையாக - தேனையும் அழகையும் உடைய தாமரை மலர்களையுடைய குளமாகவும், செங்கல் - செங்கலானது, மாழையாய் நண்ண - பொன்னுய்ப் பொருந்தவும், சிறிய நரிகள்—, முடங்குளைய பரியாய் - மடங்கிய புறமயிரையுடைய குதிரைகளாய், நகர் - மதுரைநகரத்தில், புகுத - செல்லவும், பண்ணற்குரிய - செய்தற்குரிய, அமுது உறழ் - அமிர்தம்போல்கின்ற, முத்தமிழ் - இயலிசைநாடகமென்னு மூவகைப்பட்ட தமிழ்ப் பதிகங்களை அருளிச்செய்த, நால்வரையும்-சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்கிற நால்வரையும், பணிகுவாம் - வணங்குவாம், எ - று.

அடியார் பொதுஸ்துதி

பரவை கேள்வன் றிருத்தொண்டத்
  தொகையு ளடியார் பத்திமெலா
முருவ மாகு நஞ்சோம
  நாதன் றுதியு ளுறுசரண
ராவ வணியா னடியார்கண்
  மற்றை யவர்க ளனைவருந்தாம்
விரவி நாளு மிருப்பவிடங்
  கொடுக்கு முள்ளம் விரிந்தன்றே.

(இ-ள்) பாக்லை கேள்வன்-பர்வைக்கு நாயகனாகிய சுந்தரமூர்த்தி நாயனாரது, திருத்தொண்டத் தொகையுள் - திருத்தொண்டத் தொகைப்பாடலு ளிருக்கின்ற, அடியார் - தொண்டர்களும், பத்தி யெலாம்—,உருவமாகும்-ஒரு வடிவாகக்கொண்ட, நம் சோமநாதன்-நமது சோமநாதராத்திரியினது, துதியுளுறு - துதிப்பாடலு ளிருக்கின்ற, சரணர் - தொண்டர்களும், அரவவணியான்-பாம்பை அணியாகவுடைய கடவுளது, அடியார்கள் - தொண்டர்களாயுள்ள, மற்றையவர்கள்-அவ்விரண்டிலும் அடங்காதவர்களும் ஆகிய, அனைவரும்—, விரவி-கலந்து, நாளும் - எந்நாளும், இருப்ப - இருத்தற்கு, உள்ளம்-எமது நெஞ்சமானது, விரிந்து—, இடம் - இடத்தை, கொடுக்கும்—, எ - று.

நூல் செய்தவர் பெயரும் முதலிய பொருளும்

தண்ணிலவு புனைசடிலத் திறைபுகழல் லமதேவன்
சரிதத் தீம்பால்
புண்ணியரஞ் செவிவாயிற் றமிழ்ச்சங்கத் தான்முகந்து
புகட்டி னானல்
எண்ணரிய புகழ்மலயத் திருந்தவனோர் வடிவெடுத்தா
னென்று கூறப்
பண்ணியமுத் தமிழ்க்கவிதைச் சிவப்பிரகா சப்பெரும்பேர்
படைத்து ளானே.

(இ - ள்) தண் நிலவு - குளிர்ச்சிபொருந்திய சந்திரனை, புனை-தரித்த, சடிலத்து - சடையையுடைய, இறை - கடவுளால், புகழ் - புகழப்படுகின்ற, அல்லமதேவன் - அல்லமதேவனது, சரிதத் தீம் பால் - சரித்திரமாகிய தித்திப்புப் பொருந்திய பாலை, புண்ணியர் - புண்ணியத்தை யுடையவரது, அஞ்செவி வாயில் - உட்செவியாகிய வாயில், தமிழ்ச் சங்கத்தால் - தமிழ்ச் செய்யுளாகிய சங்கினால், முகந்து - மொண்டு, புகட்டினன் - புகவிட்டான், எண்ணரிய-எண்ணக் கூடாத, புகழ் - கீர்த்திகளையுடைய, மலயத்து - பொதியமலையின் கண்ணே எழுந்தருளியிருக்கின்ற, இருந்தவன் - பெரிய தவத்தோனாகிய அகஸ்தியமுனிவன், ஓர் வடிவு எடுத்தான் என்று கூற-(இப்படி) ஒரு திருவுருவெடுத்து வந்தானென்று சொல்லும்படிக்கு, பண்ணிய - (தன்னாலே) செய்யப்பட்ட, முத்தமிழ் கவிதை - இயலிசை நாடகமென்னு மூவகைத் தமிழ்ப் பாடல்களையும் உடைய, சிவப்பிர

காசப் பெரும்பேர் படைத்துளான் - சிவப்பிரகாசனென்னும் பெரிய திருநாமத்தைப் படைத்திருக்கின்றவன், எ - று.

அவையடக்கம்

அடலுறு மல்லம னரிய சீரோடு
படுதலி னயந்துபா ராட்டும் பன்முறை
மடனிகு முலகமென் மொழியை வந்துவர்க்
கடலினு மூழ்குவர் கால மொன்றினே.

(இ - ள்) அடலுறும் - வலிமையாக மிகுந்திருக்கின்ற, அல்லமன் - அல்லமனது, அரிய சீரொடு - அரிதாகிய புகழோடுகூடி, படுதலின் - தோன்றுதலால், மடனிகும் - அறியாமையி னீங்கிய, உலகம் - உலகமானது, என் மொழியை-எனதெளிய செய்யுளையும், பன்முறை - பலகாலும், நயந்து - விரும்பி, பாராட்டும் - கொண்டாடும், காலம்-விசேட காலத்தோடு, ஒன்றின்-பொருந்துமாயின், உவர்க் கடலினும் - உப்புக்கடலினும். வந்து, மூழ்குவர் - மனிதர் முழுகுவர், எ - று.

படலத்தொகை

நாற்கதி தருமிடர் கடந்து நச்சுநர்
பார்க்கதி முதலிரு பத்தைந் தாங்கதி
மேற்கதி பெறவருள் விளங்கு மல்லமன்
சீர்க்கதி யிருபதோ டைந்துஞ் செப்புவாம்.

(இ - ள்) நச்சுநர்-(தன்னை) விரும்பியோர், நாற்கதி-தேவகதி மனிதகதி விலங்குகதி நரககதி எனப்படுகின்ற நான்கு கதிகளாலும், தரும் - தரப்படுகின்ற, இடர் - துன்பங்களை, கடந்து—, பார்க்கதி முதல் - பிருதிவிதத்துவமுதலிய, இருபத்தைந்தாங்கதி - இருபத்தைந்து தத்துவங்களுக்கும், மேல் - மேலாகிய, கதி - முத்தியை, பெற—, அருள் விளங்கும்-கருணையால் விளங்குகின்ற, அல்லமன்-அல்லமனது, சீர் - புகழையுடைய, கதி இருபதோடைந்தும்- இருபத்தைந்து கதிகளையும், செப்புவாம் - சொல்லுவாம், எ - று.

சம்பந்தம்

கன்றிய வைரிகள் காதுங் காதையும்
வன்றுயர் மதனநோய் வளர்க்கு மாற்றமும்
புன்றொழி லினர்வறும் பொழுது போக்கனு
மன்றரு ளல்லம னமல லீலையே.

(இ - ள்) கன்றிய-வெறுப்புற்ற, வைரிகள்-பகைவராயினோர், காதும்-(தம்மெதிரிகளைக்) கொலைசெய்த, காதையும்-சரித்திரமும், வன்றுயர் மதனநோய் - வலியதுயரைச் செய்கின்ற காமநோயை, வளர்க்கும் - பெருக்குகின்ற, மாற்றமும் - சரித்திரமும், புன்மொழி யினர்-இழிமொழி யுடையோர், வறும்பொழுது - வீண்காலத்தை, போக்கலும் - போக்குதற்கு ஏதுவாகிய சரித்திரமும், அன்று - அன் றாகும், அருள் - அருளையுடைய, அல்லமன் - அல்லமனது, அமல லீலை - மாசில்லாத திருவிளையாட்டு, எ - று.

அதிகாரிகள்

புறங்கறை யொழுகுசெம் புண்ணி லீயென
வறுங்கதை புல்லியர் கொள்வர் மாமல
ருறுங்களி வண்டினல் லமனொண் காதையைப்
பிறந்துள பயன்பெறு பெரியர் கொள்வரே.

(இ - ள்) புறம் - புறத்தே, ஒழுகு - ஒழுகுகின்ற, கறை-உதி ரத்தையுடைய, செம் புண்ணில் - சிவப்புற்ற புண்ணில், மொய்க் கும்—, ஈயென - ஈக்கள்போல், வறுங்கதை - பயனில்லாத கதை யை, புல்லியர் - சிறியோராயினோர், கொள்வர்—, மா மலர் - தாம ரைமலரில் மொய்க்கும், உறுங்களி வண்டின் - மிக்க களிப்புடைய வண்டுகள்போல், அல்லமன் - அல்லமனது, ஒள் காதையை - ஒள் ளிய கதையை, பிறந்துள பயன் - மனிதராய்ப் பிறந்ததற்குப் பயனை, பெறு - பெறுதற்குரிய, பெரியர்-பெரியராயினோர், கொள் வர்—, எ - று.

பிரயோசனம்

மயலளற் றூன்றுகோன் மல்கு மன்மெனு
மியலெழுத் தெழுதுகோ லங்க லிங்கமாம்
வியனிலத் தளவுகோன் மதிவி ளக்கினை
யயர்வறத் தூண்டுகோ லமல லீலையே.

(இ - ள்) அமலலீலை - இவ்வமலனது லீலையானது, மயல் அளற்று - மயக்கமாகிய சேற்றுக்கு, ஊன்றுகோல்—, மல்கும் - நிரம்பிய, அன்பெனும் - குருலிங்கசங்கமபத்தி யெனப்படுகின்ற, இயல் எழுத்து - இலக்கணமுடையவெழுத்தை, எழுதுகோல்—, அங்கலிங்கமாம்—, வியன் நிலத்து - விரிவான நிலத்திற்கு, அளவு கோல்—, மதி விளக்கினை - அறிவாகிய விளக்கை, அயர்வு அற - சோர்வு நீங்க, தூண்டுகோல்—, (ஆகும்) எ - று.

விடயம்

நன்றிகொ ளடிகணான் குறந டந்துபோ
யென்றனி நாவினின் றெழுமிச் செய்யுளான்
வென்றிகொ ளல்லமன் சீர்த்தி மென்பயன்
கன்றலி லன்பராங் கன்றை யூட்டுமால்.

(இ-ள்) என் தனி நாவினின்று-எனதொப்பற்ற நாவினின்றும், எழும் - தோன்றுகின்ற, இச்செய்யுள் ஆன் - இக்காப்பியமாகிய பசுவானது, நன்றி கொள் - நன்மை கொண்ட, அடிகள் நான்கு - நான்கடிகளாகிய நாலுபதங்களைக்கொண்டு, உற - மிகவும், நடந்துபோய்—, வென்றிகொள் அல்லமன்-வெற்றியைக்கொண்ட அல்லமனது, சீர்த்தி மெல் பயன் - புகழாகிய மெல்லியபாலை, கன்றலில் - பதனழிதலில்லாத, அன்பராம் கன்றை - சிவபக்தர்களாகிய கன்றுகளை, ஊட்டும் - உண்பிக்கும், எ-று.

இனி மூன்று பாட்டுகளால் உற்பத்தி சொல்லப்படுகின்றது

பரசிவம் பிரம மென்னப் பட்டொரு திரிவு மின்றி
யுரைமன மிறந்து நின்ற வொருசிவ லிங்கந் தன்னின்
வருமுயர் சதாசி வன்றான் மற்றவன் றனைப்பொ ருந்து
மருமைகொண் ஞான சத்தி யவர்களாற் சிவனு திப்பன்.

(இ-ள்) பரசிவம்—, பிரமம்—, எனப்பட்டு-என்று சொல்லப்பட்டு, ஒரு திரிவும் - யாதொரு விகாரமும், இன்றி - இல்லாதாகி, உரை மனம் - வாக்கையும் மனத்தையும், இறந்து - கடந்து, நின்ற-(சச்சிதானந்த சொரூபமாய்) நின்ற, ஒரு சிவலிங்கந்தன்னின்-ஒரு சிவலிங்கத்தினின்றும், உயர் - உயர்வாகிய, சதாசிவன்—, வரும் - தோன்றுவன், அவன்றனை - அவனை, அருமைகொள் - அருமைகொண்ட, ஞானசத்தி—, பொருந்தும் - பொருந்துவள், அவர்களால் - அவர்களினின்றும், சிவன் உதிப்பன்—, எ-று.

சாற்றுமச் சிவனுக் கிச்சா சத்தியவ் விருவ ரானுந்
தோற்றுவ னுருத்தி ரன்றான் சொல்லிய விவற்குச் சத்தி
மாற்றருங் கிரியை யென்பர் மற்றிவ ரிருவர் பானும்
போற்றுறு மரியு திப்பன் பொறியவன் சத்தி யாமால்.

(இ-ள்) சாற்றும் - மேற்சொல்லப்பட்ட, அச்சிவனுக்கு—, இச்சாசத்தி—, (சத்தியாவாள்), அவ்விருவரானும் - அவ்விருவரா

னும், உருத்திரன்—, தோற்றுவன் - தோன்றுவன்; சொல்லிய-சொல்லப்பட்ட, இவற்கு - இவ்வுருத்திரனுக்கு, மாற்றரும்-மாற்றப் படாத, கிரியை - கிரியாசத்தியை, சத்தி என்பர் - சத்தியென்பர்; இவரிருவர்பாலும் - இவ்விருவரினின்றும், போற்றுறும்- (உலகைக்) காக்கின்ற, அரி - நாரணன், உதிப்பன் - தோன்றுவன், பொறி - திருமகள், அவன் சத்தியாம்—, எ - று.

அத்திரு மாலு மாவு மளிப்பவந் துதிப்பன் வண்டு
மொய்த்திசை முரலுஞ் செங்கேழ் முளரிவா னவன வற்குச்
சத்திவெண் கமலை யன்னோர் தரவரு முலகத் தோற்ற
நித்தனந் குருகு கேச னினைவுமாத் திரையி னுமால்.

(இ - ள்) அத்திருமாலும் - அந்த நாரணனும், மாவும் - திருமகளும், அளிப்ப - ஈன்றிட, வண்டு மொய்த்து—, இசை - இசைபோல், முரலும் - ஒலிக்கப்பெற்ற, செங்கேழ் - சிவப்பு நிறத்தையுடைய, முளறி வானவன் - தாமரைமலரிலிருக்கின்ற பிரமன், வந்து—, உதிப்பன் - தோன்றுவன்; அவற்கு - அவனுக்கு, வெண்கமலை - நாமகள், சத்தி - சத்தியாவாள்; அன்னோர் - அவ்விருவருங்கூடி, தர - படைக்க, உலகம் - உலகமும், தோற்றம் - எழுவகைத் தோற்றமும், வரும் - உண்டாகும்; நித்தன் - அழிவில்லாதவனும், நம் குரு - நமது குருவுமாகிய, குகேசன்-அல்லமதேவனது, நினைவு மாத்திரையின் - நினைப்பினளவிலே, ஆம்—, எ - று.

அல்லமதேவன் சிறப்பு

ஆக்குறுஞ் செயல தொன்றே யயன்றனக் காக்க லோடு
காக்குறுஞ் செயலி ரண்டுங் கண்ணனுக் காக்கல் காத்தல்
போக்குத லென்றிம் மூன்றும புராந்தகற் களித்த வர்க்கு
நீக்கரு மிறைமை நல்கி நிறுவினன் குருகு கேசன்.

(இ - ள்) குரு - நமதுகுருவாகிய, குகேசன்-அல்லமதேவன், அயன்றனக்கு - பிரமனுக்கு, ஆக்குறும் செயலதொன்றே - படைக்குந் தொழிலொன்றனையே, கண்ணனுக்கு - நாரணனுக்கு, ஆக்கலோடு - படைத்தலோடு, காக்குறும்செயல்-காக்குந்தொழிலுமாகிய, இரண்டும் - இரண்டையும், புராந்தகற்கு - உருத்திரனுக்கு, ஆக்கல் காத்தல் போக்குதல் என்று - படைத்தலும் காத்தலும் அழித்தலுமெனப்படுகின்ற, இம்மூன்றும் - இம்மூன்றையும், அளித்து-கொடுத்து, அவர்க்கு - அம்மூவருக்கும், நீக்கரும் - மாற்றப்படாத, இறைமை - தலைமையை, நல்கி - தந்து, நிறுவினன்-வைத்தனன்; எ-று.

இரண்டாவது

கைலாசகதி

வெள்ளிமயமாகிய பெருமைபொருந்திய கைலாசகிரியின் சிகரத்தில் வீற்றிருந்து உயிர்களுக்கு அருள்செய்கின்ற மூன்று கண்களையுடைய சிவபெருமானுடன் சபதஞ்செய்துகொண்டு எம்பெருமாட்டியாகிய உமாதேவியானவள் அல்லமதேவரைக் காணும்பொருட்டு வஞ்சகம் பொருந்திய மாயையைப் பூலோகத்துக்கு அனுப்பின செய்தியைச் சொல்லுகின்ற கதியைச் சொல்லுவோம்.

சரங்களும் அசரங்களுமாகிய எல்லா உயிர்களையும் ஆதிகாலத்தில் நாமகளோடு கூடிப்பெற்ற சதுர்முகனாகிய பிரமதேவன் விசாலமான பிருதுவி யண்டத்தினுள்ளே வெற்றி பொருந்திய அசுரர் நாகர் தேவர் முதலியோர்க்கும் தகுதியான இடங்களை நிருமித்தான். அவற்றுள் பேரருளே திருமேனியாயுடைய சிவபெருமான் வீற்றிருக்கிற கைலாசகிரியானது, தேவர்களும் கண்டு அதிசயிக்கும்படியான அழகோடுகூடி அந்தப் பிரமாண்டத்தினுள்ளே மிகவுஞ் சிறந்து விளங்கி ஒப்பற்றதா யிருந்தது. வண்டுகள் கொள்ளைகொண் டுண்ணும்பொருட்டு, இழிந்து பொடியில் முழுகி மூக்கினால் கிண்டவுடைந்து முறுக்கவிழ்ந்து தேனைச் சிந்துகிற செம்பொன்போல விளங்குகின்ற கொன்றை மலர்மாலையைச் சூடப்பெற்ற சடாபாரத்தையுடைய சிவபெருமானது வெண்மையாகிய புகழ்கள் திரண்ட வளம் பொருந்திய ஸ்ரீ கைலாசகிரியினகண்ணே வெள்ளியானது வந்து ஆரோபமாகவே விளைந்திருக்கிறது.

மேலும், அந்தக் கைலாசகிரியானது முற்காலத்தில் கௌதமரிஷியின் குழந்தையாகிய உபமன்யு பசி பொறுக்காமல் வேண்டி அழும்போது அக் குழந்தைக் கிரங்கி நம்மை யனுப்பி அதன் பசி தீர்த்தாற்போல இன்னமும்

ஒரு குழந்தை பால்வேண்டி அழுமாயின் அதன் பசி தீர்க்கும்பொருட்டு நம்மை அனுப்புவன்; அப்படி யனுப்புஞ் சிவபெருமானைத் தடுப்பதற்கு நம்மீது சயனித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவன் சக்தியற்றவனாயிருக்கிறான்; ஆதலால், நாம் அந்தச் சிவபெருமானுக்கே இடமாயிருப்போமென்று எண்ணிப் பாற்கடலானது திரண்டு மலையுருவங்கொண்டு நின்றாற்போல விளங்குகின்றது.

மேலும், அந்த மலையில் ஓடுகின்ற அருவியாறுகள் அவற்றின் ஓசையினால் அறியப்படுகின்றன; விளங்காநின்ற வெள்ளிய சந்திரனானது தன்னிடத்தில் தங்கிய களங்கத்தினால் அறியப்படுகின்றது; இந்திரனது யானையாகிய ஐராவதமானது தான் பொழிகின்ற மதநீரால் அறியப்படுகின்றது; தாமரைமலர்மேல் வாசஞ்செய்கிற பிரமதேவனது வாகனமாகிய அன்னமானது அழகாகிய தனது நடையினால் அறியப்படுகின்றது; இவ்வாறன்றி, நிறத்தினால் அறியப்படாதபடி வெண்ணிறத்தோடு அம்மலை பொலிந்து விளங்காநின்றது.

மேலும், பிரகாசிக்கிற ஒளி ததும்புகின்ற அந்த வெள்ளியங்கிரியின் சிகரத்தில், அசையாநின்ற கதிர்களைப் பரப்புகின்ற செம்பொன்னினாலும் தேஜோரூபமாகிய மாணிக்கங்களாலும் செய்யப்பட்ட ஒரு செய்குன்றானது விளங்குதல் எப்படி யிருக்கின்றதென்றால், களங்கமில்லாத பரிசுத்தமான கற்பூர ராசியின்மேல் வளம் பொருந்திய தீபமொன்று தங்கி விளங்குதல்போ லிருந்தது.

இப்படிப்பட்டதாகிய இந்தக் கைலாசகிரியில் சிவபிரானது அரசாட்சி மண்டபமொன்றுண்டு. அந்த மண்டபத்தை ஆதிசேடனும் புகழ்தற்கு அசக்தனென்றால், யான் அதனைப் புகழ்ந்திலேனென்று என்னை இகழ்பவர் ஒருவரும் இல்லை. அப்படிப்பட்ட மண்டபத்தில் சிவபெருமானானவன் வந்து அவ்விடத்தில் விளங்காநின்ற பதுமாக

மணிகளால் செய்யப்பட்ட ஒரு மேடையின்மேல் உலகம் நிலைபெறுதற் கேதுவாகிய சூரிய பிம்பத்திலே தங்கி யிருத்தல்போலத் தங்கியிருந்தானென்று யாவரும் சொல் லும்படி தங்கியிருந்தான்.

இளம்பிறையாகி உடல்வளைந்து வெளுத்ததாகிய நேத் திரோத்ஸவமாயுள்ள ஒளிபொருந்திய ஒப்பற்ற சந்திரன் சடையின்கண்ணே பொருந்தியிருக்கவும்; மலைக்கிழத்தி யாகி மலையரசனது குழந்தையெனப் பெயர்பெற்ற அழகை யுடைய கங்கையானவள் அந்தச் சடையின்கண் வாழா நிற்கவும், நெருப்பென்று சொல்லுதற்கிணங்க மேலே நோக்கிய ஒரு சிவந்த கண்ணானது அழகிய நெற்றியில் பொருந்தியிருக்கவும், சந்திரனென்று சொல்லப்பட்டும் சூரியனென்று சொல்லப்பட்டும் விளங்குகின்ற அழகிய கண்கள் இரண்டும் பெருகுகின்ற அருள் வெள்ளத்திற்கு மதகுகள்போல விளங்காநிற்கவும், தியானிக்கிற அன்பரது இதயமென்கிற பறவைகள் அகப்பட்டுக்கொள்ளுகிற வலை யைப்போல நெடிய செவிகளினிடத்துக் குழைகள் தங்கி விளங்கவும், இடது பக்கத்தில்அமர்ந்திருக்கிற உமாதேவியி னது அழகிய நெற்றியிலணிந்த கஸ்தூரித் திலகம்போல அழகிய கண்டத்தில் கருநிறமுள்ள நஞ்சக்கறையானது விளங்காநிற்கவும், மலையரசனால் புதல்வியாகப் பெறப் பட்ட பூங்கொடி போல்பவளாகிய உமாதேவியின் கண்க ளுக்கு நாணியே முகம் திரும்பினதுபோலத் திரும்புகின்ற மானானது மனமகிழ்ந்து இடக்கையிலும், ஒளியுள்ள வீரத் தன்மை யமைந்த மழுவானது தகும் தகும் தகும் என்று ஒலிசெய்து எரிதலால் அவ்வாறு திரும்புதல் தகும் தகும் தகும் என்று சொல்வதுபோல வலக்கையிலும் பிரகாசியா நிற்கவும், நவவியாகரண பண்டிதனுய் விளங்குகின்ற மாணி க்கத்தையுடைய ஆதிசேஷனது ரூபமாகிய கங்கணமானது கையிற்பொருந்தி விளங்காநிற்கவும், ஒரு கரிய பன்றியின் கொம்பானது பதக்கம்போலத் திருமார்பில் பொருந்தி

விளங்காநிற்கவும், புலியினுலே தரப்பட்ட ஆடையானது திருவரையை யடைந்து பட்டாடைபோல அழகுசெய்யா நிற்கவும், முப்புரங்களை எரித்துவென்ற சிரிப்புக்கும் மெலிய தாமரைமலரி லிருக்கின்ற பிரமதேவனது சிரத்தைக் கிள்ளி வென்ற சிவந்த கைக்கும், கருப்பு வில்லையுடைய மன்மதனை எரித்துவென்ற நெற்றிக் கண்ணிற்கும், இப்படி ஒரு விருது இல்லையென்று சொல்லும்படியாக யமனைக் கொன்று அதற்கு அறிகுறியாகத் தரிக்கப்பட்ட வீரக் கழலோடு திருவடி விளங்காநிற்கவும் வீற்றிருந்த முதற் பொருளாகிய சிவபெருமானது இடது பக்கத்தில், விண்ணுலகமும் மண்ணுலகமும் அவற்றிலுள்ள சராசர ஜீவ ராசிகளும் ஒருங்கே தோன்றும்படி ஈன்றும் சூலுற்று வருந்தாத அழகிய வயிற்றையுடைய லோகமாதாவாகிய உமாதேவியானவள் வீற்றிருந்தாள். எப்படி யென்றால், இறைவனது அழகிய கண்களென்று சொல்லப்படுகின்ற சந்திரன் சூரியன் அக்கினி என்கிற மூன்றொளிகளும் நட்புக் கொள்ளப்பெற்ற இருளென்று சொல்லப்படுகின்ற கூந்தலின்மேல் அறவாழி யந்தணனாகிய அந்தச் சிவபெருமானாலே அலங்கரித் தருளப்பெற்ற தேனைப் பொழிகின்ற மணம் பொருந்திய மலர்மாலையானது தொங்காநிற்கவும், இடபக் கொடியையுடைய இறைவனது சடாபாரத்திலுள்ள இளம்பிறையானது இவ்விடத்தி லிருக்கின்ற கங்காநதியில் வீழ்ந்து இறக்கத் துணியாநிற்க வடிவம் பொருந்திய ஒளியையுடைய திருநெற்றியில் தொங்கவிடப்பட்ட ஒரு இரத்தினச் சுட்டியானது அழகு செய்யாநிற்கவும், இறைவனது முகமாகிய தாமரை மலரில் ஆசை மிகுந்த வண்டுகளாகிய கண்களுக்கு நிறைந்த அருளும், வாசனையுள்ள செவ்வல்லி மலர்போன்ற வாய்க்குச் சிறிய வெள்ளிய சிரிப்பும், ஒளி தவழ்கின்ற ஆபரணங்களாகச் சிறந்து தோன்றுநிற்கவும், அழகிய செம்பொன்னாற் செய்யப்பட்டு விளங்குகின்ற ஒளியையுடைய கர்ண பத்திரங்களின்மேல் காணப்படுகின்ற அந்தக்காதுகள்என்னும்பெயரையுடைய வள்ளைகளானவை

மாட்சிமைப்படும்படி ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட கைகால் முதலிய அவயவங்கள்போல ஆபரணத்துக்கு உட்படாமையால் அந்தக் கர்ணபத்திரங்களின் ஆபரணங்கள் போல அழகு செய்யாநிற்கவும், உயர்ந்த ஐராவத மென்னும் யானையையுடைய இந்திரனும் பிரமனும் நாரணனும் தம்மாலே தாங்கப்படுகின்ற உயிர்களானவை உடல்களினின்றும் பிரியும்படி அழியவருங்காலத்திலும் களையப்படாத வலிமையையுடைய மங்களசூத்திரமானது ஒளிநிறைந்த ஆபரணங்களுக்கு அரசுபோலச் சிறந்து விளங்காநிற்கவும், பாம்புகள் உலாவுகின்ற சடையையுடைய சிவபெருமானைத் திருஞானசம்பந்த ரென்னும் குழந்தை மூன்றுவயதிலே தமிழ்வேதம் பாடும்படிக்கு இனிமையாகிய ஞானப்பாலைக் கொடுத்தருளின ஒப்பில்லாத திருத்தனங்களின் கீர்த்தி போலமிக்க ஒளிபொருந்திய முத்துமாலையானது அவற்றின் மீது தொங்கவும், ரத்ந வளையல்களாகிய பறவாத வண்டுகள் ஒலிக்கின்ற தாமரைமலர் நீலமலரோடுகூடி அழகு பெறுநிற்கவும், பச்சைக் கிளியானது வேதாந்தப் பொருளை மறவாமல் சொல்லிக்கொண்டு முன்னங்கையில் அமர்ந்திருக்கவும், தோலாகிய ஆடையையுடைய கடவுளது பழமையாகிய மனையாளிடத்து இது வந்த தெவ்வழியாலென்று வியக்கத்தக்க பட்டாடையானது அரையி லுடுக்கப்பட்டுப் பிரகாசியாநிற்கவும், அழகிய மேகலாபரணமானது நூலிழைபோலச் சிறிய இடைக்குக் கூந்தலின் பாரத்தினுலும் தனங்களின் பாரத்தினுலும் உண்டாகின்ற வருத்தத்தைச் செய்யாதிருக்கவும், புதிய அனிச்சமலர் பட்டாலும் பொறுக்கமாட்டாமையை அறிந்திருந்தும் அந்நாளிலே நடந்த பெரிய விவாக காலத்தில் சிவபெருமானால் அம்மியின்மீதெடுத்து வைக்கப்பட்ட பாதாரவிந்தங்களில் முத்துக்களை மணிக்கற்களாகவுடைய செம்பொற் சிலம்புகள் ஒலியாநிற்கவும் வீற்றிருந்த பேரருளையுடைய உமாதேவியினிடத்து, ஸ்தநபாரத்தால் வருந்துகின்ற நூற்பிளவுபோன்ற சிற்றிடையை யுடையவராகிய அநேக தெய்வமாதர்

கள் வந்தார்கள். வசிட்டர் முதலாகிய சப்தரிஷிகளின் மனைவியராகிய அருந்ததி முதலியோர் உமாதேவியின் சந்நிதியிற் சென்று வணங்கி வாழ்த்தினார்கள். தாமரை மலரில் வாழ்கின்ற ஒரு அன்னமானது அறியாத சிவ பெருமானது திருமுடியிலுள்ள கங்கையை யறிந்து அத னைக் கிட்டிவந்து சுழலாநின்ற அன்னங்களின் கூட்டம் போலத் தாமரைமலர்களில் வாழ்கின்ற நூறுகோடி யென் னுந்தொகையுள்ள இலக்குமிகள் உமாதேவிக்கெதிரேவந்து நின்று வெண்சாமரங்களை வீசினார்கள். கோடி யிந்திரா ணிகள் வந்து உமாதேவியின் பக்கத்தில் நின்று பாம்பி னாலே கவ்வப்பட்ட சூரியனென்று கண்டோர் சொல்லுதற் குரிய சிற்றாலவட்டங்களை யசைத்தார்கள். அநேகம் கலைமக ளிர் வீணைகளைக் கையிலெடுத்து வந்து தமக்கருகே நிற்கிற தம் கணவராகிய பிரமர்களும் வீணையின் நரம்பொலியிது, கண்டத்தாற் பாடுகிற வொலியிது என்று அறியப்படாமல் உமாதேவியின் புகழை யெடுத்துப் பாடினார்கள். மான் கண்களோடு ஒப்புமை யமைந்த கண்களையுடைய உருத் திரகணிகையர் பலர் மனமகிழ்ந்து வெவ்வேறு சுவையின வாகிய பலவகைப்பட்ட காயங்களும் உப்பும் அளவொத்த இனிய கறியைப்போல சொல்லப்பட்ட மத்தள வொலியை யும் இராக வொலியையும் தாள வொலியையும், மேன் மையாகிய சிற்றடிகளின் நன்மை பொருந்திய அழகிய மிதிப்பையும் தழுவி நடித்தார்கள். சிவபெருமானது இடப்பாகத்தில் வீற்றிருக்கிற உமாதேவியின் ராஜஸ தாமஸ ஸாத்விகங்களென்று சொல்லப்படுகிற முக்குணங்க ளும், வடிவமாகக்கொண்டு வந்த மாதர்கள் அவருடைய குற்றேவல் செய்தலில் மனமகிழ்ந்து அருகில் நின்றார்கள். அவர்களுள்ளே தமோகுணமாது உமாதேவியின் அருளால் அழகையும் மாயையென்னும் பெயரையுங்கொண்டு செருக் கடைந்து நின்றாள். உருத்திரருடைய கூட்டங்கள்; தெளி வாகிய நெடிய அலைகளையுடைய கங்கையும் கங்கையும், இளஞ்சந்திரனும் இளஞ்சந்திரனும், மிருதியாகத் துள்ளு

கிற இளமையாகிய மானும் மானும் உறவுகொள்ளும்படி யாக அந்தச் சபையின்கண்ணே நெருங்கின. நாரணருடைய கூட்டங்கள் சங்குகள் ஒன்றோடொன்று தாக்கவும், ஒளி மிகுந்த உயர்வாகிய சக்கரங்களும் அப்படியே ஒன்றோ டொன்று தாக்கவும் அலைகளைச் சுருட்டுகின்ற கருங்கட லானது வந்தாற்போல ஆச்சரியகரங்களாகி எமது இறைவ ரது பெரிய சபையினிடத்து வந்து சேர்ந்தன. எண்ணில ராகிய உலகத்தைப் படைக்குந் தொழிலையுடைய பிரமர்கள் நான்கு முகங்களிலும் நான்குவேதங்களும் விதிப்படி ஒலியா நிற்கவும், நான்கு தலைகளிலும் உயர்ந்து எட்டுக்கைகளும் கூம்பாநிற்கவும், உமாதேவியினால் பகிர்ந்துகொள்ளப்பட்ட திருமேனியையுடைய கடவுளது சபையில் பரவிப் புகுந் தார்கள். வச்சிராயுதத்தையுடைய அளவற்ற இந்திரர்கள்: பிரமனும் நாரணனும் எம்மைக்காட்டிலும் உயர்ந்தவர்க ளென்று சொல்வதுமாத்திரமேயன்றி எம்மினும் உயர்ந் தவரல்லர்; சிவபெருமான் தங்கியிருக்கிற திருவோலக்கத் தைக் காண்பதற்கு எம்போல ஆயிரங் கண்களையுடையவ ரல்லர்: ஆதலால், அவர்களைப்பார்க்கிலும் நாங்களே உயர்ந்த வர்களென்று தனித்தனியே தம்மனத்தில் நினைத்துக் கொண்டு வந்தார்கள். நாகர், வித்தியாதரர், தேவர், கிம்புரு ஷர், சூரியன் முதலிய கிரகங்கள், அஷ்டதிக்குப் பாலகர், அரக்கர்,மற்றுமுள்ள எல்லாரும் விழிபிதுங்கி உடல்நெருங்க இறைவரது திருச்சபையைத் தரிசிக்கும்பொருட்டு வந் தார்கள். கேட்டையும் பெருக்கத்தையும் வாய்ச்சொல்லி னாலே பிறர்க்கு உண்டாக்குகின்ற வல்லமை பெற்றவரும், மனோவாக்குக் காயங்களால் முயன்று நல்லறவழியில் நிற் பவரும், முக்காலங்களையு முணர்ந்தவரும், பாச பந்தங்கள் நீங்கப்பெற்றவருமாகிய வசிட்டர் முதலிய பெரிய முனிவ ரர் வந்து பரவினார்கள்.

இந்தப் பூதங்களுடைய குழந்தைகள் முலைப்பால் குடிப்பது கடலைக் குடிப்பதை நிகர்க்கும், சோறுண்ணப்

ப்புகுவது பூமியை யெடுத்து விழுங்குவதை நிகர்க்கும், இந்தக் குழந்தைகளின் விளையாட்டுத் தொழில் படைப்புத் தொழில் முழுவதையும் நிகர்க்கும் என்று புகழப்படுகிற வல்லமையைக் கொண்ட பூதகணங்கள் அளவற்றனவாய் வந்து நிறைந்தன. செருக்கினால் கடவுளை நிந்தித்த வாய்க்கு விசாரிக்குமிடத்தில் பிராயச்சித்த மில்லையென்று முற்காலத்தில் சிவநிந்தை செய்த தக்கனது தலையை வெட்டி நெருப்புக்கு இரையாகக் கொடுத்து நிந்தை செய்யாத ஆட்டின் தலையைப் பொருத்திக் களித்துநின்ற வீரபத்திரன் வந்து ஒரு பக்கத்திற் சேர்ந்தான். ஆயிரம் நாரணரைக் கொன்று மாங்கனிபோற் பிழிந்து கோதுகளை யெறிந்து விட்டாலும் கடலைக் கவிழ்த்தாற்போலப் பெருகுகின்ற செவந்த உதிரத்தினால் பாதியளவாயினும் நிறையாத பிரம கபாலத்தைக் கையிலே யுடையவனாகிச் சிவபிரானது சபையினிடத்து வைரவன் வந்து சேர்ந்தான். போர்செய்ய விரும்புகின்ற வீரகாளியும், மாதருக்கு வீரமில்லையென்று சொல்வதற்குக் காரணம் யாது? வீரத்தன்மையுள்ள மாதென்று நன்றாக அறியீர்களோ? என்று சொல்லிக்கொண்டே வீரயோகினி கூட்டத்தோடும் வந்து சிவபிரானது சபையினிடத்துப் புகுந்தாள். சூரியனானவன் இருளைக் கெடுப்பதுபோல மாயையைக் கெடுத்த பிருங்கிமுனிவன் நல்வழியில் ஊன்றப்பட்ட ஞானத்துடனே வைராக்கியத்தையும் பரிசுத்தமான நல்லொழுக்கத்தையும் தனக்கு மூன்று கால்களாகக் கொண்டு சிவபிரானது திருமுகத்தில் புன்சிரிப் புண்டாகும்படி நின்று கூத்தாடினான். பூமியைச் சுமக்கின்ற பெரிய தலைகளையுடைய ஆதிசேஷனாகிய கங்கணத்தையுடைய சிவபெருமானது திருவடிகளிலே படுகின்ற ஒளிபொருந்திய கிரீடங்களெல்லாம் படப்பெறுகின்ற திருவடிகளையுடைய எம்பிறைவனாகிய நந்திப்பிரான் தாங்குகின்ற கைகளிலே அடிகள்பட அடித்து அந்தச் சபையிலுள்ளாரை இருபுறத்திலும் விலக்கி மணமுள்ள பூமாலையைத் தரித்த பிரப்பங்கோலோடு களித்துத் திரிந்த

னன். அழகிய வாணாசுரனும் பானுகம்பனும் பெய்யப்படு கிற பெரிய மழையையுடைய மேகம்போலப் பெருங்குரலை யுடைய முழவ வாத்தியங்களையும் களங்கமில்லாத பூர்ண சந்திரன்போன்ற வெண்மையாகிய சங்குகளையும் யாவரும் கைகளாலே தம் செவிகளை மூடிக்கொள்ளும்படி கைகளா லும் வாய்களாலும் ஒத்து முழக்கினார்கள். அந்தச் சபை யில் நெருங்கியிருப்பவர்களில் சிலர் துதிப்பார்கள்; சிலர் ஆடுவார்கள்; சிலர் பாடுவார்கள்; சிலர் குதிப்பார்கள்; சிலர் கைகளால் தோள்களைத் தட்டி ஆரவாரிப்பார்கள்; சிலர் மனமுருகிச் சரீரம் நடுங்குவார்கள். இப்படி நிறைந்த பெரிய சபையின்கண்ணே நானாவிதமான ஆயுதங்களின் ஒளியும், தேவர்களுடைய சரீரகாந்தியும்-அவர்களால் தரிக் கப்பட்ட பொன்னரி மாலைகளின் பிரகாசமும், தெய்வ மகளி ரது ஆபரண சோபையும் ஆகிய இவையெல்லாம் இருளா னது சிவபெருமானது கண்டத்தில் அடைக்கலம் புகும் படி வியாபித்தன. இப்படிப்பட்ட சிறப்புடன் இச் சபை யின் நடுவேயிருந்த சிவபெருமானை வினவப்படுவதொரு காரியத்தை நினைத்து, சர்க்கரையும் அமிர்தமும் கசக்கும் படி இனிமையான சொற்களையுடைய எமது தாயாகிய உமாதேவியானவள் தன் வாய்திறந்து பேசத்தொடங்கி னாள். எப்படியென்றால், "தலைவனே! இந்தச் சபையி னிடத்தில் வந்திருக்கிற பெரிய சம்பத்துள்ள யாவரும் வெவ்விய பிறவியிற் பொருந்தி அலையாதவராய் முத்தியை யடைவார்களோ? அல்லது நிலையற்றவராய்ப் பிறவியில் அகப்பட்டு அலைவார்களோ? இதனை எனக்குச் சொல்லுவா யாக" என்றாள். அதுகேட்ட சிவபெருமானானவன் உமா தேவியாரை நோக்கி, "விளங்காநின்ற ஆபரணங்களை யுடை யவளே! உன் வினாவானது நன்றாய் இருந்தது" என்று சொல்லி, அவ்வினாவுக்கு உத்தரமாக, "பூமியை அடியளந் தவனாகிய நாரணனும், பிரமன் முதலாயினோரும் தமது மனத்திலே கொள்ளப்பட்ட நாமரூபங்களோடு பொருந் தும்படி தம்மைப் பிணித்துள்ள இருவினைகளால் பேரின்ப

மாகிய முத்தியை யடையமாட்டார்கள்" என்று சொன்ஞன். அதைக் கேட்ட உமாதேவியானவள், இறைவனை நோக்கி, "அப்படியாஞல் நாமரூபாதிகளை வெல்லும்படியான உபாயமொன்றை நீ யெனக்குச் சொல்லக்கடவை" என்று கேட்க, அதற் குத்தரமாக அரும்பவிழ்ந்த கொன்றைமலர் மாலையைத் தரித்த சடையையுடைய சிவபிரான் இதனைச் சொல்வாஞயினன். எப்படியென்ருல், "ஐக்கியமாகிற பேரின்பப் பேற்றைச் சொல்லுமிடத்து, கருமபூமியின்கண்ணே மக்க ளுடம்பெடுத்தா லன்றிப் போகவுடம்பைக் கொண்டு அடைதல் கூடாது. ஆதலால், பூமியிலே பிறந்து யோகமார்க்கத்தில் நின்றவர் தத்துவ ஞானத்தைப் பெற்று முத்தியை யடைவார்கள்" என்று இந்த வாக்கியத்தைத் தன் கணவஞன சிவபெருமான் சொல்ல, இளமை பொருந்திய பூங்கொடி போல்பவளாகிய உமாதேவியானவள் இறைவனை நோக்கி, "அப்படியாஞல் பூமியின்கண் ஒவ்வொரு மனிதரும் ஒப்பற்ற ஞானசித்தியை நன்ருய் அடையும்படி போதிக்கவல்ல ஆசாரியன் யாவன்? நீ சொல்லக்கடவை" என்று வணங்கிநிற்க, மேருமலையை வில்லாக வளைத்த இறைவன் சொல்லத் தொடங்கிஞன்:—

"பூர்வகாலத்திலே உயர்ந்த சுஞ்ஞானி நிராங்காரன் என்று சொல்லப்படுகின்ற தாய்தந்தைகள் அளவில்லாத தவங்களைச் செய்தலால் எமது தத்துவசொரூபத்திஞல் அவர்களுக்குப் புதல்வஞயிஞேம். அவன் பேர் அல்லமன் என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட பிரபாவமுள்ள அல்லமனை நீ காண்பது மிகவும் அருமையாம்" என்று சொன்ஞன். சொல்லுதலும் உமாதேவியானவள் இறைவனை நோக்கி, "எல்லாவற்றிற்குங் காரணமாய் நிற்கிற எனக்கு அரிதென்று சொல்லுதற்குக் காரணம் யாது? உன் கூறுகிய ஒப்பற்ற அல்லமனது உண்மையை அறிய விரும்பிஞல் எனக்கேயன்றி இந்தச் சபையில் இருக்கிற யாவருக்கும் அந்த அல்லமனைக் காண்பது எளிதாம்" என்று மனங் கலங்கிக் கூறுதலும், பகைவரது முப்புரங்களை யெரித்த

அழகிய சிரிப்பை யுடையவனாகிய சிவபிரான் தேவியாரை நோக்கிச் சொல்லலாயினன்: "மாதே! கோபங்கொள்ள வேண்டாம்; வீணான உன் சொல்லளவிலே நிற்பவனல்லன்; வினைகளை யொழித்துநின்ற அன்பராலே அன்போடு விரும்பப்பட்ட வடிவத்தை யுடையவனாய் அவரது கண்முன் காணப்பட்டு அருள்செய்வன்; அந்த அல்லமதேவனது இயல்பு யாவராலும் சொல்லுதற்கு அரிதாகும்" என்று சொன்னான். அதுகேட்ட உமாதேவியார் மேலும் "அவ் வல்லமனைப்பார்க்கிலும் வேறாயுள்ளவர்க்கு என்னாலே செய்யப்படுகிற மாயையானது பொய்யாலே நிறைந்த செயலில்நின்றும் அவனிடத்தே தப்பிப்போமாகில் இச் சொல் மெய்ம்மையாகும், காண்பேன்" என்று செருக்கோடு சொல்லிய அளவில், அச்சொல்லைக் கேட்ட இறைவன் தேவியாரை நோக்கி, "உன் வல்லமையைப் பார்ப்போம்" என்று அடியில் வருஞ் சொற்களைச் சொல்லுவானாயினான்: "பொன்போல் விளங்குகின்ற தேமல் படரப்பெற்ற நெருங்கிய தனங்களையுடைய மாதே! இவ்வண்ணமாகப் பிரதிக்கினை சொல்லி இனி இதுமுதலாகச் சும்மா விருப்பாயானால் தோல்வி யுன்னிடத்துண்டாகும்" என்று சொல்லிய அளவிலே, பார்வதிதேவியானவள் இறைவனை நோக்கி, "என் சொல்லானது ஒருபொழுதும் தவறாது" என்று வற்புறுத்திச் சொல்லி, அதன்பிறகு அந்தச் சபையில் தன்னருகே நின்ற தமோகுணரூபமாகிய மாயையை அழைத்து, "நீ போய்ப் பூமியினிடத்துள்ள அல்லமன் என்னும் பெயரை யுடைய நாயகனை அறிந்து இவ்விடத்திற்கு வரக்கடவாய்" என்று சொல்லி அனுப்பினாள்.

அந்த மாயையானவள் தேவியை வணங்கி, அடியில் வருவதொரு சொல்லைச் சொல்லத் தொடங்கினாள்: எப்படியெனின், "அல்லமனது தன்மையை யறிந்து அங்கே அவனைக் கூடுவேன்; அவன் வசப்படாமற்போவானாகில் மிகவும் வலிமைசெய்து பற்றி இழுத்துக்கொண்டு இவ்விடத்

திற்கு வருவேன்" என்று ஒரு பிரதிக்கினை வார்த்தையைச் சொன்னாள். அந்த வார்த்தை எப்படியிருந்ததென்றால், ஒரு சிற்றெறும்பானது கடல் நீரை வற்றும்படி குடித்து விடுவேனென்று தன்னிடத்தில்லாத வல்லமையைச் சொல்லுவதுபோல இருந்தது. பிறகு அந்த மாயையானவள் தனது அளவை அறியாதவளாய் மயங்கிக் குளிர்ச்சிபொருந்திய இளம்பிறை தவழ்கின்ற சடையையுடைய கடவுளது சபையிலே நின்று தன்னாலே சொல்லப்பட்ட அந்தப் பிரதிக்கினையை முடித்தற்பொருட்டு ஆதிசேடனது முடியினால் தாங்கப்பட்ட பூமியின்மீது செல்லுதலை மனத்தில் நினைத்தவளாய் அந்தப் பூமியை யடைந்தாள்.

கைலாசகதி முற்றிற்று.

மூன்றாவது

மாயையினுற்பத்திகதி

மாயையென்று சொல்லப்படுகிற அம்மாது பூலோகத்தை யடைந்து முனிவர்களுடைய நெஞ்சங்கள் கலங்கும்படி பிறந்து வளர்ந்த செய்தியைச் சொல்லுவோம்.

களங்கத்தையுடைய வெள்ளிய சந்திரனது மனத்தை வருத்துகிற ஒப்பற்ற ஒளியுள்ள சங்கத்தையுடைய ஸ்ரீ மகாவிஷ்ணுவின் விவாககாலத்திலே அலங்கரிக்கப்பட்ட பல வளங்களையுங் கொண்ட பூமிதேவியின் மார்பிலேயுள்ள பதக்கம்போல விளங்குகின்ற விளவலதேயம் என்பது ஒன்று உண்டு. அத்தேயத்திலுள்ள குளங்களெல்லாம் மன்மதனது பெரிய அம்புக்கூடாகும். வயல்களெல்லாம் அந்த மன்மதனு லெடுக்கப்படுகிற விற்சாலைகளாகும். சோலைகளெல்லாம் அவனது திருச்சின்னச் சாலைகளாகும். மங்கையர் வீடுகளெல்லாம் அவனது போர்க்களங்களாகும். அந்த நாடு முழுதும், பொறுமையாகிய கயிற்றினாலே புகழை

யும், இனிய சொல்லாகிய வலிய கயிற்றினாலே விருந்தினரையும், ஆசாரியராலே உபதேசிக்கப்பட்ட வேதாந்தப் பொருளாகிய கயிற்றினாலே நெஞ்சையும், நல்ல அறமாகிய கயிற்றினாலே செல்வத்தையும் கட்டுவோர் உளர். பூஞ் சோலைகளின் மண முலாவுகின்ற விளவலதேசத்தை யடைந்தால், வடதிசைக் கதிபனாகிய பெருஞ்செல்வத்தையுடைய குபேரன் வறியனென்று சொல்லப்படுதற் குரியனாவன். கல்வியறிவிற் சிறந்தவனாகிய ஆதிசேஷன் கல்வியறி வில்லாதவனென்று சொல்லப்படுதற் குரியனாவன். கருப்புவில்லையுடையவனாய் அழகிற் சிறந்த மன்மதனும் அழகிற் குறைந்தவனென்று சொல்லப்படுதற் குரியனாவன். இப்படிப் பட்ட ஒப்பற்ற பல வளங்களும் நிறைந்து விளங்குகிற அந்த விளவலநாட்டில், அந்தப் பதக்கத்தின் நடுவிலே பதிக்கப்பட்ட விலையில்லாத மாணிக்கமணிபோல விளங்குகின்ற வனவசைமாநகர் என்றொன்றுண்டு. நிலத்தினுள்ளே குளிர்ச்சியையுடைய வேர்ப்பலாக்காய் பழுத்து அதனால் நன்மை பொருந்திய நிலம் வெடித்துண்டாகிய வழியால் ஆதிசேஷனது சிரோரத்நமாகிய மாணிக்கத்தின் கதிரானது ஆகாச மத்தியத்தில் தங்கிய பூர்ணசந்திரனைச் சேர்ந்து தீண்டி விரகநோயினரைக் கோபித்து அவரை வருத்துகிற மன்மதனது குடைக் காம்புபோல விளங்காநிற்கும். துறவிகள் இல்லத்தாரது வீடுகள்தோறுஞ் சென்று ஐயமேற்றுண்டு தமது ஏகாந்த ஸ்தாநமாகிய குகைகளில் சென்று தங்கியிருத்தல்போல, வண்டுகளானவை முறுக்கவிழ்ந்த மலர்கள்தோறுஞ் சென்று அவற்றினுள்ள தேனை மிகுதியாக வுண்டு தம் கூடுகளை யடைந்து ஒடுங்காநிற்கும். களிப்பையுடைய வண்டின் கூட்டங்கள் தடாகங்களினுள்ள செந்தாமரை மலர்களிலே இராக்காலத்தில் விரும்பித் தூங்கி விடியற்காலத்தில் சோலையுட் புகுந்து அங்குள்ள குயில்கள் கூவாநிற்கக் குளிர்ச்சி பொருந்திய தேனைக் கொள்ளைகொண்டு உண்ணாநிற்கும். தம் பேடுகளோடு கூடிப் பிரியாத பச்சைக்கிளிகள் வாழ்தற் கிட

மாகிய குளிர்ச்சிபொருந்திய பூஞ்சோலைகளில் வண்டுகள் போய் அந்தப் பூம்பொடியை உதிர்க்காதிருந்தால் அந்த மலர்களினின்றும் பெருகுகிற தேன் பெருக்கானது கழனிகளின் மடைகளை உடையாநிற்கும்.

சேல்மீன்கள் விளையாடித் திரிதற் கிடமாயிருக்கிற ஆற்று நீரானது பெரிய யானை மறையும்படியாய்க் கதிர்களைத் தலையிலேயுடைய செந்நெற் பயிர்களானவை ஓங்கித் தழைத்து விளைகின்ற வயல்களில் வாய்க்கால்களின் வழியாயோடி விரைந்து விழாநிற்கும். விரிக்கின்ற அழகிய சிறையையும், மெல்லிய நடையையுமுடைய பறவைகள் வாழ்தற்கிடமாகிய வயல்களானவை மச்சரேகையும் (நெடிய மீனும்) பதுமரேகையும் (செந்தாமரை மலரும்) சங்கரேகையும் (நெடிய சங்கும்) இருத்தலாலும், மலர்களையுடைய நீரை (மலர்களாகிய கணைகளைத்) தாங்குதலாலும் கருப்பு வில்லையுடைய மன்மதனது செவந்த கையை நிகர்த்திருக்கும்.

குளிர்ந்த பாற்கடலில் யோகநித்திரை செய்கிற ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் தமது சாரூப்பியத்தை யடையும்படி எவருக்குக் கிருபை செய்வரோ அவர் கையிலே அந்த நாராயணனால் கொடுக்கப்படுகிற பாஞ்சஜந்யம் என்னும் சங்குகள் பிறக்கு மிடங்கள்போலக் குளங்களெல்லாவற்றிலும் குடம் போன்ற பெரிய சங்குகள் நெருங்கியிருக்கும். தாழ்ந்தோர் உயர்வரென்றும், மிகவுயர்ந்தோர் தாழ்வரென்றும் அறநூல்களை ஆராய்ந்தோரால் சொல்லப்பட்ட நீதி வாக்கியத்தின் உண்மையை இங்குப் பிரத்தியக்ஷமாய்க் கண்டோம். அதெப்படி யென்றால், அந்த நகரத்தின் மதிலைச் சூழ்ந்துகிடந்த பழமையாகிய அகழியானது தாழ்ந்ததனால் ஒப்பற்ற ஆதிசேஷனது மணிமுடியின்மேல் நின்றது. அந்த நகரத்தைச் சூழ்ந்த மதிலானது மிகவும் உயர்ந்ததனால் மேருவை வலம் வந்து உதயகிரியினின்றும் உதிக்கின்ற சூரியனது காலின்கீழேபோய்த் தங்கினின்றது.

அந்த நகரத்தில் நான்கு வேதங்களையும் ஆறங்கங்களையும் கற்றறிந்த அந்தணர் சாஸ்திரவாதமாகிய சொற்போரைச் செய்யாநிற்பர். நீண்ட வில்லினையுடைய ஸ்ரீ ராமபிரான் போல வெற்றியுள்ள அரசர் விற்போரைச் செய்யாநிற்பர். பிறர் பொருளையும் தம்பொருள்போலக் காப்பாற்றி வாணிகஞ் செய்கிற வணிகர் பொற்போரைச் செய்யாநிற்பர். வேளாண்குடியிற் பிறந்தோர் நெற்போரைச் செய்யாநிற்பர். அந்த நகரமானது உடுப்போர்க்கு உடுத்தற்குரிய ஆடைகளாலும், உண்போர்க்கு உண்ணுதற்குரிய உணவு முதலிய பண்டங்களாலும், மாலை தொடுப்போர்க்குத் தொடுத்தற்குரிய மலர்களாலும், அலங்கரித்துக்கொள்வோர்க்கு அலங்கரித்துக்கொள்ளுதற்குரிய ஆபரணங்களாலும், குடியிருப்போர்க்குக் குடியிருத்தற்குரிய வீடுகளாலும் குறைபாடுடையதன்று. ஆயினும், கொடையாளர்க்கு இரப்போரில்லாத குறையொன்று மாத்திரம் உண்டு. சிவபெருமானாலே தரப்பட்ட ஒற்றைக் கொம்பினையுடைய யானைக்கு இரண்டு கொம்புகளையுடைய நாங்கள் இணையாவோமாயின் இந்திரனைச் சுமக்கிற நான்கு கொம்புகளையுடைய யானையானது எங்களுக்குச் சமாநமாகுமென்று களிக்கின்ற யானைகளும், இரண்டு உருளைகளையுடைய சகடங்களை யிழுக்கிற கடாக்கள் எம்மினும் உயருமாயின் ஒருருளையுடைய சூரியரதத்தை யிழுக்கிற குதிரைகள் ஒன்றனையும் இழுத்துச் செல்லாத எம்மினுஞ் சிறந்தனவாகும் என்று களிக்கின்ற குதிரைகளும், அந்த நகரத்துத் தெருக்களில் நிறைந்து நீங்காதனவாயிருக்கும். வேதங்களும் அறுபத்துநான்கு கலைகளும் முழங்குகின்ற ஓசையும், விவாகம் முதலிய சுபகாரியங்கள் செய்கிற இடங்களில் முழங்குகிற தோற்கருவி தொளைக்கருவி முதலியவற்றின் ஓசையும், யானைகளும் குதிரைகளும் ஆகிய இவற்றால் நிறைந்திருக்கிற தெருக்களில் ஓடாநின்ற மணிகளையுடைய தேர்களின் ஓசையும், நீரால் நிறைந்த கடலினது அலைகள்போல ஒன்றோடொன்று தொடர்ந்து சென்று விண்ணுலகத்திலுள்ள தேவருடைய காதுகளையும் செவிடுபடச் செய்யும்.

இவை மூங்கிலைப் பழிக்கின்றனவெனப்படுகின்ற ஒளி பொருந்திய வளைகளை யணிந்த தோள்களையுடைய உமா தேவியினிடத்து விடைபெற்றுக்கொண்டு போயும் விட்டு நீங்கி வருதற்கரிய கைலைமலையைப் பிரிந்து வந்து இந்தப் பூமியை யடைந்து முனிவர்கள் தமது பரிசுத்தமான மனங்கள் கலங்கவும், மன்மதனானவன் திரண்ட தன் தோள்கள் பூரிக்கவும், மாயையானவள் பிறந்த வனவசைமாநகரின் வளத்தை யார் சொல்ல வல்லவர்?

இந்த வனவசை மாநகரத்திற்கு அரசனா யிருந்து வாழ்பவன் யாவனெனின், அந்தத் திருமால் தன் தேவியை மார்பின்கண்ணே வைத்திருத்தல் வீணாகும், புகழைத் தருவது அன்று என்று சொல்லும்படி வெற்றித் திருவைத் தன் தோளில் வைத்தவனும், கைம்மாறு வேண்டாத மேகம்போல்கின்ற கொடையாளனாகிய மமகாரன் என்று சொல்லப்படுகிற பெயரை யுடையவனும் ஆவன். அன்றியும், தனக்குக் கப்பங்களைச் செலுத்துகின்ற வெற்றியையுடைய அரசர்க்குக் காணுதற்கரிய மேம்பாட்டை யுடையவனும், தன்னிடத்து வந்து குறையிரப்பவர்க்கு எதிரே விரைந்துபோய் அவர் காணும்படி அவர்களுக்கு எளியனாய் நிற்பவனும், நிறைந்த மதத்தை யுடைய மலைபோன்ற அஷ்டதிக்குக் கஜங்களும் நின்று சுமக்கின்ற பூமிபாரத்தைத் தானொருவனே சுமக்கின்றவிருந்த வலிமை பொருந்திய தோள்களை யுடையவனுமாவன். அன்றியும், இந்தப் பூமியை யிரப்பவர் வந்தால் இந்தப் பூமியானது நாரணனுக்கு ஓர் அடியுள் அடங்கிய எளிய பொருளேயன்றி உலுத்தராலே மறைத்து வைக்கப்படுகிற பொருளும் அன்று என்று நினைக்கும்படி ஈகையைக் கற்று, சொல்லுவோராலே சொல்லப்படுகிற சொற்களையெல்லாம் தனது புகழிலே வைத்தவனும், மண்ணுலகின் செருக்குற்று வாழ்பவனும் ஆவன். அப்படிப்பட்ட அந்த மமகாரனுடைய மனைவியானவள் யாரெனின், வளைந்த

நெடிய கூந்தலையும், அழகிய வேல்போலும் கண்களையும், மின்னற்கொடிபோன்ற இடையானது தளர்ந்து அசைந்து வாடும்படி பருத்துப் பொற்பொடிபோன்ற தேமல் படரப் பெற்ற ஆபரணங்களை யணிந்த தனங்களையும் உடைய பூங் கொம்பு போல்பவளும், இனிமை மிகுந்த அமிர்தம்போலுஞ் சொல்லையுடைய மோகினி யெனப்படுகிற பெயரை யுடைய வளும் ஆவள். வேதமுடிவிற் சொல்லப்பட்ட ஒரே பொருளான இறைவனது இடப்பாகத்தில் வீற்றிருக்கின்ற உமா தேவியாரால் அனுப்பப்பட்ட இந்த மாயையானவள் தளராத வலிமையையுடைய முனிவரது மனந் தளரும்படியாகக் கெடாத அழகை இந்தப் பூமியின்கண் இவளது பொலிவு பொருந்திய கருப்பத்திலே புகுந்து பெற்றாள் என்றால் இவளுக்குச் சமானமாக இனி யாரை யெடுத்துச் சொல்லுவோம்.

இந்த மமகாரனும், கருமை நிறைந்த மெல்லிய கூந்தலையும் வாள்போலும் கண்களையுமுடைய மோகினி யென்னும் மாதும் அழகிய பிள்ளையில்லாமையால் மிகுந்த துன்பத்தை யடைந்து உடம்பு வாடுதற்கு ஏதுவாகிய விரதங்களை அநுஷ்டித்து வந்தார்கள். அப்படிப் பயனைக் கருதிச்செய்த மோகினிமாதின் வயிற்றிலே உமாதேவியின் தண்ணிய அருளினால், அரசியலையுடைய மன்மதனது வலதுதோள் துடிக்கக் கன்னிகையாகிய மாயையானவள் கருப்பத்தை யடைந்தாள். அடைதலும் மோகினியென்பவள் முத்து மாலையால் அலங்கரிக்கப்பட்ட முலைகளின் முகங்கள் கறுக்கப்பெற்றாள். வடிவத்தைப்பற்றிய அழகிய நிறமானது வெளுத்து, நரம்புகள் பசுமையடைந்தனவாய் அந்த நிறத்தை மேலே பரப்பாநிற்க, பொய்யுறக்கங்கொண்டு புளிஞ் சுவையுள்ள பண்டங்களையும் விரும்பினாள். இவ்விதமாகப் பத்துமாதமிருந்து, பின்பு ஒரு பெண்குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தையானது சங்கிற் சிறந்த சலஞ்சலம் ஈன்ற முத்துப்போலிருந்தது. அப்படி அந்த மோகினியான

வள் குழந்தையைப் பெற்ற தினத்தில், சங்கவாத்தியமும் மத்தளமும் பிரமதாளமும் ஊதுகொம்பும் உடுக்கையும் முரசங்களும் மன்மதனது முரசமாகிய கடல்போல முழக்கப்பட்டன. அப்பொழுது மமகாரராஜன் தனக்குப் பெண் பிறந்த பெருங்களிப்பால் ஆடை ஆபரணம் இரத்தினம் பொன் பசு முதலியவற்றை அந்தணர்க்கு அவர் விரும்பினபடியே தானஞ்செய்ததுமன்றி அவர் வெறுக்கும்படியாகவும் மிகுதியாகக் கொடுத்தான். இவ்விடத்தில் அழகின் முளையாகிய மாயை உதித்தவோடும் மன்மதனுனவன் மனங்கொள்ளாத பெருங் களிப்புடையவனுய்த் தன்னுலே செலுத்தப்படுகிற வெவ்விய அம்பு மழையும், தேவர் முதலியோரால் இறைக்கப்படுகிற பூமழையும் ஒன்ருகும்படித் தானொருவனே யெங்கும் நின்று சொரிந்தான். அப்படிச் சொரிந்தகாலத்தில் இந்தப் பூமியில் கங்கா நதிக்கரையிலும் மலைக்குகைகளிலும் புண்ணிய வனங்களிலும் போய்த், தம்மீது புற்று மூடவும் மரமுளைக்கவும் யோகத்திலிருந்தும், பனிக்காலத்தில் குளிர்ந்த நீரிலும் வேனிற்காலத்தில் பஞ்சாக்கினி நடுவிலும் சேர்ந்தும், ஆஹார நித்திரைகளை யொழித்தும் செய்யப்பட்ட தவத்தையுடைய முனிவருடைய மனங்களும் மையற்கடலி லாழ்ந்து பதைத்தன. அப்பொழுது அந்த முனிவரெல்லாம் 'பஞ்சமஹா பூதங்களும் அவற்றுலாகிய சராசர ஜீவராசிகளும் அழிந்தொழியும் முடிவுக்காலத்திலும் சலநமடையாத நம்முடைய மனங்கள் இப்போது கலங்கியதற்குக் காரணம் யாதோ? அபூர்வமாகிய இந்தச்செய்கை இங்கேவந்த வரலாறு யாது?' என்று ஆலோசித்துக்கொண்டிருக்குங் காலத்தில், தளர்ந்தவிடத்து உதவுகின்ற கல்விபோல துருவாசமுனிவர் அவர்களிருக்கு மிடத்திற்கு வருதலும், முனிவரெல்லாம் அந்தத் துருவாசமுனிவரை எதிர்கொண் டழைந்து வந்து அவர்க்குச் செய்யவேண்டிய வுபசாரங்களைச் செய்து, உயர்ந்த ஆசனத்தின்மேல் அவரை யெழுந்தருளச் செய்து, அவரது திருவடிகளை மலர்களால் அர்ச்சித்துத் துதித்து வணங்கி

நின்று சொல்லுவாராயினர்: "ஐயனே! எக்காலத்திலும் எமது மனங்கள் சித்திரதீபம்போல அசையாதிருக்கும். இன்று யாது காரணத்தாலோ தென்றற்காற்றுக் கெதிரே யிருந்த சிறிய விளக்குப்போல நிலை தடுமாறுகின்றன. இதற்குக் காரணம் இன்னதென்று நாங்கள் நன்று யுணரும்படி தேவரீர் சொல்லியருளவேண்டும்" என்று பிரார்த்தித்து நின்றார்கள். அதற்குத் துருவாசமுனிவர் மனங் கனிந்து, அந்த முனிவர்களை நோக்கி, "ஓ தவத்திற் சிறந்தவர்களே! உமாதேவியானவள் சிவபெருமானோடு செய்த சபதத்தினால் தனது தமோகுண ரூபமாகிய மாயையென்னு மாதை யனுப்ப, அவள் வனவசைநகரில் இளஞ்சந்திரன் போல இன்று பிறந்தாள். அதனால் உங்கள் மனங்கள் கலங்கி வலியழிந்தன" என்று சொன்னார். அவர் அப்படிச் சொல்லக் கேட்ட முனிவரெல்லாரும் துருவாசரைநோக்கி, "ஐயனே! நீர் சொன்னது உண்மையே; ஆயினும், அந்த மாயையென்னும் பெண் பிறந்ததனால் பெரிய தவத்தொழிலையே மேற்கொண்டிருக்கிற எமது மனங்கள் கலங்குதல் தகாது. தேவரீர் எம்மிடத்திற்கு எழுந்தருளினதனால் எமக்குண்டாயிருந்த சந்தேகங்கள் யாவும் நீங்கின. ஆனால், மலையரையன் மகளாகிய உமாதேவியானவள் ஏவ மாயையானவள் இவ்வுலகில் வந்து பிறந்ததற்குக் காரணம் யாதோ அதனை யெங்களுக்கு விஸ்தரித்துச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்திக்க, துருவாசமுனிவர் சொல்லலாயினர்:

திருக் கயிலாயத்தில் திருவோலக்கத்தி லிருந்த சிவபிரான் அல்லமதேவனது பெருமையை நீ அறியமாட்டாயென்று உமாதேவியோடு சொல்லுதலும், அவ்வுமாதேவியானவள் "யான் அறியமாட்டுவேன்" என்று சொல்லி, விளக்கைக் கண்டுவரும்பொருட்டு இருளை யனுப்பினாற் போல இந்த மாயையை அனுப்பினாள். மாயையானவள் கைலையைவிட்டு இங்கு வருவதற்குக் காரண மிதுவே. அந்த மாயையென்னும் நஞ்சானது தருகிற மயக்கம் அல்லம

தேவன் என்னுங் கருடனைத் தியானித்தால் நீங்கிப்போகும். பிணிகெட வேண்டினாலும், தீர்க்காயுளை வேண்டினாலும், பெருஞ் செல்வம் பெறவேண்டினாலும், கல்விப் பெருக்கைப் பெறவேண்டினாலும், தேவர்கள் தம்மை வணங்க வேண்டினாலும், முத்தியடைய வேண்டினாலும் ஒப்பற்ற அல்லமன் என்னும் பெயருடைய மகாத்மாவை எக்காலத்தும் பெரியோர் தியானஞ் செய்வார்கள்'' என்று சொல்லி துருவாசமுனிவர் தமதிடத்தை யடைந்தார். அன்றுமுதலாக அந்த முனிவர் யாவரும் அல்லமதேவனது திருவடியை மனத்திலிருத்தி அவனது புகழைத் தமது வாய்க்கிசைந்தவாறு பலவகையாய்த் துதிக்கலுற்றார்கள். மேலும், மனமாகிய தகளியில் பத்தியாகிய நெய்யை நிறைத்துக் கருத்தாகிய பஞ்சுத்திரியி னுச்சியில் பற்றும்படி அல்லமன் என்னும் அழகிய சுடர்விளக்கேற்றி, மாயையாகிய அநர்த்த இருள் நீங்கப்பெற்றுத் தமது பழமையாகிய பெருந் தவத்தைச் செய்துகொண் டிருந்தார்கள். மந்தரகிரியாகிய மத்தினாற் கலங்கப்பெற்ற பாற்கடல்போல முனிவர் மனங்கள் கலங்கி மெல்லத் தெளிந்தமையைச் சொன்னோம். இனி, பூமியில் வந்து பிறந்தபொழுதே மாதவர் மனங்களை யெல்லாம் கலங்கச் செய்யவல்ல மமகாரன் மகளுடைய செய்தியைச்சொல்லுவோம். காந்தக்கல்லினாலே இழுக்கப்படுகிற இரும்பானது அதனோடு பொருந்துதல்போலக் கண்கள் பார்வைகளாலே தன்னோடு பொருந்தக் கட்டிக்கொண்டு யாவையும் கிரகித்தற்கு இசைந்த மனம் நியாய நூலோர் ஒரு பரமாணுரூபமென்று சொல்லுதல் நியாயமன்றென்று அம்மனத்தில் தன்னைப்பற்றி உண்டாகிய ஆசையாகிய பெரிய கடலைப் புகவிடுகின்ற மகளைக் கண்டு மனமகிழ்ந்து மமகாரராஜன் மாயையென்னும் பெயரை அவளுக்கு இட்டு நாமகரணச் சடங்கு செய்தான்.

அதன்பிறகு அந்த மகளைப்பெற்ற மோகினியானவள் அந்த மாயைக்குப் பரிமள மஞ்சள் பூசி, தன் கணைக்கால்க

ளின்மேல் பொருந்தக் கிடத்தி, நீராட்டி, இரண்டு கண்களி லும் அது விழாமல் ஒதுக்கி, உச்சிநீர் ஊதி, பட்டாடையி னால் உடம்பைத் துடைத்துத், தன் மெல்லிய முலைகளோடு சேரத் தழுவிக்கொண்டு, வாயின் எச்சிற் றுளிகொண்டு இழைத்து மண்பொட்டிட்டு, திருநீற்றுக் காப்பிட்டு, கண்க ளுக்கு அழகு பொருந்த அஞ்சன மெழுதி, கால்களுக்குச் சதங்கைகளையும் பொன்னாலாகிய தண்டைகளையும் அணி ந்து, பொன்னரைஞாண் இடையிற் கட்டி, புலிநகஞ் சேர் ந்த அழகிய பசும்பொன்னாலாகிய பதக்கத்தை மார்பிலே யணிந்து, தோள்களில் சிறிய மெல்லிய தொடியணிந்து, பெண்ணரசியாகிய அவளது அழகிய நெற்றியாகிய பொன் னிறமுடைய பிறையின்மேலே ஒரு சுட்டியணிந்து, போக் குதற்குரிய செஞ்சோற்று நீரால்த்தி-கற்பூராலத்தி-வெண் கடுகுமுதலிய பொருள்களாலே கண்ணெச்சிலால் நேரிட்ட குற்றத்தைப் போக்கி, அன்போடு முலைப்பா லுண்பித்து, தூக்கப்பட்ட பவளக் கால்களையுடைய பசும் பொன்னா லாகிய தொட்டில் நிறையும்படி படுக்கவைத்துப் பார்த்து, "மகிழ்கின்ற சுவையையுடைய மேலான அமிர்தமே! உலக த்தை யாளுகின்ற மமகாரராஜனுக்கு அழகு செய்பவளே! எனது பிள்ளைக்கலி தீர்த்த இனிய கரும்பே! என் கண் மணியே! என் செல்வமே!" என்று சீராட்டி, வறியனாகிய ஒரு செய்யாளன் அந்தச் செய் விளையும்படி காப்பாற்று கின்ற செய்கைபோலவும், ஒப்பில்லாத கல்வியை விரும்பின வன் பாடம் போற்றுதல்போலவும், கோடுதலில்லாத செங் கோலையுடைய மநுநூலின் வழி நடக்கின்ற அரசன் உலகத் துயிர்களைக் காப்பாற்றுகின்ற செயல்போலவும், வருத்தத் திற்கு ஏதுவாகிய பல விரதங்களை யனுஷ்டித்துத் தான் பெற்ற பூங்கொடிபோன்ற மகளை வளர்த்தாள். 'வஞ்சக முடைய மாயையின் அழகுபோல் யான் பார்த்ததில்லை' என்று மிகவும் உள்ளத்திலே யாச்சரியப்பட்டுச் சிரமசைப் பதுபோல அசைகின்ற விளக்கைப் பார்த்தும், ஒற்றை விரலை மெல்லச் சுவைத்தும், விளங்குகின்ற அழகிய சதங்

கையணிந்த கால்களை யுதைத்துக்கொண்டு விரிந்த செவ்வல்லி மலர்போலும் வாயைக் குவித்து அழுதும், மீளச் சிரித்தும் கிடக்கும் மாயையானவள் முகம் கவிழ்கின்ற பருவமடையவே அதற்கு முன்னே நாணத்தால் முகம் கவிழ்ந்து கிடந்த மன்மதன் உட்கார்ந்தான். அவள் உட்காரும் பருவமடையவே அவன் கைவிட்டுப்போன வில்லொன்றை எடுத்து எழுந்தான். பொன்னினாற் செய்யப்பட்ட பாவை போலுள்ள அவள் எழுந்துநிற்கும் பருவமடையவே அந்த மன்மதன் நடந்தான். மமகாரராஜனீன்ற மகளாகிய அவள் நடக்கும் பருவமடையவே பரிசுத்தமாகிய தவத்தைச் செய்து ஐந்தாசைகளையும் ஒழித்த முனிவரிடத்துக்கு ஓடினான். அம் மாயையானவள் புள்ளாங்குழலி னிசையையும் வீணையி னிசையையும் இன்பந் தருவனவென்று சொல்லாதபடி மெல்லிய கொவ்வைக் கனிபோன்ற வாயால் மழலைச் சொல்லைச் சொல்லியும், உடற்கின்ப முண்டாகும்படி ஓடி மேல் விழுந்தும், யாவராலும் விரும்பப்படுகின்ற அமிர்தத்தைக் காட்டிலும் மிகவும் இன்ப முண்டாகும்படி உண்ணப்படுகின்ற அறுசுவை யுண்டியைச் செழுமை பொருந்திய சிறு கைகளால் துழாவியும், தன்னை ஈன்றோர்களாகிய மமகாரராஜனையும் மோகினியையும் தன்மீது அதிக மோக முள்ளவர்களாகச் செய்தாள். மேலும், உலகமுழுதும் பரவிய பெருஞ் சிறப்பையுடைய அல்லமனைப் பிடிக்கவந்த மதிபோன்ற மதியினால் தன்னுருவத்தின் சாயையைப் பிடிக்க நினைந்து ஓடியோடி அது அகப்படாமையினால் அழுவாள். ஒப்பில்லாத சந்திரனானவன் பிற்காலத்தில் கோபித்துக் கொதிக்கின்ற நெருப்பை வீசாதிருக்கும்படி அடுத்து அவனை யுறவுகொள்வாள்போல வாவாவென்று அழைத்திடுவாள். இவ்விதமாக மாயையானவள் தந்தை தாயார் மகிழும்படி வளர்ந்து, அரசுசெய்து இருந்த அரசனானவன் இறக்க அவன் வழியில் தோன்றிய இளம் புதல்வனானவன் அவனது சிங்காதனத்தின்மேல் இருப்பதுபோல், முன்னே முளைத்த வெண்பற்கள் விழுதலும் அவை யிரு

ந்தவிடத்தில் வேறு பற்கள் முளைக்கப் பேதைப் பருவங் கடந்து அதற்குமேல் வர்க்கடவதாகிய பெதும்பைப் பருவத்தை யடைந்தாள். செய்வல்ல கம்மாளனால் செய்யப்பட்ட சிங்காசனத்தின்மேல் மணிமகுடத்தை யணிந்த அரசனானவன் மெல்லவந்து கொலுவீற்றிருக்குந் தன்மைபோல், வெவ்விய தக்கைகள் வளர்த்து நீங்க மேம்பட்ட குணத்தையுடைய வள்ளைபோன்ற காதுகளில் பரிசுத்தமான பசும்பொன்மேல் மணிகள் அழுத்திச் செய்யப்பட்ட ஒன்றற்கொன் றொப்பாகிய குண்டலங்கள் அணியப்பெற்று விளங்கினாள். தேனையுடைய மலர்களாகிய அம்புகளை யேந்திய மன்மதனுக்கு வனதுர்க்கமாக வளர்க்கப்பட்ட கூந்தற் காடானது (பழியொடு கலந்து) மலரோடு கலந்து: (கால்வலை யுற்றது) கட்டப்படுதலை யுற்றது. கண்களானவை நமது கடவுளின் கண்டத்திலுள்ள நஞ்சின் குணத்தையும் சிறிது பொருந்தின. இளமுலைகள், துறந்தோராகிய பறவைகள் முட்டி மயக்கமாகிய கண்ணியிலே அகப்படுதலை மறைந்து மெல்ல எட்டிப் பார்ப்பனபோல் முகங்கொண்டு மார்பில் புறப்பட்டன. அன்ன நடையும், அன்னத்தை விட்ட முனிவரது ஒழுக்கமும் சோர்வடையும்படி மாயையானவள் நடக்கும் நடை கற்றாள்; கரும்பைக் கசப்பிக்கின்ற சொற்களைப் பெற்றாள்.

வளத்தால் மிகுந்த மலரின்கண்ணே வீழ்கின்ற வண்டுகள்போன்ற காளையரது பார்வைக் குறிப்பை யறிந்தாள். அதனால் தானே தன்னை அரியவளாக மதித்துத் தன் மனத்தில் செருக்கடைந்தாள். இந்த மாயையினது சந்திரன் போலுள்ள முகத்தின் முழுப்பார்வையைப் பெற்றுச் சிவப்பு நிறம் பொருந்திய வாயின் வலிமையை யடைந்து அழகிய சிங்கம்போலுள்ள இடையினையடுத்த தகுதியினையுடைய அரவுபோலுள்ள அல்குலின் வலியையுஞ் சேர்ந்து முதன்மையாகிய மீனக் கொடியையுடைய மன்மதனானவன் துறவோராகிய பகைவரை வெல்லும்பொருட்டு

மணத்தையுடைய புஷ்பபாணங்கள் பலவற்றைத் தன் கருப்புவில்லிற் றொடுத்தான். பக்குவமாகப் பொங்கி யெழுகின்ற அன்னம்போலப் பொங்குகின்ற வளர்ச்சியை யுடைய மோகத்தைச் செய்கிற மாயையின் பருவத் தை நினைத்துக் கிரீடத்தையுடைய அரசனானவன் நான் முகனும் கண்டு மயங்கத்தக்க ஒரு கன்னியாமாடம் அமைத்து, அதன்கண் கற்பிக்கப்பட்ட நானாவிதமான வித்தைகளையும், அவற்றை முடிவுறக் கற்று வல்ல மகளிர் பலரும் சூழ்ந்துநிற்க அவரோடு சிந்தித்துக்கொண்டு இருக்கும்படி செய்தான். தனக்குத் தகுந்துள்ள அந்த அழகிய மாடத்தை யடைந்து பற்பலவாகிய பாமாலைகளை அப்பியசித்து, நரம்பாகிய நாவையுடைய ஒப்பற்ற வீணை யைத் தனக்கு மாணாக்கனென்று சொல்லும்படி அசைத் துத் தடவுகின்ற அங்குலிகளாலே பேசுவித்தும், அங்கு ஒரு மங்கையானவள் மத்தளத்தை முழக்காநிற்க, சில மங்கையர் இராகங்களை முறைமைப்படி பாடாநிற்க, ஒரு புசுங்கொடியானது மணம் விரிந்த மலரின்கண் வண்டொலி செய்யாநிற்கத் தென்றற்காற்றினால் அசைதல்போலப் பாடிக்கொண்டு நடித்தும், வளர்கின்ற தனமாகிய அரச னுக்கு நேராக வராநிற்கக் கையாகிய அவ்வரசனுடைய சேவகன் அடித்துத் துரத்துந் தோற்றம்போல மணம் பொருந்திய மலரணிந்த கூந்தலின்மேலே வண்டுகள் ஒலித்து எழும்படி பருத்த முத்துக்களால் செய்யப்பட்ட மெல்லிய பந்துகளை அடித்து விளையாடியும், மலர்மாலையை நெடிய கூந்தலில் சூடியும், நல்ல மணமுடைய சந்தனத்தை யும் கஸ்தூரியையும் மேனி முழுதும் விளங்கும்படிப் பூசி யும், பல அவயவங்களுக்கும் பொருந்த அணிதற்குத் தகுதி யாகிய ஆபரணங்களை அணிந்தும், குடித்தற்குத் தகுதி யாகிய பலவகைச் சுவைகளையுடைய குடிநீர்களைக் குடித் தும், இனிமையாகிய பழங்களைப் பாலொடு சேர்த்துச் செம்பொன்னாலாகிய கூடுகளினால் தாங்கப்படுகிற பச்சைக் கிளிகளை யுண்பித்துத் தன் சொல்லை அது கற்கும்படி கற்

சந்திரனைத் தூரத்திற் கண்டு மலர்கின்ற நீலோற்பலங்கள் வாடவும், முதிர்ந்த வொளிபொருந்திய ஆபரணங்களணிந்த இளமையாகிய தனங்களையுடைய அழகு பொருந்திய மாயையின் முகமாகிய சந்திரனைச் சேர்ந்த வரிபரந்த கண்களாகிய நீலோற்பலங்கள் மலரவும், பச்சைக் குதிரை பூண்ட தேரையுடைய சூரியன் கிழக்குத் திக்கிலுள்ள உதயகிரியில் தோன்றினான். அப்பொழுது அன்னத்தின் மெல்லிய இறகால் பதப்படுத்திச் செய்த சயனத்தின்மீது தமியளாகிப் பெருமை பொருந்திய வொரு மயில்போலத் துயில்செய்த மாயையானவள் விழித்துக்கொண்டு, தொழில் நிறைந்த மஞ்சனசாலைக் குட்சென்று பணிவிடைப் பெண்கள் இனிய வாசநீரை யேந்திவர அந்த நீரில் ஸ்நாநம் செய்தாள். பின்பு விலை யிவ்வளவென்று மதிக்கப்படாத அரதனக்கோவைசூழ்ந்த கரையையுடைய பட்டாடை யுடுத்து, அந்த ஆடையின் ஒரு முன்றுனையைத் தனங்களின்மேல் அழகா யணிந்துகொண்டாள். அவளது தனங்களோடு பொருந்திய ஆடையைக் கண்ட நாள்தொடங்கி யல்லவா தருக்க சாத்திரங் கற்றுவல்லவர் கடபடமென்று உதாஹரிப்பது! ஒரு சேடியானவள், பொன்னினாற் செய்த மணிகளிழைத்த மிதியடிகளைக் கொண்டுவந்து எதிரே வைக்க, மாயையானவள் கட்டவிழ்ந்த செந்தாமரைமலரை நிகர்த்த தன் பாதங்களில் தொடுத்துக்கொண்டு நடந்து போய் ஆபரண மணிந்துகொள்ளுதற் குரிய அலங்கார மண்டபத்தில் ஒரு சுவர்ண ரத்னமயமான ஆசனத்தில் வீற்றிருந்தாள். அவ்விடத்திற்கு ஆபரணங்களைக்கொண்டு அலங்கரிக்கிற வண்ண மகளிர் பலர்வந்தார்கள். ஒரு வண்ண மகள், மன்மதன் தன் வில் வளையும்படி பூட்டிய வண்டாகிய நாணின் கீழ்க் குதைப் பூட்டைக் கழற்றிவிட்டதுபோல மலரா லலங்கரிக்கப்பெற்ற கருமையாகிய அளகபாரத்தைப் பின்னி யலங்கரித்து வீரத்தன்மை யமைந்த வேல்போன்ற கண்களையுடைய மாயையின் முதுகிலே தொங்கவிட்டாள். பொற்பொடியும் விரும்புதற்குரிய தேமல்படர்ந்து விளங்கு

கிற ஸ்தனங்களையுடைய ஒரு சேடியானவள், பின்னிவிடப் பட்ட சடையுருவாகிய நெடிய கூந்தலெனப்படுகிற கரிய பெரும்பாம்பானது முன்னே விழுங்கின சூரிய சந்திரர் களை உமிழ்ந்துவைத்த முறைமைபோல மாயையின் ஒளி பொருந்திய நெற்றியின்மேல் சூரியப்பிரபை சந்திரப்பிரபை என்று சொல்லப்பட்ட ஆபரணங்களை அழகுபொருந்த அலங்கரித்தாள். ஒரு சேடியானவள், களங்கமில்லாத ஒள் ளிய சந்தனப்பொட்டாகிய வெள்ளிய சந்திரனைக் கவர்தற் பொருட்டுக் கூந்தலாகிய கருமணலின்மேல் சுவடுபடச் செல்லுகிற ஒரு சிறு பாம்புபோல மயிர்வகிரில் பொருந் தும்படி ஒளிமிகுந்த மாணிக்கச் சுட்டியொன்றைத் தொங்க விட்டாள். ஒரு பாவைபோலும் சேடியானவள், மன்மத னது கொலைசெய்யும் நஞ்சு பூசப்பட்ட கொடிய வேல் போல் மையிடப்பட்ட கண்ணானது தன்னோடு போர்செய்ய வருதலால் அந்தக் கண்ணின் பகையாகிய குவளைமலரைத் தான் படைத்துணையாகச் சேர்த்துவைத்திருக்கிற தன்மை போலத் தோன்றக் குவளைமலரை அழகிய காதின்மே லணிந்தாள். ஒரு வண்ணமகள், துறவினரை யடுத்து அவ ரது பெரிய தவத்தை அழித்துவிடுங்களென்று மன்மதன் தங்களுக் கனுப்பின வோலைச் சுருள்களைக் கண்களானவை, யாராயினும் தம்மீது நிந்தை சொல்வாராயின் அவ்வோலைச் சுருள்களை அவர் கையிற் கொடுத்து அந்த மன்மதன்மேல் நிந்தை சொல்வதற்குத் தம்மருகே வைத்திருப்பதுபோலத் தோன்றும்படி பொன்னோலைச் சுருள்களைச் செவிகளிலே தரித்தாள். ஒரு வண்ணமகள், தன்னை யிகழ்கின்ற வெண்மை யாகிய பற்களின்மேல் நிந்தை சேரும்படி, நிலைபெற்று அந்தப் பற்கள் நிகரற வாழ்கின்ற வீட்டு வாயின்முன்னே சென்று சாவேனென்று கழுத்திற் கயிறு கட்டிக்கொண்டு தொங்குகிற முறைமைபோலத் தோன்றும்படி முத்துக் கோத்த மூக்கணியை மூக்கில் அணிந்தாள். ஒரு சேடி யானவள், கற்றையாயுள்ள கூந்தலானது நல்ல மலர்மாலை யோடு பாரமாய்ப் பொருந்துதலாலே வருந்துமென்று,

விளங்காநின்ற பொற்பூண் சேர்த்ததற்கு நிகராக, வில்லைப் போலத் தோன்றுகிற வொளிபொருந்திய நெற்றியையும் அழகையுமுடைய மாயையின் கழுத்தில் பொன்னினாற் செய்யப்பட்ட பரப்பாகிய பொன்வட்டத் தகட்டணியைச் சிரசில் அணிந்தாள்.

ஒரு பணிப்பெண்ணானவள், மாயையினது கைகள் வந்து (கன்னியாராசியி லிருக்கின்ற அஸ்த நட்சத்திரம் வந்து) ஒரு ஜாதியாயுள்ள மணிக்கற்களையுடைய கடகத்தி னுள்ளே நிலைபெற்றது (கூட்டமாகிய முத்துக்கள்போன்ற கற்கடக ராசியிலே நிலைபெற்றிருக்கிறது) ஆச்சரியமென்று சொல்லவும் வளைகள் பலவற்றையும் காக்கவும் வில்லை நிகர்த்த நெற்றியையும் கரிய கண்களையும பேதைமையையும் உடைய மாயையினது கைகளிலே விளங்கும்படி பொன்னாலாகிய நல்ல மணிக்கடகத்தை யணிந்தாள். மயில்போன்ற ஒரு வண்ணமகள், ஆராய்ந்து கொள்ளப்பட்ட இனிய அறுவகைச் சுவைகளையுடைய வுணவுகளைத் தருதற்குச் செல்லுகின்ற கையோடுகூடிச் சென்று வாயினது தெள்ளிய அழகைக் காணும்பொருட்டுச் சேர்ந்திருக்குமாறு போல மாயையின் கையில் கற்கடகத்தின் முன்னே குற்றமில்லாத செம் பவளங்களைக் கோத்துக் கட்டினாள். ஒரு சேடியானவள், சுபமான செய்கைகளையுடைய காளையரது மனங்கள் நடத்தற்பொருட்டாகக் குங்குமப் பெருஞ் சேற்றினைக் குறித்து இடப்பட்ட கற்கள்போல் தோன்ற பெண்களுக்குத் திலகம்போல் சிறந்தவளாகிய அழகையுடைய மாயையின் ஸ்தனங்களின்மேல் ரத்னாபரணங்களை அணிந்து அலங்கரித்தாள். திருமகள்போன்ற ஒரு சேடியானவள், பாய்கின்ற வெள்ளிய அலைகளையுடைய கருங் கடலாற் சூழப்பட்ட நிலத்தைத் தலைச்சுமையாகவுடைய ஆதிசேஷனது ஆயிரம் படங்களாலும் அரசிறை யிடப்பட்டதுபோல்வனவாகிய மேலாக விளங்காநின்ற கதிர்களை விரிக்கின்ற மணிகளாகிய மேகலாபரணத்தை மாயையினது

நிதம்பத்தின்மேல் அணிந்து அலங்கரித்தாள். ஒரு பணிப் பெண்ணானவள், உரல்போலும் அடிகளையும் களிப்பையும் உடைய யானையின் வரவைக் கண்டு வீதியில் சஞ்சரிக்கிற வர்கள் ஓட மணிகளை யிருபக்கத்திலும் கட்டுதல்போல, மிக்க தவத்தையுடைய முனிவர் தெரிந்து ஓடும்படிக்கு ஒள்ளிய நுதலையுடைய மாயைக்கு நல்ல தாமரைமலர் போன்ற அடிகளிலே சிலம்பணிந்து அலங்கரித்தாள். ஒரு சேடியானவள், குடலையகத்துள்ள மெல்லியமலரை மணத்தி னால் அறிந்து அதைச் சேர இராகங்களைப் பாடுகின்ற வண்டினங்களானவை சூழ்ந்துகொள்ளுதல்போல இளைஞ ரது கண்கள் பரப்பத் தேடுதற்கரிய பொருள்போல்பவ ளாகிய மாயைக்கு மிகுதியாகிய பரிமளமுள்ள சந்த னக் குழம்பைப் பெருமை பொருந்திய குவிந்த தனங்க ளின் மேல் பூசினாள். ஒரு வண்ணமகள், உனது வடிவ மே உனக்கு உவமையாகும், அதல்லாமல் வேறொன் றில்லை என்று காண்பிப்பவள்போலக் கண்களால் காணும் வண்ணம் தெளிவாகிய ஒரு பெரிய கண்ணாடியை மலைக ளெனப்படுகின்ற குவிமுலைகளையுடைய மாயைக்கு முன் னே தாங்கி நின்றாள். இவ்வாறாகப் பணிப் பெண்களால் அலங்கரிக்கப்பட்ட மாயையானவள் வீரத்தன்மையுள்ள மன்மதனாலே வளைக்கப்படாத செங்கரும்பும், அவன் வில் லின் நாணின்மேல் தொடுக்கப்படாத மலரும், களங்கமில் லாத ஒளியையுடைய சந்திரனும், மேகத்தைச் சேராத மின்னற் கொடியும், கடலிலே தோன்றாத இனிய அமிர்த மும், வேரில்லாத பூங்கொடியும்போல விளங்கினாள். பணிப் பெண்கள் இவ்வாறு அலங்கரித்தனும், ஒரு மாது வந்து எதிரே நின்று, "ஒப்பற்ற எம் இறைவியே! மதுகேச்வர னைப் பூசித்தற்கு வேண்டியபொருள்கள் யாவும் ஆயத்தமா யிருக்கின்றன; இனி நீ பூசை செய்வதற்குப் போகலாம்" என்று சொன்னாள். அதைக் கேட்ட மாயையானவள் மயில் எழுந்தாற்போல எழ, அவளைச் சூழ்ந்திருந்த மாதர் கூட்டங்கள் குயிற் கூட்டங்கள் எழுந்தாற்போல எழுந்

தார்கள். அவரது பாதச் சிலம்போசைகள் தூக்கத்தை விட்டெழுந்தாற்போல எழுந்தன. இரத்நாபரணங்களின் காந்திகள் வெய்யி லெழுந்தாற்போல எழுந்தன. அப்பொழுது தண்டிகை சுமப்போர் பொன்னினாற் செய்யப்பட்ட தண்டிகையை எதிரே கொண்டுவந்து வைத்தார்கள். உடனே மாயையானவள் அந்தத் தண்டிகையில் ஏறினாள். ஏறுதலும், திருச்சின்னங்களும், தவள சங்கங்களும், பேரியும், மத்தளமும் சந்திரோதயகாலத்தில் கடல்முழங்குதல்போல அவளுக்கெதிரே முழங்கின. கோபாலனாகிய கண்ணனால் ஊதப்பட்ட புள்ளாங்குழலானது பலவிடங்களிலுஞ் சிதறிநின்ற பசுக்களை ஓரிடத்திற் சேர்ப்பதாகும்; இந்தப் புள்ளாங்குழலோ வெனின், அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய மான்போன்ற மாதர்களைச் சேர்ப்பதாகும் என்று சொல்லும்படிக்கு புஷ்ப தநுசையுடைய மன்மதனாலே திரட்டி யெடுக்கப்பட்ட அமுதம்போல்பவளாகிய மாயைக்கு முன்னே சில மங்கையர் சென்று ஆறு முகங்களையுடைய முருகனும்மனங்குழையும்படிப் புள்ளாங்குழலை ஊதினார்கள். விளங்காநின்ற மாயையாகிய அழகிய கரும்பினுந் தாழ்ந்தவரும் திருமகளினும் உயர்ந்தவருமாகிய பல மங்கையர் தன்னுள்ளே ஊற்றுயிருந் தொழுகாநின்ற தேனையுடைய மலரை விரும்பிச் சூழ்கின்ற வண்டுகள்போலப் பிறருடைய கால்களால் நடக்கின்ற மாயையின் இருபுறத்தும் இடைவெளியில்லாமல் நெருங்கிச் சூழ்ந்தார்கள். மன்மதனைவன் சந்திரனாகிய தன் குடையை இவளுக்குக் கொடுத்தானோவென்று சொல்லும்படிக்கு வெள்ளைக் குடையானது, அசைக்கப்பட்ட வாள்போலப் புரளாநின்ற களிப்பும் நெடுமையுமுள்ள கண்களையுடைய மாயையின் பக்கத்திற் பொருந்த, நஞ்சுபோலுங் கண்களையுடைய மகளிர் பலர் இளங்கமுகின் பாளைபோன்ற வெண்சாமரங்களை இரண்டு பக்கங்களிலும் நின்று வீசினார்கள். காமமாகிய் கொடிய நெருப்பைமூட்டுதல்போல மணம்பொருந்திய மலர்களாற் செய்யப்பட்ட விசிறிகள் சில மாதரால் அசைக்கப்

யட்டன. கருப்புவில்லை யேந்திய நெடிய கையினையுடைய மன்மதனானவன் பொய்யம்புகளைச் சொரிந்து மாயையின் கருத்தை யறிதல்போல அழகினால் திருமகளை வென்ற மகளிர் சிலர் நெருங்கிப் பூமழை பொழிந்தார்கள். பாக்கு வெற்றிலையும் சந்தநமும் குங்குமமும் பச்சைக்கர்ப்பூரமும் மகிழ்ச்சியைத் தருகிற கஸ்தூரியும் வண்டுகள் மொய்த் தொலிக்கின்ற பூமாலையும் பெருமை பொருந்திய ஆபரணப் பெட்டியும் ஆகிய இவற்றைப் பலமாதர்கள் சுமந்துகொண்டு சென்றார்கள். தனங்களாகிய அழகிய குவிந்த தாமரை யரும்புகளும், கண்களாகிய கெண்டைமீன்களும், வாயாகிய ஆம்பல் மலரும், அழகிய கைகளாகிய தாமரை மலர்களும், நாபியாகிய சுழிகளும் ஆகிய இவைகளை யடுத்துச் சுபம் விளங்குகிற அழகிய வீடுகளையுடைய வீதியானது மிகுதியாகிய நீர் பெருகாநின்ற யாற்றினை நிகர்த்திருந்தது. சந்திரன்போல ஒளி பொருந்திய நெற்றியை யுடைய மாதரது செம்பொற் சிலம்போசையும், வளைகளோடு மற்றைய ஆபரணங்களின் சிற்றொலியும், பரிமளம் வீசுகின்ற பூமாலைகளில் மொய்க்கிற வண்டுகளின் ஓசையும் கூடிப் பல நீர்த்துளிகள் சேர்ந்து பெருகுதல்போலக் கடலுக்கு நிகராக மிக்கொலிக்கும். இவ்வாறு நெருங்கிய மாதர்சேனை சூழ்ந்து வாராநிற்க, அழகிய மயில் போல்பவளாகிய மாயையானவள் வெற்றியைக்கொண்டு அழகாகப் பிரகாசிக்கிற மழுவை யேந்திய பரமசிவன் தனது நெற்றிக் கண்ணினால் மன்மதனைக் கொன்றதற்குக் காரணம் யாதென்று அவரைக் கேட்போமென மனவலி கொண்டு போகின்ற செயல்போல அந்தத் தெருவில் சென்றாள். அப்போது அரிகளையும் களிப்பையும் குளிர்ச்சியையுமுடைய கண்களோடு கூடிய மாயையின் பக்கங்களில் சூழ்ந்து வருகின்ற மகளிரது அழகைப் பார்த்தவளவில், நெருப்புப் போன்ற கண்களையுடைய ஆண்சிங்கத்தை நிகர்த்த ஆடவர்கள், யானையால் விழுங்கி யுமிழப்பட்ட விளாம்பழத்தை யொத்திருந்தார்கள். அந்த ஆடவருள்

ளே சிலர் "நன்னடைக்குக் காரணமாகிய நமது பேரறிவை யெல்லாம் இந்த மாதரது இடையொரு சிறிதும், ஒளி பொருந்திய நெற்றி யொருசிறிதும், வாள்போன்ற கண்க ளொருசிறிதும், பவளம்போன்ற வாயொரு சிறிதும், இணைக்குடம் போன்ற தனங்க ளொருசிறிதும் இவ் விடத்திற் கொள்ளை கொள்ளுதலாலே அவை ஒழிந்து போயினவே, இனி யென்செய்வோம்?" என்பார்கள். வேறு சில ஆடவர், "மனிதர்க்குள்ள அறிவு அவர் சேர்ந்த இனத்தினது இயல்பாகும் என்று சொல்லப்படுவது உண்மையே; மனவருத்தத்தை யுண்டாக்குகிற காம மயக்கத்தை நீக்குகின்ற விபூதியானது அனிச்சப் பூவினும் மெல்லிய அடியையுடைய மாதரது நெற்றியிற் சேர்தலும் காம மயக்கத்தை யுண்டாக்குதலால் எம்முடம்புகள் வியர்த்து வேகின்றன" என்று சொல்லுவார்கள். வேறு சில ஆடவர், "உமாதேவியைத் தன் இடது பாகத்திலே யுடைய அருளுருவினனாகிய மதுகேசன் முன்னொரு காலத்திலே தேவர் முதலியோர் தம்மை நஞ்சுவருத்துதலா லுண்டாகிய துன்பத்தைச் சொல்லுதலும் அவர்க்கிரங்கி அந்தத் துன்பத்தை நீக்கிக் காத்தவனாதலால் மாயையோடு செல்லுகின்ற மங்கையரது கண்களாகிய நஞ்சு செய்யுந் துன்பத்தையும் நாம் அவனோடு சொல்லிக்கொள்வோம்" என்று சொல்வார்கள். வேறு சில ஆடவர், "இந்த மாதர் கூட்டத்தில் அழகிற் சிறந்தவள் எவளென்று தம்மை வினவுவோர்க்கு விடையாக, மா வாழை பலா என்னு முக்கனிகளுள்ளே எந்தக் கனி மிகுந்த சுவையுள்ளது நீங்கள் சொல்லுங்கள்" என்பார்கள். வேறு சில ஆடவர், "கரும்பினும் மிக்க இன்பம் செய்கிற சிவந்த கயல்போலுங் கண்களை யுடைய மாதரது நமக்குப் பயன்படாத தனங்களாகிய இளங் குரும்பைகளையும், அதரமாகிய கோவைக்கனியையும் விரும்பி உலகினர் முன் வீணாக மனம் வருந்துதற்குக் காரணம் யாவரும் நகைத்தற்குரிய தமது அறியாமையே யாகும்" என்பார்கள். "விஷம் பொருந்திய மதர்த்த

கண்களையும், பரிமளம் பொருந்திய மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற கூந்தலையும், துவளாநின்ற நூலிழை போன்ற இடையையும், பிறைபோன்ற நெற்றியையு முடைய பொற்கொடிபோல்பவராகிய மாதர், குடங்கள் நாணமடைதற்குரிய இளமையும் திரட்சியுமுள்ள தமது கொங்கைகளை மூடிக்கொண்டாற்போல உடம்பு முழுதும் மூடிக்கொண்டால் நாம் பிழைக்கலாம்'' என்பார்கள். இவ்விதமாக இளைஞர் யாவரும் மயங்காநிற்க, கோவைக்கனிபோன்ற அழகிய அதரத்தையுடைய மங்கையரோடும் முல்லைமலர் மாலையை யணிந்த கூந்தலையுடைய மாயையென்பவள் அந்த மதுகேசர் கோயிலினருகே போயினாள். இப்படிப் போன மாயையானவள் தண்டிகையினின் றிறங்கித் தன் தலையால் தாங்கப்பட்ட குவிந்த கையுடனே கோபுரவாயிலுட் புகுந்து நாககங்கணத்தைத் திருக்கரத்தி லணிந்த மதுகேசரது சந்நிதியிற் சென்றாள். சென்று பூசைக்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாங் ஏவற் பெண்கள் அவ்விடத்தில் பக்கத்தில் நிறைத்துக்கொண்டு கொடுத்துக்கொண்டிருக்க, நெற்றிக்கண்ணையுடைய மதுகேசருக்கு அன்பு பூண்டவளாய்ப் பூசை செய்யத் தொடங்கினாள்.

பூசைக்கு முதலிலே செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் விதிப்படி செய்து, அருக்கிய முதலானவைகளைக்கொண்டு, கடவுளணிந்திருந்த மலர் முதலானவற்றைக் களைந்து, மந்திரஞ் சொல்லித் திருமஞ்சனஞ் செய்யத் தொடங்கி, எண்ணெயும் பஞ்சகவ்வியமும் பஞ்சாமிர்தமும் நெய்யும் பாலும் தயிரும் தேனும் கருப்பஞ்சாறும் கனிரசமும் தெங்கிளநீரும் பரிமளமுள்ள சந்தனக்குழம்பும் வேதாகம விதிப்படி யமைந்த ஸ்தபந கலச நீரும் ஆகிய இவை யெல்லாவற்றாலும் ஒவ்வொன்றன்பின்னொன்று முறையே மதுகேசருக்கு அபிஷேகஞ் செய்து, வளையலை யணிந்த மெல்லிய கைகளையும், வேல்போலும் விழிகளையும் உடைய மாயையானவள் மதுகேசருடைய திருமேனியின்மீது திரு

நீறு இயற்கையாய்ப் பூத்திருந்தும் மங்களகரமாகிய அவர் திருமேனி முழுதும் சந்தனத் திரளை நிறைய அப்பி, ஒரு முத்துச்சிப்பியினால் பெறப்பட்டதென்று சொல்லும்படி. கோவத்தையுடைய வெள்ளிய இடபவாகனராகிய மதுகேசரது திருமுடிமேல் முத்தாலாகிய அக்ஷதையு மிட்டாள். பாலசந்திரன் தவழ்கின்ற சடைமுடியையுடைய எமது. கடவுளையடுத்துச் சர்ப்பமென்னு மயக்கமுண்டாக வாசனையுள்ள மெல்லிய பூமாலைகள் பலவற்றையு மணிந்து, கூரிய கொம்புகளையும், தொங்குகின்ற வாயையும், கோபத்தையும், உரல்போன்ற அடிகளையுமுடைய யானையின் தோலாகிய போர்வையைத் தாங்கிய திருமேனி யழகுபொருந்த நுண்ணிழையாலாகிய ஆடையைத் தரித்து, இறைவனது எலும்பாகிய ஆபரணங்களெல்லாம் நாணும்படி விளங்குகின்ற ரத்நாபரணங்கள் பலவற்றையும் எடுத்தணிந்தாள். நறும்புகை கமழ்கின்ற நித்திய கலியாணியென்னும் பெயரையுடைய உமைமணாளனாகிய மதுகேசனுக்குக் கஸ்தூரி யணிந்து, ஊனம் பெற்றுக் கடிதலில்லாத கறிகள் பொருந்திய வுண்டிகளைப் பிச்சையுண்டியன்றி மற்றோருண்டியில்லாத கடவுளுக்கு நிவேதித்து, வண்டுகள் கிண்டிக் குடியிருந்து ஊதுகின்ற மணமுள்ள மலரை யணிந்த கூந்தலையுடைய மாயையானவள் மகிழ்ந்து தாம்பூலமுங் கொடுத்தாள். பரிமள தூபமும், செழுமையாகிய தீபமும், மெல்லிய விசிறியும், வெண்சாமரமும்,.கண்ணாடியும், விதிப்படி நெடிய கடல்போல வாத்திய முழங்க முன்னின்று சமர்ப்பித்து, கடவுளை மாயையானவள் இவ்வாறு பூசை செய்து துதித்து, மிகுந்த அன்போடு வேதத்தால் சிறப்பித்துச் சொல்லப்படுகிற ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தையும் உச்சரித்து, வலம் வந்து எதிரே நின்று வணங்கிப் பிறகு அன்பினால் மனமுருகிக் கண்ணீரால் எழுதியிருந்த மை கரைந்திருக்க, பொன்போன்ற திருமேனியிலுள்ள ரோமங்கள் சிலிர்க்க, வேர்வையால் நெற்றித்திலக மழிந்து, மின்போன்ற நெடிய சடையையும் பொன்மலைபோலுந் திரு

மேனியும் உடைய கடவுளது சிவாநந்த வெள்ளத்தில் மூழ்கி, அந்த ஆநந்தத்திறைல் கூத்தாடுவாள்போல வந்து நடநசபையை அடைந்தாள். கையால் அலங்கரிக்கக் கற்ற பணிப்பெண்கள் நடநசபையினடுவே நடநஞ் செய்தற் கேற்ப ஆடையுடுத்து, கோங்கரும்பு-தாமரையரும்பு-தென்னங்குரும்பை-பொன்னங்கிரி மன்மதனது கிரீடம் - பொற்குடம் - பொற்சிமிழ்-சிற்றுலைக்கொம்பு - சக்ரவாகம்-பொற்பந்து-சூதாடுகருவி-கைத்தாளம் - நீர்க்குமிழி என்பவற்றையெல்லாம் வெற்றிகொண்ட தனங்களைக் கச்சிறை விருக்கித் துவங்களை யெல்லாம் கொள்ளையிடுகிற கரும்பெருங் கண்களை யுடையவளாகிய மாயையின் சிற்றடிகளிலே வண்டுகளொலிக்கிற மல்லிகை மலர்போன்ற சிறுசதங்கைக் கோவைகளை ஒலிக்கும்படி கட்டினார்கள். மாயையின் தனங்களுக்குச் சமானமாவேனென்று என்னெதிரே தானும் வந்ததென்று நினைத்துப் பொறுமையால் வலக்கைத்தாளம் போய் இடக்கைத் தாளத்தைத் தாக்குதல்போலப் புடைத்து ஒலிசெய்யாநிற்கவும், வாயினாற் சொல்லப்படுகிற சொற்கள் போல மத்தளமானது செங்கைகளால் வார்த்தை சொல்லாநிற்கவும், விரும்பப்பட்ட கலைமகள் நாணும்படி, அழகிய மங்கையர் வீணைகொண்டு இசை பாடாநிற்கவும், பூங்கொடி போல்பவளாகிய மாயையானவள் எனது ஒரு கையோடு நீர் சண்டை செய்ய வருவீராகவென்று நிற்பவள்போல ஒரு கையை இடையிற் பொருந்த வைத்து, ஒரு கையை நீட்டி, மதுகேசர் சந்நிதியில் நின்று கருப்புவில்லையுடைய மன்மதனை இங்கே அஞ்சாமல் வாவென்று அழைப்பது போலக் காலில் சதங்கை ஒலியாநிற்க, பொன்னாற் செய்யப் பட்ட வொரு பதுமையானது நடநஞ் செய்தல்போல நடநஞ் செய்யத்தொடங்கினாள். மத்தளவோசையும், தாளவோசையும், பாடுகிற இராகத்தினோசையும் ஆகிய இவையெல்லாம் அழகிய மலர்போல மெல்லிய அடிகளின் வழித்தாகிய அடைவுக்கு ஒத்து நிற்கவும், இரண்டு கட்பார்வைகளும் பல வளையலையணிந்த கைகளின்வழியே நடவாநிற்க

வும், பெண்ணமுதம்போல்பவளாகிய மாயையானவள் நடனஞ்செய்தாள். வாயினாற் சொல்லப்பட்ட சொற்களின் பொருளைத் தாமரைமலர்போலுங் கைகளானவை சொல்லா நிற்க, மேலா யுயர்ந்த ஆகாயத்தின்கண்ணே செல்லுகின்ற மெல்லிய பறவைகளின் ஓசையெல்லாம் பரவுகிற வொளி யையுடைய செம்பஞ்சு ஊட்டப்பெற்ற அடிகளிலிருந்துண் டாக மிதித்துப்பேயோடாடுவோனாகிய மதுகேசன் சந்நிதி யில் அவனும் மயங்கும்படி நடனஞ்செய்தாள். மாயையான வள் இவ்வாறு நடனஞ்செய்யாநிற்கக் கண்ட பிரமதேவன், பெருமை பொருந்திய கலைமகளை யிகழ்ந்து உமிழ்ந்தான். திருமால், திருமகளை யாவருஞ் சீயென்று சொல்லும்படி வெறுத்துக்கொண்டான். இந்திரன், அரியளாகிய இந்தி ராணியை மறந்தேபோயினான். கடவுளர் செய்கையே இப்படியாயின் மாநுடர் பட்ட பாடுகளை, என்னென்று சொல்லுவோம்! காளையர் பொன்னினாலாகிய மதிலின்கண் பொருந்திய துவாரங்களுள் முகத்தை வைத்தும், நெருங்கி முன்னே நின்றவரது தோளின்மே லேறியும், மின்னற் கொடிபோல நடனஞ் செய்கிற மாயையின் இடையாகிய ஆகாயத்தைக் காணும்பொருட்டுத் துன்பப்படுவார்கள். விஷயங்களைப் பற்றுகின்ற மனமானது ஓடி இரண்டு கண் பார்வையினு மடைந்து மற்ற விஷயங்களை மறந்து நடிக் கின்ற மாயையை அடையாநிற்க, உயர்ந்த பொன்மதிலின் உறுப்பின்கண்ணே தங்கிய பதுமைகள்போல இளைஞர்கள் அசைவற்று நின்றார்கள். இளங்கொடிபோலும் இடையை யுடைய மாயையானவள் இத்தன்மையாக நடனஞ்செய்யும் போது, களவின் கனிபோன்ற கரிய கண்டத்தையுடைய கடவுளைப் பூசித்துக் குளிர்ந்த மனத்தையுடைய வேதிய னானவன் மகிழ்ந்து மதுகேசனணிந்த வளம் பொருந்திய சந்தனத்தைப் பூமாலையோடு கொடுத்தான். அந்த மதுகேச னது நிர்மால்யத்தை மாயையானவள் வணங்கிப் பிரசாத மாக ஏற்றுக்கொண்டு, மகளிரோடு நாட்டிய மண்டபத்தில் நுண்ணிய நூலிழைபோன்ற இடையானது மிகவும் வருந்து

மென்று இரைந்து பிணக்கமடைந்த சதங்கையி னோசை யானது அழுத பிள்ளையினோசை யடங்குதல்போல அடங் கும்படியிருந்தாள். அப்போது, மையெழுதப்பட்ட விசால மாகிய நெடுங்கண்களையுடைய மாயையானவள் பக்தியோடு பூசை செய்துவருவதை, அழிவற்றவனும், உலகமுழுதும் நிறைந்தவனும், தோற்றமில்லாதவனும், இயல்பாகவே பா சங்களினின்று நீங்கினவனும் ஆகிய அருளையுடைய முதன் மையாகிய அல்லமன் எனனும் பெயரையுடையவன் அறிந் தான்.

மாயை பூசைகதி முற்றிற்று.

ஐந்தாவது

பிரபுதேவர் வந்த கதி

எப்போதும் அடியார் வேண்டும் எண்ணங்களை யெல் லாம் நிறைவேற்றுகிற பேரருளையுடைய அல்லமதேவன் தன்னியல்பினின்றும் வேறுபட்டு ஒருமனிதனாகி வருந்து கின்ற மயக்கத்தைத் யுடைய மனத்தோடு பூசைசெய்த மாயையினிடத்துப் பொருந்துவோன்போலச் செய்த செய்தியை விரித்துச் சொல்லுவோம். உயிர்கள் தம்மால் அனுபவிக்கப்படுகின்ற போகத்தையும் முத்தியையும் கொ டுக்கவல்லவன் தானேயாமென்று யாவரும் சொல்லுதலா லே அல்லமதேவன் அல்லமதேவனென்னும் உண்மையான பெயரும் மறையும்படி மத்தளிகன் என்னும் வேறொரு பெயரை யடைந்து, அந்த மாயைக்குக் காமிய பூசைக்குத் தக்க பயனைத் தான் உறுதியாக அருளிச்செய்ய நினைத்து, பரமசிவன் தனது அழகிய நெற்றியின்கண்ணுள்ள வெப்ப மாகிய நெருப்புக் கண்ணினால் நீறுபட்ட மன்மதனது தொ ழிலைச் செய்தற்பொருட்டு அவனது வடிவத்தைத்தான்கொ ண்டதுபோலவும், அழகு மிகுந்து ஒழுகுதற்கு இடமாகிய ஆறுமுகங்களுள்ளும் சிறந்த ஒரு முகத்தோடு இளமையும்

அழகும் தன்னிடத்தே பொருந்தத் தோற்றிய முருகனைப் போலவும், விளங்காநின்ற சடையையுடைய முனிவரது மகளிர் மயங்கி வருந்துதற்பொருட்டுக் கொண்ட பிக்ஷாடன வடிவம் அழகு செய்கின்ற இந்த வடிவத்தைக் கொள்ளுதற்கு முன்னே பழகிவிட்டதுபோலும் குவிந்த முலைகளையுடைய மகளிரது உயிரைக் கொள்ளை கொள்ளுகின்ற வடிவம்போலவும், பூமியின்கண் வந்த சூரியன்போல மிக்க ஒளியையுடைய ஒரு வடிவங் கொண்டான்.

நடுவிலுள்ள களங்கமானது ஓரத்திற் பொருந்த விழுந்து சூழ்ந்த ஒரு சந்திரன் உளதாயின் அது வளம்பொருந்திய மயிரொழுங்கினையுடைய அல்லமனது ஒளியையுடைய முகத்தை யொக்கும். இளமை பொருந்திய கருந்தாமரை மலர் ஒன்று உளதாயின் அது அல்லமனது ஒளி செய்கின்ற நாபியின்மேல் சென்று மார்பினிடத்தே தோன்றுகின்ற மயிர்ச்செறிவை நிகர்க்கும். அறுபத்துநாலு கலைகளின் எல்லையை அறிந்தவரது கருத்திற்கு எட்டாததா யிருந்தும் எனது புல்லிய தலையின்கண்ணே வரத்தக்க கமலம்போல் அழகிய திருவடிகளையுடைய அல்லமன் விலையின் அளவு அறியப்படாத பீதாம்பரத்தை அரையில் விளங்கும்படி விரித்துடுத்து, பொதியமலையி லுண்டாகிய புதிய சந்தனத்தையும் கஸ்தூரியையும் காததூரம் வரைக்கும் வாசனை வீசும்படி திருமேனி முழுதும் நிறையப் பூசி, தளிர்த்த குளிர்ந்த சோலையின் தேமாவினது பெரிய கிளையில் வாசஞ் செய்கின்ற குயிலின் முகத்தைப்போலக் கார்காலமேகத்தை வருத்துகின்ற சுருண்ட தலைமயிரை முடியாகக் கட்டி, வண்டுகளால் தொடரப்பட்ட பூமாலையைச் சூடி, அந்த மாலையானது பார்க்கின்றவர்களுக் கெல்லாம் வெளிப்படையான சொல்லிலுள்ள பொருள்போலத் தோன்றும்படி மெல்லிய தலைச்சாத்தணிந்து, கழுத்தினிடத்தி லிருந்தால் தன் சொரூபத்தைத் தெரிந்துகொள்வார்களென்று எடுத்து அதனை நெற்றியில் வைத்துக்கொண்ட செய்கைபோலக்

கஸ்தூரிப் பொட்டிட்டு, ஒளியையுடைய ஒப்பற்ற சந்திரனவன் தன்னிரு புறத்திலும் உரோகணியோடு அவளுக்கு நிகராகிய மற்றொரு நட்சத்திரமாகிய பெண்ணைக் கூட்டிக் காப்பாற்றிப் பொருந்தவைத் திருத்தல்போல அழகிய ரத்நகுண்டலத்தைச் செவிகளில் தரித்து, விலையில்லாத வெள்ளிய முத்துமாலையும் வீரசங்கிலியும் வாகுவலயமும் விளங்காநின்ற செம்மணி யழுத்திய பொன்மோதிரமும் ஆகிய இவை முதலான எல்லா ஆபரணங்களையும் ஒள்ளிய அழகு என்கிற சிவந்த நெருப்பிற் பெய்கிற நல்ல நெய்போலப் பிரமையில்லாத நமது குருவாகிய அல்லமதேவர் ஒளிபொருந்திய அவயவங்கள் எல்லாவற்றிலும் தரித்து, 'தேவேந்திரனுடைய் செல்வத்தை யனுபவித்தற்கேற்ற இலக்கண முழுதும் வாய்த்த அழகிய இந்த ஆடவனுக்கு ஆ! ஆ! இந்த மத்தளத்தைச் சுமப்பதற்கு ஏதுவாக வந்திருக்கிற ஊழ்யாதோ?' என்று நினைத்து மனிதர் திகைக்கும்படி பழிப்பற்ற முதுகினிடத்து மத்தளமொன்று தோன்றச் சுமந்து சென்று, அருளையுடைய மதுகேசரது சந்நிதியில் ஆகாசத்தில் சஞ்சரிக்கின்ற சூரிய சந்திரர்கள் சுற்றிவரப்பட்ட மேருமலைபோன்ற கொடிகள் கட்டிவைத்திருக்கின்ற நெடிய பொற்கோபுரவாயிலுக்கு எதிரேபோய் நின்று, 'சபையினிடத்தே செய்யப்பட்ட கூத்தாட்டையுடையவனாகிய நடேசனே இந்த மத்தளத் தொழிலைக் கைக்கொண்டான்' என்று யாவரும் மனமயங்கும்படி எம்பிறைவனாகிய அல்லமதேவன் மத்தளத்தைக் கையாலெறிந்து முழக்கினான். உரல்களை யொன்றன்மே லொன்று அசையாமல் அடுக்கி உறியிலுள்ள நெய்யையெடுத்து உண்டவனாகிய கண்ணனது கண்டமசைந்து ஊதப்பட்ட ஒப்பற்ற புள்ளாங்குழ லிசைபோன்ற சொற்களையுடைய மாதர் மயங்கும்படி, மீன்குத்திப் பறவையின் அசைந்தாடுகின்ற சிறகைப்போல விரல் அசைந்து அறைதலன்றித் தன் சரீரம் அசையாமல் நின்றான். பரிசுத்தமுள்ள சச்சிதானந்த சொரூபமாகிய சூரியன் தன் கைகளால் முழக்கப்படு

கின்ற மத்தளமாகிய மேகத்தினது ஓசையை நடனஞ் செய்துகொண்டிருக்கிற மாயையாகிய மயில் கேட்டு, "அம்மா! இந்தப் பூமியிலுள்ள மனிதர் கையினால் எமது செவியிற் கேட்கப்படாதிருந்த புதிய ஓசையிது" என்று மனதில் ஆச்சரியமடைந்து இதனைச் சொல்லுவாள்: "உயர்வும் இளமையுமுள்ள தனங்களையுடைய பெண்களே! இப்படிப்பட்ட மத்தளவோசையை யாம் இதுவரையிலும் காதினால் கேட்டிலேம். இப்படியொன்று உண்டென்று சொல்லவும் கேட்டிலேம். உலகத்தா ரெல்லாரும் விரும்பி நின்று கேட்டு ஆச்சரியப்படத்தகுந்த இந்த வித்தையைக் கற்றறிந்து காட்டிய அவன் யார்? நீங்கள் போய்ப் பார்ப்பீராக" என்று மாயையானவள் சொல்லவும், அது கேட்ட மாதர்கள் விரைந்து சென்று மத்தள முழக்கிக்கொண்டு நின்ற ஒளியுருவாகிய அல்லமதேவரை முற்பிறப்பிலே தாங்கள் செய்த நல்ல தவப்பயனால் தமது கண்களாற் கண்டு, செவிகளோடு போர்செய்து மீளும் கயல்போலுங் கண்களையும் செவந்த அதரத்தையுமுடைய மாயையினிடத்திற்கு வந்து இதைச் சொல்லத் தொடங்கினார்கள்: எப்படியென்றால், "எம்மிறைவியே! கற்கப்பட்ட தனது மத்தள வித்தைபோலவே அவனது அழகையும் யாம் வேறெங்கும் கண்டிலேம்; விற்போரிற் சிறந்தவனாகிய உருவமில்லாத மன்மதனே உருவங்கொண்டு வந்தாற்போல ஒருவன் வந்திருக்கிறான்" என்று சொல்லக்கேட்ட மாயையானவள், "அவனை அழைத்து வாருங்கள்" என்றாள். அந்த மாதர்களும் அவ்வாறே சென்று அல்லமதேவரை யழைத்துவந்து மாயையினெதிரே விட்டார்கள். அப்படி வந்து நின்ற அல்லமதேவரைக் கண்டவுடனே மாயையானவள், அந்த அல்லமதேவரால் தனக்குண்டாகிய காமவேட்கை மயமாகி, பொன்னினாற் செய்யப்பட்ட ஒரு பதுமைபோல அசைவற்றிருந்தாள். அப்பொழுது கரும்பு வில்லையுடைய மன்மதன் அளவில்லாத பாணங்களை அந்த மாயையின்மேல் எய்து கைசலித்து நின்றான். மாயையான

வள் யாவரையும் மயக்குவா ளென்பதுபோய்த் தானே மயங்கினின்றாளென்று கண்டோர் யாவருஞ் சொல்லும்படி அவள் நிற்க, அவளருகே நின்ற மாதர்கள் அல்லமதேவரை நோக்கி, "வீரத்தன்மையுள்ள ஒப்பற்ற மன்மதன் போல் அழகுள்ளவனே! உன் பேர் யாது? நீ வாழ்வது எந்த வூர்? எந்தத்தேசம்? இவையாவும் எங்களுக்குத் தெரியும்படிக்குச் சொல்லக்கடவை?" என்று கேட்க, அவர்கேட்ட கேள்விக்கு உத்தரமாக அல்லமதேவர் சொல்லுகின்றார்: "மேகம்போலுங் கூந்தலையுடைய பெண்களே! எனது தேசமோ அங்கிய தேசம் (மேலான முத்தியுலகம்), சபதத்தால் வல்லவரென்று வந்தவர்களை அவமானப்படுத்தி அவரது வல்லமைதன் நிலையல்லவென்று வெளியிடுகின்ற என்பேர் அல்லமன் என்று சொல்லுவார்கள். என்னிடத்து அன்பு செய்பவரிடத்தில் நான் எந்நாளுஞ் சேர்ந்திருப்பேன்" என்று சொன்னார். அதுகேட்டு அந்த மாதர்கள் அல்லமதேவரை நோக்கி, "ஐயனே! நீ வேறோரிடத்திற் போகாமல் எமது இறைவியாகிய மாயையினிடத்தில் வித்தை கற்றுத் தேர்ந்தவரோடு கூடிச் செல்வத்தோடு இவ்விடத்திற்றானே இருக்கக்கடவாய்" என்று அல்லமதேவர் சம்மதிக்கும்படி இனிய சொற்களால் பிரார்த்தித்தார்கள். இதைக் கண்ட மாயையானவள் "நாம் சொல்லவேண்டிய சொற்களையெல்லாம் இந்த மாதர் சொன்னது மதுகைநாதனை நாம் பூசித்த பூசையின் பயன்" என்று மனமகிழ்ந்து ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தாள். அப்போது அவளருகே நின்று அடைப்பை ஏந்துகிற போகி யென்பவள் மோகினியின் மகளாகிய மாயையின்கையில் வெற்றிலைச் சுருளைக்கொடுத்து அதனை அந்த மாயையைக்கொண்டே அல்லமதேவருக்குக் கொடுப்பித்து இன்னும் அவர் மனமகிழ்தற் கேதுவாகிய வரிசைகளும் செய்தாள். அப்போது, தன் திருவடித்தாமரைகளைப் புகழ்கின்ற அன்பராலே விரும்பப்படுகிற பொருள்க ளெல்லாவற்றையுங் கொடுக்கின்ற கருணாநிதியாகிய அல்லமதேவன் தான் கொண்ட கோலத்துக்கேற்க

நடிப்பவனாதலால், மாயையால் கொடுக்கப்பட்ட தாம்பூலத்தைத் தாழ்ந்த சாதியான்போலக் கையினால் ஏற்றுக்கொண்டான். பிறகு இளமையாகிய பூங்கொடிபோன்ற மாயையானவள் இடபக்கொடியையுடைய மதுகேசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, மன்மத பாணங்கள் தன் மார்பிற் பட்டுருவும் துன்பத்தால் மனமயர்ந்து பொற்சிவிகையிலேறித் தோழியர் சூழ்ந்துவரச் சென்று, தன் தந்தையாகிய மமகாரராஜனிடத்தை யடைந்து அல்லமதேவரது அழகு முதலியவற்றைச் சொல்லித் தனது அந்தப்புரத்தை யடைந்திருந்தாள். பல வலம்புரிச்சங்குகள் சூழ அவற்றினடுவே வீற்றிருக்கிற சலஞ்சலம் என்னும் சிறந்த சங்குபோலப் பொன்னினாலும் மணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட உபரிகையில் பல அழகிய மாதர் சூழ மாயையானவள் மலரணைமீ திருந்துகொண்டு, எம்மிறைவராகிய அல்லமரோடு அவரது மத்தள வித்தையின் குணத்தை ஆராய்ச்சி செய்பவள்போலப் பேச விரும்பினாள். அலங்கரிக்கப்பட்ட மலரையுடைய நெடிய கூந்தலையும் பொன்வளையலையுமுடைய மாயைக்கு நினைவு முழுதும் அந்த அல்லமரதுசைபோகத்தின்மேலது. நெடிய கண்களின் பார்வை மன்மதன் போல்பவனாகிய அல்லமரது அழகின்மேலது. வாய் பயனில் சொல்லின்மேலது. இப்படி யிருக்கையா லன்றோ மன மொழி மெய்கள் ஒருமைப்பட்ட மாதர் உலகத்திற் கிடைப்பது அருமை யென்று சொல்லுவர் பெரியோர்! குற்றமற்ற கரும்பினின்றும் அதனது இனிய சாற்றைக் கொள்ளாது அதன் கோதைக் கொள்வதுபோலவும், கஸ்தூரி மிருகத்தினிடத்தில் உண்டாகின்ற கஸ்தூரியை விட்டு அதன் மலத்தைக் கொள்வதுபோலவும், மாயையானவள் அல்லமரால் பேரின்பமாகிய முத்தியடைவதைவிட்டு, அற்பமாகிய சிற்றின்பத்தை விரும்பினாள். அப்பொழுது மன்மதனானவன் ஒன்றிரண்டொழிய தன்னிடத்திலுள்ள மற்றைய பாணங்களை யெல்லாம் இவள்மீது இறைக்க, அதற்கு இவள் ஆற்றாதவளாய் மின்னலானது உருக்கொண்டு

வந்தாற்போன்ற அல்லமாது திருமேனியின்மேல் வீழ் வாள். தன்னருகே சூழ்ந்து நிற்கிற மங்கையர் பார்க் கிறார்களே" என்று நாணி எழுந்து நிற்பாள். இவ்வாறு மாயையானவள் காமத்தீயினால் சருகா யுலர்ந்து வெப்பம் பொறாதவளாகித் தன்னுயிர்போன்ற சில மாதர் உடன் வர எழுந்து உள்ளே சென்று, மலரை யணிந்த கூந்தல் சோர வும், அழகிய தனங்களின்மேலுள்ள ஆடை விலகவும் புஷ்ப சயனத்தின்மேல் வாயால் பெருமூச்சு விட்டுக்கொண்டு வீழ்ந்தாள். அவ்வாறு வீழ்ந்தவள் தன்னைச் சூழ்ந்து நிற் கிற தோழியரை நோக்கி, அல்லமாது திருநாமத்தை உச்சரிக்கவேண்டு மென்கிற ஆசையினாலும், தோழியர்க் குத் தன் கருத்தை அறிவிக்கவேண்டு மென்னும் விருப் பத்தாலும், "அல்லமர் வாழ்வதற்குரிய வீடு யாது?" என்று வினவினாள். இறங்கு துறையிற்றானே நீச்சுண்டாயி னாற்போல மாயையிடத்துக் காமவேட்கையானது பிறந்த பொழுதே உயிர் எவ்வளவோ அவ்வளவாய் நின்றதென் னுந் தன்மையை அந்தத்தோழியர் அறிந்து, "உன் கருத்தை எமக்கு அறிவிப்பையாயின் அல்லமற்குச் சிறந்த மனையொன்று அமைத்துத் தருவோம்" என்று சொல்லி, அவளைப் பார்த்து, "அழகிய மணிகளாலாகிய மேகலையால் அலங்கரிக்கப்பட்ட இடையையும், வடித்த வேலாயுதத் தையும், மருட்டுகின்ற கண்களையும் உடையவளே! காமத் தின் முளையானது உன்னிடத்து முளைத்ததென்று எங்கள் கருத்துக்குப் புலப்பட்டது; யாமும் உனது மனமும் வேறல்லேம், ஒரு பொருளே யாவோம்; உன் மனத்திலே மறைத்து வைத்திருப்பதை நாணாமல் எமக்குச் சொல்ல வேண்டும்" என்றார்கள். அதுகேட்ட மாயையானவள் தன் கன்னித்தன்மை கெடும் என்னும் நாணத்தையும், உலகத் தைக் காக்கின்ற ஒரு வேந்தன் மகளென்று யாவராலும் சொல்லப்படுகிற தன் பெருமையையும், மத்தளிகனைப் புணர்ந்தாள் என்று பலரும் பழிப்பதாகிய பழிச்சொல்லை யும் தன் மனத்தில் ஆலோசித்துக்கொண்டு அவர்களுக்கு

மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தாள். இப்படி இவள் இருத்தலும், இவளது ஏவற்பெண்கள் பலருள்ளும் சிறந்தவளாகிய சகலையென்னும் மாது, "நம் தலைவியானவள் சொல்லும் செயலும் ஒழிந்து சும்மாவிருத்தற்குக் காரணம் யாது? அவட்கு அந்தரங்கப் பிரியையாயிருக்கிற நீ அறிந்திருந்தால் சொல்லக்கடவை" என்று அவளைவிட்டு நீங்காதிருக்கிற விலாசி யென்பவளை வினவினாள். அதற்கு விலாசி யென்பவள் சகலையை நோக்கி,- "இனி யான் உங்களுக்கு மறைக்க வொண்ணாது. இன்று மத்தளிகளுய்வந்த அல்லமனது பேரழகாகிய நறவையுண்டு ஆற்றாதவளாய் நம்மிறைவியாகிய மாயையானவள் அறிவு கலங்கினாள்" என்று சொல்ல, மாயையானவள் அதற்குச் சம்மதித்துக் கோபங் கொள்ளாமல் முகம் கவிழ்த்துப் புன்னகை கொண்டிருந்தாள். இவ்வாறு மாயை புன்னகை கொண்டு சும்மா இருத்தலை நோக்கி, "இவள் அல்லமன் மீது விருப்ப முடையவள்" என்று தோழியர் அறிந்து கொண்டு, "இனி இவளை மயக்கின அல்லமன் கருத்தையும் அறியவேண்டும்" என்று சொல்லக் கேட்ட மதமானி யென்பவள், "யான் அந்த அல்லமனது உட்கருத்தை அறிந்து வருவேன்" என்று அல்லமனிடத்திற்குச் சென்றாள். அப்பொழுது அல்லமதேவன், மதமானி யென்பவள் தன்னிடத்திற்கு வருகிறதற்குக் காரண மின்னதென்று முன்னே யறிந்துகொண்டு, அவள் ஒரு சொல்லைச் சொல்லுதற்கு முன்பே அவளை நோக்கி, "நான் வந்து தங்கியிருக்கு மிடத்திற்குப் போகிறேன்; உங்கள் தலைவி என்னைத் தேடினால் எனக்குச் சொல்லக்கடவாய்" என்று சொல்ல, அதற்கு உத்தரமாக மதமானி சொல்லத்தொடங்கினாள்: "ஐயனே! நீ வேறிடத்தில் வீடு தேடவேண்டியதில்லை; ரத்நமயமான எமது மாளிகை உம்முடையதே; இவ்விடத்தில் இருப்பாயாக; மாயையானவள் தனது இருதயபீடத்தில் உன்னை யிருத்திக்கொண்டிருக்கிறாள்; அன்றியும் நீ தன்னோடுகூடவே யிருக்கவேண்டுமென்னும் விருப்ப

முடையவளாயு மிருக்கிறாள்; இந்தச் செய்தியை வெளிப் படையாய்ச் சொல்லியு மிருக்கிறாள்'' என்று சொல்லுத லும், அல்லமர் அவளை நோக்கி, ''அம்மா! நான் ஒரு பொருளு மில்லாதவன், நீங்கள் எல்லாப் பொருளு முடை யவர்கள்; நான் சாதியறியப்படாத ஈனன், உங்கள் தலைவி உயர்ந்த ராஜகுமாரி; அன்றியும், நான் புருஷஜாதி; ஆத லால் உங்களோடு கூடிவாழ்தல் எனக்குத் தகா'' தென்று புன்சிரிப்போடு சொல்லினான். அதைக் கேட்ட மதமாணி யானவள் அல்லமரை நோக்கி, ''ஐயனே! எங்கள் தலைவி ஒருவரோடு சிநேகம் செய்துவிட்டால் அந்தச் சிநேகிதர் கள் உயிரைக் கேட்டாலும் கொடுத்துவிடுவாள்; அவரை அவமதியாள்; அப்படிப்பட்டவள் தன் உயிரினுஞ் சிறந்த பொருளாகக் கொண்டிருக்கிற வுன்னை அவமதிப்பாளோ! நீ சிலகாலம் அவளோடுகூடி வாழ்ந்தறியக்கடவாய்'' என்று இன்சொற் சொன்னாள். அதற்கு அல்லமர் அவளை நோக்கி, ''உன் சொற்களெல்லாம் இருபொருள்படுவனவா யிருக் கின்றன. அவற்றின் உண்மையை அறிந்திலேன். ஒருவ ரிடத்து ஒரு தொழில் செய்வோர் தூரத்தில் தங்கியிருந்து தொழில் செய்யுங்காலத்தில் வருதல் தகுதியே யன்றிச் சமீபத்தி லிருத்தலும் உடனிருத்தலும் தகாத காரியம்'' என்று மாயைக்கு வசப்படுவோன்போல நடித்து அவளை விட்டு நழுவுவோனாகிய அல்லமன் சொல்ல, மதமாணி, ''ஐயனே! எங்கள் தலைவி தனது திருவோலக்கத்தைக் காணும் ஆடவரோடு உன்னையும் ஒருவராக நினைப்பவ ளல்லள்; தனக்குத் தலைவனாக நினைத்திருக்கிறாள்'' என்று சொல்ல, அல்லமர் அவளை நோக்கி, ''உங்கள் தலைவிக்கு ஒருவரை உயர்த்துதல் இயற்கை, எனக்கு முன்புபோலவே யடங்கிநடத்தல் இயற்கை'' என்றார். அதுகேட்ட மத மாணி அல்லமரை நோக்கி, ''ஐயரே! நாமிருவரும் சொற் போர் செய்வதில் ஒரு பயனுமில்லை; எங்கள் தலைவியாகிய மாயையானவள் உன்னைக் கண்டளவில் யானையுண்ட விளாம் பழத்தை நிகர்த்து வறியளானாள்; ஆதலால், உனக்கு

மறைத்துப் பேசவேண்டியது ஒன்றுமில்லை" என்றாள். அதுகேட்ட அல்லமர் மதமானியை நோக்கி, "உங்கள் தலைவியின் கருத்தை நீ யறிவாய்; இன்று நூதனமாய் வந்த யானறிவேனோ? ஆயினும், ஆப்தமாகிய உன் மொழியைக் கேட்பதே யெனக்கு நன்மையான நெறி" என்றார். அது கேட்ட மதமானி, "ஐயரே! நீர் சுபசகுநம் பார்த்து வந்தீர்; யாவரையும் மயக்க வல்லளான மாயையை ஒரு த்ருண ப்ராயமாய் மயக்கி அவளது சுகாநுபவத்தையும் அநுபவித் தற்குரியரானீர்" என்று புன் சிரிப்போடு சொல்லிவிட்டு மாயையினிடத்துக்கு மீண்டுபோனாள். "இவள் அல்லம ரிடத்திற்குப் போனபிறகு, என்னுயிரினுஞ் சிறந்த கட்டழகராகிய அல்லமரை, நம்மால் அனுப்பப்பட்ட மதமானி யானவள் தனது இன் சொற்களால் வசப்படுத்திக்கொண்டு வருவாளோ? வன்சொற் சொல்லி நீங்கச் செய்வாளோ? என் காம நோயை யறிந்து சென்றவள் தூது சொல்லாமல் வந்துவிடுவாளோ? ராஜகுமாரியென்று என் பிராண நாயகர் இவ்விடம் விட்டு நீங்கிப்போவாரோ? எனது அதிர்ஷ்டம் எப்படி யிருக்கின்றதோ? பொன்போலும் ஒளியுள்ள அவரது முகத்தை நான் கண்டாலன்றி என் துன்பம் நீங்காது" என்று பலவாறு சொல்லிப் புலம்பிக்கொண் டிருக்குஞ் சமயத்தில், தோழிமார்களுக்கு இடக்கண் துடித்தல் முதலிய சுபசகுனங்கள் காணப்படுதலால் அவர்களெல்லாரும் "நமது தலைவியின் கருத்து நிறைவேறும்" என்று மனமகிழ்ந் திருக்கும்போது, மதமானியும் வந்து சேர்ந்தாள். அவளைக் கண்ட தோழிமா ரெல்லாரும் அவளைச் சூழ்ந்து கொண்டு, "நீ அல்லமரிடத்தில் சென்ற காரியம் பழமோ காயோ" என்று கேட்க, அவள் "பழம்" என்று முகமலர்ச்சியோடு சொல்லுதலும், தோழியர் அடைந்த சந்தோஷத்தை ஓரளவுபடுத்திச் சொல்லலாம்; மாயையடைந்த சந்தோஷத்துக்கோ ரளவில்லை. இந்தச் செய்தியை அரசனறிந்தால் என்ன அநர்த்தம் விளையுமோ?" என்று சொல்லிக்கொண்டு தோழியரெல்லாரும் இரவின் வருகையை,

எதிர்பார்த் திருந்தார்கள். அன்னம்போலும் நடையை யுடைய மாயையானவள் அல்லமரது சம்மதியைச் சொல் லிய அந்த மொழியையே, மன்மதபாணம் தைத்ததனு லுண்டாகிய புண்ணுக்கிடு மருந்தாயெண்ணி மனமகிழ்ந் திருந்தாள். நீர்விளையாடலைச் செய்கிற இரண்டு சிறுவர்களுக் குள்ளே ஒரு சிறுவன் ஓடி நீரில் விழுவான்போலச் சூரியன் மேற்கடலிற் போய் மறைய, நீரில் முன்பு குளித்த ஒரு சிறுவன் மீட்டும் எழுந்து வந்தாற்போலச், சந்திரன் கிழக் குக் கடலிலிருந்து உதித்தான். நெருங்கிய தாமரைமலர்கள் வாய்மூடிக் குவிந்த அளவில், மதுப்ரநஞ் செய்து மயங்கு கிற உற்பலமலர்கள் மலர்ந்தன. மேக மண்டலத்தை யளாவு கின்ற இளஞ்சோலையிலுள்ள அழகிய தடாகத்தை இரை தேடாநின்ற நாரைகள் அடைந்தன. செவ்வானமாகிய சிவ ந்த நெருப்பினின்றும் தெறித்த பொறிகள்போல ஆகா யத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றின. பரிசுத்தமாகிய பிரகா சத்தையுடைய சூரியன்போய் மேற்குச் சமுத்திரத்தில் மூழ்கின அளவில், மாயையென்னும் பெயரைக் கொண் டிருந்த ரத்நகலாபத்தையுடைய மயிலை ஆகாயமாகிய பச் சோந்தி கண்டு கோபித்துச் சரீரம் சிவந்து அடங்குதல் போல, மாலைப்பொழுதில் பரவிய செவ்வானம் தோன்றி அடங்கியது. காலைப்பொழுதில் அரும்பி, பகலெல்லாம் போரும்பாயிருந்த காமமாகிய மலர் மாலைப்பொழுதில் மலர்ந்ததனுல் சகிக்காமல் ஒப்பற்ற மாயையென்னும் பெயரையுடைய அழகிய கொடியானது மூலையிலிருந்து வெளியே வந்து பரந்த வெண்மையாகிய நிலாமுற்றத்தில் தோகையையுடைய மயிலைப்போல வீழ்ந்து, காமவிகாரம் அதிகரிக்க வாய் பிதற்றுவாளாயினள். எப்படியென்றுல், "நிலவே! நீ தாயினிடத்தில் தோன்றி, அவள் மிகவும் தலையை மோதி மோதி வெறுத்து அலறும்படி கோவிப் பாய், (பெருகி அலையை வீசி வீசி அலைந்து ஒலிக்கும்படி சந்திரிகையை வீசுவாய்). அன்றியும், கூடப் பிறந்தவ ளாகிய திருமகள் இருந்து வாழ்கின்ற வாசனை பொருந்திய

தாமரைமலராகிய காவலைக் கொண்ட வீட்டினை ஆகாயத்தில் எழுந்து வந்து அழிப்பா யென்றால், ஐயோ! என்றும் ஒரு தன்மையாயிராமல் தேய்பவனே! உன்னோடு யாதொரு சம்பந்தமு மில்லாத என்னை நீ யென்னதான் செய்யமாட்டாய்! பிரகாசியாநின்ற வெள்ளிய சந்திரனே! தக்கனது யாகத்தில் ஒருநாள் கடவுளுடைய பாதத்திற் பட்ட நீ, தலையேறிச் சிறந்த தவத்தினர் மந்த்ர ஜலத்தை யிறைக்கவும் இன்னும் இறங்கவில்லை. அவனது பவளம்போற் சிவந்த வாயிற்பட்டுக் கண்டத்திலே யிறங்குகிற விஷமானது உன்னை நிகர்க்கு மென்பது அறியாமையேயாம். வெண்மையாகிய சந்திரனே! கண்டத்தில் விஷத்தை வைத்த பரமசிவன் உபாங்கமாகிய பிரகாசியாநின்ற சடையின்மீது பொருந்த உன்னை வைத்தது, உன் தீமையை நினைத்தே யல்லவா? பிரகாசியாநின்ற அமுதகிரணத்தை யுடையவனென்று உன்னைச் சொல்லுதல், இவ்வுலகத்தில் மனிதர் கருமையாகிய ஆட்டை வெள்ளாடென்று சொல்லுதற்கு ஒப்பாகுமே! பொதியமலையிற் பிறந்த மணத்தை யுடைய சந்தனக் கட்டையாலாகிய குழம்பு உலர்ந்து பொரியும்படியாகவும், புஷ்பசயனமும் யாவர்க்கும் விருப்பத்தைத் தருகிற பூமாலைகளும் எரியும்படியாகவும் நெருப்பைச் சொரிந்துகொண்டே உதித்த வெண்மையாகிய சந்திரனே! வெப்பம் மிகுந்த அக்கினியானது சிவந்து உலகத்தார் காணும்படி பிரகாசியாநிற்கவும், நல்ல தார்க்கிகர் நெருப்பு வெண்ணிறத்தை யுடையதென்று சொல்லுவது உன் குணத்தை யாராய்ந்தல்லவா? சந்திரனே! இப்பொழுது ஒருலகத்தின்கண் எனக்கொரு தன்மையாகவும் மற்றவர்களுக்கொரு தன்மையாகவும் இருக்கிறாய். இப்படியிருத்தல் உனக்கு நன்மையாகுமா? முற்காலத்தில் உன் மனைவியர் இருபத்தெழுவரையும் சமமாக நோக்காத செய்கையாலன்றோ சூரியன் போல எக்காலத்து மொருதன்மையா யிராமல் தேய்ந்து போகின்றாய்? ஐயோ, அதனை நீ அறியாயோ! கொடிதாகிய இளந்தென்றலே! கொல்லா விரதத்தையுடைய அகத்திய

மூனிவர் வாசஞ்செய்கிற பொதியமலையில் பிறந்தும் என்னைக் கொல்லுகின்றாய். நீ சிறிதும் அருளில்லாதிருப்பது யாது காரணத்தினாலோ? திருப்பாற்கடலில் பிறந்த விஷத்தில் அதனது தீயகுணமே யல்லாமல் அமுதத்தின் நற்குண முண்டோ? குயிலே! பெற்றபொழுதே உன்னைப் பெற்ற தாயாகிய குயில் உன் குரலைக் கேளாமுன்னமே ஓடிவிட்டது. அன்போடு வளர்த்த தாயாகிய காகம் உன் குரலைக் கேட்டளவில் நீ அஞ்சும்படி உன்னைத் துரத்திவிட்டது. பயனைத் தருகின்ற மலர்களையுடைய பூஞ்சோலையி லிருந்து கொண்டு பலதாமும் கூவினால் நான் கோபித்து உன்னை வெறுத்துக்கொள்வது சொல்லவேண்டுமோ? கருப்புவில்லை யுடைய மன்மதனே! அல்லமனது அழகைக் கண்டு அவ னுக் கெதிர்நிற்க நாணியோ இங்கே என்முன் நின்று கோபிக்கின்றாய்? தன்னினும் அழகிற் சிறந்தவர்கள் இல்லை யென்று தருக்குகின்ற அந்த அல்லமனைப் போரில் தோற் கச் செய்யாமல் எம்போல்வாராகிய மெல்லிய மாதரைப் போர்செய்து வருத்துகின்றாய்; உனது ஆண்பிள்ளைத் தன்மை மிகவும் நன்றாய் இருந்தது!'' என்று இவ்வாறு மாயையானவள் புலம்பி மயக்க மதிகரித்து அழுது மனஞ் சோர, வாசனை பொருந்திய மலர்களால் நிறைந்த மெல் லிய சயனத்தையுடைய அழகிய பள்ளியறையில் மதமானி யானவள் சென்று, ஆடவரிற் சிறந்த அல்லமனை முன்னே அழைத்துக் கொண்டுவந்து இருக்கச்செய்து, தவளை யாகிய உணவை வெற்றியையுடைய சிங்கத்துக்கு உண்பித் தல்போல மாயையை அப்பள்ளியறைக்குள் அனுப்பினாள். கோடைகாலத்தில் உச்சிப்பொழுதில் வெப்பத்தையுடைய பாலை நிலத்தில் நீர் வேட்கையுள்ளவன் அந்த நிலத்தி லுள்ள கானலாகிய நீரைத் தான் எதிரே கண்டு அதனைப் பருக ஓடுதல்போலக் குளிர்ச்சி பொருந்திய புஷ்ப சயனத் தின்மீதிருந்த மெய்ஞ்ஞான விளக்காகிய அல்லமனை மாயை யானவள் கண்ணாரக்கண்டு, புன்சிரிப்போடு அழகிய முக மலர்ச்சியை யுடையவளாய்த் தனது நெருங்கிய ஸ்தனது

கள் பூரிக்க விரும்பி மேல்விழுந்து தழுவினுள். மதர்த்த கண்களையுடைய மாயையானவள், கண்ணாடியிற் காணப் படுகின்ற பிரதிபிம்பம்போலச் சயனத்தின்மேல் காணப் பட்ட அல்லமனை யோடி விழுந்து தழுவக் கையில் அகப் படாமையால் சயனத்தின்மேல் விழுந்து, கண்ணாடியின் பிரதிபிம்பத்தைப் பிடிக்க நீட்டிய கை கண்ணாடியிற் படும்படியின் றழுது வாடுகின்ற மழலைச் சொல்லையுடைய இளங் குழந்தைபோலத் துன்பமடைந்தாள். சொல்லுக் கடங்காத அழகையுடைய அல்லமனது திருவுருவானது கண்ணுக்குத் தோன்றுதலால் மீளவும் எழுந்து மலர்போ ன்ற மெல்லிய கைகளால் ஆகாயத்தைத் தழுவுதல்போலத் தழுவினுள், வெறுவாயைச் சுவைத்தாள்.

இவ்வாறு மாயையானவள் வெளியைக் கண்டு மயங்கி அல்லமன் தன் கையில் அகப்படாமையால் இவ்விடத்துக் காணப்படுவது உருவெளித் தோற்றமேயன்றி அல்லமன் அல்லன் என்று அவனது மெய்யுருவைச் சந்தேகித்தாள். செய்தற்கரிய தவத்தை நெடுநாள் முயன்று செய்து தான் பெற்ற அமுதில் வாய் வைத்திடுமளவில் அவ்வமுதம் கை தவறுதல்போல, அல்லமன் கட்புலனுக்குத் தோன்றியும் அவனைத் தன் மெல்லிய தோளினிடத்தில் அணைக்க ஆகா யம்போலக் கைக்கு அகப்படாமையால் நெருப்பில் விழுந்த புழுப்போலப் பதைபதைத்து வருந்தினுள். காமமயக்கத்தை உருவிலியாகிய அல்லமனன்றி உருவுடையவர்களில் யார் நீக்குவார்கள்! துறவினரை வருத்திய அந்த மாயை யானவள் 'கன்னிகை யென்றும் ராஜகுமாரி யென்றும் ஆலோசிக்காமல் எனக்கு மோக முண்டாக்கியும் எனது இருதனங்கள் தன் மார்பினிடத்துப் பொருந்த அணைத்து அதரபானஞ்செய்து புஷ்பசயனத்தின்மீது புணர்ந்து துன்ப மில்லாத இன்பக்கடலில் மூழ்க இவ் வல்லமனுல் பெற் றிலேம்'' என்று தன்மனம் நொந்து வெப்பமாகப் பெரு மூச் செறிந்தாள். மேகத்தால் பெய்யப்பட்டு விழாநின்ற

நீர்த்தாரைகளால் காற்று நனையுமாகில், புகைந்தெழுகின்ற நெருப்பினால் ஆகாயம் வேகுமாகில், ஒலிக்கின்ற வெளளிய அலைகளையுடைய பெருங்கடலானது அந்தக் கும்பமுனியை அழுந்தப் பண்ணுமாகில், நஞ்சமானது எழுந்து பரமசிவனை வருத்துமாகில் அல்லமதேவன் மயக்கடைவான். அந்தஅல்லம னொழிந்தவரை எப்பொழுதும் மயக்காநின்ற மாயையும் அந்த அல்லமனை மயக்குவாள். ஆகாயத்தைக் குத்திக் கை யிளைப்பவர்போல வேல்போன்ற நெடிய கண்களையுடைய மாயையானவள் அங்கிருந்த அல்லமனைத் தழுவித் தழுவிச் சரீரம் வருந்திப் பரவசப்படுச் சயனத்தின்மேல் உறங்கி முன் எண்ணிய நினைப்பினால் அந்த அல்லமதேவன் கூடினதுபோல இனிய கனவொன்று கண்டெழுந்தாள்: இடமகன்ற உலகத்தில் சூரியனும கருங் கடலினின்றும் உதித்தான். உதயகாலத்தில் பூமாலையணிந்த நீண்ட கூந்தலையுடைய தோழிகளைக் கண்டு சொல்லுவாள் "அல்லமனது விளையாட்டை என்சொல்வேன்! கண்ணெதிரே தோன்றிக் கிட்டினால் என் கைகளுக்கு அகபபடான். அதனால் மிகவும் வாடி நித்திரை செய்தேன், கனவில் பருத்த என் தனங்கள் குழையத் தழுவி மறுபடியும கலவியளி செய்து உன்னை நான் என்றும் விடுகிலேன் என்றனன்" என்று சொன்னாள்.

"துறவினரது அரிய தவத்தை அழிக்கின்ற அழகையுடைய இந்த மாயைக்கு அகப்படாத வெற்றியை யுடையவன் யாரோ அவன் இந்திரன் பிரமன் திருமால் தேவர்கள் முனிவரர் கிம்புருடர் வித்தியாதரா என்று சொல்லப்பட்டவர்களுக்குள்ளே சேர்ந்தவனல்லன், பார்க்குமிடத்து இவன் ஒப்பற்ற கடவுளேயாவன்" என்று தோழியர் தமது மனத்துள்ளே யதிசயித்து மாயையுடனே பேசத்தொடங்கினார்கள். எவ்வாறெனின், "உன்னுள்ளத்தி லாசையை அதிகப்படுத்துதற்காக அல்லமன் இவவாறு நடித்தான்; நீ சொல்லிய கனவின் பயனை ஆராயின் மறுபடியும் உன்னைச்

சரீரத்திற் பொருந்தப் புணருவான்" என்று வாசனை பொருந்திய மெல்லிய கூந்தலையுடைய மாயையினுடைய மனத்தினுள்ள துன்பம் நீங்கும்படி ஆலோசித்துத் தோழியர் சொன்னார்கள். அதுகேட்ட மாயையானவள் துன்பம் நீங்கி மனமகிழ்ந்தாள். இவ்வாறாக மாயையினிடத்து நிகழ்ந்த செய்தியைச் சில தோழிகள் போய்ச் சொல்ல மோகினியென்னுந் தாயானவள் அறிந்து, அபிமானம் அதிகரிக்கத் துன்பக்கடலில் மூழ்கி, ஒப்பற்ற தன்மகள் வாழ்கின்ற மாளிகையை யடைந்து, தோழிகளையும் மகளையும் அழைத்து, மகளை நோக்கி, "என் செல்வப் புதல்வியே! நீ என்ன காரியஞ் செய்தாய்? நீ அறிவில்லாதவள்" என்று மனம் வாடி இவைகளைச் சொன்னாள். "மானமும் உயிரும் ஒருங்கு நில்லாதவிடத்து உயிரைவிட்டுத் தானடையவேண்டிய பொருளாக மானத்தையே காக்கின்ற உன் தந்தையின் செவியில் வீழ்ந்தால் யாதாய் முடியும்? பாவீ! சூரிய சந்திரர்கள் உள்ளவரைக்கும் இந்தப் பழியானது நமது சந்ததியோடும் தொடருமே! நான் வருந்தி உன்னைப் பெற்றதும் இதற்குத்தானோ!" என்று மேலுஞ் சொல்லுவாள்: தந்தை தாய்களுடைய ஆணைவழியில் நடக்கின்ற கன்னிப் பெண்கள் தாய் தந்தையர் சம்மதித்துக் கொடுக்காவிட்டால் முருகவேளையொத்த ஆடவராயினும் அருவருப்பார்கள். குரூபிகளாயினும் தாய்தந்தையர் மனமகிழ்ந்து கொடுக்கில் அந்த ஆடவரை மேலான கடவுளாகவே நினைத்து இனிதாகக் கூடி வாழ்வார்கள். தெய்வ மகளிரை நிகர்த்த மாதரும் மணஞ் செய்தற்கு முன்னே தாய்தந்தையரது ஆணையினும், மணம் முடிந்த பிறகு தனக்கு நன்மையைச் செய்கின்ற கணவனது ஆணையினும் நிற்பார்கள். எப்போதும் தம்வசத்தினரல்லர் என்பதை அறிந்திருந்தும் அறிவில்லாதவளே! நீ இந்தத் தகாத காரியத்தைச் செய்தாய். உன்னைக் கோபிப்பாரில்லையென்று இருந்தனைபோலும்" என்று தாயாகிய மோகினி கோபித்தாள். தேன்போலும் மதுரமாகிய மிருதுவான சொல்லையுடைய மாயையோ தான் செய்த

குற்றமும் தாய் செய்கின்ற கோபமும் தன் மனத்தை மிகவும் வருத்த "இதற்கு நான் என்னசெய்வேன்?" என்று வெட்கமுற்றுத் தலைவணங்கிப் பெருமை பொருந்திய பூமியைப்பார்த்துக் கண்ணீர் சிந்த இருந்தாள். மோகினி அதைப் பார்த்துக் கோபம் நீங்கி, மனமுருகி, "மானினது கண்போலும் கண்களையுடைய மாயையே! உன்மேல குற்றமில்லை" என்று சொன்னாள். மனம் கரைதலில் தாய் போல் உலகத்தில் ஒருவர் உண்டோ? அதன்பிறகு மோகினியானவள் மாயையின் தோழிகளை நோக்கி, "தோழிமாரே! நீங்கள் சூழ்ந்திருந்தும் வேலியில்லாத பயிர்போல மாயையின் கற்பு அழியும்படி என்ன காரியஞ் செய்தீர்கள் பாவிகளே" என்ன, அதற்கு அந்தத் தோழிமார் மோகினியை நோக்கி, "அம்மா! மன்மதபாணத்தா லுண்டாகிய துன்பத்தைச் சகிக்கமாட்டாமல் உன் மகளாகிய மாயை உயிர் நீங்கத்தக்க நிலையிலிருந்தாள்; அப்படி நீங்காது பிழைத்திருப்பது உன் தவப்பயனாலேயாம், எங்கள்மேற் குற்றமில்லை' என்றார்கள். இப்படித் தோழிமார் சொல்லுதலும், ராஜமஹிஷியாகிய மோகினியானவள் சிறிது கோபந் தணிந்து, தோழிமார்களுள்ளே சிறந்த சகளையின் முகத்தைப் பார்த்து, "புஷ்பபாணங்களையுடைய மன்மதனை நிகர்த்த அல்லமனை வெளியே நின்று துரத்திவிடாமல் எமது புதல்வியாகிய மாயைக்கெதிரே யனுப்பினாய்; இது யாது காரணத்தாலோ?" என்று கேட்க, அந்தச் சகளையானவள் மோகினியை நோக்கி, "தாயே! எல்லாப் பிறப்புக்களினுள்ளும் மானுடப்பிறப்புச் சிறந்தது; அதிலும் அரசர் மக்களாய்ப் பிறத்தல் அரிது; அதிலும் அவயவக் குறைபாடின்றிப் பிறத்தல் மிகவும் அரிது; அதினும் அறிவோடிருந்து போகங்களை யநுபவித்தல் அரிது; என்றிவ்வாறு பெரியோர் கூறுதலால் நீ அநேக தவங்களைச் செய்துபெற்ற செல்வப் புதல்வியாகிய மாயையைக் கோபித்து வெறுத்துக்கொள்வது உனக்குத் தகுதியன்" றென்று சொன்னாள். அது கேட்ட மோகினியானவள் முகமலர்ந்து, "என் தவப்பய

ருகிய மாயை குற்றமுடையவளல்லள்; காந்தர்வ மணம் அரசருக் குரியதென்று சொல்லுவார்கள். ஆதலால், இவளுக்கு அல்லமன்றானே மணவாளனாதற் குரியவன்; அவனிடத்தில் இவளிஷ்டப்படி போகத்தை யநுபவிக்கட்டும்" என்று சொல்லிப் பின்னும் ஒன்றைச் சொல்லுகிறாள்: தோழிகளே! உலகமுழுதும் அறியும்படி விவாகஞ் செய்யுமளவும் உலகத்தாரும் அரசனும் அறியாமல் மாயையின் செய்கையை நீங்கள் மறையுங்கள்! இவளது நன்மை தீமைகள் யாவும் உங்களுடையனவே ஆதலால் உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை என்று சொல்லி மகளுக்கு அளவற்ற மகிழ்ச்சியை யுண்டாக்கிச் சென்றாள். பிறகு மாயையானவள் தோழிகளை நோக்கி, "நீங்கள் என் குற்றத்தை என் அன்புள்ள தாயோடு சொன்னால் அவள் என்னைக் கோபிப்பாளோ" என்ன, அதைக் கேட்ட சகளையானவள் "சாந்தாங்காரன் உனக்குப் பரமசிவனே நாயகனென்று சொல்லியிருக்கவும் நீ யிந்தக் காரியத்தைச் செய்தால் உன்னைக் குறித்துக் குற்றஞ் சொல்வார்மேற் குற்றமுண்டோ? நமமுடைய தாயறிந்ததனால் அற்பமாய் மறைந்தது; அரசன் அறிவானாயின் எளிதாகுமோ? போனது போகட்டும், இனிமேலாயினும் அந்த அல்லமனை அப்புறப்படுத்துவதே விவேகம்' என்று சொன்னாள். அதைக் கேட்ட மாயையானவள் மனஞ் சோர்ந்து தாங்குதற்கரிய துன்பத்துட னிருந்தாள். இந்தச் செய்தியை யறிந்த அல்லமன் சகளையை நோக்கி, "உங்களுடைய ராஜபுத்திரியாகிய மாயைக்கு நேரிட்டது யாது?" என்று கேட்க, அவள் அல்லமனை நோக்கி, "ஐயனே! எமது தலைவியாகிய மாயை உன்னைக் கண்டநாள்முதலாக உன் மாயைவலையி லகப்பட்டு வருந்துகிறாள். இந்தச் செய்தியை அரசனொருவன் மாத்திரம் அறிந்திலன், மற்றெல்லாரும் அறிந்தார்கள். ஆதலால், நாம் பிழைக்கவேண்டி நீ வெளியில் ஒரு இடம் பார்த்துக் கொண்டு அங்கிருப்பது நன்மை" என்றாள். அதுகேட்ட அல்லமன் அவளை நோக்கி, "பெண்ணே! நான் மாயையை

விட்டு நீங்கினுல் எனக்கு நடக்கக் காலெழுமோ, வாயில் பேச்சுண்டாகுமோ, உண்ணமனம்வருமோ, இராப்பகல்கள் அறியப்படுமோ, உடலுயிர்கள் சேர்ந்திருந்து இன்பமநுப விக்குமோ? என்னை ஒருவர் கண்டதாக வந்து உனக்குச் சொல்லுவா ருண்டோ?'' என்றிவ்வாறு சொல்ல, முன்னே அல்லமனது தயையை விரும்பி யுழன்ற சகளையானவள் அவன் மனக்கருத்தை யறியாமல் அவனைநோக்கி, ''ஐயனே! எமது தலைவியாகிய மாயையைப் புணர்தற்குரிய நல்ஊழ் உனக்கிருக்குமாயின் நீ யெங்கிருந்தாலும் அரசன் உன்னைத் தேடி அவளை உனக்கே மணமுடித்துக் கொடுப்பான்; இதில் சந்தேகமில்லை'' என்ருள். அதுகேட்ட அல்லமன் மிகவும் மனமகிழ்ந்து, ''நன்று நன்று'' என்று சொலலி, மது கேசன் சந்நிதியிற் சென்று மாயை நடிக்கும்போது தனது மத்தளத் தொழிலை நடத்திக்கொண்டிருந்தான்.

பிரபுதேவர் வந்தகதி முற்றிற்று.

ஆருவது

விமலை கதி

நிர்மலையாகிய பார்வதிதேவி யனுப்ப அகன்ற பூமி யில் வந்து ரஜோகுண வடிவமாகிய விமலையானவள் மலத் தோடு கூடினவளாகிய மாயைக்கு அருளுருவாகிய அல்லம ரது ஒழுக்கத்தை அன்போடு சொல்லியவண்ணம் சொல்லு வோம்.

மாயையானவள் மதுகேசனை நாள்தோறும் பூசித்து நமது அல்லமதேவர் கொடுத்த மயக்கம் தன் மனத்தில் அதிகரிக்க இருந்தாள். இப்படி யிருந்தகாலத்தில் உமா தேவி ''நம்மால் அனுப்பப்பட்ட மாயையானவள் பூலோகத் துக்குப் போய் நெடுநாளாயின. அவள் இன்னமும் வர விலலை. நீ போய் அவளை யழைத்துக்கொண்டு விரைவாக வரக்கடவை'' என்று விமலையை அனுப்பினுர்.

களங்கமில்லாத பிரகாசத்தையுடைய கைலாசத்தி லிருந்து எம்பிராட்டியாகிய பார்வதிதேவி யனுப்ப அப் பார்வதியை வணங்கித், தன் தனங்களின் பாரத்தினால் விழுந் தாளென்று சொல்லும்படி விமலையானவள் பூமியின்மீது வந்தாள். அப்படி வந்தவள் வனவசைமாநகரத்தில் பொன் னினாலும் மணிகலாலுஞ் செய்யப்பட்ட உப்பரிகையை யடைந்து, ஒரு கற்பகக்கொடிபோல மாயைக்கெதிரே நின்றனள். நின்றவளை மாயையானவள் கண்டு, "இவள் வாழ்வது இந்த நிலவுலக மன்றுபோலும்" என்றுலோ சித்து எழுந்து வணங்கி ஓராசனம் கொடுத்தாள். அந்த ஆசனத்தில விமலையிருக்க, இவ்விருவரையும் எதிரெதிரா யிருக்கக்கண்ட அந்நகரத்து மாதர்கள் "இரண்டு கைகளை யுடைய இரண்டு மாணிக்கங்களை நிகர்த்திருக்கிறார்கள்" என்று அதிசயித்தார்கள். இப்படி யிருக்கும்பொழுது மாயையானவள் விமலையை நோக்கி, "நீ யிருப்பது எவ் விடம்? உன் பெயர் யாது? நீ யிங்கு வந்ததற்குக் காரணம் யாது?" என்று வினவ, விமலை சொல்லுவாளாயினள்: "கற்பகக் கொடிபோன்ற மாயையே! நான் வசிக்குமிடம் கயிலை; என் பெயரைச் சொல்லின் விமலையாகும்; மலையரை யன் புதல்வியாகிய பார்வதி உன்னிடத்திற் கனுப்பினாள்; ஆதலால், இங்கு வந்து உன்னைக் கண்டேன்" என்று சொல்ல, ராஜகுமாரியாகிய மாயையானவள், எம்மிறைவி யாகிய பார்வதி, மிகுந்த துக்கத்தையுடைய மானுடப்பிறப் பினளாகிய என்னை நினைத்து உன்னை யென்னிடத்திற் கனுப்பினதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, விமலை சொல்லலாயினள்: "என் தங்கையாகிய மாயையே! அல்லம ரது மனவலியை யறிந்துவாவென்று உமாதேவி உன்னை யேவ, நீ அப்படியே யாகட்டுமென்று சபதஞ் செய்துவந்து இவ்விட மடைந்தபிறகு அதை மறந்துவிட்டாய். நீ உன்னை யே யறிந்திலையாயின் அல்லமரது நிலையை நீ யறிவதெவ் வாறு? நீ உமாதேவியின் அமிசமல்லவோ? ஓடமருந்துண்டு உறங்கி விழுவார்போல, நீ செய்துவந்த சபதத்தை மறந்

திருத்தலால் உன்னைத் தேடி யழைத்து வரும்பொருட்டு என்னை யனுப்பினாள்'' என்று சொல்லக்கேட்ட மாயை யானவள், விமலையின் சொல்லினால் சூரியனுதயமாகிய பகலிற் கண்டபொருள்போல அறியாது சந்திரனுதயமாகிய இரவினிற் கண்ட பொருள்போல மனந் தெளிந்து, தனது பூர்வ ஸ்திதியையும் தான் செய்துவந்த சபதத்தையும் அற்பமாயறிந்தாள். அறிந்து, பிரபஞ்சத்திற்கு மூலகாரண னென்று சிலசமயத்தாரால் சொல்லப்படுகிற திருமாலும் ராமாவதாரஞ் செய்தபோது தனது பூர்வ ஸ்திதியை அறிந் திலனென்றால் மிகவும் அறியாமையுடைய நான் இவ்வுல கத்தில் வந்து மயங்குதலைக்குறித்துச் சொல்லவேண்டுமோ? அந்த அல்லமனது சுபாவ குணங்களை யெல்லாம் அறியும் படி நீ யெனக்குச் சொல்லக்கடவை'' என்று திருவடியை வணங்கிநின்ற மாயையை நோக்கி, விமலையானவள் சொல் லத்தொடங்கினாள்: ''கைலாயத்தில் உமாதேவியுடன் நெற் றிக் கண்ணையுடைய பரமசிவன் அல்லமனது சரித்திரங் களைச் சொல்லும்போது நான் பக்கத்திலிருந்து அறிந் திருக்கிறேன்; அந்தச் சரித்திரத்தை மயிற்சாயலையுடைய மாயையே! நீ கேட்பாயாக'' என்று சொல்லத் தொடங்கி னாள்: ''இவ்வுலகத்தில், வள்ளிகாவையென்னும் ஊரில், தனக்கு ஒப்பில்லாதவனும், இடையறாத கிருபையை யுடை யவனுமாகிய நிராங்கார னென்னும் பெயரை யுடையவன் ஒருவ னிருந்தான். அவனுக்குக் குற்றமற்ற சுஞ்ஞானி யென்னும் பெயரையுடைய மனையாள் ஒருத்தி யிருந்தாள். இவ்விருவரும் வேதாகம விதிகளில் தவறாது தம்மைப் பார்த்து உலகத்தார் நடக்கும்படி நடப்பவர்களா யிருந்தார் கள். அன்றியும் இவர்கள், ''சிவமே யுண்மை, அதையன்றி விரிந்த உலகம் பொய்'' என்றும், ''இம்மை மறுமை யின்பங்கள் அழிவன'' என்றும் கருதியிருப்பவர்கள். மேலும், மனமுதலிய அந்தக்கரணங்களும், காமம் குரோ தம் முதலிய அரிஷட்வர்க்கமும் தீநெறியில் செல்லாமல் நன்னெறியிற் செல்லும்படி முயற்சி செய்து அவற்றைத்

தடுப்பவர்கள். பொய்த்தொழில்கள் ஒன்றும் இல்லாதவர்கள். ஞானசாரியனால் உபதேசிக்கப்பட்ட சாஸ்திரப் பொருளையே உறுதியாக நம்பி மோட்சத்தை யிச்சித்திருப்பவர்கள். இத் தன்மையராய் இருக்குங் காலத்தில், தாம் இருப்பது இல்லறமாதலால் அதற்குரிய நன்மக்கட்பேறு இல்லாதிருத்தல் தகுதியல்லவென்று மனந்தளர்ந்து, பிள்ளைகள் இல்லாத வாழ்வு: ஈசுவரத் தியானமில்லாத மனத்தையும், ஞானமில்லாத சத் கருமத்தையும் நிகர்க்கும். இந்த உலகுக்கு உதவியாகத் தகுந்த பல தொழில்களைச் செய்கின்ற புதல்வன் வேண்டுமென் றிருப்பவன் மனிதருக்குள்ளே ப்தராவான். மேலுலகிற்கு உதவியாகப் புதல்வன் வேண்டுமென் றிருப்பவன் தருமநெறி மிகுந்த ஆண்மகனாவன். அத்துவிதானந்தத்தைக் கொடுக்கின்ற புதல்வன் வேண்டுமென்றிருப்பவன் ஞானியாவன் என்று ஆலோசித்துத், துன்பத்தைச் செய்கிற பிறவிப்பிணியை அழிக்க முயலுகின்ற மனத்தையுடைய நிராங்காரன்: உடம்பையும், ஐம்பொறிகளையும், அந்தக்கரணங்களையும், பிராணவாயுவையும் தான் என்று நினைத்துத் திரியாமல், அவை முழுதும் ஒழித்துத் தன்னை யறிந்து, பேதாபேத மென்னும் மயக்கம் நீங்கியிருக்கின்ற மேலான மோட்சத்தைக் காட்டுகிற புதல்வன் வேண்டுமென்று விரும்பினான். நான்கும், ஆறும், பத்தும், பன்னிரண்டும், பதினாறும, இரண்டும் ஆகிய இந்த இலக்கத்தை முறையே கொண்டிருக்கிற இதழ்களையுடைய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞேயம் என்கிற ஆறாதார கமலங்களைக் கடந்துபோய், நெற்றியின் மேற்பட்டிருக்கிற ஒப்பற்ற ஆயிரம் இதழ்களையுடைய கமலத்தின்மேல் வீற்றிருக்கின்ற சோதிவடிவமாகிய சிவத்தைத் தரிசித்து, 'எம்முடைய எண்ணத்தை நிறைவேற்றுவோம்' என்று முயன்றெழுந்து, 'தவத்திற்கு வேறொருவருடன் சேர்ந்திருத்தலும் கூடாது' என்று பெரியோர் சொல்வதற்கு மாறாய் மனைவியும் கணவனுமாகிய இவ்விருவரும் காட்டிற்சென்று,

பத்மாசனத்திலிருந்து, தேற்றுங்கொட்டையால் தெளிந்த நீர்போலப் பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் தெளிந்த மனத்தைத் திறந்துந்திறவாத கண்களோடு தமது தவப்பயனாகிய இஷ்டலிங்கத்தில் பிறழாது அமையும்படி வைத்து, உடம்பு தறிபோ லசைவற இருக்க நேராய் இருந்து, சஞ்சரிக்கிற இடைபிங்கலை யென்னும் இரண்டு நாடிகளின் வழியே போய்த் திரும்புகிற வாயுவைக் கும்பித்து, நடு நாடியாகிய சுழுமுனையிற் செலுத்தி, அறிவு சிறிதும் சலிக்காமல் அம்ஸமந்திரத்தை மாறிக்கொண்டு, குறியைக் கடந்திருந்த ஒப்பற்ற பொருளைத் தியானித்துக்கொண்டு அவ்வனத்தில் இருந்தார்கள். இவர்களது பிராணவாயு நிற்க அதன் வழியே மனது நின்று, மனது நிற்க ஐம்பொறிகள் நின்று, பொறிகள் நிற்க அவற்றின் விஷயங்கள் நின்றன. அந்தப் புலன்கள் நின்றமையால், பிரபஞ்சந் தோன்றாமல் மனத்தில் பரிசுத்தமாகிய பரமானந்த பரஞ்சோதியாகிய பரமசிவம் தரிசனந் தந்துநிற்கத் தரிசித்து வந்தார்கள். குவிந்த மனத்தோடு இத்தன்மையாகிய சிவயோக சமாதியில் ஒன்பது மாதகாலம் பரிபூர்ணமாக விருந்தபொழுது, இவர்கள் நெற்றியின்மேல் பரஞ்சோதியாகிய பரசிவம் திரண்டு குழந்தை வடிவாகி வெளிப்பட்டு நிற்க, அந்தப் பரஞ்சோதி யுருவை விரும்பியிருந்த இவ்விருவரும் கண்களை விழித்து நோக்கினார்கள். அந்தத் தாய்தந்தைய ரிருவருக்கும் ஒருபோதும் அறியாத சந்தோஷமானது மனத்தில் அதிகரிக்க, பரஞ்சோதியாகிய குழந்தை வெப்பம் நீங்கிப் பூமியி லிறங்கிப் பிரகாசியாநின்ற சூரியனோ? பனி நீங்கி எங்களை ஆள விரும்பிவந்த சந்திரனோ? இடுகின்ற விறகை யெரிக்காத பெருநெருப்போ? அறியவொண்ணாதென்று சொல்லும்படியாகப் பிரகாசித்து, மாயை நீங்கின நிராங்காரனையும், சுஞ்ஞானியையும்போல மலவிருளைக் கெடுத்து வளராநின்ற சச்சிதாநந்த சொரூபமாகிக் கெடாத தீபமாகிய குழந்தையை, பிறவிகளெடுத்தலைந்து ஆங்காரமும், அஞ்ஞானமும் நிறைந்த மானிடரும், தேவர்களும், முனி

வர்களும் மற்றையோரும் பெறுவார்களோ? கச்சணிந்த இளமைபொருந்திய மெல்லிய முலையையுடைய மாயையே! பேராநந்தத்தையே புதல்வனாகப் பெற்ற அந்த நிராங்கார சுஞ்ஞானிகளுக்கு ஒப்பாவார் தமக்குத் தாமேயன்றி வேறொருவ ரிலர். ஏனென்றால், விஷயங்களுக்குள் ஒரு ஆநந்தத்தை யடைந்து அப்பொழுதே நீங்குகின்ற உலகத்தாரை நாம் ஒப்பாகச் சொல்லக்கூடா தாகையாலேதான். முற்காலத்தில் பாசம் நீங்கிய சில பெரியோர்களும் பரமசிவத்தைத் தமக்குள்ளே தரிசித்து வாழ்வடைந்தார்களல்லாமல் கண்ணுக்குக் காட்டினவர்களில்லை. அடிமைப்படுகிற இந்த நிராங்கார சுஞ்ஞானிகள் தம்முள்ளே கண்டுகொண்ட சோதியை உலகமுய்யும்படி குழந்தையாக்கிக் காட்டினார்கள். பரமசிவன், குழந்தையாய்த் தோன்றின நாளில் சங்கும் தெய்வதுந்துமியும் ஒலிக்க, புஷ்ப வருஷம் வருஷித்தது: திசைகளெல்லாம் பிரகாசித்தன; மலட்டுப் பசுக்கள் கன்றை யீன்றன; உலர்ந்த தறியும் தளிர்த்தது; சேறு கலந்த நீர் தெளிந்தது; பாவிகள் மனமுந் தெளிந்தன; அருள்மிகுந்த துறவிகள் மனமுஞ் சந்தோஷித்தன. வருந்தாத மனத்தையுடைய நிராங்காரன் ஞானப்பிழம்பாகிய பிள்ளையை மெய்யாகிய அகக்கண்ணினா லல்லாமலும், இந்தப் புறக்கண்ணினாலும் காணப்பெற்றோமேயென்று தன்னையறியாத சந்தோஷசாகரத்தில் மூழ்கிக் கரையேறாதவனாய் மார்போடு பொருந்தத் தழுவிக்கொண்டு கையாலெடுக்க, எங்கு நிறைந்த கனவானாகிய அல்லமன் கனத்திராமல் இலேசாயிருந்தான். அப்பொழுது சிவந்த அதரத்தையுடைய சுஞ்ஞானியானவள் தன் கணவனாகிய நிராங்காரனை வணங்கி, ''என் பிராணநாதா! இந்தப் பிள்ளையின் தன்மைகளை யெல்லாம் எனக்கு விஸ்தரித்துச் சொல்லவேண்டும்'' என்று கேட்க, அந்த நிராங்காரன் அவளை நோக்கி, ''பெண்ணே! சைவாகமங்களும் வேதங்களும் சொல்லுதற்கரிய நமது குழந்தையின் பெருமையை நானெப்படி சொல்லுவேன்'' என்று அதிசயித்துச் சொல்லுவான்;

"மூங்கிலாற செய்தாற்போன்ற தோள்களையும், கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையும், விசாலமாகிய கண்களையுமுடைய மாதே! நாம் பூமியிற் குழந்தையாகப் பிறவாமல் நம்மிடத்திற் குழந்தையாகப் பிறந்தவன், மதுரமாகிய பாற்கடலில் நித்திரை செய்வோனாகிய திருமாலும், செந்தாமரை மலர்மேல் வாசஞ்செய்யும் பிரமனும் காணவொண்ணாத அடிமுடிகளையுடைய பரமசிவனேயாவன்; இதற்குச் சந்தேகமில்லை" என்றான். "பசும் பொன்மலைபோல வளர்ந்தும் இடையின் வறுமையை நீக்க அறியாத இளமுலையையுடைய மாயையே! சுஞ்ஞானித் தாயானவள், புணர்ச்சியினாலல்லாமல் தவயோகத்தால் பெற்றபொழுதில், தன் மகனைச் சான்றோனென்று சொல்லக்கேட்டதனால் உண்டாகிய உவகைக் கடலில் மூழ்கினாள் மயக்கம் பொருந்திய மனத்தோடு தமது புத்தியினால் ஒன்றைச் சொல்லி, இதுவே உண்மைப் பொருளென்றும், இதனையே வேதாகமங்கள் சொல்லுமென்றும் யுக்திகளைக் கொண்டு சாதித்து, பிரத்தியக்ஷமான பொருளை நிந்திக்கிற சமயவாதிகளின் மயக்கத்தை அல்லவென்று சொல்லுவோனாதலால் இந்தப் பிள்ளைக்கு அல்லமாப்பிரபு என்னும் பெயரிட்டார்கள். ஒப்பற்றவனாகிய கடவுள் இருவினைகளைக் காரணமாகக் கொண்டு கொடுக்கிற சரீரமுடையவனல்லாமல் அந்தக் கடவுளேயொரு மானுட வடிவாகி நடிக்கும் திருவுருவை யுடையவனாதலால், அல்லமன் தான் நினைத்தபடி தவழ்ந்து, பின்பு நின்று, மெல்ல நடந்துபோய், அலங்கரிக்கப்பட்ட மணிமாளிகைகளையுடைய வீதியில் திருவிளையாடல் செய்தான். தாயாகிய சுஞ்ஞானியானவள், "எம்முயிரே வருக! கண்ணினாலுண்ணுதற்குரிய அமிர்தமே வருக! எமது குலவிளக்கே வருக! அழியாச் செல்வமே வருக! பாசநாசனே வருக! ஞான விநோதனே வருக!" என்று சொல்லி மனமகிழாநிற்க வந்து மேல் விழுவான். மனிதனைப்போலவே விளையாடுகிற அல்லமன் மாயையாலுண்டாகிய நாமரூபங்களைக் கெடுத்து என்றும் அழியாத

பரப்பிரமப்பொருளை அறியும் விதமாய் அறிவித்தல்போல, பேதைப் பருவப்பெண்கள் மணலினுற் செய்த சிறுவீடு களைத் தன் பாதங்களால் அழித்துவிட்டுப் போயுலாவுவன். உலகமானது நான் அசைந்தால் அசையும் என்றறிவித்தல் போல, அழகிய வீதியில் பொன்னினுற் செய்யப்பட்ட சிறு தேரை யுருட்டுவன். அடக்குதற் கரிதாகிய மனமானது இதனை நிகர்க்குமென்று சொல்லுவோன்போல, நம்முயிர் போன்ற அல்லமன் பம்பரமாடுவன். பெருமை பொருந்திய பழைய வேதங்களும் சொல்லுதற்கரிய புகழையுடைய அல்லமன், எதிரேயிருக்கிற கண்ணாடியைக்கொண்டு தம் முகத்தைப் பார்த்துக்கொள்வோர் போல, ஞானத்தை யுடைய குருவைச் சேர்ந்து, அவனை யெதிரே வைத்துக் கொண்டு, தனது பெரிய வித்தைகளை யாராய்ந்து நல்ல நூல்களைக் கற்றல்போலப் பல கூத்துக்களைச் செய்தான். தாய் தந்தையருடைய மனங்களிக்கத் தன தருளினுல் பாலலீலை செய்துகொண் டிருப்பவனுகிய அல்லமன் உலக முழுதும் போய் மனிதருடைய வலிய பாவங்களைக் கெடுக்க நினைந்து, தாய்தந்தையரோடு இதனைச் சொல்லத்தொடங்கி னுன்: "உங்களுடைய பாவனையின் ஒருமைப் பாட்டினுல நான் ஒரு குழந்தை வடிவாகி இவ்விடத்திற் பொருந்தி யிருந்தேன்; இனி உலகமுழுதும் போய் அங்கங்கு வசிக் கின்ற முனிவர் முதலியோரது எண்ணத்தை முடிப்பேன்" என்று எம்மிறைவனுகிய அல்லமன் சொல்லக்கேட்ட தாய் தந்தையர் சொல்லுகிருர்கள்: "பிறவியாகிய கடலிற் ருேன்றி குற்றத்தையுடைய எங்களுக்குக் கிடைத்த ஒரு தெப்பத்தை நிகர்த்தவனே! எங்களை விட்டு நீங்குவை யாயின் முத்திக்கரையில் ஏருமல் மூழ்கிவிடுவோம்" என்று மனம் வருந்திச் சொல்ல, ஞானசிகாமணியாகிய அல்லமன் அவர் தெளியும்படி சொல்லலுற்ருன்: "சிறிது பொழுதும் உங்களை விட்டு நீங்கமாட்டேன்; நீங்கள் மனந் தளரவேண்டாம்; நான் சொன்னதைக் குறித்து உங்களுக் குச் சந்தேகமா யிருந்தால வேதாகம சாஸ்திரங்களைக்

கற்றோர்களைக் கேட்டு நிராங்கார சுஞ்ஞானிகளை இவ்விடத்திற் பொருந்திய அல்லமன் நீங்குவானுயின் சொல்லுவாக ளென்று அறியுங்கள்.'' இப்படியாகச் சொல்லி அழிதற்குரிய இந்தச் சரீர முதலிய யாவும் அந்நியமென்று தள்ளி சேஷித்துநின்ற தம்முள் வேறல்லனென்கிற நிலையிலே யிருந்து தாதாத்மியம் பொருந்தும் தன்மையைச் சொல்லி அவரறியும்படி அறிவித்தான். ''தாய்தந்தையர் இல்லாதவனாய் எல்லாப் பொருள்களுக்கு முதல்வனாகிய பரமசிவன் பிள்ளையாகி, குழந்தை யில்லையென்கிற மனோதுக்கத்தைப் போக்கவும், தேசிகோத்தமனாய் மேலான முத்தியைக் கொடுக்கவும் கிடைக்கப்பெற்றவர்கள் இந்தப் பெருந்தவத்தினராகிய நிராங்கார சுஞ்ஞானிக ளல்லது வேறொருவருமில்லை'' என்று உலகத்தார் துதித்தார்கள். ஆதலால், அழகையுடைய அல்லமனது அருளினுல் உண்டாகிறது நன்மையாகிய மோக்ஷமே'' என்றிப்படி பரமசிவன் பார்வதி தேவிக்குச் சொல்லும்போது, அவ்விடத்தில் உடனிருந்தேன்'' என்று பேறறிவையுடையவளாகிய விமலை சொன்னுள். எள்ளில் நெய்போலவும், விறகில் நெருப்புப்போலவும், பூவில் மணம்போலவும் கலந்து எவ்விடத்திலு மிருந்தாலும் அருள்வள்ளலாகிய அல்லமன், இனிய சுவையுள்ள பாலானது முலையினின்றும் ஒழுகுதல்போல, அடியாருடைய மனத்திலிருந்து விளங்குவான்.

விமலைகதி முற்றுப்பெற்றது.

ஏழாவது

மாயை கோலாகல கதி

சிறந்த அழகையுடைய விமலை இவ்வாறு சொல்ல, முல்லையரும்பை யொத்த வெள்ளிய பற்களையுடைய மாயையானவள், தான் வந்த காரியத்தை யாலோசித்து 'அந்த அல்லமனைத் தழுவுவேன்' என்று எழுந்தகாலத்தில், அல்ல

மன் நீங்கிச்சென்ற தன்மையை யாவருமறியச் சொல்லு வோம். பாலசந்திரனை யணிந்த பரமசிவன் பார்வதி தேவிக் குச் சொல்லிய சரித்திரத்தை விமலை சொல்லக்கேட்ட மாயையானவள் மனந்தளர்ந்து, விமலையை நோக்கி, "அல்ல மன் என்னும் பெரியோனை நாம் அடைவதெப்படி? சொல்!" என்றாள். அதுகேட்ட விமலையானவள், "மாயையே! நீ பரமசிவனைப் பூசை செய்வையாயின் அல்லமன் கண்ணுக் கெதிரே வந்து நீ விரும்பினதை உனக்கு அருள்செய் வன்" என்று சொன்னாள். அப்பொழுது மாயையானவள், "விமலையே! நீ சொல்லு முன்னமே அருள்வடிவாகிய மது கேசனைப் பூசைசெய்து துதித்தேன்; அந்தப் பூசை தரும் பயன் ஒன்றுமில்லை யென்பதை யறிந்திருக்கிறேன்" என்று மனம்வாடிச் சொன்னாள். சொல்லுதலும், விமலையானவள், "இவள் பரமசிவனைப் பூசைசெய்வதில் பயனில்லை யென்று சொன்னாளே; இது என்ன புதுமை?" என்று காதை மூடிக் கொண்டு "அர அர" என்று உச்சரித்து மனங்கலங்கிச் சொல்லுகிறாள்: "ஓ மாயையே! சிவபூசை செய்தும் பிர யோசநமில்லையென்று சொன்னாய். பிரமவிஷ்ணுக்கள் முதலாகிய தேவர்களுக்கானாலும் விருப்பத்தோடு சதாசிவன் பூசைசெய்தாலன்றி ஒரு எண்ணமாவது நிறைவேறுமோ? மேகலையை யணிந்த அல்குலையுடைய மாயையே! தேவேந் திரனும், பிரமனும், விஷ்ணுவும், மற்றைத் தேவர்களும், பந்தங்களற்ற முனிவர்களும் பூமியினிடத்தில் சிவபூசை யை விதிப்படி செய்த சிவாலயங்களைக் கண்டதில்லையா? உமாதேவியும், தெய்வப்பெண்களும், திருப்பாற்கடலிற் றோன்றிய திருமகளும், மாதவர் மனைவியரும், சரசுவதியும் நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் பூசையால் தத்தமக் குரிய பதவிகளை யடைந்த தன்மையை நீ சிந்தித்தாயில்லை. தளர்கின்ற இடையையுடைய மாயையே! எமது தலைவ னாகிய பரமசிவன் பூசையால் அஷ்டமாசித்திகளையும், ஆயுளையும், மேன்மையையும் காமியங்களில் விருப்பமுடை யவர் அடைவார்கள். அந்தக் காமியபுத்தி யில்லாதவர்கள்

மோக்ஷத்தை யடைவார்கள். பெருமை பொருந்திய மாநுடப்பிறவி வாய்த்தும் நல்ல மலர்களால் சிவபிரானைப் பூசை செய்யாதவராகித் தமது ஆயுளை யெல்லாம் பயனில்லா மற் கழிப்பவர்கள் அறிவீனரை யெண்ணும்பொழுது முத லில் நிற்பார்கள். மூங்கிலை வென்ற தோல்களையுடைய மாயையே! முக்கண்ணனாகிய பரமசிவனது பாத தாமரை களை மணம்பொருந்திய மலர்களைக்கொண்டு அருச்சிப்பவர் களைச் சர்ப்பாபரணமில்லாத சிவபிரானென்று பாவித்து அவர்களுடைய பாதத்தை மனமகிழ்ச்சியோடு உலகத்தார் துதிப்பார்கள். நோயும் பிறப்புமில்லாத பரமசிவனைப் பூசைசெய்து தலைக்குப் பொருந்த ஒரு சந்திரனைப் பெற் றுக்கொள்ளாத மனிதனாகப் பிறத்தலினும், பெரியோர்க ளால் இகழப்படாத ஒரு நாய்ப்பிறப்பு மிகவுஞ் சிறந்தது. ஒப்பில்லாத சிவாகமங்களில் சொல்லப்பட்ட மந்திரங்களை யும் கிரியைகளையும் குற்றமற வுபதேசிக்கிற சதாசாரியனது அநுக்கிரகத்தால் பெற்றுக்கொண்டு சிவபூசை செய்பவர் கள் மேன்மையாகிய சிவபூசையின் பயனை யடைவார்கள். பரமசிவனது ஐந்து முகங்களும் அருள்செய்த ஆகமத்தில் சொல்லப்பட்ட விதிப்படி நன்றாகச் செய்தாலும் அளவற்ற அன்பானது மனத்தில் இல்லையாயின், செய்தபூசை பயன் தராது. அருச்சிக்கிற தன்னையும், அருச்சிக்கப்படுகிற ஈசு வரனுடைய இயல்பையும், அவனது பூசைக்கு வேண்டிய திரவியங்களையும், அறியத்தக்கவற்றை யறிந்து உயர்ந்த ஆசாரியனது அருளினால் அறிந்து தெளியவேண்டும். மந் திர தந்திரங்களில் குற்றங்கள் நேரிட்டனவோ? மனது வெளிப்புலன்களிற் சென்றதோ? சிவபூசையினால் பய னில்லை யென்று சொன்னாய். அப்படிச் சொன்னதற்குக் கார ணம் யாது? சொல்லக்கடவாய்'' என்றாள். இப்படி விமலை சொல்லுதலும், தான்செய்த பூசையால் மாயையை வென்ற அல்லமன் கண்ணிற் காணப்பட்ட நன்றியை யறியாதவ ளாய், அந்த அல்லமன் தன்கையி லகப்படாமையால் மிகு ந்த துன்பம் மனத்திற் பொருந்த, மாயையானவள் சொல்லு

கிறாள்: "வேறொன்றையும் நான் நினைத்ததில்லை. எமது குருநாதன் சொன்ன நெறியால் இதுவரைக்கும் சிவபூசை செய்தும் பயன் சிறிதுமில்லை" என்று சொன்னாள். அது கேட்ட விமலையானவள், "பக்குவர்களுக்குப் பெரிய மந்திரங்களை உபதேசிப்பதன்றி அபக்குவர்களுக்கு உபதேசித்தால் அது பயன்படுமோ? யான் நன்னெறியைப் பலமுறை சொல்லியும், அதனை ஆலோசிக்கின்றிலள். ஐயோ! மாயையானவள் கலங்கிய மனதை யுடையவளாகி மயக்கங்கொண்டிருந்தாள்; அறிவில்லாதவர்களுக்கு அறிவிக்கப் புகுவோரும் அறிவில்லாதவ ராவர்" என்று விமலையானவள் தன் மனஞ் சோர்ந்து, "இந்த மாயையினது மனம் கவலை கொண்டிருந்தது; இதற்குக் காரணம் இன்னதென்று நான் அறிந்துகொள்வேன்" என்று தன் மனத்தில் நிச்சயித்துக் கொண்டு, மாயையை நோக்கி, "உன்மேல் மன்மதனது புஷ்பபாணம் பட்டதாக எனக்குத் தோன்றுகின்றது. ஆதலால், அந்தச் செய்தியைப் பார்வதி தேவிமேல் ஆணைப்படி எனக்கு ஒளிக்காமல் சொல்லக் கடவை" என்று சொன்னாள். அதுகேட்ட மாயையானவள் ஆணைக்கு அஞ்சி, "சிதம்பரத்தில் நடனஞ் செய்கின்ற சபாபதியும் விரும்புகின்ற மத்தளத்தொழிலை யுடையவனும், கண்களுக்கு உணவு என்று சொல்லத்தக்க பேரழகனும் ஆகிய ஒருவன் வந்தான். அவனைக் கண்டளவில் நான் என்னைக் காணேன்" என்று ஞானிகள்போலச் சொன்னாள். "அவனது பெயர் அல்லமன். அவனுக்கல்லது என் மனக்கல்லானது உருகாது. முக்கண்ணனாகிய சிவபெருமானுக்கன்றி மேருமலை வில் லுருவாவதுண்டோ? ஓ விமலையே! உன்னைப் பார்க்கவேண்டிய புண்ணியம் ஒன்றிருத்தலால் இதுவரையில் நான் உயிர் தரித்திருந்தேன்" என்று சொன்னாள்.

அதற்கு விமலை சொல்வாள்: "மாயையே! நீ சொல்லிய அல்லமன் நான் சொல்லிய அல்லமனே; அவன் விரும்புகிற உனக்குத் தகுதியான மாறுட வடிவங்கொண்டு

வந்தனன்போலும். அவன், நல்ல ஞானக் கண்களுக்கன்றித் தன்னுண்மை வடிவைக் காட்டமாட்டான்'' என்று சொன்னாள். அதைக்கேட்ட மாயையானவள் விமலையை நோக்கி, ''தனக்குத்தானே நிகராகிய அல்லமன் சச்சிதானந்த வடிவாகிய சிவனென்று சொன்னாய்; அத்தன்மை யுடையனல்லன்; இவன் மத்தளத் தொழிலையுடைய அல்லமன்; நீ முன்னுக்கும் பின்னுக்கும் விரோதமாய்ச் சொன்னாய்'' என்றாள். அதற்கு விமலையானவள் ''ஓ மாயையே! அவ்வல்லமன் தான் விரும்பிய உருவத்தைக்கொண்டு வேண்டியபடி செய்வன். அவனுக்கு இந்தக்காரிய மாகுமென்றும், இந்தக் காரிய மாகாதென்றும் உன் மனத்தினால் நிச்சயிக்கக் கூடுமோ'' என்றாள். அப்பொழுது மாயையானவள் விமலையை நோக்கி, ''இனி உன்னோடு தர்க்கித்துப் பேசுதல் எனக்குத்தகாது; நடனசாலையில் என்மனத்திற் பொருந்திய அல்லமனைக் காட்டுவேன்; நீ அவனைப் பார்த்துப் பின்பு இத்தன்மையனென்று சொல்வாயாக. பல நூல்களாலும் ஆராய்ந்தறிதற் கரியவனென்று நீ முன் அறிவித்தவனேயாயின் அப்படிப்பட்டவனது வல்லமையை நான் பார்ப்பேன்'' என்று சொல்லி, ரத்நம் வாங்க விரும்புவோர் அந்த ரத்நபரீக்ஷையில் வல்லவரை உடன்கொண்டு செல்வதுபோல,வந்த விமலையை உடனகொண்டு சென்று, தான் பூசைக்குப் போவதுபோல மதுகேசரது ஆலயத்தில் பிரவேசித்து, மதுகேசனைப் பூசித்து வணங்கித் துதித்து, விமலையோடும் நடனசாலையினுள்ளே சென்று, அல்லமன் இவன்தான் இவன்தான் என்று அறியும்படி சும்மாவிராமல் சொல்லென்று அடிக்கும் காட்சிபோல வல்லவனாகிய அல்லமன் மத்தளத்தைத் தாம் தாம் என்று அடித்தளவில், மாயையானவள் தன்மனம் ஊசலாடவும், பாதத்திலணிந்த மணிச்சிலம்புகள் ஒலிக்கவும் முன்னே நின்ற ஞானவடிவினனாகிய மதுகேசனிடத்துத் தன் பார்வையையும், தன் பின்னே மத்தளமடித்து நின்ற அல்லமனிடத்துத் தன் மனத்தையும் நிலைபெறவைத்து நின்று, தன்னைப் பார்ப்போ

ருடைய கண்களும் மயக்கமடைந்த மனங்களும் தன்மேல் வந்து விழும்படி நடனஞ் செய்தாள். இந்த மாயையின் மனத்தில் பொருந்திய விரகம் செந்நிறஞ் சேர்ந்த பளிங்குக்கொப்பாகித் தன்னிடத்தில் காணும்படி அல்லமன் விளங்கிநின்றாள். மாயையினிடத்தில் பொருந்திய சத்துவ முதலிய குணங்கள் சேர்ந்து பிரமத்தினிடத்தில் காணப் படுமென்று சொல்லுவதும் உண்மையன்றோ? ஆட்டுவித் தற்பொருட்டு வந்த அல்லமனது மத்தளவோசையின் வரிசைக்குச் சதிதப்பிய நடனஞ்செய்து வெட்கமுறாமல் சொல்லுக் கெட்டாத ஞானக்கடலாகிய அல்லமனை மாயை யானவள் வாயாற் சொல்ல மகளிர் கூட்டத்தில் வெட்க முற்று மனம் வேறாகி நின்றாள். நின்று, பிற்கு கையொடு செல்லாநின்ற கடைக்கண்ணால் மாயையானவள் காட்ட, அல்லமனை விமலையானவள் கண்டு, அதிசயமுடையவளாய் "உலகத்திலுள்ள மனிதர்களுக்குள்ளே இவனைப்போல வடிவழகுள்ளவனை எங்கும் கண்டதில்லை" என்று ஆலோசித்து, விருப்பத்தைத் தருகின்ற அல்லமனே இவ்வுருவங் கொண்டு இந்த மாயை செய்கின்ற பூசையின் பயனைக் கொடுத்தற்கு வந்தானோ? பெரிய தவத்தினால் பிறந்த மற்றொரு புருஷனோ?" என்று விமலை சந்தேகித்துத் தெளியாதவளாய் நிற்கும்படி அல்லமன் அவளை மயக்கி நின்றான். இருளில்லாதபோது தூரவழியில் ஒருவனைப் பார்த்து அவன் பொருந்த வருதலையும் போதலையும் சந்தேகித்து அறியமாட்டாதவள்போல, அல்லமனை விகாரத்தை யுடைய மனிதனென்றும் விகாரமில்லாத கடவுளென்றும் விமலையே மயங்குவளாயின் மாயையை வெறுத்துக்கொள்வ தென்னை? நீரின் ஆழத்தைக் கோலால் அறியும் தன்மை போல இவ்விடத்தில் நின்றவனது குணத்தின் தன்மையை மாயையினால் சந்தேகமில்லாமல் அறிவேனென்று அழகுக் கிருப்பிடமாகிய வடிவத்தையுடைய மாயைக்கு அவனே அல்லமனென்று கண்ணால் காட்டினள். சர்ப்ப கங்கணத்தை யணிந்த மதுகேசனது சந்நிதியில் தன் கண்களால் இளை

ஈது மனவலியை நீக்கி ஆடுகின்ற மாயைக்குக் கைலாச த்தி விருந்துவந்த விமலையானவள் கண்ணினாலே காட்ட, அந்த மாயையானவள் ஞானக்கண்ணிற்குக் காணப்படு கின்ற அல்லமனைக் கண்டறிந்தாள். அற்பமாகிய காமத் தைக் கருதி நின்றவளாகிய மாயை தன் மனத்திலுள்ள ஆசைகெட்டு வளம் பொருந்திய கைலாசகிரியில் சொல்லி வந்த சபதம் மனத்தில் தோன்றியவளவில் சுழன்றாடிக் கொண்டேபோய் அல்லமன்மீது விழுகின்றவள்போல மேல் விழுந்து பிடித்துக் கட்டிக்கொள்ள நினைத்துச் சென்றாள். அல்லமன் அந்த மாயையின் கருததை யறிந்து, 'இந்த மாயையின் மனத்திலிருக்கிற காமத்தை இவ்வுலக மறியச் செய்து போகின்றேன்' என்று மனத்திற்கொண்டு கைதவறி விழுந்த குடம்போல மத்தள முடையும்படி எறிந்துவிட்டு விரைவாக ஓடினான். "இந்த மாயைக்கு இத்தனை யாட்ட மெல்லாம் இதனாலேயாம்" என்று நினைத்து மத்தளத்தை எறிந்துவிட்டுப் போவதுபோல அல்லமதேவன் போதலும், அங்கிருந்த மாதரெல்லாம் "இவன் பயித்தியங் கொண் டானே" என்று மயக்கங்கொண்டு தளிர்போன்ற தமது கைவிரல்களை முடக்கிக் கர்ணமூலத்தில் வைத்து நின்றார் கள். இதுவரைக்கும் மறைத்து வைத்த இந்த மாயையின் செய்கையை உலகமெல்லாம் அறியும்படி மத்தளமடித்து அதையுடைத்து வெளிப்படுத்தினான். "இனி, நமது அரசன் மகளாகிய மாயைக்கு உயிர் நில்லாது" என்று மனம் வருந்தி னார்கள். அப்போது மாயையானவள், கலவிசெய்கிற தலை வன் விட்டு நீங்க அவனிடத்திருந்து தன் கைக்குவருந் திரவியத்தின்பொருட்டு அழுதிரங்குகிற வேசையர்போல, இப்போது மன்மதன் செய்கிற சண்டைக்கே யல்லாமல் தான் கைலாசத்தில் சொன்ன பிரதிக்ஞை வார்த்தை தவறிப்போயிற்றே யென்று அதற்காக மனங் கலங்கினாள். இவ்வாறு கலங்கிநின்ற மாயையின் மாலைக்காலத்துத் தாமரைமலர்போன்ற முகத்தைக் கண்டு, அது வாயிலாக அவள் மனோதுக்கத்தை யறிந்து, "மாயையே! நீ மனம் வருந்தாதொழிவாயாக! உன் பிராணநாயகன் போன

இடங்களிலெல்லாம் போய் அவனைத் தேடிக் காண்போம்" என்று விமலை சொன்னாள். இதைக்கேட்ட மாயை மனந் தெளிந்து, ஆண்மானைத் தொடர்ந்து செல்லுகின்ற பெண் மான்போல, அல்லமனைத் தேடிக்கொண்டு காட்டு வழியே சென்றாள். அவளது தோழிமாரும் அவளைத் தொடர்ந்து சென்றார்கள். அப்பொழுது கண்டோர் யாவரும், இந்த மமகாரராஜன் தவஞ்செய்து பெற்று, அரசர்க்கும் விவாகஞ் செய்து கொடாமல் முக்கண்ணனாகிய சிவபிரானுக் கென்று வைத்திருந்த அருமைப் புதல்வியாகிய மாயை, ஒரு மத்தளிகன் பின்னே போனாள்; அந்தோ! பெண் பெற்றவர்கள் அந்தப் பெண்ணைப் பத்து வயதுக்குமேல் விவாகஞ் செய்து கொடாமல் வைத்திருப்பது பாவம்" என்று சொல்லி யிகழ்ந்தார்கள். 'அற்பமாகிய காமமானது பழிபாவங்களை யுண்டாக்கும்; கீர்த்தியையும் தருமத்தையும் அழிக்கும்; தன்னால் வருஞ் சிற்றின்பத்தையும் அதனால் வருந் துன்பத்தையும், நல்ல பரம்பரையையும், சிறந்த விரதங்களையும், நல்லொழுக்கத்தையும், மேன்மையையும், இறப்பையும் எண்ணுதிருக்கச் செய்யும்' என்று பெரியோர் சொல்லுவார்கள்.

பஞ்சின்மேல் மிதித்தாலும் பதைபதைக்கின்ற மெல்லிய பாதங்கள் பருக்கைக் கற்களின்மேல் மிதிப்பதைக் குறித்து அஞ்சாமலும், நீர் பருகவும் விரும்பாமலும், சூரியகிரணமாகிய வெயிலின் வெப்பத்தைக் குறித்துப் பயப்படாமலும், தன் மனத்தை அல்லமன்மேல் வைத்து அந்த மாயையானவள் சென்றாள். கொடிய காமாக்கினியினால் சரீரம் வெந்து மனங்கருகிய ராஜகுமாரியாகிய மாயையல்லாமல் பாற்கடலிற் பிறந்த சீதேவியானவள் அந்தப் பாலை நிலத்தில் போவாளாகில், நீரில் தாவாநின்ற இளங்கெண்டையானது சுடுமணலில் வீழ்ந்ததுபோலத் தளர்வாள். மாயை சென்ற கொடிய பாலைநிலம், யானைத் துதிக்கையை நிகர்த்த நீர்த்தாரைகளை மேகமானது இடை

யிருமல் நெடுங்காலம் பெய்தாலும் நெருப்பினுற் காய்ச்சப் பட்ட இரும்பின்மேல் நகத்தால் தெறித்த நீர்த்துளிபோல விரைவாகச் சுவறிப்போம். திருமால் இவ்வுலகத்தை யுண்டபொழுது தன் வயிற்றிலிராமல் இந்தப் பாலை நிலத்தை அப்பொழுதே உமிழாவிட்டால், சரீரம் பதைத்து, சமுத்திரத்தில் விழுந்ததனுலும், வெண்ணெ யுண்டதனுலும் வெவ்விய தாபம் நீங்கிப் பிழைத்திருக்கமாட்டான். நாயினது நாவிலுள்ள நீரைச் சிறிய முயற்குட்டிகள் நக்குகிற கொடிய பாலைநிலத்தில் தன்னை மறந்து பரவசப் பட்டு நடந்த மாயையின் பின்னே தொடர்ந்து போகின்ற மாதர்களுடைய வாயில் நீர்வற்றிக்கண்களில்வந்து சுரந்தன. அந்த மாதர்கள் கானலை நீரென்று நினைத்துச் சிறிதுதூரம் விரைந்து சென்று, அது நீரல்லாமையால் மனந் தளர்வார்கள். கடைவாயை நாவினுல் தடவி, ஒரு கையால் முன்றானையைத் தங்கள் முகத்துக் கெதிரே வீசிச் சரீரம் தளர்வார்கள். ஆ! இந்த வேனிற்காலம் மிகவும் கொடியதென்றும் விதியை வெறுத்துக்கொள்வார்கள். மாதர்கள் இவ்வாறாகத் தொடர்ந்து பின்னேவர, 'அழகையுடைய மாயையினது தாமரைமலர்போலும் பாதங்கள் பாலைநிலத்தில் நடந்து வருந்தின வாதலால், அந்த அல்லமதேவனைத் தடுத்து உதவிசெய்து மாயையோடு உறவுசெய்து கொள்வோம்' என்று மான்கள் முன்னே யோடும். கூந்தலானது மேலே பரந்த மேகத்தின் தோற்றத்தைத் தருதலாலும், அதரமானது இந்திரகோபத்தைக் காட்டலாலும், தனங்களின் மேலிருக்கும் முத்துமாலைகள் மலைபருவியை நிகர்த்தலாலும், அழகிய கைகள் காந்தள்மலரின் தோற்றத்தைத் தருதலாலும், கார்காலமென்றெண்ணி மயில்கள் களிக்கும்படி மாயையானவள் காட்டிற்கு வந்தாள். சிங்கமும் யானையும் தங்களுக்கு வேலை செய்யும்படி தவஞ் செய்து கொண்டு அந்த வனத்தில் வாசஞ்செய்கிற முனிவர்கள், மாயையினது தனமும் இடையுமாகிய யானையையும் சிங்கத்தையும் கண்டு மனந்தளர்ந்து, மிகுந்த துக்கத்துடன்

எழுந்தோடினார்கள். கொடியதாகிய வாள்போன்ற வரிகளை யுடைய புலியைக்கண்ட மான்கூட்டங்கள்போல, நீண்ட சடையையுடைய முனிவரர் மனங் கலங்குகின்ற நிலையும், மாதர்கள் வருந்துகிற துக்கமும் நீங்கும்படி அல்லமதேவன் அவர்களுக்கு அருள்செய்ய நினைத்தான். "மாயை நீங்கும்படி ஒரு க்ஷணத்தில் ஓட்டுவேன்; நீங்கள் துன்பப்படவேண்டாம்" என்று ஒரு முனிபோல அல்லமன் நின்று சொல்லி அந்த முனிவருக்கு அநுக்கிரகஞ்செய்து பழைய அல்லமனாய் மாயைக் கெதிரே தோன்றினன். நெருப்புருவாயிருக்கிற பாலைநிலத்தில் சென்ற மாதருக்குக் கங்காநதி யெதிர்ப்பட்டதுபோலக் கண்ணுக்கெதிரே தோன்றிய அல்லமதேவனது திருவடிகளைத் தங்கள் மனத்துன்பம் நீங்கிச் சரீரமும் குளிர்ச்சி யடையும்படி அடைந்தார்கள். அடைந்தவர்கள் அல்லமனை நோக்கி, "மிகுந்த சேற்றில் அழுந்தியெழுந்திருப்பவன் பிடித்தகையை நெகிழ்த்துவிட்டு நீங்குவோன்போல, வாசனையுள்ள புஷ்பபாணம் பட்டு மனம் வருந்துகின்ற மாயையைச் சிறிதும் அருளின்றி நீங்கினாய்; அப்படி நீங்குதற்குக் காரணம் யாதோ?" என்றார்கள். "பற்றிவிட்டது நீங்களே; நீங்கள் விட்டாலும் நான் உங்களை இதுவரையில் விட்டிலேன்; இந்தச் செய்தியை இவ்வுலக முழுதும் சொல்லும்; அயலாரிடத்தில் குற்றத்தை நாடுவோரல்லது தம்மிடத்தில் குற்றத்தை நாடுவோர் இவ்வுலகத்தில் உளரோ?" என்று அல்லமன் சொல்லுதலும், அந்த மாதர்கள் பிரபுதேவனை நோக்கி, "எங்கள் ராஜகுமாரியாகிய மாயைக்குக் காமவியாதி யுண்டாவதற்கு முன்பு கோபிக்காம லிருந்து அதுவுண்டான பிறகு இன்றைக்குக் கோபித்தாய்; என்ன காரியஞ்செய்தாய்! நீ செய்தது ஏறவிட்டு ஏணியை வாங்குதலை நிகர்த்திருந்தது" என்று சொன்னார்கள். அப்பொழுது மாயையும் அவனை நோக்கி, "உன் திருமேனிபோல மனமும் நன்றாயிருக்குமென்று நம்பினேன்; நீ யிப்படிப்பட்ட வஞ்சகனென்று அறிந்திலேன்" என்று வன்சொற் சொல்லி நின்றாள். அது

கேட்ட அல்லமன், "தடங்கண்களையும் மெல்லடியையு முடைய மாயையே! வஞ்சகமாகிய நாடகம் நடிப்பது மாயை யின் செய்கையோ அல்லமன் செய்கையோ என்று தேவ ரையும் முனிவரையும் நீ கேட்டறிவாயாக" என்று சொல்ல, அதற்கு மாயையானவள், "அல்லமன் எனது நடிப்பைத் தேவராலும் முனிவராலும் சொல்விக்குந் தன்மை, ஒரு திருடனானவன் தன் மனைவியைத் திருடப்பட்ட பொரு ளைக் கண்டறியும்படியாகிய நல்ல குறிகளைச் சொல்விப்ப தற் கொப்பாகும்" என்று புன்சிரிப்புக்கொண்டு சொல்லு வாள்: "மாயை எளியவளென்று இகழத்தகுந்த சொற் களைக் கற்ற அல்லமதேவனே! திருமாலானவன் எந்த நெஞ்சினால் என்னை நீங்க நினைப்பான்? பிரமதேவனானவன் தான் மாயை யில்லாதவனென்று எந்த வாயினாற் சொல் வான்? இந்திரன் எந்தச் சரீரத்தினால் என்னை விடுவான்? எனக்குப் பயந்து மிருகங்கள் சஞ்சரிக்கிற காட்டில் வாழ் கிற முனிவர்கள் என்னை வெல்லவல்லரோ? அவர்களே என்னை வெல்ல மாட்டார்களாயின், வேறு யார் என்னை வெல்லுவார்கள், சொல்" என்று கூற, அல்லமர் சொல்லு வார்: "வேல்போலுங் கண்களையுடைய மாயையே! எனது ஆணையைக் கடப்பவரில்லை யென்று வெற்றி கூறுவையா யின், அவர்களிருக்கட்டும்; நிலைபெற்று நிறைந்த உயிரின் முயற்சியினால் சொல்லிய சொல்லிலல்லாமல், நிலைபெற்ற வேதாகமங்களினிடத்து ஆராய்ந்தறிவாயாக" என்று சொன்னான். அதுகேட்ட மாயையானவள், பரை, பைசந்தி, மத்திமை, வைகரி என்கிற வாக்கு நான்கினையும் நீ பார்த் தாலும் 'நான் அவற்றுக்கும் மூலகாரணமாவேன். நான் சொன்ன இந்தச் சொல்லை எல்லா நூல்களுஞ் சொல்லும்" என்று செருக்கோடு சொன்னாள். அதற்கு அல்லமர், "அறிவில்லாதவளே! இவ் வுலகங்களை யெல்லாம் ஆட்டுவே னென்று சொன்னாய்; உன்னை யாட்டுவோர் யாரென்று அறிந்திலை; மூடர்மாத்திரம் உன் தன்மையைக் கேட்டு மகிழ்வார்கள்; ஞானிகள் என்னை யறிந்து புகழ்வார்கள்"

என்றார். 'பசியாதிருக்க மருந்து கொடுப்பேன், என் பசிக்கு அன்னமிடுங்கள்' என்பவர்போல, மாயையானவள், "யாரை யாரிருந் தாட்டுவரோ அதை யறியேம்; மன்மதன் செய்யுந் துன்பத்தை நீக்கின பிறகு என் தர்க்கவாதத்தைப் பார்" என்று சொன்னாள்.

அதுகேட்ட அல்லமர் "ஓ மாயையே! நீ காமிய பூசை செய்தாயாதலால் நானும் காமிபோல் நடித்தேன். நீ தீய நெஞ்சினால் சபதத்தை நினைத்தாய்; ஆதலால், உன்னைத் தீண்டமாட்டேன்; நீ உன் தோழியருடனே போகலாம்" என்றார். அதுகேட்ட மாயையானவள் "பூலோகத்தில் ராஜ குமாரியானவள் ஒரு மத்தளிகனை விரும்பிப் பயனடையா மல் திரும்பினாள்" என்னும் பழியை நிலைநிறுத்திக் கைலா சத்துக்குப்போய்த் தேவர்கள் கைகொட்டிச் சிரிக்கச் சப தத்தை நிறைவேற்றாமல் உமாதேவியின் முகத்தில் எவ் வாறு விழிப்பேனென்று மிகவுந் துன்பப்பட, அதைக் கண்ட அல்லமர் மாயையை நோக்கி, "முன்னே கசப்பான பொருளை விதைத்துப் பிறகு அது கரும்பாக வேண்டு மென்று முயன்று பயனடையாதவர்போல, அன்பர் பக்தியி னால் பெறுதற் கெளியனாகிய என்னை ஒரு சபதஞ் செய்து வந்து வலாத்காரமாய்ப் பெறவிரும்பி நின்று மனோதுக்க மடைந்தாய், இது உனக்குத் தகுமா" என்றார். அப்போது விமலையானவள் மாயையின் துன்பத்தை நோக்கி, அல்லம ரை வணங்கி, "ஐயரே! மாயையானவள் கரையைச் சேரா வந்த மரக்கலம் கவிழப்பெற்ற வாணிகன்போல மனங் கலங்கி நிற்கிறாள்; ஆதலால், இரத குளிகையானது தன் னைச் சேர்ந்த செம்பினது குணத்தை நோக்காத தன்மை போல இவளது குணத்தை நோக்காமல் இவளைக் கிருபை செய்து ஆதரிக்கவேண்டும்" என்று பயந்து சொன்னாள். அப்போது அல்லமர், "ஓ விமலையே! பயனற்ற வோடா னது ரசகுளிகையால் பொன்னாகுமானால் மாயை என்னால் சுகமடைவாள்" என்றார். அதைக்கேட்ட மாயையானவள்

அனிந்த பச்சைப்புண்ணில் காய்ந்து சிவந்த வேல்பட்டது போல வருந்திச் சொல்லுகிறாள்: "சாக்கிரமே ஒரு கனவாக மயங்க நீ யென்னைப் புணர்ந்ததனால் வெற்றி யென்னதே" என்று சொல்ல, அல்லமர் "ஓ பேதாய்! கனவிலுண்ணப்பட்ட வுணவினாற் பசி தீருமோ? நீ கண்ட கனவைச் சாக்கிரமென்று மயங்கினாய்; அதை யறியாது நீ செருக்கிப் பேசுதல் தகாது" என்றார். அதைக் கேட்ட மாயையானவள், "மன்மதனை நிகர்த்த கட்டழகனே! நீ எவ்வளவு வன்சொற்களால் என் வாயை யடக்கி என்னைத் தள்ளினாலும் நான் போகேன். உன்னைக் கட்டித் தழுவிக் கொண்டு கைலாசத்துக்குப் போய் என் சபதத்தை நிறைவேற்றுவேன்" என்றாள். இவள் இப்படிச் சொன்னது ஆகாயத்தைத் திரட்டி விழுங்குவேனென்று ஒருவன் சொல்லுவதுபோ லிருந்தது. இப்படி யிவள் சொல்லுதலும், அல்லமர், "ஓ மாயையே! நீ யென்னைப் பற்ற வல்லையாயின் பற்று" என்று மறைந்தார் கண்ணுக்குப் புலப்படாமையால் மாயை மதிகலங்கி நிற்க, அவளுடைய தோழியரும் "நமது தலைவியாகிய மாயையே இழந்தோம்" என்று துக்கித்தார்கள். சந்திரகிரணம் வாயில் வந்து நுழைந்தாலும் சகோரபக்ஷியன்றி வேறொன்றால் அது உண்ணப்படுமோ? அதுபோல, அல்லமர் வந்து மாயையின் கையிலகப்பட்டாலும் அன்பராலன்றி அவளால் பற்றப்படுவரோ? பற்றப்படவில்லை. இப்படி மாயையை அல்லமர் வாதித்து வென்று தன்னியல்பில் நின்றதைக் கண்ட முனிவரெல்லாரும் அல்லமரை வணங்கித் தமது தவத்தைச் செய்யத் தொடங்கினார்கள்.

மாயை கோலாகலகதி முற்றிற்று.

எட்டாவது

வசவண்ணர் வந்தகதி

நிலைதிரியாத அல்லமரைக் காணும்பொருட்டு, உமா தேவியின் சத்துவகலையும் வசவேசனும் சிவகணங்களும் கைலாசத்திலிருந்து தென்றிசையில்வந்த விதத்தைச் சொல்லுவோம்.

உயிர்கள் பசியால் வருந்துதற்குரிய சிறுவிலைக் காலத்தில் கடன் வாங்கின பொருளை யிழந்த தரித்திரர்போல, ஞான வடிவினனாகிய அல்லமன் மறைந்துபோதலும் மாயையானவள் மூச்சடங்கினின்று விசனப்படுகிறாள். இவளது நிலையைச் சிலர் போய் இவளுடைய தாய்தந்தையர்க்குச் சொல்ல, அவர்கள் வெட்கமும் துக்கமும் அதிகரித்த பித்தர்போல மாயையின் பின்னே தொடர்ந்து போனார்கள். "இந்த வுலகத்தில் தாய்தந்தையர் தலைசாய்த்தற்குரிய பழியை விளைக்கிற மக்களைப் பெறுதலினும் மக்களைப் பெறாத மலடராயிருத்தலும் வலிய நோயை யடைந்திருத்தலும் நன்" றென்று மனந் தளர்ந்து அரசனுடினன். "மிகுந்த பசிக்குத் தசையைத் தின்னவாய் பதைக்கின்ற வேடருடைய வலையில் மான் கன்று அகப்பட்டுக்கொள்ளப் பார்த்த தாய்மான் அங்கே போய்ப் பதைப்பதை என் மகள் காண்பளோ? வேடர்கள் குஞ்சுகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுபோய்விட அவற்றின் தாய்தந்தையராகிய பறவைகள் கூண்டில் வந்து பார்த்துக் குஞ்சுகளில்லாமையால் ஏங்கித் தமது மூக்கினலகிற் பொருந்திய இரை சோர்ந்துவிழ மிகுந்த துக்கத்தால் வருந்திச் சுழல்வதை என் மகள் காண்பளோ? மதயானைகள் தூறுகளை வழியாக மிதித்திட்டு மரங்களை முறித்து நடக்கக் கண்டு என் மகள் அஞ்சி யோடுவளோ? என் மகள் கூர்மையாகிய பருக்கைக் கற்களின்மேல் தன்

மென்மையாகிய பாதங்களை வைத்துத் துன்பம் பொறுக்க மாட்டாமல் துடிப்பளோ? பாலை நிலத்தில் மேனி துவண்டு தாகத்துக்குத் தண்ணீர் கேட்பளோ?" என்று எண்ணித் தாயானவள் துன்பமடைந்து சென்றாள். திருமகளை யொத்த மாயையென்கிற மகள்பொருட்டு அரசர்க்கரச ஞகிய மமகாரன் படுகிற துன்பத்தைக் காணுதற் கேது வாகிய ஊழொன்றிருந்த தென்றெண்ணி மயங்கி அந்த வனவசைமாநகர ஜநங்கள் அவ்வரசன் பின் தொடர்ந்து சென்றார்கள். பிறகு மமகாரன் தன் மகளாகிய மாயை யை நோக்கி, "நான் அருந்தவஞ் செய்து உன்னைப் பெற்ற தற்கு நீ நல்ல உதவி செய்தாய்" என்றான். தாயாகிய மோகினி, என் மகளாகிய "மாயையே! நீ என்னை நீங்கி இழிந்தவனுகிய ஒரு மத்தளிகனை விரும்பி ராஜபுத்திரி யென்னும் மேன்மையை யிழந்து யாது காரணத்தாலோ கொடிய காட்டுக்கு வந்தாய்" என்று புலம்பியழுதாள்.

அப்பொழுது விமலையானவள் அரசனை நோக்கி, "அல்லமன் மனிதனல்லன்; மாயை உங்கள் மகளுமல் லள்; ஆதலால், உன் மனைவியும் நீயும் இவ்விடம் விட்டு நீங்கிப்போங்கள்" என்றாள். அன்றியும், "தாம் முற்பிறப் பிற் செய்த வினைகளின் பயனை யநுபவிக்க விரும்புவோர் தமக்கு விதிக்கப்பட்ட ஓரிடத்தையடைய அந்தச் சம்பந்த மாத்திரத்தாலே இவர் எனக்கு இன்ன முறையினரென்று ஓர் அபிமாநத்தை யடைந்து அறிவில்லாதவர் வருந்துவார். உனக்குப் புத்திரராகியும் தந்தைதாயராகியும் உன்னைச் சேராத வுயிர்கள் இவ்வுலகத்திலில்லை. ஆதலால், இன்னார் எனக்கு உறவினர், இன்னார் எனக்கு அயலார் என்று நீ நினையாதே" என்றிவ்வாறு விமலை சொல்லும்போது, மாயையானவள் தன் பிதாவாகிய மமகாரனுக்கு முன்னே தான் கைலாயத்திலிருந்து வந்த செய்தியைச் சொல்லி, "உமாதேவியா லனுப்பப்பட்ட நான் என் சபதத்தை முடித்திலேன்; ஆதலால், இந்த விமலையோடு கைலாயத்துக்

குப் போவேன்; நீங்கள் என்னை நினைந்து வருந்தாதிருங்கள்'' என்று சொல்லி, விரைந்தெழுந்து விமலையோடு புறப்பட்டு அந்தக் காட்டில் தன்பொருட்டு வந்திருந்த பரிஜனங்கள் அழுமோசை தன் பின்னே தொடர்ந்து செல்ல, சிவபுண்ணிய மில்லாதவர்கள் அடைதற்கரிய கைலாயமலையை யடைந்தாள். மமகாரராஜன் தன் மகளைக் காணாமையால் வாய்திறந்து அழாமலும் சரீரத்திற் புழுதிபடப் புரளாமலும் எழுதின சித்திரம்போல அசைவற்று நின்றான்.

தாயாகிய மோகினியானவள் நிலத்தில் விழுவாள்; மீளவும் எழுவாள்; மெலிந்து நைந்து அழுவாள்; சரீரம் நடுங்கி நிலத்தைக் கையால் உழுவாள்; வாயால் மூச்சு விடுவாள்; 'இறந்துபோவேன்' என்று எழுந்திருப்பாள்; கை நெரித்து ஏங்குவாள்; ''பாடுகின்ற மாதரும், பந்தும் அம்மனையுங் கொண்டு விளையாடுகின்ற மாதரும், ஆகிய அரிவைப்பருவப் பெண்களோடு என் மகள் வாசஞ்செய்திருந்த கன்னியா மாடத்தை நான் பார்த்து உயிர் வாழ்வேனோ? சோலைகளும், தடாகங்களும் பளிங்கு மாடங்களும் பாழாகும்படி, என் மகள் பெரிய காட்டில் எங்களை விட்டு வந்து ஒளிக்கும் வகையை ஒரு சிறிதும் அறிந்திலேன். மகளே! நீ யென்னைப் பிரிந்திருக்கவில்லையாயினும் நான் உன்னைவிட்டுப் பிரிந்து உயிர் வாழேன்'' என்று வருந்துவாள். அப்போது மமகாரனுடைய வமிசத்திற்குப் பரம்பரையாய் வருகிற ஆசாரியன் வந்து, உங்கள் புதல்வியின் பெருமையை உங்களுக்கு ஆதியில் நான சொல்லவில்லையா; சொல்லியிருந்தும் நீங்கள் துக்கசாகரத்தில் மூழ்குதல் தகாது'' என்று சொல்லுவான். ''அருந்தவஞ் செய்யு முனிவரும் அடைதற்கரிய கைலாயத்துக்கு மாயைபோன செய்தியைப் பிரத்தியக்ஷமாகக் கண்டும், மனச்சந்தேகமற வுணர்ந்தும் நீங்கள் வருந்துதல் அறியாமையின் காரியமேயாம். உமாதேவியினது தமோகுணாமிசம் உங்களுக்குப் புதல்வியாகும்படி நீங்கள் தலைமை யடைந்தது போலும்

இனி இவ்வுலகத்தில் உங்களுக்கு நிகரானவர் ஒருவருமில்லை'' என்று குருவானவர் சொல்ல, மமகாராஜன் தன் மனைவியாகிய மோகினியோடு துன்பம் நீங்கிச் சென்று தனது நகரத்தில் புகுந்து பெரிய மதில்சூழ்ந்த அரண்மனையை யடைந்தான். மாயையும் விமலையோடு சென்று கைலாயத்தை யடைந்து, சிவபிரானையும் உமாதேவியையும் வணங்கி வாழ்த்தி அருகே நின்றாள். அப்போது உமாதேவி மாயையின் முகவாட்டத்தினால் அவளது மனமெலிவை யறிந்தும், "நீ போன காரியம் என்னாயிற்று?'' என்று வாயினாற் கேட்டலும், மாயையானவள் தான் போனநாள் முதலாக நடந்த செய்தியையெல்லாம் குறிப்பாகத் தெரிவித்தாள். அதை உமாதேவியானவள் கேட்டறிந்து நாணி முகங்கவிழ, அப்பொழுது சிவபெருமான் உமாதேவியின் செருக்கழியும்படி புன்னகை செய்து, திருமால் முதலிய தேவர்கள் நெருங்கின சபையில் வீற்றிருந்தான். பிறகு உமாதேவியை நோக்கி, "அன்று நான் உனக்குச் சொன்ன அல்லமன் அரியனோ, எளியனோ, நீ சொல்'' என்று கேட்க, உமாதேவியானவள் சந்திரனைக் கண்ட தாமரைமலர்போல முகம் வாடினாள். பிறகு சிவபிரானை நோக்கி, "தன் வல்லமையைச் சொல்லிச் சபதஞ் செய்து போய் அவமானமடைந்து வந்த மாயையின் சொல்லால் வருந்துகின்ற என்னை நீ நகைத்துப் பரிகசித்தல், மூக்கில்லாதவளுடைய முகத்துக்கெதிரே கண்ணாடியைக் காட்டுதல்போலிருந்தது'' என்று மனவருத்தத்தோடு சொன்னாள். அப்போது பரமசிவன், உமாதேவி நாணினால் வருந்தினாளென்று அறிந்து திருவுளமிரங்கி, "அந்த மாயையானவள் சபதத்தால் அல்லமனுக்கெதிரே போன நிலையே விசேஷமாகும். அது எப்படி யென்றால், ஆடுகளைக் கொலைசெய்வோனொருவன், சிங்கத்துக்கெதிரே அதனை வெல்வேனென்று சொல்லுதலே பேராற்றலன்றோ? உமையவளே! அல்லமன் பெருமை யெல்லாம் யாவரும் அறியும்படி நீ நன்றாகத் தெரிவித்தனையென்று சொல்பவரல்லாமல் உன்னை நிந்திப்ப

வர் ஒருவருமில்லை" என்று சொல்லக்கேட்ட உமாதேவி யானவள் சொல்லுகின்றாள்: "அறிவிலியாகிய நான் செய்த தீமையைப் பொறுத்து, அருள் புரிந்து, உண்மையாகிய ஞானத்தை யருளிச்செய்கின்ற ஆசிரியனாகிய அல்லமனைக் கண்டறியத்தகுந்த நெறியை அடியேனுக்கு அருள் செய்ய வேண்டும்" என்று வணங்கிச் சொல்ல, பரமசிவன் சொல்லுவானாயினன்: "பெண்ணே! மயக்கமிகுந்த குணத்தை யுடைய மாயையை அனுப்பினதனால் அல்லமனை நீ யறிந்திலை; இனிச் சத்துவகுணமிசமாகிய மாதினை நீ யனுப்புவையாயின், உள்ளங்கை நெல்லிக்கனிபோல அந்த அல்லமனைக் காண்பாய்" என்றான். தரித்திரம் தன்னை வருத்துகையால் 'இறக்கக்கடவேன்' என்று செல்லுகின்ற ஓரிடத்தில் செம்பொன்னைக் குடத்தோடிருக்கக் கண்ட தரித்திரன் போல, உமையவள் நாணத்தை விட்டு மகிழ்ந்து பரமசிவனை வணங்கி, சத்துவகுண மடந்தையை "அல்லமனைக் கண்டறியும்பொருட்டுப் பூமியினிடத்தில் போ" என்று சொல்லினள். அப்பொழுது அருகேநின்ற நந்திதேவனானவன், "தாயே! பக்தியெனப்படுகிற அஞ்சனத்தைக்கொண்டு அல்லமதேவன் என்னும் நிக்ஷேபத்தை எளிதிற் காணலாம்" என்று சொன்னான். அதுகேட்ட பரமசிவன் நந்திதேவனை நோக்கி, "அழிவற்ற நிக்ஷேபத்தை அஞ்சநத்தைக்கொண்டறிகின்ற நேத்திரத்தை யுடையவன்போல, ஞானாசாரியனை முன்கண்டு மயக்கம் நீங்கிய சரணர் காணும்படி தெரிவிப்போன் இவன்" என்று நந்திதேவனைப் புகழ்ந்து, "நான் எனது மாயாசத்தியாற் கட்டிய பந்தத்தைத் தனது பக்தியால் அவிழ்க்க வல்லவன் இந்த நந்திதேவனே யாவன். இந்தக் காரணத்தால் ஒருவனுக்கு விலங்கு பூட்டுகிற அரசனோ, அதை விடுவிக்கிறவனோ, இவ்விருவருள்ளே அருளுடையோன் யார்? சொல்லுக" என்று மேலுஞ் சொல்லுவர்ன்: "அல்லமன் என்னும் ஞானயானையை அகப்படுத்தவல்ல அறிவுடைய பார்வை மிருகம் நீயே யாதலால் பூமியிற் சென்று எண்ணிறந்த அடியார்களுடைய மனத்

தில் இன்பத்தை யருள்செய்க'' என்று பரமசிவன் சொன்ஞன். இறைவன் இப்படிச் சொல்லக் கேட்டிருந்த சிவ கணங்களுள்ளே சிலர் நகைத்து, ''அந்த அல்லமனைக் காண இந்த நந்தி வல்லவனே?'' என்று கேட்க, சிவபிரான் சொல்லுகிறுர்: ''நந்தியின் பெருமையை நானறிவேன்; என் பெருமையை அவனறிவான்; எமது தன்மையை நீங்கள் அறியீர்'' என்று சொல்ல, இகழ்ந்தோ ரெல்லாரும் துன்பமடைந்து நிற்க, மீளவும் பரமசிவன் சொல்லுகிறுர்: ''குற்றமற்ற நந்திதேவனது பக்தியை நாம் சொல்லும் வார்த்தையாலே நீங்க ளறியமாட்டீர்கள். நீங்கள் பூமியிற் சென்று பிறந்து உங்கள் கண்களாரக் கண்டு, பின்புவந்து சொல்லுங்கள்'' என்று சொல்லி, நந்திதேவனேடு சிவ கணங்களையும் அனுப்பினுர். அப்படி அனுப்பப்பட்ட சிவகணங்கள் எழுநூற்றெழுபதுபேரும் பூலோகத்தில் தத்தமக்கு விருப்பமான தலங்களில் நரவடிவாய் வந்து அவதரித்தார்கள். அப்பொழுது இந்திரன் முதலான தேவர்க ளெல்லாரும் ''நந்தியென்கிற ஞானசூரியன் பூலோகத்தில் உதித்தால், சமணரென்கிற வல்லிருள் நீங்கியோடும்; பரமசிவனது புகழென்கிற வெண்டாமரை மலர் மலரும்'' என்று மனமகிழ்ந்தார்கள்.

வசவண்ணர் வந்தகதி முற்றிற்று.

ஒன்பதாவது

அக்கமாதேவி உற்பத்திகதி

ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமானது இடப்பாகத்தி லமர்ந்திருக்கிற உமாதேவியின் சத்துவகலையும், நந்திதேவனும், கணநாதரும் பூமியில் வந்து அவதரித்த விதத்தைச் சொல்லுவோம். நீர்வளம் நிலவள முதலிய பல வளங்களும் நிறைந்த உடுதடை யென்று சொல்லப்படுகிற ஒரு நகரத்தில், நற்குணங்க ளெல்லாவற்றையு முடையவ

னும், திக்குணங்க ளெல்லாவற்றையும் ஒழித்தவனும், தன் பெயராலேயே தனது தன்மையை யாவருமறியத் தருந்தவ னும் ஆகிய நின்மலன் என்னும் பெயருள்ளவன் ஒருவ னிருந்தான். அவன் தன் மனையாளாகிய சுமதி யென்பவ ளோடு கூடி இல்லற நெறியில் வழுவா தொழுகிவரும் நாளில், அந்தத் தம்பதிகளுக்கு உமையவளது சத்துவ குணமிசமாகிய பெண்ணொருத்தி அவதரித்தாள். அந்தப் பெண்ணினது அழகு முதலானவற்றைக் கண்ட தாய் தந்தையர், உமையவளைப் பெற்று மகிழ்ந்த மலையரையன் போல மிகு களிப்படைந் திருந்தார்கள். பிறகு நின்மல னவன் அந்தக் குழந்தைக்கு வேதநெறிக் கிணங்கவும், தன் மதத்துக் கிணங்கவும் விபூதி தரித்து, ஸ்ரீ பஞ்சாக்ஷர த்தை யுபதேசித்து, இஷ்டலிங்கக் குறியையும் மார்பி லணிந்து, அவளுக்கு மாதேவி யென்று பெயரிட்டான். அந்தப் புதல்வி நாளுக்குநாள் வளர்ந்து வருவதுபோலவே அவளோடு நற்குண நற்செய்கைகள் யாவும் கூடி வளர்ந்து வந்தன. இந்தப் புதல்வியின் குணாதிசயங்களை யெல்லாம், மாயை பிறந்தநாளில் தவத்தினரை யெல்லாம் தவங்கலைத்த மன்மதன் கண்டு, தன் கையிலுள்ள கருப்புவில்லைக் கை சோரவிட்டு மயங்கினான். கொடிய தீவினைகள் யாவும் நசித்தன. நல்ல. தருமமார்க்கங்க ளெல்லாம் தலையெடுத் தன. சிவாகமங்க ளெல்லாம் எவ்விடத்தும் முழங்கின. மாதேவி யிப்படியிருக்க, வந்த சிவகணங்கள் தாங்கள் விரும்பின இடங்களில் நற்றவ முயன்று செய்த புண்ணிய வான்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து சித்தராமையர் முதலிய பெயர்களைக் கொண்டு வாழ்ந்திருந்தார்கள். இவர் கள் செய்தி இப்படியிருக்க, நந்திதேவர் சமணமுதலிய சமயங்கள் தலைகாட்டா தொழியும்படி யவதரித்த செய்தி யைச் சொல்லுவோம்.

வேறு சமயங்களிற் சிறிதும் புத்தியைச் செலுத்தாது சைவசமய மொன்றையே மதித்துச் சிவாகம நெறியி

லொழுகுகின்ற மறையோர்களுக்கு உறைவிடமா யிருக்கிற விங்குளாபுரி யென்றொரு பட்டணமுண்டு. இந்தப் பட்டணத்தில், மறையோர்களுக் கெல்லாம் தலைமை பூண்டுள்ள மாதரசன் என்னும் பெயரை யுடையோன் ஒருவனிருந்தான். இவன் தனது நினைவு முழுதும் சிவபெருமானது திருவடியிலும், சொற்கள் யாவும் அவனது தோத்திரத்திலும், தொழில் முழுதும் அவனது பூசையிலும் வைத்திருப்பவன். இவனது மனையாள் மாதாம்பிகை யென்னும் பெயருடையவள். அருந்ததி முதலானோர் தமது கற்பு நிலைக் கிடையூறு நேரிடாதிருக்கும்பொருட்டு, நாள்தோறும் இவளை நினைத்துக் கைகுவித்து வணங்கிப் பிறகு பாயிற் படுப்பார்கள். ஏனைய மனைமாட்சி முதலிய நற்குண நற்செய்கைகளிலும் இவளுக்கு நிகராவார் மூன்றுலகத்திலு மில்லை. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இவள் வயிற்றில் நந்திதேவன் வந்து அவதரித்தான். அபரசிவன் எனப்படுகிற நந்திதேவன் இவள் வயிற்றில் வந்து அவதரித்து, "தக்கார் தகவில ரென்ப தவரவர்,எச்சத்தாற் காணப் படும்" என்ற பெரியோர் வாக்கியத்தை நிலைக்கச்செய்தது. இப்படி ஸ்ரீ நந்திதேவர் அவதரித்த நாளில் தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்; தேவதுந்துபி முழங்கின; கண்டு முட்டு என்று சொல்லுகிற சமணருள்ளத்தில் சிவபக்தி யுண்டாயிற்று; கொலை, களவு, அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ்சொல், பொய், பயனில்சொல் முதலிய தீமைகள் யாவும் இவ்வுலகி லெவ்விடத்து மில்லா தொழிந்துபோயின. இந்த நந்திதேவன் தாய் வயிற்றிலிருந்து பிறப்பதற்கு முன்பே, கூடலசங்கமம் என்னுந் தலத்திலுள்ள பரமசிவன் குருமூர்த்தமா யெழுந்தருளி நெற்றியில் விபூதி தரித்து மார்பில் இஷ்டலிங்கத்தையும் தரித்தான். தரித்த பிறகு தன் வடிவங் காணப்படாமல் தாயினெதிரே நின்று இடபத்தின் பேரைத் திரித்து வசவதேவன் என்று பேரிட்டுப் போயினன். சிவனைப் பாவனை செய்யென்று ஒருவரிடத்தில் குருவாய் வந்து உபதேசிப்பவரது உபதேசங்

கெடத் தானே அருளோடு கூடிய குருமூர்த்தமாக வந்து அநுக்கிரகித்த விஷந்தங்கிய சூலபாணியாகிய பரமசிவன் இவ்வாறு தரித்துப் போனபிறகு அவதரித்த மெய்ஞ்ஞான வடிவமாகிய குழந்தையின் நெற்றியில் விபூதியையும், கழுத்தில் இஷ்டலிங்கத்தையுங் கண்டு, அங்கே கூடி நின்றவரெல்லாரும் அதிசயித்து, 'பரமசிவன் குருமூர்த்தமாய் நமது கண்ணுக்குத் தோன்றாமல் மறைவாய் வந்து இவற்றைச்செய்து குழந்தைக்குப் பேரிட்டுப்போனான்' என்றறிந்தார்கள். அவர்கள் அவ்வாறு அறிதற்குக் காரணமா யிருந்ததும் அவனது திருவருளேயாம். நந்திதேவர் தமது பழமையாகிய இடபவடிவந் திரிந்துவந்திருந்தவ ரெனினும், கண்டோர் யாவரும் இவர் கைலாசத்திலுள்ள நந்திதேவரே யென்றறிந்து மனமகிழ்ந்தார்கள். பெற்ற தாய் தந்தையருக் குண்டான சந்தோஷத்துக்கு ஓர் எல்லையில்லை. மாதரசன் தான் செய்யவேண்டிய கடன்க ளெல்லாவற்றையுஞ் செய்தான். அதற்குமேல் குருவானவர் வருதலும் குழந்தையானது அவர் முன்னிலையில் தான் முன்னமே யறிந்திருந்த கலைகளையெல்லாம் பூர்ணமாயறிந்துகொண்டது. சிவபெருமானை யிகழ்ந்து நெறியல்லா நெறியிற் செல்லுகிற பரமதயானைகளை யடக்குதற் பொருட்டு அவைகட்கு அங்குசம்போலவும், சிவனடியா ரென்கிற பசுக்களுக்குக் கன்றுபோலவும் இந்த வசவதேவர் ஒழுகும் நாளில், கலியாணபுரம் என்னும் பட்டணத்தில் விச்சலன் என்னும் அரசன் சமணர் கூட்டம் தன்னைச் சூழ வாழ்ந்துகொண்டிருந்தான். அப்படி யிருக்குநாளில், வசவதேவர் கைலாசத்திலிருந்து தன்னுடன் வந்த நாகாம்பையோடு விச்சலராஜனது கலியாணபுரத்திற் செல்ல, அந்த விச்சலராஜன் இவர் வசவேசரென்றும், கைலாசத்திலிருந்து வந்து இங்கே அவதரித்தவரென்றும் பலர் சொல்லக் கேட்டு, இவரைத் தனக்கு மந்திரியாக அமைத்துக்கொண்டான். இப்படி யிவரை மந்திரியாக அமைத்துக் கொண்டது நீறுபூத்த நெருப்பை ஒருவனெடுத்துத் தன்

மடியில் வைத்துக்கொண்டதுபோன் றிருந்தது. இவ்வாறு விச்சலராஜன் வசவதேவன் என்னும் மந்திரியோடு கொலுவீற்றிருக்குஞ் சமயத்தில், தேவராஜனுகிய இந்திரன் சபையில் நடிக்கின்ற அரம்பையின் காதினின்று அழகியவோர் பொன்னேலை கழன்று விழுந்ததுபோல ஓலைச்சுருளொன்று ஆகாயத்தினின்றும் அரசனது சபையில் விழுந்தது. அங்கிருந்தவர்கள் அதிசயித்து அச்சுருளை யெடுத்துவந்து அரசன் கையிற் கொடுக்க, அவன் அதை விரித்துப் பார்த்து, அதிலுள்ள எழுத்தானது தன் தலையெழுத்துப் போல்வதென்று தான் ஒன்றுந் தோன்றாதவனாய் மனங்கலங்கி, சமணர்களுக்கு யமன்போன்ற வசவதேவர் கையிற் கொடுத்தான். அவர் அதைப் பார்த்து, ராஜாதிராஜனே! உன் சிங்காதனத்தின் கீழே ஒரு சுவர்ண நிக்ஷேபமிருப்பதாக இதில் எழுதப்பட் டிருக்கின்றது; அதனை யிப்பொழுதே காட்டுகின்றேன்'' என்று சொல்லிச் சிங்காசநத்தின் கீழே தோண்டுவித்துப் பொற்புதையலைக் காட்ட, அரசன் அந்தப் புதையலை யெடுத்துக்கொண்டு, "இந்த மந்திரி வந்தவுடனே இப்படிப்பட்ட பெரும் பயனடைந்தோமே'' என்று மிகவும் அதிசயித்தான். மேலும், இந்த வசவேசர் நமக்குக் கிடைத்தது நாம் செய்த புண்ணியத்தின் பயனே யாகும்; ஸ்ரீ கைலாசத்திற்கு இரண்டாவது கடவுள் இவரேயென்று மனமகிழ்ந்தான். இதைக் கண்டோர் யாவரும் அதிசயித்தார்கள். அரசன், வசவேசருக்கு மந்திரி தனத்தைக் கொடுத்து, "தாயானவள் குழந்தையைக் காப்பாற்றுதல்போல நீ யென்னைக் காப்பாற்ற 'வேண்டும்'' என்று இன்சொற் சொல்லி அவரை மனமகிழ்வித்தான். அன்றியும், அவரை மிகுதியாக நட்புக்கொண்டிருந்தான். சிலநாள் சென்ற பிறகு வசவேசருக்குச் சகல ஆடம்பரங்களோடு கலியாண முடித்துவைத்தான். அன்று தொடங்கியே அந்தப் பட்டணத்துக்குக் கலியாணபுரமென்னும் பெயருண்டாயிற்று. இந்தப்பிரகாரமாக கல்யாணபுரத்திலிருக்க, நாகாம்பை யென்னும் பெய

ருள்ள இவரது தமக்கை இவரது பிரசாதத்தினால் ஜீவன் முத்தியைத் தருகின்ற வீரசைவ நன்னெறியை வளர்க்கின்ற ஒரு புதல்வனைப் பெற்றாள். அந்த மைந்தனுக்கு வசவன் என்னும் பெயரிட்டாள். அந்த மைந்தன், விளங்குகின்ற திருமுகங்களாறும் அழிவற்ற தமது தலங்களாறென்று அறிவிக்கும்பொருட்டு இந்தவுலகில் அவதரித்த முருகக்கடவுளென்று யாவரும் நினைக்கும்படி வளர்ந்தான். வீரமாகேசர் என்னும் மெல்லிய பயிரை வளர்க்கும்பொருட்டு வந்த மழைபோலச் சென்னவசவதேசிகன் இருக்குங் காலத்தில் அவனுக்கு ஓர் புதல்வன் அவதரிக்க, அவனுக்குச் சங்கமேசதேசிகன் என்னும் பெயரைத் தரித்தனன். வாக்கு முதலிய திரிகரணங்களாலும் சிவனடியார் வேண்டிய பொருள்களை ஓயாது தவித்தாய்போலக் காப்பாற்றி அன்னிய மதத்தாருடைய வழிகளெல்லாம் மாறும்படியாகவும், சிறந்த புகழையுடைய சைவமென்கின்ற நிந்தையில்லாத வழியில் நடக்கவும் பண்ணினன். அன்றியும், சிவனடியாராகிய கன்றுகளுக்குத் தாய்ப்பசுப்போன்ற வசவனது கீர்த்தியானது விஸ்தாரமான நிலவுலக முழுதும் மூடிக்கொள்ளும்படி கைலாயத்தை நீங்கி நிலவுலகத்தில் வந்திருந்த தவத்தினராகிய சிவகணங்களெல்லாம் அறிந்து கலியாணத்துக்குப் போதல்போலக் கலியாணபுரத்துக்குச் சென்றார்கள். பலரோடு வந்தாலும், தனியே வந்தாலும், மிகுந்த சிறப்போடு வந்தாலும், அருவருக்கத் தகுந்த சரீரத்தோடு வந்தாலும், சிவனடியார் வரக்கண்டால் எதிரே சென்று வணங்கி நந்திதேவர் அவர்களை உபசரிப்பார். அன்றியும், அவர்களுடைய சாதிபேத முதலியவற்றைக் கருதாமல் சிவனடியார் என்றளவில் அவர்களைச் சிவபெருமானாகவே பாவித்து அவர்களுக்கு எல்லாப் பணிவிடைகளுஞ் செய்வார். பெண்ணாசையை விட்ட துறவினர் அநேகர்; இல்லறத்தி லிருந்தும் மாதர் பற்றற்றவர் அநேகர்; சிவபூசையிலே காலம் போக்குவோர் அநேகர்; பலவகையான விரதங்களை யநுஷ்டிப்பவர் அநேகர்; இவ்வாறு பலவகை

யானவர்களும் நந்திதேவனது அன்புசெய்து வாழாநின்ற மாகேசுரர்களாம். வசவேசர், வாது செய்கிற சமணர்களுக் கெதிரே அநேக அதிசயங்களைக் காட்டி அவர்களுடைய கர்வத்தை யடக்கிச் சிவனடியார்க் கெல்லாம் பலவகை யாகிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருப்பார். இப்படி யிருக்குங் காலத்தில், அல்லமதேவனது மகிமைகளைக் கேள்வியுற்று, மழையை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிற பயிர்போல அவனது வரவை யெதிர்பார்த்திருந்தார்.

அக்கமாதேவி உற்பத்திகதி முற்றிற்று.

பத்தாவது

அக்கமாதேவி துறவுகதி

தனது யதார்த்த நிலையைக் காணவிரும்பி, தன் கணவ னாகிய அரசனைக் கக்கின சோறுபோல அருவருத்துவிட்டு, அல்லமதேவர் காட்டில் விளையாடும் பெருமைகளைக் கண் டுய்தற்பொருட்டுக் காட்டுக்குச் சென்ற மாதேவி சரிதத் தைச் சொல்லுவோம். மாதேவி யென்பவள் பேதை பெதும்பை யென்னும் இரண்டு பருவங்களையுங் கடந்து பன்னிரண் டாண்டாகிய மங்கைப் பருவத்தை யடைந்து, அந்தப் பருவத்திற்குரிய முலைமுதிர்வு முதலிய இலக்க ணங்கள் நிரம்பப்பெற்றும் தன் மனத்தில் சிறிதும் காம மயக்கத்தை யடையாதவளாகி, அர்த்தநாரீசுவர னென் னுங் கடவுளைப் பத்திசெய்து அவனோடு ஐக்கிய மெய்தும் படியான முயற்சி செய்யத் தலைப்பட்டாள். தன்னைத் தானறிந்து பரசிவனோடு பொருந்துதற்கு முயலும்படியான பெரும் பருவமடைந்த இவளை, மனத்தெளிவில்லாதவர் கள் இளமையாகிய மங்கைப் பருவப்பெண் என்பார்கள். நின்மலனது மகளாகிய மாதேவி, வண்டுகள் மொய்க்கப் பெறுமல் மலர்கிற சண்பகப் பூவைப்போல, மன்மதபாணம்

படாத தன் சரீரத்தில் சூரியப் பிரகாசம்போல அழகு மிகுந்துவரும் நாளில், ஒருநாள் கௌசிகராஜன் சகல ஆடம்பரங்களுடனே யானைமீதேறி உலா வந்தான். இவன் வந்த உலாவானது இந்திரன் உலர்வந்தாற்போ லிருந்தது. இந்த வுலாவைக் கண்ட மாதர்கள் காமத்தால் நாணிழந்தும், ஆடை யிழந்தும், ஆபரணங்களை யிழந்தும் உயிரை மாத்திரம் இழக்காமல் உடன்சென்றார்கள். அப்படிச் சென்ற மாதர்கள், அந்த அரசனேறிச் செல்லுகின்ற யானையின் மதத்தை யுண்ணும் பொருட்டுச் செல்லுகிற வண்டுகளை நோக்கி, "ஓ வண்டுகளே! நீங்கள் அந்த யானையின் கர்ண கபோல மதத்தை யுண்ணச் செல்லுகின்றீர்களல்லவா? மெல்ல நடக்கும்படி அதின் காதிலே சொல்லுங்கள்" என்று பிரார்த்தித்தார்கள். மாதர்கள் காமமயக்கத்தால் இவ்வாறு வருந்தும்படி உலாவந்த கௌசிகராஜன் இந்த மாதேவியைக் கண்டு மிகுந்த மோகங்கொண்டு, மனமயங்கிப் பரவசப்பட்டுச் சிறிது நேரத்தில் தெளிவடைந்து, தனக்கருகே நின்ற ஒருவனை நோக்கி, "நீ போய் மின்கொடிபோல அந்த வாய்தலினின்று புறப்பட்டு மறைந்துபோன மடமங்கை யார் என்று அறிந்துவா" என்று கட்டளையிட, அவன் அப்படியேபோ யறிந்துவந்து சொன்னான். அவன் சொல்லால் அவள் இன்னான் மகளென்று அரசனறிந்து, "இவளை எவ்விதத்தாலாயினும் நான் கூடுவேன்" என்று தன் மனத்தில் நினைத்துக்கொண்டு போய்த் தன் அரண்மனையை யடைந்து, உயர்ந்த ஞான லக்ஷியார்த்தத்தை யுபதேசிக்கிற ஆசாரியரும், மாதரும் வலாத்காரத்தால் இன்பஞ் செய்யாரென்றும், தூதுவிடுத்து அதுவாயிலாக அவளைப் புணர்வேனென்றும் ஆலோசித்துத் துணிந்து, தூது சொல்வதில் மிகுந்த வல்லமையுள்ள சில மாதரை நோக்கி, "நீங்கள் போய் நின்மலன் மகளாகிய மாதேவியை எனக்கு மனைவியாகும்படி பேசித் தீர்மானித்துக்கொண்டு வரக்கடவீர்" என்றனுப்ப, அவர்கள் அவ்வாறே சென்று நின்மலனைக் கண்டு, இந்தச் செய்தியைச்

சொல்லுதலும், அவன் சம்மதிக்காமல், "மாதர்களே! நீங்கள் இந்தக் காரியத்தைக் குறித்துவந்து சொல்லவுந் தகாது; நான் அதற்கு உடன்படவுந் தகாது; போங்கள்" என்று மறுத்துச் சொல்ல, அந்த மாதர்கள் நின்மலனை நோக்கி, "உன் மகள் அரசன் மனைக்கிழத்தியானால் அந்த அரசன் செல்வ முழுதும் உங்களுடையதே யென்றறிந்திலீர்கள். தானேவந்தசிதேவியைப் புறம்போக்குவோர் யார்?" என்று மாதர் சொல்ல, அவன் சொல்லுகின்றான்: இம்மைப் பயனொன்றையே விரும்பித் தகாதவர்க்குத் தம்மகளைக் கொடுத்தவர் மறுமையில் ஆழ்ந்த நரககூபத்தி லழுந்தித் தம்மை நோக்குவோ ரொருவரு மில்லாமல் தளர்வார்கள். தகாத காரியஞ் செய்து உயிர் வாழ்தலைப்பார்க்கிலும் உயிர் விடுதலே நன்மையென்று பெரியோர் சொல்லுவர். ஆதலால், எமக்குத் தகாத காரியத்தைச் சொல்லுதல் உமக்கு அடாது" என்று சொல்ல, மீட்டும் அந்த மாதர்கள் சொல்லுவார்கள்: "உறையினின் றுருவிய வாளாயுதத்தோடு மறவனென்னுஞ் சாதியான் மிருகங்கள் சஞ்சரிக்கிற காட்டில் விரைந்து சென்று வழி நடப்போரை ஓர் பொருள் தருக வென்று இரத்தலை நிகர்க்கும், அரசன் தன் கீழ்வாழுங் குடிகளிடத்தில் ஒரு பொருளை யிரந்து கேட்டலென்பது. நீதிமானாகிய நீ யிதனை யறிந்திலைபோலும்" என்று மாதர் சொல்லுதலும், நிருமலன் என்போன் "எங்களுடைய வாசனை பொருந்திய நீண்ட கூந்தலையுடைய பெண்ணோ யோசனையிற் சிறந்தவள்; உங்கள் கருத்தை அவளுக்கு அறிவியுங்கள்; அவள் மன மிசைவாளாயின் எமக்குச் சம்மதமே போங்கள்" என்று சொன்னான். அந்த மாதர்களும் அவ்வாறே மாதேவியினிடத்திற் போய், "மன்மதனது வலிகுன்றும்படி தனங்களென்னும் பெரிய அரும்பையுடைய பூங்கொடிபோல்புவளே! நீ தயைவைத்து, எங்கள் அரசனது உயிரை நிறுத்தினையாயின் இந்தப் பூமியிலுள்ள எல்லா வுயிர்களுக்குந் தாயாவாய்" என்று சொல்ல, மாதேவியானவள், "மாதர்களே! உங்கள் அரசனால் குடும்

பத்தைத் துறக்கவேண்டு மென்கிற வோராலோசனையைத் தீர்மானித்து அரசன் எனக்கு ஒரு பிரதிக்கினையைச் செய்து கொடுத்துச் சம்மதித்து ஒரு வார்த்தை சொல்லுவனாயின், நீங்கள் சொன்ன காரியத்துக்கு நான் உடன்படுவேன்'' என்றாள். அதுகேட்ட மாதர்கள், ''தாயே! நீ மாத்திரம் சம்மதிப்பையாயின், எங்கள் அரசன் நீ யிட்ட கட்டளையை மறக்கமாட்டான்'' என்று சொல்லி, அரசனிடத்திற் சென்று மாதேவி சொன்னதைச் சொல்ல, அரசன் மனமகிழ்ந்து மாதேவி யிருக்கு மிடத்திற்குப் போனான். காமநோய் கொண்டவன் என்ன தான் செய்யச் சம்மதிக்கமாட்டான்! எல்லாஞ் செய்யச் சம்மதிப்பான். சென்று, மாதேவியின் தனங்களை மேருமலையென்று மதியாதவனாய் வீட்டிலுள்ள குடமென்றே நினைத்தான். அவளது நெற்றியைப் பிறையென்று நினையாதவனாய் வில்லென்றே நினைத்தான். தனக்கெளிதிற் கிடைக்கும் பெண்ணாகத் தீர்மானித்துக்கொண்டு வாயினாலும் பிதற்றுகிறான். ''பூங்கொடி போல்வாளே! நீ யென்னை ரக்ஷிப்பதற்காக நான் செய்யவேண்டியது இன்னதென்று கட்டளையிட்டால் அப்படியே செய்கிறேன்'' என்று சொல்ல, மாதேவியானவள் அரசனை நோக்கி, ''மலைபோன்ற தோள்களையுடையவனே! என்னை நீ வலாத்காரமாகத் தழுவாமையைக் குறித்துப் பிரதிக்ஞை செய்து கொடுத்தால் நான் உன் விருப்பத்தின்படி நடந்துகொள்வேன்'' என்றாள். அதுகேட்ட அரசன், ''அப்படியேயாகட்டும்'' என்று, ''உன் சம்மதமில்லாமல் உன்னை நான் வலிந்து தழுவமாட்டேனென்பதற் குறுதியாகச் சூளுறவு செய்கிறேன் கேள்!'' என்று சொல்லுகிறான்: ''தன்னை நோக்கி வந்த நல்விருந்திருக்கத் தன் உள்வீட்டிற் புகுந்து காணாமற் புசிப்பவனும், பந்தி போஜநத்தில் பேதஞ்செய்யும் பாவியும், தாய்தந்தையர் பசித்திருக்கத் தானுண்ணும் பாவியும், உச்சிக்காலத்தில் பசியால் வருந்தி வந்த அதிதியரை உண்பித்து உண்ணாத கொடியோனும், பிறர் நிந்தித்

தற்குரிய உணவை யுண்பவனும், சிவபூசை செய்யாமல் உண்பவனும், பெரியோர்களாலும் நூல்களாலும் மறுக்கப் பட்ட மாமிசபோஜநஞ் செய்விப்பவனும், தாம் செய்த புண்ணியத்தாற் செல்வராயிருப்பவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுதலும்-அவர்கள் வறுமையடையப் பார்த்து மகிழ்தலும் ஆகிய தீக்குண முடையவனும், கன்றுக்குப் பால்விடாமல் கறந்துகொள்வோனும், ஒருவர் செய்த நன்றியை மறந்தவனும், ஒருபக்கத்திற் சாய்ந்து நடுநிலை தவறுவோனும், உயிர்களைக் கொன்று அவை பதைக்கக் காண்கிற கொடியோனும், போர்க்களத்தில், தன் தலைவனை விட்டு ஓடிப்போகிறவனும், அடைக்கலமென்று வந்தவனை ஆதரிக்காமல் நீங்கிவிடுவோனும், கொடுப்போமென்று சொல்லிக் கொடாதவனும், ஒருவனுக்கொருவன் கொடுப்ப தை விலக்குவோனும், பாவத்தொழில் செய்யுமிடத்தில் அதற்கு உதவியாயிருப்பவனும், தெளிந்து சிநேகித்தபின் வஞ்சிப்பவனும், ஆசாரியர்களுடைய வசனத்தை மீறி நடக்கிற கொடியோனும், துறவினர்கள் வரவைக் கண்டு எழுந்திராத பாவியும், பிறர்க்குத் தான் கல்வி நிரம்பின வன்போலக் காணப்பட்டு இரகசியத்தில் நூல் கற்போனும், இராக்காலத்தில் புதியராய் வந்த நல்லோர்க்கு இடங் கொடாதவனும், கண்டபோது புகழ்ந்து காணாதபோது இகழ்வோனும், தன் சுற்றத்தார் வறுமையால் வருந்தத் தான் செல்வத்தாற் செருக்கி வாழ்வோனும், நம்பிக்கை யால் ஒருவன் வைத்த பொருளைக் கவர்ந்துகொள்வோனும், துன்பமடைதற்குரிய கஷ்டமான வேலையைச் செய்வித்துக் கொண்டு பின் அவனுக்குப் பேசின கூலி கொடாதவனும், கற்பழிந்த தன் மனைவியோடு கூடி வாழ்பவனும், அன்னிய ருடைய மனைவியரை விரும்புவோனும், கல்வி கற்பித்த ஆசிரியனைத் தொழ நாணுவோனும், விற்கத்தகாதவைகளை விற்றுத் தன் சரீரத்தை வளர்த்து இறப்பவனும், நன்மை மிகுந்த வயலிலும் நதியிலும் நந்தவனத்திலும் தேவா லயத்திலும் ஜலமலங்களைக் கழிப்பவனும், யாவரும்

நடக்கும் வழியை முள்ளிட்டுத் தடுப்பவனும், பொய் சொல்லி அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்களும், தாழ்ந்த ஜாதியானிடத்திற் கூலி பெற்றுக்கொண்டு அவனுக்கு வேலை செய்பவனும், ஒருவனிடத்து உறவுசெய்து அறிந்த ரகசியத்தை அவரிடத்து வெறுப்புப் பிறந்தகாலத்தில் எடுத்துச் சொல்லுவோனும், கோபம் வந்த காலத்தில் முறைவழுவாகிய கடுஞ்சொல்லை உபயோகிப்பவனும், புத்தியில்லாத மனைவியின் சொல்வழியில் நிற்கின்ற அறிவில்லாதவனும், இரண்டு அன்னியோன்னியமான சிநேகிதர்களைப் பிரித்துக் கலகம் உண்டாக்குவோனும், நூலில் இல்லாத பொருளை எடுத்துச் சொல்லுவோனும், நன்மையைப் பொறாமையால் தீமையென்று சொல்லுவோனும், எளியவரிடத்துத் தனது மிகுந்த கோபத்தைக் காட்டுவோனும், பிறர் பொருளைக்கொண்டு புண்ணியஞ் செய்வோனும், இம்மை யின்பத்தின்பொருட்டு மறுமை யின்பத்துக்கேதுவாகிய நற்செயல்களை விடுத்தவனும், தபோதனரை யிகழ்வோனும் அடைகிற நரகத்தை நானடையக்கடவேன்; அன்றியும் நீ கட்டளையிடுவதை நான் தவறாது செய்வேன்'' என்று அரசன் சொல்லக்கேட்ட மாதேவியானவள் மனமிசைந்து அப்படியானால் வா போவோம்'' என்றாள். அதுகேட்ட அரசன் மனமகிழ்ந்தவனாய் அவளைச் சிவிகையிலேற்றித் தாதியர் பலருஞ் சூழும்படி அரண்மனைக்கு அனுப்பித் தானுந் தன் வாகனம் ஊர்ந்து உடன் போயினான். அப்படிப் போனவன் மாதேவியைத் தனியே கண்டு நெருப்பைக் கண்ட அரக்குப்போல் மனமுருகி அவளை நோக்கி, ''பூங்கொடி போல்வாளே! கடப்பதற்கரிதாகிய காமக்கடலைக் கடந்தேறும்படி உன்னுடைய கொங்கைக் குடங்களைத் தருதற்குத் திருவுளம் பற்றவேண்டும்'' என்று வணங்க, மாதேவியானவள் அரசனது காமமிகுதியாற் சொல்லுகின்ற சொற்களைக் கேட்டுப் புன்னகை செய்து ''ஓ அரசனே! யான உனக்கு இடுகின்ற கட்டளையைச் செய்து முடித்த பின்பு என்னோடு பேசக்கடவை'',

என்றாள். அதுகேட்ட அரசன் "நான் செய்யத்தக்கது இன்னதென்று கட்டளையிடக்கடவை" என்றான். அப்பொழுது மாதேவி இவ்விடத்தி லிருக்கின்ற ஜோதிவடிவமாகிய சிவலிங்கத்தை உன் கரபீடத்தில் வைத்துப் புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சித்துப் பூசித்து வந்தபிறகு என்னைக் கூடுவாயாக" என்றாள். அளவற்ற காம மிகுதியினால் இளமுலைகள் அழுந்தும்படி தன் தோள்களால் தழுவவேண்டுமென்றெழுந்த அரசனை மாதேவியானவள் தடுத்துச் சொன்னது பாலை நிலத்துள் நீரை மொண்டுகொண்டு வாயின் சமீபத்துச் செல்லுகிற கையை ஓடிப்போய்ப் பிடித்துக்கொள்வதை நிகர்த்திருந்தது. பூவரும்பில் வாசனையும், முளையில் விளைவும், குழந்தையினிடத்தில் காம இன்பமும் உண்டாகுமானால் சைவசமயத்துக்கு விரோதியாயிருக்கிற இவ்வரசனுக்குச் சிவபூசையில் விருப்ப முண்டாகும். இவன் சைவவிரோதி யாதலால் வலிந்து புணரேன் என்று தான் முன்னே செய்த சபதத்தை நினைத்து அவளைத் தீண்டாதவனாய் நின்று, "உங்கள் சிவனை யாம் எக்காலத்தும் பூசை செய்யோம்" என்றான். அதைக்கேட்ட மாதேவியும், "அப்படியாயின் யாம் உன் தோள்களைத் தொடமாட்டோம்" என்றாள். மாதேவியின் சொல்லானது அரசனது வாயையும், கையையும் கட்டிவிட்டது என்று சொல்லும்படி காமமடங்கி விறகில்லாத நெருப்புப்போலத் தணிந்து போதலால் சும்மா இருந்துவிட்டான். பிறகு மாதேவியானவள் அல்லமதேவனைத் தேடிச் செல்ல நினைத்து, இல்லறத்தை நீக்கிவிட்டு, ஆடை ஆபரணங்களை ஒழித்து, நெடிய கூந்தலையவிழ்த்துத் தன் உடம்புமுழுதும் மறையும்படி விரித்துவிட்டுக்கொண்டு மனத்தெளிவோடு தன் உள்ளங்கையில் வைத்த இஷ்டலிங்கத்தோடு தானினைத்த பொருள் கிடைத்தாற்போல மகிழ்ச்சி யதிகரிக்க, 'இவள் மனமருட்சி யடைந்தாளோ' என்று அரசன் திகைத்து நிற்க வீதியிற் சென்றாள். இந்தச் செய்தியைக் கேட்ட அன்னையும் பிதாவும், "அந்தோ! எங்களுடைய

அருமைப் புதல்விக்கு நேரிட்டது என்னோ" என்று நினைத்து வந்து இவளைக் கிட்டிநின்று வருந்தும்போது, அவர்களை நோக்கி, "என்னை உங்கள் புதல்வியென்று மனமயங்கி இரங்குதல் உங்களுக்குத் தகாது. நான், என்னை அறிதற்பொருட்டுச் சற்குருநாதனைத் தேடிச் செல்லாநின்றேன்" என்று சொல்லி, அவர்களைக் கண்ணெடுத்துப் பாராமல் அயலார்போல நீங்கிச் சென்றனள். செல்லுதலும் தாய்தந்தையராகிய சுமதியும் நிர்மலனும் "இவள் நினைந்தது மிகவும் உத்தமமான காரியம்; இவளால் நமது மரபு முழுதுக்கும் பெரும்புகழ் வாய்த்தது" என்று மனமகிழ்ந்திருந்தார்கள். அதன் பிறகு இவள் செல்லும் நெறியில் கண்டவர் யாவரும் மனங்கரைந்து கண்ணீர் ததும்ப நின்று "கவுசிகராஜன் பின்னே சிவிகையேறித் திருமகள்போலச் சென்ற மாதேவியானவள் இப்பொழுது இந்தப் பேய்க்கோலங்கொண்டு செல்லுதற்குக் காரணம் யாதோ? அறியோம்" என்றார்கள். மற்றுஞ் சிலர், "இந்த மாதேவியை இவ்வண்ணமாகக் கண்ட யாம் விசன மேலீட்டால் வயிறெரிய நின்றோமே; இவளைப் பெற்றோர் என்னபாடு படுவரோ" என்றார்கள். மற்றுஞ் சிலர் "இவளது மங்கள வடிவத்தைக் கண்டு மகிழ்ந்த நமது கண்கள் இந்தக் கோலத்தையுங் கண்டு துன்புறுதற்கு எப்படிப்பட்ட பாவத்தைச் செய்திருந்தோமோ" என்றார்கள். இவ்வாறாக நகரத்தாரெல்லொரும் இரங்கும்படி மாதேவியானவள் வெயில் வெப்பம் பொறாமல் நிழலை விரும்பிச் செல்வோர்போலக் கருப்பஞ் சர்க்கரையும், அமுர்தமும், தேனும் கைக்கும்படி பேரின்பத்தைக் கொடுக்கின்ற தனக்குத்தானே நிகராகிய அல்லமதேவனை நாடிச் சென்றாள். (அப்படிச் சென்றவள் காடுகளிலும், மலைகளிலும், நகரங்களிலும் போய் அன்பு மிகுதியால் அல்லமனாகிய சற்குருநாதனைத் தேடாநின்றாள்.)

அக்கமாதேவி துறவுகதி முற்றிற்று.

பதினேன்றவது

கொக்கிதேவர் கதி

அல்லமதேவர் அநிமிடன் என்னும் பெயரையுடைய ஞானசிரியனைத் தனது உண்மை வடிவோடு கலந்துகொண்டு தன்னைப் பூசிக்கின்ற அடியார்களுடைய பிறவியை நீக்கிச் சஞ்சரிக்கிற நிலைமையைச் சொல்லுவோம். சிறப்புப் பொருந்திய அல்லமதேவன் கார்கால மேகத்தை எதிர்பார்க்கின்ற மயில்போலத் தன்னையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற அடியார்களை ஆட்கொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தோடு உலாவிக்கொண்டிருக்கும் நாள்களில் ஒரு நாள், ஓர் திசையில் அவ் வல்லமதேவன் ஓர் வேடங்கொண்டு சென்றான். அவனெதிரே வாசனைபொருந்திய மிருதுவாகிய புதிய மலர்கள் நிறைந்த ஓர் நந்தவனம் அலங்காரமாகக் காணப்பட்டது. சிறுபொழுதாகிய ஐந்திலும் மாறுபடாத பெரிய அறுபொழுதிலும் இதழ் விரிந்து தேனைப் பொழிகின்ற மணமலர்கள் நிறைந்த அந்த நந்தவனத்தை ஒருவரடைந்தால் அவர் தேவேந்திரனது பெருஞ் செல்வத்தையும் பெற விரும்பார். இந்த வுலகத்தில் பல தவங்களைச் செய்து வருந்தினவர்கள் வடதிசையிலுள்ள கைலாயத்தில் போய்ச்சேர விரும்புதல் யாதுக்கெனின், இந்தப் பூஞ்சோலையின் மணத்தோடு கூடிய தென்றற் காற்றானது வந்து தமது உடம்பின்மீது தவழ்தலைமாத்திரம் நினைத்தேயாம். தேன் நிறைந்த பல மலர்களையும் கண்டுபோய் நல்ல தேனை யுண்ணும்பொருட்டு அங்குமிங்குமாக வுழலுகின்ற அளவற்ற வண்டின் கூட்டங்கள் இரைதலால் அந்த நந்தவனம் வண்டின் சந்தையை யொத்திருந்தது. அந்த நந்தவனத்தைக் கோக்கிதேவன் என்னும் பெயருள்ளவன் காவல் செய்துகொண்டிருப்பவன். அவன் அவ்விடத்தில் அந்த நந்தவனத்தை விருத்தியடைவிக்கும்படியான முயற்சியைச் செய்துகொண்டிருந்தான். அவனை

அருள் நிறைந்த மனத்தையுடைய அல்லமதேவன் கண்டு 'இவன் தனது அற்பமாகிய தொழில் விடும்படி அறிதற்கரிய பொருளை இவனுக்கு அறிவிப்பேன்' என்று அவன் அருகே சென்று, "ஐயனே! சரணம்" என்று சொன்னான். அப்பொழுது அந்த நந்தவனத்தை யுடையவனாகிய கொக்கி தேவன் நிர்மலனாகிய அல்லமதேவனைச் "சரணம்" என்று சொல்லி வணங்கி, "உன் செய்கை யாது? உன் பெயர் யாது? சொல்க!" என்று கேட்க, ஞான விளக்காகிய அல்லமதேவன் சொல்லலுற்றான்: "அன்பர்களுடைய வீடுகடோறும் வரிசையாகச் சென்று பிக்ஷையேற்று எந்தத்தொழிலுமில்லாமல் இருப்பேன். என் பேர் அல்லமன் என்று சொல்லுவார்கள்" என்று சொல்லிப் பிறகு, "உத்தமனே! உன் பெயர் யாது?" என்று வினவ, அவன் தன் பெயர், "கொக்கிதேவன்" என்று சொல்லி, "அருமையாகிய குருலிங்கசங்கமங்களுக்காகச் சரீரம் வருந்துகின்ற தொழில் சற்றுமின்றிச் சும்மாவிருப்பவன் உணவை யுண்ணுகின்ற பிணமென்று சொல்லுகின்ற சொல்லை நீ யறிந்திலையோ", என்று சொல்லத் தொடங்கினான்: "பெறுதற்கரிய மானுடசரீரத்தை ஒருவன் பெற்றால், அந்தச் சரீரத்தைக்கொண்டு செய்தற்கரிய பல தர்மங்களையுஞ் செய்து, துன்பமிகுந்த பிறவியினின்று நீங்கி உய்யும்பொருட்டு ஐக்ய நிலையை யடையாமல் உழல்வோனது சரீரம் பொற்பாத்திரத்தில் பெய்து வைத்தற்குரிய பாலை நிலவெடிப்பில் கவிழ்த்தாற்போலாகும். மின்னலைப்போல நிலையில்லாதழியுமுடம்பைக் கொண்டு சற்கருமங்களைச் செய்து அழியாத வுடம்பைப் பெற்றுப் பேரின்பத்தை யடைந்திருத்தற்கு முயற்சி செய்யாமல் சரீரம் வருந்துமென்று எண்ணி அந்தச் சரீரத்துக்கு உறுதியாகிய உணவையுண்டு சும்மாவிருப்பவன்போல மூடர் இவ்வுலகத்திலில்லை" என்று பூஞ்சோலையையுடைய கொக்கி தேவன் சொன்னான். அவன் சொன்ன சொல்லை அல்லமதேவன் கேட்டுக் கைகொட்டிச் சிரித்து, "புண்ணிய கருமங்களைச் செய்து அழியாத இன்பத்தை ஒருவன் பெறுவா

ஞானல் துன்பத்தைச் செய்தற்குரிய மும்மலங்களுக்குள் ஒரு மலமாகிய ஆணவத்தாலும் நாம் பேரின்பத்தை யடைய லாம்'' என்று சொல்லி, ''தான் செய்யுஞ் சற்கருமத்தால் ஒரு பிறப்பிற்றனே பேரின்ப முண்டாகு மென்றல், அந்த மாமிச சரீரம் நீங்க அந்த இன்பமு முடனே நசிக்கும்; அந் தச் சரீரம் நசிக்காமல் மேலான மோக்ஷ பதத்தி லிருக்கு மென்றால் அது மாயாகாரிய மாகாது; வாசனை வீசுகின்ற மலர்களைத் தருகிற நந்தவனத்தை வைத்து அதனுல் பிறவி யை யொழிக்கக் கருதுகிற கொக்கிதேவனே! பேரின்பத் தைத் தருகிற சற்கருமத்தின் முடிவில் சரீரத்தில் அதிக மான துன்பத்தை யுண்டாக்குகிற தீவினை யுண்டாகும்; அந் தத் தீவினையின் முடிவில் முன்செய்த நல்வினை தோன்றும்; இம்முறையாக நல்வினை தீவினைகளாகிய இரண்டும் இவ்வுல கில் பகலும் இரவும்போல மாறிமாறி வருமென்று அறிஞர் சொல்லுவர்; புறத்தே யாகாதி சற்கருமங்கள் பலவற்றைச் செய்து மலையைக் கல்லி எலியைப் பிடித்தாற்போல மிக வும் அற்பமாகிய தேவபோகத்தை யடைபவனே, வருந்தா மல் சகல சங்கற்பங்களையும் விட்டுச் சும்மாவிருந்தே பேரின்பத்தை யடைபவனே, இவ்விருவருள்ளே மூடனெ ன்று எவனைச் சொல்லலாம்?-மனமானது பொறிவழியாகப் புறத்து விடயங்களிற் செல்லுமானல் விடயமயமாகிய உலகமே தோன்றும்; அகத்தே ஒடுங்குமாயின் பேராநந்த ரூப மாகிய சிவமே தோன்றும். சிவம் தோன்ற அறிவினிடத்து வியாபித்த விடயமயமாகிய உலகம் காணப்படாமல் துன்ப வடிவாகிய பிறவிக்கடலைக் கடந்து பேரின்பத்தை யடை வார்கள்'' என்று சொல்லி, பிற்கு நமது மகிமையை இவனுக் குப் பிரத்தியக்ஷமாகக் காட்டி இவன் கருத்தைத் திருத்த வேண்டுமென்று திருவுளங்கொண்டு கொக்கிதேவனை நோ க்கி, ''இவ்விடத்தில் தோண்டக்கடவை'' என்று கட்டளை யிட, அப்படியே அவன் தோண்டுதலும் அவ்விடத்தில் செய்யுட்பொருள்போல ஒரு பொற்சிகரம் காணப்பட்டது. அதன்மேலும் தோண்ட வறியனுக்குக் காணப்பட்ட பொற்

குவைபோல அந்நிலத்தினுள்ளே மனம் புறத்து விடயங்க ளிற் செல்லாமலும் சரீரமசையாமலும் பரவசப்பட்டிருக் கிற ஒரு சிவயோகியைக் கண்டார்கள். உள்ளங்கையி லமர் ந்த இஷ்டலிங்கத்தின்மேல் திருஷ்டிவைத்து தேகத்தில் எறும்பை யன்றித் தசை சிறிதுமின்றி யோகநித்திரையி லிருக்கிற அநிமிஷன் என்னும் மஹா யோகியை நோக்கி, "கொக்கிதேவனே! சற்கருமஞ் சிறிதுமின்றி யிருக்கிற சிவயோகியைத் தரிசித்தாயா" என்று அவன் மனத்தி னுள்ள சந்தேகம் நீங்கக்காட்டி அறிவிக்க, "தவறிக் கட லில் விழுந்து கரைகாணுமல் துன்பப்படுவோர்க்கு மரக் கலமொன்று சமீபத்து வந்ததுபோலப் பரமாசாரியர் என க்குக் கிடைத்தார்" என்று ஆச்சரியமடைந்து சரீரம் நடு ங்கவும் கண்களில் ஆநந்தபாஷ்ப மொழுகவும் நெஞ்சுருகி, குருசிஷ்ய க்ரமத்தை விளக்கும்பொருட்டு வணங்கினன். வணங்குதலும், சிவயோகியின் கையிலிருந்த இஷ்டலிங்க மானது காந்தத்தைக் கண்ட இரும்பைப்போல அல்லம தேவனது கையில் வந்து அமர்ந்திருந்தது. அப்போது அந் தச் சிவயோகியின் சீவகளையும் அந்தச் சிவலிங்கத்தோடு அல்லமதேவனிடத்திற் சேர்ந்துவிட்டது. இவ்வாறு இஷ்ட லிங்கமானது அல்லமதேவனிடத்தில் வந்து சேர்ந்ததை யும் அந்த இஷ்டலிங்கத்தோடு எழுந்தருளியிருந்த சிவ யோகியையும் கொக்கிதேவன் கண்டு மனமகிழ்ந்து, "இவ் விருவரது பெருமையைச் சொல்லுதற்கு வேதாதிகாரியா கிய பிரமதேவனும் முடியாது" என்று சொல்லி, அல்லம தேவனை நோக்கி, "சிவலிங்க நிஷ்டையையுடைய ஞான யோகியைத் தேவரீரது கிருபையினல் தரிசித்தேன்; இனிச் செய்யவேண்டிய கருமங்க ளெல்லாவற்றையும் இப்பொ ழுதே முடித்துவிட்டேன்; ஞானயோகத்தில் நிலைத்துவிட் டேன்; தேவரீர் செய்த வுதவிக்கு அடியேன் செய்யத் தகு ந்த கைம்மா றுன்றுளதோ? மேகத்துக்குக் கைம்மாறு இவ்வுலகத்தில் யார் செய்வார்கள்? தேவரீரையும் உமது கையி லெழுந்தருளியிருக்கிற இஷ்டலிங்கத்தையும் அநிமிஷ

னென்னும் சிவயோகியையும் இப்பொழுது ஒப்பற்ற பரம்பொருளாக அறிந்தேன்'' என்று அல்லமதேவனது செந்தாமரை மலர்போன்ற திருவடியை வணங்கிச் சொல்லுவான்: ''ஐயனே! என்னை யெனக்கு அறிவித்ததுபோல இந்த இஷ்டலிங்கமானது அகத்திலும் புறத்திலும் நிலை பெற்றிருக்குந் தன்மையை உமது திருவடியை வணங்குகின்ற அடியார்களுக்கெல்லாம் நன்குயறிவித்துச் சரவுயிர்களைப்போல உலகத்திற் சஞ்சரிக்கக்கடவை'' என்று வணங்கினன். கொக்கிதேவன் இப்படிச்சொல்லி வணங்கக்கண்ட அல்லமதேவர் ''தாம் பெற்ற பேற்றை உலகத்தா ரெல்லாரும் பெற விரும்புதல் பெரியோர்களுக்கு இயற்கைக் குணமேயாம்'' என்று புகழ்ந்து, கொக்கிதேவனைத் தமது தாமரை மலர்போலுந் திருக்கரத்தால் தீண்டித் தழுவிக்கொண்டு அநுக்கிரகஞ் செய்தார். இவ்வாறு அல்லமதேவரால் அநுக்கிரகிக்கப்பெற்ற கொக்கிதேவன் உள்ளங்கையி லமர்ந்த இஷ்டலிங்கத்தி லழுந்திய பார்வையும் மனமும் பிறழாமல் நிலைத்திருக்கச் சிவயோகத்தை யடைந்து சித்திரப் பாவைபோல அசைவற்றிருந்தான். அடியார்கள் விரும்பினதையே அநுக்கிரகிக்கிற அல்லமதேவர் பரிசுத்தமாகிய இஷ்டலிங்கத்தைக் கையிலேந்திக்கொண்டு, பூமியில நிஷ்காமிய தவத்தைச் செய்கின்ற அன்பர்களுடைய மனத்தில் பேரின்ப மதிகரிக்க இளமையாகிய மாமரங்கள் தழைக்கும்படி வந்துலாவுகின்ற தென்றற்காற்றுப்போலச் சஞ்சரிக்கலாயினர்.

கோக்கிதேவர்கதி முற்றிற்று.

பன்னிரண்டாவது

முத்தாயியம்மை கதி

அசகண்ணனென்பவனைக் கண்டிலேனென்று துன்ப மடைந்து வாடுகின்ற முத்தாயியம்மையின் துன்பமொழி யும்பொருட்டு அல்லமதேவர் விரைவாகவந்து பூர்வத்தில் சொன்ன விதத்தைச் சொல்லுவோம்.

விபூதி யணிந்து அதனால் அழகு மிகுகின்ற அல்லம தேவன் அடியார்களுடைய மனோ துக்கத்தை ஆடையிழ ந்த ஒருவனது கையைப்போல விரைந்துபோய் நீக்கி யருள் செய்துகொண் டிருக்குங்காலத்தில், தனது பாசபந்தங் களைச் சேதித்த அசகண்ணனென்பவன் மறைத்துக்கொண் டிருந்த மிக்க சிவபக்தியைப் புறத்துக் கண்டபொழுதே உடம்பை வெறுத்து நீங்கிச் சிதாகாச ரூபமானன் என்று அறிஞர் சொல்லுவார்; அப்படிச் சிதாகாச ரூபமான அசகண்ணன் தேஹபாவம் நீங்கிப் பரிபூர்ண ரூபமான தன்மையை அவனுடன் பிறந்தவளாகிய முத்தாயியம்மை யறியாதவளாய்ச் சென்று, அசகண்ணன் உயிர் நீங்கின னென்றெண்ணி மனந்தளர்ந்து மயங்கிப் புலம்பி வருந்திக் கொண்டிருக்குஞ் சமயத்தில், இஷ்டலிங்கமும் உள்ளங்கை யும் பிரகாசிக்க அல்லமதேவர் அவ்விடத்திற்கு வந்தனர். விருதலும் மனங் கலங்கின்ற முத்தாயியம்மை அவரைக் கண்டு, அவரது திருவடியில் விழுந்து வணங்கி, அசகண் ணனைக் குறித்துத் தான்கொண்ட துன்பந் தணியும் பொ ருட்டுக் கதறி யழுதாள். "பாவியாகிய நான் எனது சகோ தரனை யிழந்து வருந்துகிற வருத்தமெல்லாம் ஒழியும்படி தேவரீர் பெருங் கருணையால் இவ்விடத்திற் கெழுந்தருளி னீர்" என்று சொல்லி மறுபடியும் வணங்கினள். வணங் கின முத்தாயி யம்மையின் முகத்தை அல்லமதேவர் பார் த்து, "தெய்வப்பெண்ணை நிகர்த்தவளே! நன்மையை

யுடைய அசகண்ணனது தன்மையை யறியாமல் வருந்து தல் அறிவுடையார்க்கு அழகல்ல" என்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறார்: "என்றும் இறவாத அசகண்ணனை இறந்தவனாக நீ யெண்ணிக் கண்ணீர்விட்டுக் கலங்கினாய்; எங்குமாய் ஒழிவில்லாதிருக்கிற ஆகாயம் ஒழிந்து போயிற்றென்று கலங்குவாருமுண்டோ? தன்னைச் சச்சிதாநந்த ரூபமாகிய பரமசிவனாகவே யறிந்தவன், அற்பமாகிய தோலாற் செய்யப்பட்ட சரீரத்தை நானென்று விரும்பமாட்டான். இவ்வுலகத்தில் சற்குருவருளால் தன்னை யறிந்தவன் இந்தச் சரீரத்தைச் சோறுண்ட இலைக்கு நிகராயெண்ணி யொழிப்பான். பூமியில் மானிடனாய் எழுந்தருளின பரமகுருவின் அநுக்கிரகத்தால தனது யதார்த்த ரூபத்தை உள்ளபடி யறிந்தவன் சரீரத்தை விடுங் காலத்தில், மட்குட முடைந்த காலத்தில் அந்தக் குடத்திலிருந்த ஆகாசத்தை நிகர்ப்பான். பந்த பாசங்களெல்லாம் முறிந்தோடுதற் கேதுவாகிய சிவஞானத்தை யுடையவன் உலகிலுள்ள மாநுடர் உய்யும்வண்ணம் அவர்கள் கண்ணுக் கெதிரே வெந்த ஆடையைப்போலக் காணப்படுவான். எல்லாப் பொருள்களும் தானேயாயிருக்கிற சிவத்தோடு பொருந்துதற் குரிய ஞானக்கண் ணுள்ளவனுக்கு உறவு பகையென்னும் எண்ணமில்லை. சரீரமே நாமென்றெண்ணியிருந்து அழிகின்றவர்கள், அழியாத அறிவே வடிவாகி உடம்போடு கூடியிருந்தும் தாக்கற் றிருப்பவர்களையும் தம்மைப்போலவே பார்ப்பார்கள். அவர்களுடைய யதார்த்த நிலையை யறியார்கள். கூத்தனது நாடகக் கோலத்தோடு கூடிய நடிப்பை உலகத்தார் பார்த்து உண்மையென் றெண்ணுவார். மிக்க தவத்தினை யுடையவர் யாவராலுந் துதிக்கப் பெற்ற ஞானவானுடைய சரீர நடிப்பை அநுபவத்தாலறிந்து சத்தியமென்று நினையார். அசகண்ணனது தன்மையை அறியாமல் அவன் இறந்தானென்றெண்ணி யிரங்கினாய்; இந்த எண்ணத்தை மறந்துவிடுவாயாக" என்று சொல்ல, பூர்ணஞானத்தை யுடைய முத்தாயி

யம்மை சொல்லுவாள்: "பாம்பின் காலைப் பாம்பு அறிவ தன்றி அறிவோர் வேறிலர்; அதுபோல, அசகண்ணனது யதார்த்த நிலையை யான் அறியவல்லேனே? என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்; எமது சந்ததியார் செய்த தவப்பயனைத் தேவரீர் இங்கே யெழுந்தருளினதை நோக்குமிடத்தில் கங்கா நதியானது முடவனிருக்கு மிடத்தைத் தேடிவந்தாற்போ லிருக்கின்றது" என்று பூசனை முதலிய வழிபாடுகள் செய்து, "பந்தநாசத்திற்கேதுவாகிய மோக்ஷ பதத்தைப் பெறும்படி எனக்கு அநுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க, அவளது பிரார்த்தனைக்கு அல்லமதேவர் மகிழ்ந்து அவளை நோக்கி "நீ பந்தபாசங்களை யொழித்து முத்தியையடைய விரும்பினையாதலால் இவ்வுலகத்தில் உன்னை நிகர்ப்பவர் யாருளர்? ஒருவருமில்லை. ஒரு கோடி பிறப்புப் பிறந்து பிறந்து புறக்கருமங்களைச் செய்தாலும், செய்தவர்கள் ஆணவ விருள் நீங்கினாலன்றி மேலான முத்தியை யடைவார்களோ? அடையார். பிறப்பு இறப்புக்களை யாம் ஒழிப்போமென்று தமது கருத்தைப் புறக்கருமங்களிற் செலுத்தித் திரிவதெல்லாம் எரியாநின்ற நெருப்பை நெய்வார்த்து அவிக்க நினைப்பதை நிகர்க்கும்; எல்லை கடந்தோடுகின்ற மனத்தை நிறுத்திக் கட்டுதலே வீடு; மனத்தை நிறுத்தாமல் விஷயங்களிற் செல்லவிடுதலே கட்டு" என்று முத்தாயி யம்மைக்குச் சொல்லி அநுக்கிரகஞ் செய்தார். பொய்யாகிய குப்பையைக் கிளறியொழித்து அதனுள்ளிருந்த முத்தினையெடுத்துக் கொடுத்தாற்போல, மயக்கத்துக் கேதுவாகிய தத்துவங்களை யெல்லாம் தள்ளி மெய்யாகிய தன்னைப் பெறும்படி முத்தாயியம்மைக்கு அருள்செய்தலும், அவள் அல்லம தேவரை நோக்கி, "சுவாமீ! மோக்ஷத்தை விரும்பிச் சரீரத்தை வெறுத்தேனில்லை; எவ்விடத்திலும் சற்குருவைத் தேடித் திரிந்தேனில்லை; அப்படியிருக்கவும் நான் உய்யும்படி என்னைத் தேடி எழுந்தருளி எனக்கு அநுக்கிரகஞ் செய்தீர்" என்று அல்லம தேவரது திருவடியை

வணங்கிப் பிறவித் துன்பம் நீங்கப்பெற்றுச் சிதம்பரத்தை யடைந்து எல்லையற்ற பேரின்பத்தோடு வாழ்ந்திருந்தாள்.

முத்தாயியம்மைக்கதி முற்றிற்று.

பதின்மூன்றாவது

சித்தராமையர் கதி

அழகிய சித்தராமையரிடத்திற்கு அல்லமதேவர் சென்று அவர்க்குச் சொல்லியருளின சிறந்த நிலைமைச் சொல்லுவோம். தம்மையடுத்த அன்ப ரெல்லாருக்கும் கொடிதாகிய பிறவித் துன்பத்தை யொழித்து, மெய்ஞ் ஞானத்தையும் அதனாலுண்டாதற்குரிய பேரின்பத்தை யும் அருள்செய்வோராகிய அல்லமதேவர், கர்மயோகத் தையும் மற்றைக் கிரியைகள் எல்லாவற்றையும் அநுஷ் டித்து வாழ்கின்ற சித்தராமையரது பட்டணத்தை யடை ந்து, அவரது ஏவலாட்கள் செய்கிற கோயில் திருப்பணி, தடாகம், சோலை, நந்தவனம் முதலியவற்றை யுண்டாக்கல் முதலிய கிரியைகளைக் கண்டு, இந்தச் சித்தராமையர் பய னில்லாத செயல்களைச் செய்துகொண்டிருப்பவர்; அறி வென்பது இவர் இருக்கும் ஊரிலு மிருக்காதென்று இகழ் ந்து, "இவர் இல்லறத்தை வெறுத்துத் துறவறம் பூண் டிருந்தும் இந்த வீண்காரியங்களில் பிரவேசித்திருப்பதை நோக்குமிடத்து, இரும்புவிலங்கை நீங்கிப் பொன் விலங்கு பூண்டுகொண்டாற்போ லிருக்கின்றது" என்று நினைந்து, அங்கே ஒரு தடாகத்தைத் தோண்டிக்கொண்டிருப்பவர்க ளிடத்திற்போய் அவர்களை நோக்கி, "இந்தச் சித்தராமை யர் உமியைக் குத்துவோர்போலப் பயனற்ற வீண்காரியங் களிற் பிரவேசித்திருக்கிறாரே; விழலுக்கு முத்துலைபோட் டிறைப்பதுபோல உங்களை யிந்தக் கஷ்டமான தொழில் செய்யும்படி யேவினாரே; இந்த ஒட்டராமரது கருத்து யாது?" என்று வினவ, இவர் வினவின சொற்கள் அந்த

ஓட்டாது காதுகளில் கொல்லனுலைக்களத்திற் காய்ந்த வேல்போல நுழைதலும், அவர்கள் பிரபுதேவரை நோக்கி, "நீ பித்தனாயிருக்கிறாய்; எமது குருநாதனை யிகழ்ந்து தகாத வார்த்தைகள் சொல்லினை; தேவர்களும் சிஷ்டனென்று புகழ்தற்குரிய எங்கள் சித்தராமையரை ஓட்டனென்று இகழ்ந்துரைத்தாய்; நீ துஷ்டனா யிருக்கிறாய்" என்று சொல்லிக் கோபித்து முகஞ்சுளித்துக்கொண்டார்கள். அப்போது அல்லமதேவர் அந்த ஓட்டரை நோக்கி, "நீங்கள் ஏன் வீணாக் கோபித்துக்கொள்ளுகிறீர்கள்? உமது குருவாகிய ராமரிடத்தில் சித்தர் செயல் சிறிதுமில்லாமையால் அவரை உங்களைப்பார்க்கிலும் சிறந்த ஓட்டனென் றழைக்கிறேன்" என்றார். இதைக்கேட்ட ஓட்டர்கள் அல்லமதேவரை யழைத்து, பெரியோர்களால் நியமிக்கப்பட்டு உலகத்தில் நிலைபெற்றிருக்கிற நல்ல தருமங்களைச் செய்வோன் தேவனென்றும், அவற்றை யிகழ்ந்தவன் நரகத்தை யடைவானென்றும் நல்லோர் சொல்லுவர். நிக்கருமங்களை யொழித்து நற்கருமங்களைச் செய்வோரை யறிந்து அவரோடு உறவுசெய்தாயில்லை; ஆதலால், நீ தர்மமார்க்கத்தை விட்டவனா யிருக்கிறாய்" என்று சொன்னார்கள். அது கேட்ட அல்லமதேவர் ஓட்டரை நோக்கி, இருவினையொப்பு மலபரிபாகங்களை யுடையவர்கள் என்னைக் கொண்டாடுவார்கள்; நீங்கள் வினைவசப்பட்டு முழல்வோர்களாதலால் என்னை யறியீர்கள்" என்றார். அதுகேட்ட ஓட்டர்கள் "சற்கருமமும் எனக்கு உடன்பாடில்லையென்று சொல்லினையாதலால் உனக்கொரு நற்கதியுமில்லை" என்று அல்லமதேவரைச் சினந்துரைத்தார்கள். அதற்கு அல்லமதேவர் அந்த ஓட்டரை விளித்து, "கல்வியில்லாத மூடர்களே! நீங்கள் வீணாய் என்னோடு ஏன் தர்க்கம் பேசுகிறீர்கள்? நீங்கள் போய் உங்கள் குருவாகிய கற்றறி மூடனுக்குச் சொல்லுங்கள்; அவன் இங்கே வருவானாயின் அவன் சொல்லுஞ் சொற்களைக் கொண்டு அவனது அறிவினெல்லையுங் காண்போம்" என்றார். சித்தராமனை மூடனென்று அல்லம

தேவர் சொன்ன சொல்லானது, அந்த ஒட்டர்களுடைய கோபமாகிய நெருப்பில் வார்த்த நெய்போலிருந்தது. அதனால் அவர்கள் யாவரும் தமது அழுக்குத் துணியை யிறுக்கிக் கட்டிக்கொண்டு, கோபமிகுதியால் பல்லைக் கடித்துப் பெருமூச் செறிந்து மீசையை முறுக்கி நகைத்து, தமது முரட்டுக்கைகளால் கற்களைப் பொறுக்கி மடியில் கட்டி வைத்துக்கொண்டு, "நமது குருவை யிகழ்ந்தவனாகிய இவனைக் கல்லாலெறிந்து கொல்லுவோம்" என்று அல்லமதேவரைச் சூழ்ந்துகொண்டு, "கட்டுங்கள்! பிடியுங்கள்! உங்கள் கையிலிருக்கிற மண் வெட்டியினால் வெட்டுங்கள்! நிந்தித்த வாயிலுள்ள வெண்பறகளைத் தட்டுங்கள்! தலை வீங்கும்படி குட்டுங்கள்!" என்று மனங்கொதித்துக் கூறி, அல்லமதேவரது திருமேனியின்மீது தம் கை சலிக்கும்படி கல்மழை பெய்தார்கள். பெய்தும் ஒரு கல்லாயினும் இவர் திருமேனியின்மீது படவேயில்லை. முற்காலத்தில் சாக்கியநாயனா ரெறிந்த கல்லேயன்றிப் பிறரெறியுங் கற்கள் பரமசிவரூபமாகிய அவர் திருமேனியிற் படுமோ? ஒருவன் தனது சரீர நிழலைப் பூமியிற் புதைக்குந்தோறும் அந்த நிழலானது புதைபடாமல் மேலெழுந்து நிற்பது போல, அந்த ஒட்டரெறிந்த கற்குவியலின்மேல் அல்லமர் நின்றார். "ஒருவன் தீங்கு செய்தால் அவனைத் தண்டிப்பவன் அதமனென்றும், அந்தத் தீங்கைப் பொறுத்துக்கொள்வோன் மத்திமனென்றும், அதனை மறந்துவிடுவோன் உத்தமனென்றும் பெரியோர் சொல்லுவார்கள். எதிரே நின்று பல தீமைகள் செய்தாலும் அவற்றை யெல்லாம் உடனே மறந்துவிட்டு, தாமரை மலர்போல முகமலர்ச்சி யுள்ளவனாய் நிற்கிற இவன் யாவனோ? எங்கிருப்பவனோ? தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனோ? தாமரைக் கண்ணனாகிய திருமாலோ? இடப வாகனனாகிய சிவபெருமானோ? என்று சொல்லவு மொண்ணாது! ஏனென்றால், அவர்கள் தீமை செய்வோரைத் தண்டிப்பவரா யிருக்கிறார்கள். இவன் தீமைசெய்வோ ரிடத்திலும் நன்மை செய்பவனாயிருக்கி

ருன்" என்றிவ்வாறு கண்டோர் சொல்லி நின்றார்கள். கல்லெறிந்து கைசலித்து நின்ற ஒட்டர்களோ வென்றால், அல்லமர்மீது கல்லெறி படாமையைக் கண்டு, இவன் மந்திர வித்தையில் வல்லவனென்று நினைந்து, "இவனை வலிந்து பற்றிக் கொல்லுவோம்" என்று கிட்டிவந்தார்கள். வருதலும், பல குடங்கள்தோறுமுள்ள நீரில் சந்திரன் பிரதிபிம்பித்துத் தோன்றுதல்போல, அநேக சரீரங்களை யுண்டாக்கி, அவையாவினும் அல்லமர் பிரதிபிம்பித்துத் தோன்றி நின்றார். அப்போது அந்த ஒட்டர்கள் திகைத்து நின்று, "இத்தனை அல்லமர்களுக்குள்ளே நாம் எந்த அல்லமனைப் பற்றுவோம்! உண்மையான அல்லமன் இன்னானென்று தெரியவில்லையே" என்று மனமயங்கித் தங்கள் தலைவனாகிய சித்தராம னிருக்குமிடத்தை யடைந்து, "ஐயனே! நாங்கள் வேலைசெய்யு மிடத்தில் யாரோ புதியன் வந்து உன் பெருமையை அறியாமல் உன்னைப் பலவாறு இகழ்ந்து பேசினான்; அப்படி அவன் இகழ்ந்து பேசக்கேட்டும் இன்னமும் நாங்கள் உயிர்விடாம லிருக்கிறோம்" என்றார்கள். அதுகேட்ட சித்தராமனுக்கு, அல்லமதேவரது திருவடியை யடைந்து உண்மை ஞானம் பெறுதற்குக் கருவியாகிய ஒரு பெருங்கோப முண்டாயிற்று. உண்டாதலும், "என்னை யிகழ்ந்தவன் யாவனோ அவனது நாவை யறுத்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே யெழுந்து, "என்னை வைதவன் யார்?" என்று நெருப்புப்போல அல்லமருக் கெதிரே வந்தான். அல்லமதேவரும் அவனது கோபத்தைத் தெரிந்துகொண்டு, தலையையும் கையையும் அசைத்துப் புன்னகைசெய்து, "தோண்டுகின்றவர்களைத் தாங்கும் நிலம்போலப் பொறுமையுடையை யாதலால் நீ பெரிய தவத்தையுடைய யோகியாவாய்; பிறவி நோயை அனலிலிட்ட பஞ்சுபோல உருவழித்தற் குரியது பொறுமையே யாமென்று துணிந்திருக்கின்றனைபோலும்; காலன் உனக்கெதிரே பொறுமை யுள்ளவனாவன்; ஆலாகலவிஷம் நல்ல அமிர்தமாகும்" என்றிவ்வாறு அவனது

பொறுமையையும் தவத்தையும் புகழ்பவன்போல இகழ்ந்தார். அதைக்கேட்ட சித்தராமன் அடிக்குந்தோறும் பந்து விசைகொண் டெழுவதுபோல, முன்னிலும் கோப மதிகரித்து அல்லமரை நோக்கி, "உனக்கு நான் ஒரு அபராதமும் செய்யாதிருக்க, என்னைக் குறிப்பாயும் வெளிப்படையாயும் நீ யிகழ்ந்தமையால் நான் பொறுக்கமாட்டேன்; எனது நெற்றிக் கண்ணுகிய நெருப்பினுல் உன்னை வறுத்துப் பொடியாக்கிவிடுவேன்; ஒருவன் வீணுயிகழ்ந்து பேசினுல் யார்தான் பொறுப்பார்கள்?" என்முன். அது கேட்ட அல்லமர் சித்தராமனை நோக்கி, "தன்னைக் கொல்லினும் பிறிதோருயிரைக் கொல்லுதல் பாவமென்று அறிஞர் சொல்லுவார்கள். உனக்குத் தருமத்தைப் போதித்த என்னைக் கொல்லுவேனென்று நீ சொன்னதனுல் நீ தருமவானே. சாதநங்களுள் நீறும், பெரிய தவங்களுள் உயிர்க்கொலை செய்யாமையும், பாவங்களுள்ளே உயிர்க்கொலை செய்தலும் சிறந்தனவென்று பெரியோர் சொல்லுவர்; இதனை நீ யறிந்திலைபோலும்" என்றுர். என்று சொல்லுதலும், சித்தராமன் மறுபடியும் அல்லமரை நோக்கி, "நீ உன் செருக்கொழிந்தாயில்லை; என்னெதிரே செவிசுடு சொற்களைச் சொல்லி நின்றுய்; உன்னை விடமாட்டேன்" என்று மிகவுங் கோபித்துத் தனது நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணைத் திறந்தான். நெற்றியிலுள்ள நெருப்புக்கண் காமனை யெரிப்பதன்றிக் காமமில்லாத யோகியைச் சுடாதாதலால், அந்த நெற்றிக்கண் நெருப்பானது அல்லமதேவரது திருவடிக்கீழ்ச் சென்று வணங்கியது. அப்படி வணங்கி மீண்ட நெற்றிக்கண் நெருப்பானது, ஒரு வீரன்மேற் பாயத் துணிந்துபோய் அவனது வீரத்தன்மையைக் கண்டு வலிகுன்றி, வேருெரு பேடியின் மீது பாயச் செல்லுதல்போல, சித்தராமனது பட்டணத்திற் பற்றிக் கொண்டது. சிவபெருமானது நெற்றிக்கண்ணெருப்பானது முப்புரத்தை யெரித்தாற்போலச் சித்தராமனது நெற்றிக் கண் நெருப்பானது அவனது நகரையே யெரிக்கத்

தலைப்பட்டது. அப்போது அந்நகரத்திலுள்ள ஆபரணங்களெரிந்தன; சிறந்த ஆடைகளெரிந்தன; சந்தன மரத்துண்டுகளெரிந்தன; பரிமள திரவியங்களெரிந்தன; ரத்னங்களெரிந்தன; இதைப் பார்த்தவர்களுடைய வயிறுகளும் எரிந்தன. அந்நகரத் துள்ளவர்கள், குழந்தைகளை யெடுப்பவரும், முதியோரை யிழுப்பவரும், புதையலை யெடுப்பவரும், புகவொண்ணுமல் மண்ணிற்புரண்டு வாயடித்துக் கொள்பவரும், நெருபபை யவிப்பவருமாகிப் பதைத்துக் கடல்போல இரைந் தழுதார்கள். இந்த நெருப்பின் வெப்பத்தால் ஆகாயகங்கையுங் கொதித்தது. அப்பொழுது, அருட்கடலாகிய அல்லமதேவர், அந் நகரத்தாரது துன்பத்தை யொழிக்க நினைத்து, முற்காலத்தில் ஆலாகல விஷத்தையுண்டு தேவர்களைக் காத்ததுபோல, இந்த நெருப்பை ஒரு இமைப்பொழுதில் தணித்து, அந் நகரமானது முன்னினும் அதிகமாகப் பிரகாசிக்கும்படி செய்தருளினார். ஒரு கம்மியன் கண்டபடி செய்த ஒரு பொன்னுபரணத்தை, மற்றொரு கம்மத் தொழிலிற் சிறந்தவன் வந்து அழித்து நன்றாகச் செய்ததுபோல, அந் நகரத்தை முன்னினும் நன்றாகப் புதுக்கினதைக் கண்ட சித்தராமன் தன் செருக்கொழிந்து, நாணமடைந்து முகங்கருகி நின்று, "இவன் என்னை யாட்கொள்ளவந்த பரமசிவனே யாவன்" என்று மனத்திலெண்ணி, அல்லமதேவரை நோக்கி, "நீயேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்; குழந்தைகள் செய்த பிழையைத் தாயன்றிப் பொறுப்பவர் யாவர்?" என்று சொல்லி அவரது திருவடியில் வீழ்ந்து வணங்கினன். அப்பொழுது பரமசிவ வடிவாகிய அல்லமர், "முற்காலத்தில் கைலாயமலையை அசைத்தெடுத்த ராவணன் வலிதொலைந்து பிரார்த்திக்க அவனது பிழையைப் பொறுத்து அவனைக் காத்தருளினாற்போல, இந்தச் சித்தராமன் செய்த பிழையைப் பொறுத்தருளிக் கையினை லெடுத்தணைத்து, "கல்வியையும் தவத்தையும் அழிக்கின்ற கோபத்தைப் பற்றற விடக்கடவாய்" என்று

சொல்லிப் பின்னும் சொல்லுகிறார்: "கோபம் தன்னின் வலியவனிடத்திலும், சமானமானவனிடத்திலும் செல்லாதாதலால், அவரிடத்தில் கோபத்தைக் காப்பது அறமெனப்படாது; செல்லுமிடமாகிய மெலியாரிடத்திற் கோபத்தைக் காப்பதே அறமெனப்படும். வைதவனை வாழ்த்தினவனாகவும், தீமை செய்தவனை நன்மை செய்தவனாகவும் கொள்வோன் முத்தியைக் கண்டவனாவன்; அவ்வாறு கொள்ளாதவன் பாமரனேயாவன். பெரியோரைக் கோபிப்பவன் மலையைக் கல்லிய கோலை நிகர்ப்பான்; சமானமானவர்களைக் கோபிப்பவன் தன்னால் செய்யப்பட்ட தீங்குகள் யாவும் அவர்களால் செய்யப்பட்டு வருந்துவான். இழிந்தவரைக் கோபிப்பவன் எரிவாய் நிரயத்தில் வீழ்வான்; ஆதலால் மிக்கார், ஒத்தார், இழிந்தவர் என்னும் மூன்றிடத்தும் கோபங் கொள்ளாதிருத்தலே நன்மையாகும். இந்தக் கோப மில்லாதிருத்தல் நமக்கு மாத்திரமே யன்று; தேவர் முனிவர் முதலியோர்க்கும் நன்மையேயாம்" என்று சொன்னார்.

அதுகேட்ட சித்தராமன் அல்லமரை நோக்கி, "சுவாமீ! முத்தி யடைதற்குரிய சாதனங்களொன்றும் என்னிடத்தி லில்லையாயினும், என்னை வலியவந் தாட்கொண்ட நன்மையே நன்மையாகும். மதயானையை வலிந்து பற்றித் திருத்திக் காலாலிட்ட வேலையைத் தலையாலே செய்யும்படி செய்துகொள்வதன்றி, அது தானே வந்து உறவாவதுண்டோ? அதுபோலவே, அடியேனையும் தேவரீர் திருத்தி யாட்கொள்ளுதல் தகுதியாம். வெற்றி மிகுந்த மஹாவீரனது வீரத்தன்மை எதிர்த்தோரது படைமேற் செல்லும்போது விளங்குதல்போல, தேவரீரது அருள்வலி என் தீமைத் திரட் கொலையால் காணப்படும்" என்று சொல்லி வணங்கினான். வணங்கின அந்தச் சித்தராமனை அல்லமதேவர் அருளோடு பார்த்து, "பக்குவியாகிய இவனுக்குப் பேரின்ப முத்தி யுண்டாகும் வழியைத்

தெரிவிப்போம்'' என்று திருவுளம்பற்றிச் சொல்லத் தொடங்கினார்: ''பக்குவி யல்லாதவனுக்கு வேதாகம முடிவாகிய பொருளை உபதேசிப்பவன் அநாசாரியனாவன். அவன் ஆசாரியரிற் பதடியென்றுஞ் சொல்லப்படுவன். பக்குவம் பார்த்து உபதேசிப்பவன் ஆசாரிய சிங்கமென்று சொல்லப்படுவன். பரமஞான மொன்று மாத்திரம் முத்திக் கேதுவாகும். மற்றைச் சரியை, கிரியை, யோகங்கள் ஞான முண்டாவதற் கேதுவாகும் என்று வேதங்கள் சொல்லாநின்றன. ஆதலால், இந்தச் சரியை, கிரியை, யோகங்களை மேலான பொருளா யெண்ணிக் களிப்பவர் கீழ்மக்களேயாவர். கருமமும் யோகமும் மனத்தைப் பரிசுத்தமாக்கி விஷயங்களிற் செல்லாது தடுக்கும். அந்த மனத்தால் ஈசுவரன் நித்தியன் என்கிற ஞானந் தோன்றும். ஞானந் தோன்றுதலும், அநித்தியமா யழிந்தொழிகின்ற பொய்யுடம்பும் அதற்குரிய பொருள்களுமாகிய இவற்றை வெறுத்துச் சற்குருவைச் சென்றடைந்து, தத்துவங்களை யெல்லாங் கடந்து நின்ற ஒப்பற்ற பிரமப்பொருளையே தரிசித்துக் கொண்டிருப்பான். ஐம்புலன்களையும் களைந்தவுடனே ஐம்பொறிகளும், ஐம்பூதங்களும், கரணங்கள் நான்கும், மற்றைக் கலை முதலிய ஐந்தும், சுத்தமுதலிய ஐந்தும், அடியில் வைக்கப்பட்ட குடம் விழுந்தால் மேலே வைக்கப்பட்டிருக்கிற குடங்களெல்லாம் ஒருங்கே விழுவதுபோல அழிந்தொழியும். பஞ்சேந்திரியங்களையும் ஒவ்வொன்றாய் விட்டால், அவை ஏனைய விஷயங்களிற் சாரும். முதன்மையாகிய மனத்தை யொழித்தால் எல்லா மொழியும். அது எது போலவென்றால், ஐந்தலை நாகத்தின் தலையொன்றை யறுத்தால், மற்றைத் தலைகள் விஷத்தைச் சிந்திக்கொண்டேயிருக்கும்; அதன் கழுத்தை யறுத்துவிட்டால், விஷமுழுதும் நீங்கிப்போம்'' அதுபோல என்று சொன்னார். ''அன்றியும் மனமடங்கினால் உடலுயிர்கள் ஒன்றற்கொன்று பேதமானவையோ அபேதமானவையோ என்னும் பித்து நீங்கிவிடும்'' என்று உண்மை ஞானத்தை உபதேசித்தருளினார். அப்

பேர்து சித்தராமன் அல்லமதேவரை அடிவணங்கி, "என்போல உன்னருள் பெற்றவர் ஒருவருமில்லை" என்று புகழ்ந்து குற்றேவல் செய்யாநிற்க, அல்லமதேவர் சொன்னலாபுரத்தி லெழுந்தருளி யிருந்தார்.

சித்தராமையர்கதி முற்றிற்று.

பதினான்காவது

வசவண்ணர் கதி

சித்தராமனோடு ஆசாரிய சிரேஷ்டராகிய அல்லமதேவர், பக்தர்களாகிய பயிர்களை விளைவிக்கின்ற கல்யாணபுரி யென்னுங் கழனியில் பாய்ச்சிய நீர் என்று சொல்லுதற்குரிய வசவண்ணரைப் பயிரிடு மாந்தர்போலக் கண்டு, உண்மையாகிய தமது விருப்பத்தை அந்தக் கல்யாணபுரியின்மீது வைத்த செய்தியை யாம் இனிச் சொல்லுவோம்.

எவ்வாறெனில், சொன்னலாபுரம் தவஞ்செய்ததென்று விண்ணுலகத்தாரும் துதிக்கும்படி அல்லமதேவர் அவ்விடத்தில் எழுந்தருளி யிருக்குங்காலத்தில், அழகு பொருந்திய கல்யாணபுரியாகிய நந்தனவனத்தில் வசவண்ணரென்னும் தாமரைமலரின் அவரது கீர்த்தியாகிய வாசனை அவரது இனிய மொழியாகிய காற்றினால் வந்து காதென்னும் மூக்கில் நுழைய, இந்தப் பெரிய உலகமானது மிகவும் சந்தோஷ மடைந்தது. வசவண்ணரது மேலாகிய புகழ்கள் பரமசிவனது கீர்த்தியாகிய சோற்றை யுண்பதற்குத் தகுதியாகிய இனிய சுவையையுடைய வியஞ்சன பதார்த்தமாக வசவண்ணரது சிறந்த புகழ்கள் அமையப்பெற்றன. அவற்றைப் பெருந்தவத்தினர் கூடி யுண்ணுதற்குரிய நாவினால் பிறவிப் பசி தொலையப் புசித்தார்கள். பிறவியை நீக்குகின்ற சித்தராமனுக்கு முன்னே சொல்லிய சச்சிதானந்த முதலிய இலக்கணங்களுக்கு வசவண்ணரென்னும் இலக்கி

யத்தை உதாரணங் காட்டுதற்பொருட்டு அல்லமதேவர் திருவுள்ளத்தில் நினைத்தருளினர். அடியவர்க் கெளியவ ரென்று சொல்லப்படுகின்ற அந்த அல்லமதேவர் சித்த ராமனை யழைத்துக்கொண்டு கல்யாணபுரிக்குப் பிரயாணப் பட்டுபோய், அங்கே வசவண்ணரைக் கண்டு இருவரும் மனமகிழ்ந்து, அந்த வசவண்ணர் உண்டாக்கி வைத்த தர்மசத்திரத்தில் தங்கித் தமது வழிநடந்த இளைப்பை ஆற்றிக்கொண்டு, சிவனடியார் கூட்டம் செல்லக் கண்டு, அதன்பிறகு அலங்காரகாண்ட மென்னும் கல்யாணபுரத் தைக் கண்டு செல்லும்போது, சித்தராமனை நோக்கி, "இந்த நகரத்தின் அலங்காரம்போல வேறெந்த நகரத்திலாயினும் கண்டதுண்டா!" என்று அவ்வலங்காரங்களைத் தனித்தனி யே காட்டிக்கொண்டே போய், வசவண்ணரது திருமாளி கைக்கெதிரே மலைபோலுயர்ந்து தோன்றுகின்ற கோபுர வாயிலை யடைந்து, அவ்விடத்தில் பெருந்தவத்தினரது கூட்டத்தைக் கண்டார்கள். அவர்களில்; சிலர் அறுசுவை யுணவை யுண்ண வருவாரும், உண்டு தெருவில் வந்து நிற்பாரும், பெரியோரிருக்கு மிடத்திற்கு அன்னக்காவடி சுமந்து செல்வாரும், மணம்பொருந்திய மலர்களை யெடுத் துக்கொண்டு பரமசிவனைப் பூஜை செய்யப் போவாரும், தமக்குக் கொடுத்த ஆடையைத் துண்டு துண்டாகக் கிழித் துக் கோவணமாக்கி மிகுதியானதை அங்குள்ளார்க்குக் கொத்துவிட்டுப்போவாரும், பொன், ரத்நங்கள், ஆடை முத லியவைகளைத் தமது தேவியர்க்குக் கொடுக்கப்பெற்றுக் கொண்டு போவாரும், நிந்தித்து எம்மோடெதிர்த்த சமண ருடைய வலியை வசவண்ணருக்குத் தெரிவிப்போமென்று போவாரும், வசவண்ணரைக் கண்டு வணங்கும்பொருட்டு சிவிகை ஏறிவந்து இறங்கிப்போவாரும், வசவண்ணரைப் புகழ்ந்து பாடும்பொருட்டு வீணைகொண்டு செல்வாரும், ஆக இவ்வாறு அடியவர் கூட்டம் நெருங்கின. வசவண்ணர் தலைவாயிலில் அல்லமதேவரும் சித்தராமனும் நின்று அந்தக் கோலாஹலத்தை நோக்கிக் களிப்படைந்தார்கள்.

அப்பொழுது அங்கிருந்த அப்பணன் என்னும் பெயரை யுடைய ஒரு பரிசுத்தன் இவர்களைக் கண்டு வசவண்ண ருக்கு இவர்களுடைய வரவைத் தெரிவிக்கப்போய், வச வண்ணர் பூஜைசெய்து கொண்டிருக்கையில், "பரமசிவனே இரண்டுருவங் கொண்டுவந்தாற்போல இரண்டுமஹான்கள் நமதுவாயிலில் வந்துநிற்கிறார்கள்" என்று சொல்ல, வசவண் ணர் அவனை நோக்கி, "கன்றுக்கிரங்கிவந்த தாய்ப்பசுவுக்கு ஒரு தடையுண்டோ? நீ போய் அவர்களை யிங்கே யழைத்து வா" என்று கட்டளையிட, அவனும் அப்படியே போய் அல்லமதேவரையும் சித்தராமனையும் வணங்கி, "ஐயன்மீர்! தங்கள் வரவை அடியேன்போய்ச் சொன்னமாத்திரத்தில், வசவண்ணர் மிகவுங்களிப்படைந்து, "நான்செய்த பரசிவ லிங்கபூஜையின்பயன் இதுவாம்" என்று கூறி, உங்களை யழை த்து வரும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டார். எழுந் தருளக் கடவீர்கள்" என்று பிரார்த்திக்க, அல்லம தேவர் கோபிப்பர்போல வெளிக்குக்காட்டிப் புன்னகைசெய்து அப் பணனை நோக்கி, "ராஜஸீக முடையோரிடத்தில் ஐயமேற் றுண்பவர்களாகிய எங்களுக்கு ஒரு காரியமுமில்லை, நீ போ," என்றார். இந்தச் செய்தியை அப்பணன் வசவண்ண ருக்குச் சொல்ல, அவர் மிகவும் மனம் வருந்தி, "ஐயோ! தாய்ப்பசுவின் வருகையைக்கேட்ட கன்று தும்பறுத்தோடி யணைவதுபோல நானெழுந்து விரைந்தோடி அவர்களை யடையா திருந்தேனே" என்று துக்கிக்கும்போது, மாச்சி தேவன் அருகேவந்து நின்று, "ஏன் துக்கிக்கிறீர்? திருப் பாற்கடலிற் பிறந்த அமிர்தமானது கிடைத்தால் அதனை யுண்ணாது சோம்பி யிருப்பவர்க்குச் சமானமாயிருக்கி றீரே!" என்று சொல்லுதலும், அந்தச் சொல்லானது தூண்டுகோல்போல உதவ, விரைவாயெழுந்து மாச்சிதேவ னை யடிவணங்கி, "நான் பெரும் பிழைசெய்தேன்" என்று சொல்லி, அருந்தவத்தினரோடு கூடி அல்லமதேவர்க்குச் சமீபத்தில் வந்து, "அடியேனது குணம் பாவமேயாகி, யான் அந்தக் குணத்தினின்றும் மாறுபடா திருக்கிறேன்;

அதுபோலவே தேவரீரும் உமது குணமாகிய அருளில் நின்றும் மாறுபடா திருத்தல் வேண்டும். புதல்வர்செய்த பிழையைப் பொறுக்காத தாய் உலகிலுண்டோ? யான் சூத்திரப்பாவை; தேவரீர் அந்தப் பாவையை இயக்குவிக்குஞ் சூத்திரியா யிருக்கிறீர்! என் பிழையைப்பொறுத்தென்னையாட்கொள்ள வேண்டும்'' என்று அல்லமதேவர்து திருவடிமேல் வீழ்ந்து வணங்கினர். "நிலமகள் தாங்காமல் தள்ளிவிட்டால் தாங்குவோர் வேறு யாவருளர்? கடல் புரண்டால் அதைத் தடுப்பவர் யார்? அதுபோல் தேவரீர் கோபித்தால் அதைத் தடுத்துக் கொள்ளவல்லார் உலகிலுண்டோ?'' என்று சொல்லி மீண்டும் வணங்கினர். மாச்சிதேவரும் அல்லமதேவரை வணங்கி, "இந்தச் சிறுவன் தேவரீரது திருவடிக்கு அன்பு செய்யத் தொடங்கு முன்னே இவனை முனியத்தகாது'' என்று சொல்லினர். அதன்பிறகு, கின்னரப்பிரம னென்பவன் வந்து, வசவண்ணரை அநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். மற்றும் அங்கிருந்த சிவனடியார் யாவரும் வந்து எங்களையெல்லாம் அடிமை கொள்ளத் திருவுளமாயின், இந்த வசவண்ணர் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். அவர்களை அல்லமதேவர் நோக்கி, "நீங்கள் பேசக் கற்றுக்கொண்டீர்களேயன்றி அவ்வாறு ஒழுகக் கற்றீரில்லை! இப்படி, மன மொருவகையாயும் செயலொருவகையாயு மிருக்கிற நும்மினும் கூத்தாடிகள் சிறந்தோராவர். அன்பில்லாதவர் கொடுத்த பொன் மலையளவாயினும் ஒரு பயனுமில்லை; அன்புள்ளவர் கொடுத்த பொன் அணுவளவாயினும் அது புண்ணியத்தைத்தரும். அன்பில்லையாயின், இல்லறம், துறவறம், தானம், தவம், கல்வி, நல்லோருறவு, யாகம், விரதம், பூஜை முதலிய யாவும் புண்ணியப்பயனைத் தரமாட்டா. அன்புடையான் செய்யும் தீமையும் நன்மையாகும்; அன்பில்லாதவன் செய்யும் நன்மையும் தீமையாகும். அன்பினல் முத்திப்பேற்றையு மடையலாம். ஆதலால் அன்பேயன்றிச் சொற்கள் மனமகிழ்விக்க மாட்டா'' என்

றிவ்வாறு சொல்லியருளுதலும், வணங்கிநின்ற மாச்சிதே வர் முதலானோர் மீண்டும் அல்லமதேவரை வணங்கி, "தேவரீரது கருணையாலன்றி வேறு எதனால் நாங்கள் நல்ல வர்களாவோம்?" என்று பிரார்த்தித்தார்கள். அப்போது சித்தராமர் அல்லமதேவரை வணங்கி, "எட்டிக்கனியைத் தின்றாற்போலக் கடையேனது பிழையைப் பொறுத்தருளி னாய்; அதுபோலவே இந்த அன்பனாகிய வசவண்ணரையும் அநுக்கிரகிக்க வேண்டும்" என்று வணங்கினார். அதன் பிறகு, வசவண்ணரும் "அடியேன் உன் அடைக்கலம்; என்னை யாண்டருளவேண்டும்" என்று திருவடியில் வீழ் ந்து வணங்கினார். சென்னவசவரும் மற்ற அன்பர்களும் அல்லமதேவரைச் சூழ்ந்து வணங்கினார்கள். அப்போது அல்லமதேவர் தமது திருக்கரத்தால் வசவண்ணரை யெடுத்து அணைத்து அநுக்கிரகஞ் செய்து, அவரது திரு மடத்தில் அளவில்லாத அடியார்களோடு இனிதெழுந் தருளியிருந்தார்.

வசவண்ணர் கதி முற்றிற்று

பதினைந்தாவது

மருளசங்கர தேவர் கதி

மலைபோல உயர்ந்த பிரசாத குண்டத்தில் மருளசங்க ரன் என்பவரை அல்லமதேவர் கண்டு, அவருக்கு ஞானோப தேசஞ்செய்த சரிதத்தைச் சொல்லுவோம். அளவற்ற பெருந்தவத்தினர் புடைசூழ்ந்துவர, வசவண்ணர் வறிஞர் க்குக் கிடைத்த புதையல்போலத் தமக்குக் கிடைத்த அல் லமதேவரை உடன்கொண்டு தமது திருமாளிகைக்குச் செல்லத்தொடங்கினார்.

பற்பல அவஸ்தைகளை நீக்கிப் பரசிவத்தை யடை வோரது செய்கைபோலப் பல வாயில்களையும் கடந்துபோ

ய்ப் பிரசாத குண்டத்தை யடைந்து, அதன் கரைமீது பித் தரைப்போலத் திரிகிற மருளசங்கரனைக் கண்டு அவனது உண்மை நிலையை அறிந்து நிற்கிறபோது, இவரைக் கண்ட மருளசங்கரன் ஒரு வறிஞன் தேவாமிர்தத்தைக் கண்டாற் போல மனமகிழ்ந்து, விரைந்தோடிவந்து இவரது திருவடியின்மீது வீழ்ந்து வணங்கினான். வணங்கின மருளசங்கரனை அன்போடு அல்லமதேவர் தமது திருக்கரத்தால் எடுத்து மார்போடணைத்து அநுக்கிரகித்து, அருள்நிலையையுடைய சித்தராமரை நோக்கி, மருளசங்கரனது குணங்களை வியந்துசொல்லத் தொடங்கினார்:—"பிரசாத குண்டத்திற் பொருந்திய பிரசாதத்தை மிகுதியாய் உண்டு வாழ்கின்ற மருளசங்கர தேவரது உண்மைத் தன்மையை வசவண்ணர் முதலாகிய அடியார்கள் எல்லோரும் கண்டிலர். இனிக் காணவல்லார் யாவர்? சரியை, கிரியை, யோகம் என்கிற இவற்றை அநுஷ்டிப்பவர்களை அவரது செய்கையால் அறிந்துகொள்ளலாம்; ஓர் செயலுமின்றி வாழ்கின்ற ஞானியை அறியலாகுமோ? ஒரு சிவஞானியானவன் இல்லறத்தையாயினும் துறவறத்தையாயினும் தாங்கி இலைமறைகாய்போல இருப்பனென்று அறிஞர் சொல்லுவர்.

அன்றியும் வல்லவனென்று இருப்பினும் இருப்பன்; வல்லவனல்லாதவனா யிருப்பினும் இருப்பன்; யாவரும் இகழும்படி அற்பனாயிருப்பினும் இருப்பன்; புண்ணியத்தையுடைய நல்லவனாயிருப்பினும் இருப்பன். அறியவேண்டியவற்றை அறிந்த ஞானியாலன்றிக் கருமியால் வலிய பிறவி நீங்காது. அது எதுபோலவென்றால், சூரியோதயத்தினா லல்லாமல் இருள் நீங்காததுபோலாம். இந்த மருளசங்கரரது உண்மை நிலையை நீயும் காணக்கடவை" என்று சொல்ல, சித்தராமர் அல்லமரை வணங்கி, "ஐயனே! இந்த மருளசங்கரர் பித்தர்போ லிருப்பதற்குக் காரணம் யாது?" என்று வினவுதலும், அல்லமதேவர் சொல்லத் தொடங்கினார்:—"யாதாயினும் ஓர் தொழிலைச் செய்து பொருளீட்டி

அதனால் உயிர் வாழ்வோமென்றால், அதில் அநேக துன்பங்கள் விளையுமென் றெண்ணி அதனை யொழித்து, பரிசுத்தமுள்ள சரமூர்த்திகளாகிய சாதுக்கள் உண்ட மிச்சிலை உண்போமாயின் அதனால் பழியொன்றுமில்லை; நமது பிறவியும் ஒழிந்துபோம் என்று அறிந்து, இந்த மருளசங்கரர் பிரசாதக் குழியை நீங்காமல் இருக்கிறார். பிறவித்தளை நீங்கின சிவபக்தருடைய திருவடியை விளக்குகின்ற நீர்க்குழியில் வந்து பிறந்து முழுகி அதில் வாழ்கின்ற புழுவின் பெரும்பேற்றை, கங்கைமுதலாகிய புண்ணிய தீர்த்தங்களில் முழுகித் தமது தீவினைகளை யொழித்துக் கொள்ளுகின்ற அந்தணரும் அடையமாட்டார்கள் என்று வேதங்கள் சொல்லாநிற்கும். தாய்க்கும், மாதருக்கும், தந்தைக்கும், பசுவிற்கும், குழந்தைகளுக்கும், வேதியருக்கும் துன்பஞ் செய்த கொடிய பாவங்களையும் இமைப்பொழுதில் ஒழிக்கும்; அந்தக்கரணத்தைச் சுத்திசெய்து சிவசொரூபமாக்கி விடும். ஆதலால், சிவப்பிரசாதத்திற்கு நிகரானபொருள் வேறொன்றுளதோ? பசிக்குமருந்துமாகி, முத்தியைத்தரும் பெருமைவாய்ந்து, பிறவியை யொழிக்கின்ற சிவப்பிரசாதத்தின் பயனையறிந்து இவ்விடத்தில் வசிக்குந் தன்மை இந்த மருளசங்கரர்க்கே யன்றிப் பசிக்குச் சோறுண்ணும் மனிதர்க்கு உண்டாகுமோ?'' என்று சொல்லியருளினார். அது கேட்ட சித்தராமர், ''ஐயனே! மருளசங்கரரே தேவரீரை அறிவார், தேவரீரே அவரை யறிவீர்; இவ்வுலகில் வேறு யாவர் அறிய வல்லார்? பாம்பின்காலைப் பாம்பே யறியும்'' என்றுசொல்லி, அல்லமதேவரது திருவடியில் வீழ்ந்து வணங்கினார். அப்போது வசவண்ணர் வந்து அல்லமதேவரை வணங்கி, ''ஐயனே! பொற்புதையலின் மீதிருந்தும் துன்பப்படுவான்போல, மருளசங்கரரை நான் அறியாதிருந் தழிந்தேன். தேவரீர் இங்கே எழுந்தருளி அவரது பெருமையை எனக்கு அறிவித்தீர்'' என்று புகழ்ந்து நிற்க, அல்லமதேவர் அந்த வசவண்ணரை நோக்கி, ''நீ பரசிவ பக்தியில் சிறந்தவன்; மருளசங்கரர்போல் அளவற்றவர்கள்

உன் வீட்டு வாயிலில் இரவும் பகலும் நீங்காமல் காத்துக் கொண் டிருப்பாராயின், அவ்வாயில் புண்ணியவான்கள் தாம் செய்த தவப்பயனால் போய்த் தங்குகின்ற கைலாய மலையே யன்றோ? வெப்பம் எதன்கண் உண்டாயினும், அது வெவ்விய தீயின் குணமென்று சொல்லப்படுவதுபோல, மூன்றுலகத்தும் எவ்விடத்தாயினும் சிவபக்தி யுண்டாயின் அது உனதேயென்று இவ்வுலகத்தார் சொல்லாநிற்பர். ஆத லால், உன் பெருமையை யார் அறிவார்? பக்திக் கடலே! குணக் குன்றே! பாசப் பகையே! எம் முறவே! முத்திக் கரசே! சிவானந்த முதலே! ஞானமணி விளக்கே! சித்திப் பொருளே! அருள்நந்தி தேவே! உன்னைத் தொழும் அடி யார் புத்திக்கு அமுதே! உன்னைப்போல்வார் வேறு யாவரு ளர்?'' என்றுசொல்ல, வசவண்ணர் அல்லமரை நோக்கி, ''தேவரீர் அடியேனுக்குப் போதித்தருளிய நன்மைகளெல் லாம் உன்னைக் காணுது கழிந்த நாட்களில் இல்லை; உமது செந்தாமரை மலர்போன்ற திருவடியை வணங்கப்பெற்ற இன்று தொடங்கி யுளவாம்'' என்று சொல்லி வணங்கி எழுதலும், அவ்விடத்து நின்ற சிவசரணரெல்லோரும் மன மகிழ்ந்தார்கள். உலகத்தாரது அறிவை பந்தப்படுத்தின மலவிருளைத் தமது வாக்கினாலும், திருவுளக் கருத்தின் லும், அருணேக்கத்தாலும் முழுதும் ஒழிக்கும் பொருட்டு உதயஞ்செய்த ஞானசூரியனாகிய அல்லமதேவர், தேவர்க ளாலும் அறியப்படாத பொருளாகிய பேரின்ப அநுபூதி விளக்கத்தைத் தமது பெருங்கருணையால் மருளசங்கர தேவருக்கு அருள்செய்தார்.

மருளசங்கர தேவர் கதி முற்றிற்று.

பதினாறுவது

இஷ்டலிங்க கதி

அல்லம தேவரானவர் அருள் கூர்ந்து அன்போடு வசவண்ணர் ஞானத்தை யடையும்படி இஷ்டலிங்கத்தி னியல்பைச் சொல்லியருளின சரித்திரத்தை நம்முடைய வல்வினைகளெல்லாம் அற்றொழியும்படி சொல்லுவோம்.

மருளசங்கர தேவர்க்கு ஒப்பற்ற பேரின்ப வீட்டை அநுக்கிரகித்த அல்லமதேவர் வசவண்ணரது திருமாளிகை யில் போய் அநேக சிவபக்தர்களைக் கண்டார். அப்போது வசவண்ணர் இவரைக் கண்ட மாத்திரத்தில் ஒரு திவ்விய மான ஆசநம் சமர்ப்பிக்க, அதின்மீது வீற்றிருந்தார். இருத் தலும், வசவண்ணர் இவரது திருவடியை வணங்கி, நறுமலர் களா லருச்சித்துத் துதித்து நின்று, அடியேன் சிவபக்தி யை யறிந்துகொண்ட தன்மையானது ஊமையன் கண்ட கனாப்போலும்; இந்தச் சிவபக்தி மேன்மேலும் விருத்தி யாகும்படி அடியேனுக்குக் கிருபைசெய்யவேண்டும்'' என் றார். அப்போது அல்லமதேவர் வசவண்ணரை நோக்கி, நீ சிவபக்தர் கூட்டத்தோடு அமர்ந்திருக்கிறாய்; உனக்குச் சிவபக்தி மார்க்கத்தை ஒருவர் காட்டவும் வேண்டுமோ? சூரியனுக்கு இருளை ஒழிக்கும்படியான சக்தியை ஒருவர் தரவும்வேண்டுமோ?'' என்றார். அதுகேட்ட வசவண்ணர் அல்லமதேவரை நோக்கி, "சுவாமீ! தேவரீர் அடியேனை யிகழ்ந்து என் மனச்செருக்கை யழிக்காமல் புகழ்ந்தீர்; இப்படிப் புகழ்ந்தது புளிங்கறியிட்டு வியாதியை அதிகரிக் கச் செய்வதுபோ லிருக்கின்றது'' என்று சொல்லித் திரு வடியில் வீழ்ந்து வணங்கி, "உன் திருவடியை அர்ச்சிக் கும்படி எனக்கு நற்புத்தி யருள்செய்யவேண்டும்'' என்று பிரார்த்தித்தலும், அல்லமதேவர் சொல்லுவாராயினர்:—

"புல், மரம், நெளிகின்ற புழு, பறவை, மிருகம், முதலிய

பல பிறவிகளினின்றும் தப்பி மானிடராய்ப் பிறத்தல் புண்ணியான்மாக்களுக்கேயன்றி மற்றையர்க்கு அருமையாகும். அவ்வாறு மானிடராய்ப் பிறந்தாலும், நல்லறஞ் செய்யுஞ் சந்ததியிற் பிறத்தலருமை; அறஞ்செய்யுஞ் சந்ததி வாய்ப்பினும், அறத்தை வளர்த்தற்குரிய சரீரத்தைப் பெறுதலருமையாகும். அது பெற்றாலும், அன்போடு அறஞ்செய்தலருமையாகும். செய்தாலும், புறச்சமயங்களை விட்டு ஆகம நெறிச் சமயங்களை யநுசரித்த லருமையாகும். ஆகம நெறியை யடைந்தாலும், நன்மையாகிய சைவசமய நெறியை யடைவது அருமையாகும். அடைந்தாலும், ஏகலிங்க ஐக்கியமுறுதல் அருமையாகும். புண்ணிய விசேடத்தால் இஷ்டலிங்கத்தை உள்ளங்கையி லமைத்து எப்பொழுதும் அன்போடு பூசிப்பவன் பக்தனென்று சொல்லப்படுவான். கரிய காகத்தின் இருவிழியினும் ஒரு மணியேயிருந்து விளங்குவதுபோல, இஷ்டலிங்கமானது அகத்திலும் புறத்திலும் நீங்காது விளங்கிக்கொண்டிருக்கும். இஷ்டலிங்கமாகிய மேலான பொருளிலே இடையறாது விழித்துக்கொண்டிருப்பவன் இந்தப் பிரபஞ்ச மாயையை வென்றவனென்று வேதங்கள் சொல்லாநிற்கும். ஒன்றோடொன்று பொருந்த மூன்று உபாதிகளையும் வஸ்திர மடிப்பாகச்செய்து அதன் மீது இஷ்டலிங்கத்தை யமைப்பனாயின், அவன் அப்பொழுதே சிவரூபமாய் விடுவான். அருளென்கிற நீரினால் அபிஷேகஞ்செய்து,உபசாந்தமாகிய சந்தனத்தோடுபொருந்த, பஞ்சேந்திரியங்களாகிய நறுமலர்களைக்கொண்டருச்சித்து, அறிவாகிய நிவேதநம் சமர்ப்பித்தால் அவன் பரமசிவனுக்குச் சிறந்த பக்தனாவான். குற்றமற்ற மனத்திலுண்டாகிற அன்பையன்றி வேறு பூஜைகள் செய்ய விரும்புதலால் என்ன பயன்? மநோசாஞ்சல்ய முடையவன் அபிஷேகஞ் செய்யும் நீரானது சிவபெருமானது ஜடையிலுள்ள கங்கை நீரினும் சிறந்ததோ? எப்போதும் பூவோடு கூடிய கையினையும், பரமசிவனது புகழைச் சொல்லுகிற நாவையும் படைத்த ஒருவனை அப் பரமசிவனே யென்று தேவர்கள்

தோத்திரம் பண்ணுவார்கள். திரிபுராந்தகனுகிய பரமசிவனைப் பூஜைசெய்யாத கையினையும், அவன் புகழைப் பேசாத நாவினையும் படைத்தவனுகிய நீசனைப்பார்க்கிலும், காட்டிற் சஞ்சரிக்கிற குரங்கு சிறந்ததென்று சொல்லலாம். குடிப்பன, விழுங்குவன, கடிப்பன, நக்குவன என்னும் நால்வகை யுணவையும் உள்ளங்கையி லமர்ந்திருக்கிற இஷ்டலிங்கத்துக்குச் சமர்ப்பித்து உண்பவன், மேலே வரக்கடவனவாகிய வினைகளெல்லாவற்றையும் ஒழித்தவனுவன். தனது உடல், பொருள், ஆவி என்னும் மூன்றினையும் குருலிங்க ஜங்கமங்களுக்குக் கொடுத்து, யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை யொழித்திருப்பவன் மேலான சிவமென்னும் பொருளோடு வேறுபட்டவ னல்லன்.

குரு லிங்க சங்கமங்கள் ஏற்கும்படி அவர்களுக்குத் தத்தஞ்செய்த உடல்பொருளாவிகளை மீட்டும் நம்முடையனவென்று நினைப்பவனைப்பார்க்கிலும், வழிமடக்கிப் பறிப்பவனுகிய வனவேடன் உண்மையில் தவறுமையால் மிகவும் நல்லவனுவன். ஐம்புலன்களையும் வென்ற தவ வலியுள்ள வசவண்ணரே! தொன்றுதொட்டுவரும் ஜனனங்களை விஷமாக நினைத்து அஞ்சுகின்ற கருத்துடையார்களுக்கு விடத்தகுவன காமமும், கோபமும், மயக்கமும் ஆகிய இவைகளே; ஏற்கத்தக்கவை குருலிங்க சங்கமங்களே. உள்ளங்கையில் அமர்ந்திருக்கின்ற பரசிவலிங்கத்தைவிட்டு வேறே கொடிய தேவதைகளைவிரும்பி வழிபடுவோர், கங்காநதியை விட்டு உப்புக்கழியில் மூழ்குவோருக்குச் சமானமாவார். சிவவேடம் தாங்கின பெரியோர்கள் தனது பொருளைக் கொள்ளையிட்டாலும், தன்னை நிந்தித்தாலும், தன் பிள்ளையை யறுத்தாலும், தனக்குப் பல பிழைகளைச் செய்தாலும், அப்பெரியோர்களை யிகழாதவன் பரமசிவனுக்கு உண்மையான அன்பனுவன். அடியார்களுக்கு ஒரு ஜாதியை நிரூபிப்பவன் உள்ளங்கையில் அமர்ந்திருக்கின்ற பரமசிவனுக்கும் ஜாதி நிரூபணம் பண்ணினவனே யாவன். பரமசிவனை

யும் அடியாரையும் வேறென்றெண்ணுவோன் ரவுரவாதி நரகங்களில் மூழ்குவன். குருலிங்க சங்கமங்கட்காகவே உலையிற்போடும் அரிசியானது தேவாமிர்தத்துக்குச் சமமாகும்; தமக்கென்று உலையிற்பெய்யும் அரிசியானது நஞ்சினுங் கொடியதாகும். பரமசிவனை யிருத்திவைக்கிற இருதயத்தை யுடையவர்கள் ஆசையையும் அவ்விருதயத்தில் வைப்பார்களாயின், அந்தச்செய்கை ஒரு அந்தணன் வாசஞ்செய்கிற வீட்டில் ஒரு நீசனையும் கொண்டுபோய் வைப்பதற்குச் சமானமாகும்.

காலமும் கருமமும் கடந்த முதல்வனாகிய பரமசிவனிடத்துச் செலுத்தாமல், மாதர்களிடத்துத் தம் மனத்தைச் செலுத்துவோர் செய்யும் விரதம் முதலியன பயன்படா. கொலை, களவு, பொய், கோபம், ஆசை என்று சொல்லப்பட்ட இந்தத் தீக்குணங்களை யுடையவர்களுக்குக் கரதலாமலகம் போலப் பரமசிவன் உள்ளங்கையில் இஷ்டலிங்கமாயிருந்தாலும், அவர்களுக்குத் தூரமாயிருப்பவனே யாவன்" என்று இவ்வாறு அல்லமதேவர் அநுக்கிரகித்து வந்தவைகளைக் கேட்ட வசவண்ணரும் அல்லமதேவரைப் புகழ்ந்து பாடிப் பணிந்து, ஆனந்தக் கூத்தாடிச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினர். இவ்வாறாக உபதேசஞ்செய்து, அளவிறந்த பெரியோர் கூட்டத்தோடும் தங்கி, வசவண்ணர் மகிழும்படி அல்லமதேவர் எல்லா வளங்களும் நிறைந்த கல்யாணபுரியில் எழுந்தருளியிருந்தார்.

இஷ்டலிங்க கதி முற்றிற்று.

பதினேழாவது

கதலிவன கதி

மலைகளிலும், புண்ணிய வனங்களிலும், புண்ணிய நதிதீரங்களிலும் மாதேவி யென்பவள் அருளையுடைய ஞானாசிரியனைக் காணும்பொருட்டுத் தேடித்திரிந்து, இறுதியில் கல்யாணபுரியில் வந்து தரிசித்து மீண்ட சரித்திரத்தை இனிச் சொல்லுவோம். எப்படியென்றால், மாதேவியென்பவள், காடு மலை நதி முதலியவிடங்களிலும் பிறவிப்பிணிக்கு மருந்தாகிய ஞானாசிரியனைத்தேடிக் காணுதவளாய், அம்மருந்தானது கல்யாணபுரியில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அந்நகரத்தை யடைந்து, பரமசிவனிடத்தில் மிக்க அன்புடையவளாகிய இவள் அவர்போல வஸ்திரமின்றித் திகம்பரையாய் அந்தக் கல்யாணபுரியின் வீதியில் பிரவேசித்தாள். அவ்விடத்திலுள்ள பலரும் இவளைக் கண்டு, இவள் உலகினை யறியாதவளாய், மாதர்க்குரிய நற்குணங்களுள் சிறந்து முந்தி விளங்குகிற நாணத்தை விடுத்து இவ்வாறு திரிகிறாள்; இவள் பித்துடையவள்; உலகத்திலுள்ளோர்களை மூடரென்று எண்ணினாளோ? இப்படி ஆடையில்லாமல் திரிகின்றாளே!" என்று பல்வாறு பேசிக்கொண்டிருக்க, உலகத்தார்களுக்கு நாணமலும், ஆடையில்லாமலும் வசவண்ணரது மடத்தில் வந்து சேர்ந்தாள். அந்த மடத்தில் வசவண்ணரோடு பல அடியார்களும் நெருங்கிச் சூழ்ந்திருக்க, உயர்ந்து சிறந்த ஆசனத்தின்மீது எழுந்தருளியிருந்த அல்லமதேவரைக் கண்டு, அவர்க்கருகே சென்றனள். அங்குள்ளாரெல்லோரும் இவளது திகம்பர ரூபத்தைப் பார்த்துத் தாம் என்று மடையாத பெரிதாகிய ஆச்சரியத்தை யடைந்தார்கள். அப்பொழுது மாதேவியானவள் நெருப்பிலிட்ட அரக்குப்போல மனம் நெகிழ்ந்து, மிகவும் வாய்ச்சொற்கள் தடுமாறவும், வாள்போலும் கண்களில் நீர் சிந்தவும் நின்று, அல்லமதேவரைக் கைகூப்பி வண

ங்கி, "சுவாமீ! பிறவிப் பிணிக்கு அஞ்சினேன்; இனித் தேவரீர் அருள்செயல்வேண்டும்" என்றுசொல்லி அழு தாள். மோக்ஷவிருப்ப முள்ளவர்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் சரி; இவள் உமாதேவியின் அம் சமே; இவள்போல அதிதீவிர பக்குவ மடைந்தவர்கள் ஒருவருமில்லை. இவள் ஞானோபதேசம் பெறுதற்கு உரிய வளேயாவள்" என்று அல்லமதேவர் தம் திருவுளத்தில் நினைத்தருளினார். "இன்று காமனை வென்றவளிவளே; அன்று காமனை வென்றவன் அப்பரமசிவனே. இவள்போ லத் தேகாபிமானம் முழுதும் விட்டவர்க்கேயன்றி, இளமை செல்வ முதலியவற்றை விரும்பிப் பொய்யாகிய உலகவாழ் க்கையில் விருப்பம்வைத்த அற்ப மனிதர்க்கு அவர்கள் செய்த இருவினைகள் அவர்களைவிட்டு நீங்குமோ?" என்று அங்குள்ளார் சிலர் பேசிக்கொண்டார்கள். அப்போது அல் லமதேவர் இந்த மாதேவிபோலப் பக்குவப்பட்ட சிஷ்யர்கள் கிடைப்பது அரிதென்றெண்ணி, இவளுக்கு ஞானோபதே சஞ் செய்யத் திருவுளம்பற்றி, இவளை நோக்கி, "நீ பூதங் களல்லை, பொறிகளல்லை, புத்தியல்லை; இவைக ளெல்லா வற்றையும் நீயென்று மயங்குவதற் கேதுவாகிய அற்ப வுணர்வை யொழித்து ஜோதிசொரூபமாய் விளங்குகிற பிரமமே நீயாவாய்" என்று சொல்லி, மேலும் "ஞாதுரு ஞானம் ஞேயம் என்னும் இவை இருக்குமாயின் அந்த நிலை முத்திநிலையன்று, அது ஜகமாகும்" என, இது அது என்கிற சுட்டற்ற நிலையை மாதேவிக்கு அநுக்கிரகித்தார். அப்போது மாதேவியானவள் "தேற்றாங் கொட்டையால் தெளிவிக்கப்பட்ட நீர்போல என் மனம் தெளியும்படி செய்தருளின ஞானாசிரியனே! எனது உடல் பொருளாவி களே யன்றித் தேவரீருக்குக் கைம்மாறாகச் சமர்ப்பிக்க வேறு பொருளுடையே னல்லேன்" என்று ஆனந்தக் கண்ணீர் ஒழுகி நிற்க, அல்லமதேவரும் அவளை நோக்கி, "தாயே! நீ கதலிவனத்துக்கு வந்து என்னை யடைந்தாய்; நீ கேட்ட இந்த அர்த்த விசேஷங்களை யெல்லாம் உறுதி

யாக மனத்திற்கொண்டு நித்தியாசனத்தில் அமர்ந்திருக் கக்கடவை'' என்று கூறி அவளை யனுப்பிவிட்டார். அந்த மாதேவியும் அவ்வாறே அவரைத் திருவடிதொழுது விடை கொண்டு, ஸ்ரீசைலத்தை யடைந்தாள். வசவண்ணரிடத்து அல்லமதேவர் எழுந்தருளி விளங்குவதுபோல, அந்த ஸ்ரீ சைலத்தில் ஒரு கதலிவனம் விளங்கும். அந்தக் கதலி வனத்தை மாதேவியானவள் கண்டு, முனிவர் தேவர் முத லிய எல்லோரும் புகழும்படி அக் கதலிவனத்திலுள்ள செவந்த கனிகளை விரும்பி ஒருபுறத்தே வாழ்ந்திருந்தாள்.

கதலிவன கதி முற்றிற்று.

பதினெட்டாவது

சாதகாங்க கதி

எமது பிறவித் துன்பத்தை யொழித்து எமக்குத் தாய்போல அருள் செய்பவராகிய அல்லமதேவர் வசவண் ணருக்கு மனவடக்க முண்டாகும்படி யுபதேசித்த சரித்தி ரத்தைச் சொல்லுவோம். கதலிவனத்தில் மாதேவி செல் லும்படி திருவருள்செய்து, அவ்விடத்தில் தங்கியிருந்த ஞானதீபமாகிய அல்லமதேவரை வசவண்ணர் வணங்கிச் சொல்லுகின்றார்: ''பித்தராது தர்க்க வாதங்கள் அற்றொழி யும்படி சிறந்த முக்திசாதன மொன்றை அடியேனுக்கு உபதேசித் தீருளவேண்டும்'' என்று திருவடி தொழுது நிற்க, அவருக்கு அல்லமதேவர் சொல்லுவாராயினர்: ''பரம முத்திப் பதம் பெறுதற்கு ஹேது யாதெனில், அந்தக் கரண சுத்தியாம். அதற்குக் காரணம் திரிபுராந்தகனாகிய பரமசிவனது பூஜையேயாம். இவ்வாறு வேதங்கள் சொல்லா நின்றன. மனத்தைப் பரமசிவன் திருவடியில் அழுந்தும் படி நிறுத்திய வசவண்ணரே! மனம் இஷ்டலிங்கத்தில் பொருந்தாவிடில், தேகத்தில் இஷ்டலிங்கந் தரித்தும் பய னில்லையென்று சிவாகமங்கள் சொல்லாநிற்கும். மேலும்

உலகத்தில் அபிஷேகஞ் செய்யும் புனலும், அருச்சிக்கின்ற அழகிய பூவுங்கொண்டு தினந்தோறும் விதிவழுவாமற் செய்கின்ற பூஜையானது பரிசுத்த மனத்தோடு சேராது நீங்குமானால், அது உயிர் நீங்கிய பிணத்துக்கு ஒப்பாகும். அறிவில்லாதவன் பரமசிவனைப் பகிர்முகமாகத் தரிசிப்பன்; தன்னைத்தானறிந்த ஞானியானவன் அந்தர்முகமாகத் தரிசிப்பன். அது எதுபோலுமெனின், யானை கரும்பையே தின்னும்; ஆடு பலவகையான இலைகளைத் தின்னும்: அதுபோலாம் என்று அறிஞர் சொல்லுவர். கைகள் சிவபூஜை முதலிய புண்ணிய கருமங்களைச் செய்துகொண் டிருக்கும் போதும், மனமானது செல்லத்தகாத விஷயங்களில் சென்று உழலாநிற்கும். ஆதலால் மனத்தைப்போல வேறொரு பகையுமில்லை. உறங்கும்போது சுகமாயிருக்கின்றதென்று சொல்லுதல் ஐம்பொறிகளின் வழியே சென்று உழலாநின்ற மனம் இல்லாமையாலன்றோ? ஆதலால் மனம் விஷயங்களில் வியாபித்துத் திரிகின்ற ஜாக்கிராவஸ்தையில் சுகமென்பது சிறிதுமில்லை. மனமானது ஒருவன் வசப்படுமானால், அவன் இனிவரும் பிறவிகளை யடையமாட்டான். வசப்படாமல் விஷயங்களில் ஓடுமானால் பல பிறவிகளில் சென்றுழன்று வருந்துவான். தருமமார்க்கத்துக்கும், அதிக பொருளையும் இன்பத்தையும் பெறுவதற்கும், பெருங்கல்வி கற்றுச் சமர்த்தனாவதற்கும், வீரத்தன்மைக்கும், துறவடைதற்கும் துணையாயிருப்பது மனமேயாகும். நற்கருமங்களைச் செய்து மனிதரை உயர்த்தவும், தீக்கருமங்களைச் செய்து நரகத்தில் மூழ்குவிக்கவும் வல்லது இந்த மனமேயன்றி வேறொன்று மில்லையென்று வேதங்கள் சொல்லாநிற்கும்.

ஒருவனது மனமானது உமா நாயகனாகிய பரமசிவனை யடையுமானால், பெரும்பாதகங்கள் அநேகமாக அவனால் செய்யப்பட்டாலும், அந்தப் பாதகங்களெல்லாம் நெருப்பிற் பட்ட பஞ்சுபோல அழியுமாதலால், அவன் அஞ்சவேண்டுவதில்லை. மனத்தூய்மையால் மனிதர் மேன்மை யடைவர

ராயின், அவர்கள் பிருக்ஙகளுக்குச் சமர்னமாவார்கள். ஒரு வனைக் கெடுக்க வல்லதும், கெட்டவனை எடுக்கவல்லதும் இந்த மனமேயாம் என்று அறிந்து, அதனை அடக்கவல்ல வன் பிறவிக்கடலைக் கடக்க வல்லவனாவன். ஆராயுமிடத்து மனத்தை விஷயங்களிற் செல்லாது தடுத்தலே பெரியோர் செய்கையாகும். நீரானது நின்றால் துரும்பும் தடைபட்டு நிற்கும்; அதுபோல வாயுவானது நின்றால் மனமும் தடை பட்டு நிற்கும். விரைந்தோடுகின்ற குதிரையை நிறுத்தக் கருதினால் அதன் வாயைப் பூட்டியிருக்கிற கடிவாளத்தை யிழுத்துப் பிடிப்பார்கள். அதுபோல, விஷயங்களில் மேல் விரைந்து ஓடுகின்ற மனத்தைத் தடைப்படுத்தக் கருதினால் ஓடாநின்ற வாயுவை யுள்ளே யிழுப்பார்கள். மூன்று நாடி களினுள்ளும் வாயுவைவிடுத்து வாங்கியும், அசைவற நிறு த்தியும், அது போனபடி போகவொட்டாமல் தடுத்தும் ஒருவன் தன்வசப்படுத்திக்கொண்டால், அவனுக்கு மன மும் வசப்பட்டு நிற்கும். ஓட்டையும் பொன்னையும், உற வையும் பகையையும், வறுமையையும் செல்வத்தையும், கீர்த்தியையும் அபகீர்த்தியையும், வீட்டையும் காட்டை யும் சமானமாக நோக்குகின்ற மனமே நல்ல மனமெனப் படும். நிலைபெற்ற காம வெகுளி மயக்கங்களோடு கூடி, அலைகாற்றின் முன் வைக்கப்பட்ட தீபத்தைப்போல அலைந்து கொண்டிருக்கின்ற மனமே தீய மன மெனப்படும். அதனை யொருவராலும் தடுக்க முடியாது. மனமும் பிராணவாயுவும் அடங்கி விடுமாயின், அப்படி யடங்கப் பெற்றவன் சிவமய மாவன். இதனையறிந்து மனத்தையும் பிராணவாயுவையும் அடக்கினவன் என்று மழியாத இலிங்கப் பிராணியென்று சொல்லப்படுவன்'' என், தனக்குத்தானே சமானமான சிவப்பயிரை வளர்க்கும் இயல்புடைய மேகம்போன்ற வசவண்ணர்க்கு ஞானசாதனங்களாகிய பலவற்றையும் அல்லமதேவர் அருளிச்செய்தார். அப்பொழுது வசவண் ணர் அல்லமதேவரை நோக்கி, ''தேவரீரைத் தரிசிக்கவும் வணங்கவும்; வாழ்த்தவும், தேவரீரது திருவாய்மொழி

யைக் கேட்கவும் நானென்ன மாதவஞ்செய்தேனோ?'' என்று சொல்லித் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். சித்தராம ரும், சென்னவசவரும், அருளையுடைய மாச்சிதேவர் முத லிய பக்தர்களும் அல்லமதேவரது திருவடிகளை வாழ்த் தினார்கள். அப்பொழுது அல்லமதேவர் ''இவ்வுலக முழு தும் சென்று அங்குள்ள பெருந் தவத்தினர்க்குப் பேரின் பத்தை யான் தரக்கடவேன்'' என்று திருவுள்ளம் பற்றினார்.

சாதகாங்க கதி முற்றிற்று.

பத்தொன்பதாவது

கோரக்கர் கதி

வசவண்ணர் முதலிய அன்பர்களை நீங்கி, ஸ்ரீசைலத் தையடைந்து, கோரக்கர் என்னும் பெயருடைய சித்தருக்கு உண்மைநிலையை அல்லமதேவர் உபதேசித்தருளின சரித்தி ரத்தைச் சொல்லுவோம்.

''மனமானது பொறிவழியிற் செல்லாமல் பரிசுத்த மாகும்பொருட்டு நான் சொல்லிய நெறியினின்றும் தவறா திருங்கள்; துறவினராகிய மஹான்க ளிருக்குமிடங்களிற் போய் அவர்களைக் கண்டு வருகிறேன்'' என்று சொல்லி அல்லமதேவர் மறைந்துபோனார். கன்றின் வாயிலுள்ள முலையை நெகிழ்த்துக்கொண்டு நீங்கிப்போன கறவைப் பசுப்போல அல்லமதேவர் மறைதலும், வசவண்ணர் முத லிய அடியார்களெல்லாம் நெருப்பிலிட்ட வெண்ணெய் போல மனமுருகிக் கண்ணீர் சோரநின்று துக்கித்தார்கள். அன்றியும், ''நல்லாரைக் காணுதிருத்தல் வேண்டும், கண் டாலும் அவர்களோடு நட்புச் செய்தால் பின் அவர்களை விட்டுப் பிரியாதிருத்தல்வேண்டும். பிரிந்தால் உயிர்விடல் வேண்டும்'' என்றிவ்வாறு சொல்லி, உணவு கொண்டுவந்து கொடுக்கிற தாய் நீங்கின பறவைக் குஞ்சுகள்போல மனம்

வருந்தினார்கள்; பிறகு வசவண்ணர் மனந்தெளிந்து, தமது கையிலுள்ள இஷ்டலிங்கத்தைக் கண்டு மகிழ்ச்சி யுடையவராய், [அதனிடத்தில் பக்தி செய்துகொண்டிருந்தார். சித்தராமர் சொன்னலாபுரத்திற்கு அல்லம தேவரோடு போய், முன்னே தானின்ற கொடுவழிகளை விட்டுத் தன்னிலையில் நின்றார். மற்ற அடியார்களும் அல்லமதேவர் அருளிச்செய்த மெய்ம்மொழிகளை மனத்திற்கொண்டு, தத்தம் இடங்களிற் போய் வாழ்ந்திருந்தார்கள். முற்காலத்திற் செய்த நல்வினையால் தம்மைத் தரிசிக்கப் பெரிதாகிய விருப்பத்தோடிருக்கிற அடியார்களிடத்திற்குப் போவேனென்று புறப்பட்ட அல்லமதேவரது செய்கையை இனிச் சொல்லா நின்றோம். இளமரச்சோலையில் தென்றற்காற்று வீசினாற் போல, அடியார்கள் மனமும் கண்களும் கண்டு களிக்கும் படியான ஒரு திருவுருக்கொண்டு ஸ்ரீசைலத்தைக் கண்டு சென்றார். அந்த ஸ்ரீசைலத்தின் பெருமையும் வளமும் தேவர் முனிவர் முதலியோரால் சொல்ல வொண்ணாதென்றால், யானோ சொல்லவல்லேன்! அது நிற்க, அப்படிப்பட்ட ஸ்ரீசைலத்திற் சென்று, அவ்விடத்தில் காயசித்தி பெற்றுச் செருக்கடைந்திருக்கிற கோரக்கர் வாழ்கின்ற இடத்தை யடைந்தார். இவர் வருகையைக் கண்ட கோரக்கர் இவரது திருவடியில் வீழ்ந்து வணங்காமல், இவர் நம்போன்ற ஒரு சித்தரென்று நினைத்து, நின்றபடியே அஞ்சலிசெய்து, ஓர் ஆசநம் தந்து சொல்லுவாராயினர்:—"தேவரீர் இன்று இங்கே யெழுந்தருளினது என் தவப்பயனாலே யன்றி வேறொன்றாலு மன்று. பாலகருடைய குணத்தைப்பொருந்தி மெய்ந்நிலையையுடைய அடியாரினத்தைச் சார்ந்திடாதவன் பரமசிவனையுஞ் சாரமாட்டான். முதலில்லாதவர்க்கு ஊதிய மெப்படிக் கிடைக்கும். ஒரு விருந்தினன் வந்தால் அவனுக்குச் சொல்லு முகமன்போலச் சில இனிய சொற்களைச் சொல்லி, "நீர் யார்?" என்று வினவினர். அதுகேட்ட அல்லமர் கோரக்கரை நோக்கி, "தன்னைத்தானறிந்த ஞானியானவன் என்னையு மறிவான்" என்றார். அப்போது கோ

ரக்கர் அல்லமதேவரை நோக்கி, "சுவாமீ! ஆதிநாதனது அருளினாலும், குளிகை முதலியவற்றாலும் காயசித்திபெற்றவன் எக்காலத்தும் இறக்கமாட்டான். அது பெறாதவன் இறப்பான்" என்று சொல்ல, அல்லமர், "உடம்புவாழ்தலைத் தான் வாழ்தலாகவும், உடம்பு இறத்தலைத் தானிறப்பதாகவும் சொல்லினை. உயிரே உடம்பென்று நினைத்தாய்போலும். உடம்பு தன்னினும் வேறென்றறியாத லோகாயதனை நிகர்த்திருக்கிறாய். உடம்பே தானென்றால் எனது உடம்பு என்று சொல்வதென்னை?" என்று கேட்க, "நான் நினைத்தேன், ஓடினேனென்று சொல்லுதலால் நானெனப்படுகிற பொருள் யாது? அதனை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று கோரக்கர் கேட்க, அல்லமதேவர், "நான் நினைத்தேனென்பது அந்தக்கரணத்தைப் பொருந்தும். ஆதலால் உடம்பு, பொறி, கரணங்கள் ஆகிய எல்லாம் நானென்று விவகரிக்கும்படி நேரிடும். நேரிட, தானென்பது பலவாகத் தோன்றும். அதனால் நீ சொன்னதெல்லாம் கற்பனையாகும்" என்று சொல்ல, கோரக்கர், "ஐயனே! தேவரீர் சொன்னது சரியே; என்னுயிர் நீங்கும் என்று சொல்லும்போது, அவ்வுயிரொழிய வேறோருயிருமுண்டோ? கிருபை செய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, "மருந்துண்டு நோயைத் தீர்த்துக்கொள்வார்போலச் சிவத்தை யடைந்து இவ்வுடம்பை விடுதற்குப் பெரியவர் எண்ணங்கொள்ள, மருந்துண்டு நோயோடு கூடியிருக்க வேண்டுமென்றெண்ணங் கொள்வார்போல இந்த வுடம்போடிருக்க எண்ணினை; இது என்ன பேதைமை! பிறந்த சரீரங்களுள்ளே ஒன்றாயினும் இறவாதிருப்பதுண்டோ? ஆகாயத்திலெறிந்த கல் கீழே விழாதிருக்குமோ? மருந்தினால் உடம்பு நித்தியமாயிருக்குமென்று நீ சொன்னது வாழ்நாளின் பன்மையாலேயன்றி வேறன்று. உடம்பு என்றும் அழியாதென்று நீ சொல்லுவது பொருந்தாது. இனி நீ வீட்டினையடைய விரும்புவாயாக" என்று அல்லமதேவர் அருளிச்செய்யக் கேட்ட கோரக்கர், "நீர் யாது சொல்லினும் என் உடம்பு

அழியாது. இதனைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுவேன் பாரும்" என்று ஒரு கூர்மையாகிய வாளாயுதத்தை அல்லமதேவர் கையிற் கொடுத்து, "உமது தோள்வலியால் என்னை வெட்டும்; என்னுடம்பில் ஒரு ஈச்சிறகளவாகிய தோல் அறுபட்டாலும் நான் சித்தனல்லேன்" என்று சொல்லிச் செருக்கி எதிரேநின்றனர். அல்லமரும் "இவன் சொல்லியபடியே செய்து இவனது செருக்கை யழிப்பேன்" என்று அந்த வாளாயுதத்தைக் கைக்கொண்டு, மிகுந்த வலியோடு வெட்டினார். அந்த வாள் கோரக்கரது உடம்பிற் படுக் கணீரென்று பெருஞ் சத்தமொன் றுண்டாயிற்று. அந்தச் சத்தத்தினால் ஸ்ரீசைலம் நடுங்கிற்று. அப்போது உமாதேவியானவள், முற்காலத்தில் கைலாயமலையை யசைத்த ராவணன் இப்போது இந்த மலையையும் அசைக்க வந்தானோ வென்று அஞ்சியோடிப் பரமசிவனைக் கட்டித் தழுவிக் கொண்டாள். இந்தச் சத்தத்தினால் இன்னும் அநேக அற்புதங்கள் நிகழ்ந்தன. இது நிற்க, இப்படி ஒலியுண்டாகும்படி ஏறிந்தும் உடம்பில் சிறிதும் காயப்படாதிருக்க, கோரக்கர் முன்னினும் மிக்க செருக்கடைந்து, "என்னை நிகர்ப்பவர் ஒருவருமில்லை" என்று அகங்கரித்திருப்பதை அல்லமரறிந்து, "ஒலியுண்டாகும்படி உன்னுடம்பு மிகு வலியை யடைந்திருக்கின்றது; என்னை நிகர்ப்பவ ரொருவருமில்லை" என்றுசொல்லி, வாளாயுதத்தைக் கோரக்கர் கையிற் கொடுத்து, "இதைக்கொண்டு என்னை வெட்டுவாயாக" என்றார். அதை அப்படியே யெறிந்து, அது அல்லமர் திருவுருவின்மேற் படாதிருப்பதைக் கண்ட கோரக்கர் மிகவும் பயந்து, தன் செருக்கொழிந்து, அல்லமதேவரது திருவடியை வணங்கி, "அடியேன் செய்த பிழைக ளெல்லாவற்றையும் பொறுத்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அல்லமதேவர் கோரக்கரை நோக்கி, "சித்தரே! நீர் இப்போது செய்த பிழை போகட்டும். இனி யிப்படிப்பட்ட பிழை செய்யாமல் உடம்பின்மேலுள்ள பற்றை யொழித்து, உனது உண்மை நிலையை யறிந்துகொண்டால் நீ யெனக்கு இனிய

வன்'' என்று சொல்ல, கோரக்கர் அல்லமரை நோக்கி; ''அடியேனுக்கு அறிவிக்கவேண்டிய பொருள்களெல்லாம் அறிவித்தருளல்வேண்டும்''என, அல்லமர் அவரை நோக்கி, ''குகேசன் என்பதன் பொருளாகிய பரமசிவனே நான்'' என்று சொல்ல, கோரக்கர் ''அப்படியாயின் உமது கையில் சிவலிங்க மிருப்பதற்குக் காரணம் யாது?'' என்ன, உலகத்தார் என்னைப்பார்த்து இந்தச் சிவலிங்கபூஜையை மறவாதிருத்தல் காரணமாம்'' என்று சொல்லி, ''ஞானத்தைப் போதிக்கத் தகுந்த ஆசிரியன் சரீரமுள்ளளவும் சற்கருமங்களை விடலாகாது'' என்று தனது இலக்கணத்தைத் தெரிவித்து, ''என்னை யறிந்து சோகம் பாவனைகொண்டு நிற்பையாயின், கருடத்தியானத்தால் விஷம் நீங்குதல்போல அவித்தை நீங்கிவிடும்'' என்று அல்லமர் அருளிச்செய்யக்கேட்ட கோரக்கர், அவரருளிச்செய்தபடி தான் சரீரமென்னும் பிராந்தி நீங்கி, அநித்தியப் பொருள்களெல்லாவற்றையும் விட்டு, நித்தியப்பொருளைக் கண்டு, தான் அதனையடைந்து, தான் அது என்னு மயக்கம் நீங்கித் தானேயாகி, அவ்விடத்தில் நிலைபெற்று வாழ்ந்திருந்தார்.

கோரக்கர் கதி முற்றிற்று.

இருபதாவது

முனிவரர் கதி

அல்லமதேவர் ஸ்ரீசைலத்தை நீங்கி முனிவரருக்கு வேதார்த்தைத் தெரிவித்த செய்தியைச் சொல்லுவோம்.

அருந்தவத்தை முயன்று செய்த கோரக்க நாதருக்கு அறிவுருவாகிய மெய்ப்பொருளின் தன்மையை அன்போடு அருளிச்செய்த அல்லமதேவர் வடநாட்டிலுள்ள முனிவர்களுக்கு அருள்செய்ய எழுந்தருளினார். இவை நல்லனவெனவும், இவை தீயனவெனவும் பாராம லெரிக்கின்ற நெருப்புப்

போல, கருணைக் கடலாகிய அல்லமதேவர் இவர் நல்லவ ரென்றும், இவர் தீயவரென்றும் பாராமல் எல்லோர்க்கும் ஞானோபதேசம் செய்தருளினார். இவ்வாறு எல்லோரும் தனதருளுக் குரியவரே யென்று அநுக்கிரகஞ் செய்கிற அல்லமதேவர் அங்குள்ள ஒரு வனத்திற் போகும்போது, அவ்விடத்தில் இரக்கமென்பதனைக் கனவிலுமறியாத ஒரு வேடன் கொலைத் தொழிலுக் குரியதாகிய ஒரு வில்லைக் கைக்கொண்டு எதிரே வந்தான். அவனைக்கண்ட மாத்தி ரத்தில், அன்புள்ளவனாய்த் தன் கண்ணைத்தோண்டி அப் பின. வேடனாகிய கண்ணப்பனுக்கு அநுக்கிரகஞ் செய்தது ஒரு புகழன்று; அன்பில்லாத இந்த வேடனுக்கு அநுக்கிர கஞ் செய்வதே புகழென்று அல்லமதேவர் திருவுளமிரங்கி அவனுக்கு அநுக்கிரகஞ் செய்தார். அப்போது அந்த வேடன் தன் தீவினையாவும் ஒழிந்தவனாய் நின்று, "பாவியாகிய நான் உய்யும் வண்ணம் கிருபை செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அவனை நோக்கி, "நீ அறிவென்னும் வேலினால், ஐம்புலனென்னும் மான்கள், அருளென்னும் வலையினின்றும் தப்பிப்போகாமல் எறி வையானால், உனக்குத் துன்பமென்பதே யில்லை" என்று அல்லமர் சொல்லி, பின்னும், "அறிவு வில்லாகவும், மனம் அம்பாகவும் கொண்டு என்னைக் குறியாய் வைத்து எய்வா யானால், ஸ்ரீ ராமனைப் பார்க்கிலும் மேலானவனென்று உன்னைசொல்லுவார்கள்" என்றிவ்வாறு வேடனுய்யும்வகை உண்மைநிலையினின்றுங்கலங்காதிருக்கும்படியநுக்கிரகித்து அப்பாற் செல்லும்போது, அவ்விடத்தில் ஒரு தபோவனம் காணப்பட்டது. அதில் ஒன்றற்கொன்று பரஸ்பர விரோ திகளான யானைகளும் சிங்கங்களும் விரோதமின்றிக் கூடி வாழ்தலால், அந்தத் தபோவனத்தைப் பாம்பும் சந்திரனும் விரோதமின்றிக் கூடி வாழ்கின்ற பரமசிவனது சடைக் காட்டுக்கு நிகராகச் சொல்லலாம். அவ்வனத்தில்; நடத்தற் குரிய கால்களைக் கைகளாகக் கொண்டனவாகிய சிங்கம் புலி முதலியவும், மூச்சுவிடுதற்குரிய நாசியைக் கையாகப்

பெற்ற யானைகளும் அங்கே யாகாதி சற்கருமங்களைச் செய்துகொண் டிருக்கிற முனிவர்களுக்குத் தொண்டுசெய்து கொண்டிருக்கும். அவ்விடத்தில் பலவாகிய வேதங்களை யோதுவோரும், யாகாக்கினியை வளர்ப்பவரும், வேத விதிப்படி சிவபூஜை செய்வோரும், வாயுவையடக்கி ஒரு தூண்போல அசைவற் றிருப்போருமாகிய அநேகரைக் கண்டு, "இவர்களுக் கெல்லாம் ஞானோபதேசஞ் செய்து இவர்களுடைய பிறவிப்பிணியை யொழிப்பேன்" என்று திருவுளங்கொண்டு, அவர்களை நோக்கி, "நீங்கள் பல நோன்பு நோற்றும், விரதங்களை யநுஷ்டித்தும் சரீர மிளைத்தீர்கள்; இவற்றால் மாயையை வெல்லக் கருதுதல் சேற்றைச் சேற்றினாற் கழுவுதலை நிகர்க்கும். மலைபோலக் குவிந்த புல்லினை லெரித்துப் பிறவியை ஒழித்த லொண்ணாது. ஞானாக்கினியால் பிறவிக்காடு எரிக்கப்படும். மநோ சாஞ்சல்யத்தை வறியர் கொள்வதுபோலச் சிறியவர் வேதத்திற் சொல்லப்படும் கருமங்களைக் கொள்வார்கள். ஞானிகள் தத்துவமசி வாக்கியார்த்தமாகிய பெருஞ்செல்வத்தைக் கொள்வார்கள்" என்றிவ்வாறு அல்லமதேவர் சொல்லக் கேட்ட முனிவரெல்லோரும் அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "தேவரீர் இவ்விடத்திற் கெழுந்தருளும்பொருட்டு நாங்கள் என்னதவஞ் செய்தோமோ?" என்று தோத்திரஞ் செய்தார்கள். அன்றியும், "மாயையானவள் பிறந்தகாலத்தில் யாவருடைய மனத்திலுந் தோன்றின மோகமானது முடியும்படி துர்வாச முனிவனாற் சொல்லப்பட்ட பரிசுத்தன் இவனேயாம்" என்று மகிழ்ந்து வாழ்த்தினார்கள். இந்தப்பிரகாரம் அல்லமதேவர் அந்தத் தபோவனத்திலுள்ள முனிவர்களுக்கு அநுக்கிரகித்து அங்கு வாழ்ந்திருந்தார்.

முனிவரர் கதி முற்றிற்று.

இருபத்தோன்றாவது

சூனிய சிங்காதன கதி

அல்லமதேவரை யறிந்துகொள்வதற்கு ஒரு அறிகுறியாக எண்ணி, ஏழு நிலைகளையுடைய ஒரு சூனிய சிங்காதனத்தை வசவேசர் உண்டாக்கி அவ்விடத்தில் தங்கியிருந்த சரிதத்தை வகுத்துச் சொல்லுவோம்.

மனவொடுக்கம் முத்தி மார்க்கத்துக்கு ஒரு துணையாகும்; பகிர்முகமாகச் செல்லுகின்ற மனம் நரக மார்க்கத்துக்குத் துணையாகுமென்று, மனமடக்கும் வகையை அல்லமதேவர் அருளிச்செய்தபடியே மனத்தை யொடுக்கும் வழியில் வசவண்ணர் பிரவேசித்தவராய், தம்வசத்தி லடங்காமலோடுகின்ற அம்மனத்தைப் பிராணவாயு நிரோதனத்தால் நிறுத்தி, சந்திர மண்டலத்திலிருந் தொழுகுகின்ற அமிர்தத்தை அதற்கு விருந்து செய்து நட்புக்கொண்டு, பொல்லாத விஷயவுணவு குறித்துச் செல்லாதபடி தம்வசப்படுத்திக்கொண்டு சித்திரப்பாவைபோ லிருந்தார். அசைவற்ற மனத்தோடிருந்த வசவண்ணர், "நமது ஆத்ம ஸ்வரூபத்தை விளக்கும் பொருட்டு ஞானாசிரியராகிய அல்லமர் என்றைக்கு வருவாரோ? எந்த வடிவாய் வருவாரோ?" என்று அவரது வரவினை யெதிர் நோக்கினவராய், யான் ஒருசிங்காதனமமைத்து, அதன்மேல் வந்தமர்ந் திருப்பவரை அல்லமரென்று அறிந்துகொள்வே னென்று துணிந்து, மூலாதாரமுதலியவைகளைப் பல நிறத்தினையுடைய ஏழ் நிலைகளமைந்த சூனிய சிங்காதனமாகப் பிரமதேவனும் அதிசயிக்கும்படி யமைத்து, காரணவுபாதிக ளேழுக்கு மேற்சென்று தன்னைத் தான் தரிசித்துக் கொண்டிருக்கும் ஞானிபோலவும், நெற்றிக்கு மேற்சென்று தனது ஸ்வரூபத்தைக் கண்டனுபவிக்கும் யோகிபோலவும், பூர்ண ஞானானந்த போதகராகிய அல்லமரது இருப்பைக் காணும்

பொருட்டு ஏழ் நிலைகளின்மேல் சூனிய சிங்காதன மொன்றை யமைத்தார். அது கண்டு வியவாதா ரொருவருமில்லை. அந்தச் சூனிய சிங்காதனம் அமைக்கப்பட்டுள்ள அதிசயத்தைக் கேட்டுச் சிவனடியா ரெல்லோருஞ் சென்று, செம்பொன்னா லமைக்கப்பட்ட அந்தச் சிறந்த ஆசனத்தை நோக்கி, வசவண்ணரது திருவடியை வணங்கி யிருந்தார்கள். கல்விக்கடலுக்குக் கரையாமென்று கற்றோர் பலரும் துதிக்கும்படி யமைக்கப்பட்ட சாரதாபீடம் போல, இந்த ஞானபீடமானது மனோவாக்குகளுக் கெட்டாததாகும். இதில் ஏறுதற்குரியவர் அல்லமதேவரன்றி வேறு யாவருளர்? அவர் இதிலிருக்க வல்லராயின் எமது மனத்திலும் அமர்ந்திருத்தற் குரியவரேயாவர் என்று மனத்திற்கொண்டு, கங்கையாற்றின் கரையில் கண்ணிவைத்து அரசவன்னம் வருதலை நோக்கி நிற்பதுபோல, ஒரு ஞானபீடத்தை அமைத்துவைத்துக்கொண்டு அல்லமரது வரவை நோக்கிக்கொண்டிருந்தார். சிவனடியார்கள் யாவரும், தமது தலைவராகிய வசவண்ணருக்கு ஆசாரியராய் வருவோரே தமக்கும் ஆசாரியரென்று கருதியிருந்தார்கள்.

சூனியசிங்காதன கதி முற்றிற்று.

இருபத்திரண்டாவது

சூனிய சிங்காதனத்திலிருந்த கதி

பள்ளத்திறசென்று வீழ்கின்ற நீர்போல, நன்னெறியிற் செல்லுகின்ற மனத்தையுடைய சிவனடியார்களது மனத்தில் வாழ்கின்ற வசவண்ணர், இவ்வுலகத்தார் அறியாமல் கள்ளமனத்தோடு செய்த சூனிய சிங்காதனத்தின்மேல் அல்லமதேவர் விரைவாயேறுஞ் சரித்திரத்தை இனி அன்போடு சொல்லுவோம்.

வசவண்ணர் சூனிய சிங்காதனம் அமைத்து, அல்லம தேவர் வருகையை நோக்கியிருந்து பலநாள் கழிதலும், "யான் இந்த ஆசனமமைத்துப் பன்னிரண்டு மாதங்களாயின; அல்லமர் இன்னும் வந்திலர்; இனி யென்றைக்கு வருவாரோ?" என்று துக்கித்துக்கொண் டிருக்கும்போது, ஒரு நாள் இவர் மனத்தில் அல்லமதேவர் வரவு தோன்றிற்று. அப்போது, தூரத்துச் சென்ற நாயகன் வரவை யறிதற் குறியாகக் குலமாதருக்கு இடதுவிழி துடித்தல்போல, வசவண்ணருக்கு வலத்தோளும், வலக்கண்ணும் துடித்தன. இந்த நற்குறிகளை அருகேயிருந்த சென்ன வசவண்ணருக்குச் சொல்லி, "இந்தக் குறிப்பின் பயன் யாது?" என்று கேட்க, "அவர் இன்றைக்கு நீர் அல்லமரைத் தரிசிப்பீர்" என்று சொல்லிப் போயினர். பிறகு வசவண்ணர் தம் பக்கத்திருந்தவர்களை நோக்கி, "இன்று நமது அல்லமதேவர் எழுந்தருளுவர்; ஆதலால் நமது கல்யாணபுரத்தை அலங்காரஞ் செய்யுங்கள்" என்று கட்டளையிட, அவர்களும் அவ்வாறே யலங்கரித்தார்கள். அலங்கரிக்கப்பட்ட அந்த நகரத்து வீதியில், விச்சலராஜனுக்கு மந்திரியாகிய வசவண்ணர் புறப்பட்டுத் தமது ஆசிரியராகிய அல்லமதேவரை யெதிர்கொள்ளச் செல்லுவாராயினர். அப்போது சென்ன வசவரும், மடிவாலமாச்ச தேவரும், கிந்நரப் பிரமரும், தண்ட கமண்டலக் கையர்முதலிய பலவகை யடியார்களும் இவரைச் சூழ்ந்து சென்றார்கள். இந்தப் பிரகாரமாகச் சென்ற வசவண்ணரது ஆடம்பரத்தைக் கண்ட சமணர்கள், "இவர் தமது கடவுளைப் பித்தனென்று சொல்லுவோர்" என்று இகழ்ந்தார்கள். அருகர் சிலர் விச்சலராஜனிடத்துச் சென்று, "அரசனே! உனது நகரத்தில் ஒரு புதுமை யுண்டாயிற்று; அதென்னெனில், ஒரு நற்குறியைக் கண்டு, அதனால் அல்லமர் வருவாரென்று துணிந்து, வசவண்ணர் எதிர்கொண்டு போகிறார். இவர் இப்படிச் செல்லுவது கனவிற்கண்ட வுணவை நம்பி, விருந்தினரை உண்டு போங்களென்று சொல்லுவதை நிகர்க்கும்; இப்படிப்பட்ட

பேதைக்கு மந்திரிப்பட்டம் கொடுத்தவன்போல வேறு யாருளர்?" என்று சொல்ல, அரசன் அதிசயித்து, "நீங்கள் இங்கே யிருங்கள்; இனி நடக்கப்போகிற காரியத்தைப் பார்ப்போம்" என்றான். அவ்வளவில் அல்லமதேவரும், கோவணத்தோடும் விரிந்த சிகையோடும் கண்டோர் பித்த னென்றிகழும்படி வசவண்ணருக் கெதிரே யெழுந்தருளினார். அப்போது அங்கிருந்தவர்கள் அவரை யறியாதவராய் இவன் பித்தனென்று நினைத்து, "விரைவா யிங்கிருந்து போய்விடு" என்று தடுத்தார்கள். அப்பொழுது அல்லமதேவர் தமது திருவிளையாடலைச் செய்ய நினைத்து, பல் முளைக்கும் பருவமுள்ள பாலகனாகியும், குமரனாகியும், விருத்தனாகியும், வீணைசாரஞ் செய்வோனாகியும், இந்திரன் போல யானையேறி வருவோனாகியும், குதிரை நடத்துவோனாகியும், அந்நகரத்தார், "அல்லமரை ஆகாயத்திற் கண்டேன், பூமியிற் கண்டேன், சேனையிற்கண்டேன், தெருவிற்கண்டேன்" என்று தனித்தனியே சொல்லும்படி பல வுருக்கொண்டு நடிக்க, இவரது உண்மையாகிய உருவமிது இவனென்றொருவரு மறிந்திலராய் மயங்கினார்கள். அஞ்சனக் காரன் புதையலைக் காண்பதுபோல, வசவண்ணர் மாத்திரம் இவரது உண்மை யுருவத்தை ஐயமின்றி யறிந்துகொண்டு, கண்களில் ஆநந்த பாஷ்பங்கள் சிந்தத் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். மற்ற அடியார்களும் வீழ்ந்து வணங்கினார்கள். வசவண்ணரது அன்பையும், அல்லமதேவரது அருளையுங் கண்ட தேவர்கள் அதிசயித்துப் பூமழை பொழிந்தார்கள். வசவண்ணர் வாழ்தலாலும், அல்லமர் எழுந்தருளுகையாலும், அடியவர் கூட்டமிருந்து களித்தலாலும் அந்தக் கல்யாணபுரியானது கைலாயத்தை நிகர்த்திருந்தது. வசவண்ணரது செய்கையையும், அல்லமரது பெருமையையும் சமணர்கள் கண்டும், இவர்களிடத்து அன்பு செய்யாமல் பொறாமைகொண் டிருந்தார்கள். அல்லமர் வசவண்ணரது திருமடத்தை யடைந்து, அங்குள்ள சூனிய சிங்காதனத்தை நோக்கி, வசவண்ணரது புகழான்து எல்ல

யுலகங்களினு மேறும்பொருட்டு, அவர்க்மைக்கப்பட்ட சூனிய சிங்காதனத்தில் ஏறியருளினார். இவ்வாறு ஏறி யருளிய அல்லமர், ஆறுதாரங்களா யிருப்பது ஆத்மாவேயா மென்று மகிழ்ந்து, அதன் ஏழாம் நிலையாகிய ஸஹஸ்ரார கமலத்தின்மீ தமர்ந்திருந்தார். இதைக் கண்ட சிவபக்த ரெல்லோரும் மனமகிழ்ந்து ஆநந்தக் கூத்தாடினார்கள். வசவண்ணரும் ஆநந்த சாகரத்தில் அழுந்தினார். வசவண்ணரை அல்லமதேவரும் துதித்தார். வசவண்ணரும் அவரை நோக்கி, "தேவரீரது திருவருளுளதாயின், பிரம விஷ்ணுக்களுடைய தொழில்களையும் ஒரு சிறு துரும்பாக்கலாம்" என்று புகழ்ந்தார். அல்லமதேவரும் அந்தச் சூனிய சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்தார்.

சூனிய சிங்காதனத்திலிருந்த கதி முற்றிற்று.

இருபத்துமூன்றுவது

ஆரோகண கதி

இவ்வுலகில், ஒருவர் உண்ண மற்றொருவருடைய பசி நீங்காது என்னும் வார்த்தை பொய்யாகும்படி, அருளுருவாகிய அல்லமதேவர், அடியவர் யாவருடைய பசியும் நீங்கும்படி தாமுண்டருளின சரித்திரத்தைச் சொல்லுவோம்.

இப்படிச் சூனிய சிங்காதநத்தின்மீது அல்லமதேவர் எழுந்தருளி யிருக்குங்காலத்தில், வசவண்ணர் அல்லமதேவரது திருமேனி வடிவமாய்ச் சித்திரப்பாவைபோல் அசைவற்றிருந்தார். சென்னவசவரும் அல்லமதேவராகிய அமிர்தத்தைத் தம் கண்களுக்கு விருந்திட்டார். மடிவாலமாச்சரும் அல்லமராகிய மலரைத் தமது மனமாகிய வண்டுக்கு இடமாக்கினர். மற்ற அடியார்களும் சிங்காதநத்தைச் சூழ்ந்திருந்தார்கள். சில அடியார்கள் பூசை செய்துகொண்

டும், சில அடியார்கள் விபூதி ருத்ராக்ஷங்களைத் தரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்கொண்டும், இன்னும் பலவாறு வந்து நிறைந்தார்கள். வசவண்ணர், இந்த அடியார்களுக்குத் தினந்தோறுந் தாம்செய்யுஞ் செய்கையை மறந்து அல்லம பக்தியிற் படிந்திருந்ததனால், வந்த அடியார்களெல்லாம் "இந்தப் பாவியின் சோற்றையுண்டு உயிர் வாழ்தலைப் பார்க்கினும் இறப்பதே நன்று" என்று கோபித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் போனபிறகு, கல்யாணஞ் செய்த மறுநாளிருக்கிற வீட்டைப்போலத் தமது நகரம் வறிதா யிருக்கக்கண்டு, "நான் சிவனடியார்களுக்குச் செய்யவேண்டிய கடமையை யின்று செய்யாமையால் அவர்கள் கோபித்துப் போய்விட்டார்கள். அவர்கள் பொருட்டு இன்று நான் சமைத்து வைத்த அன்னம் வீணாய்ப் போகுமே" என்று மனந்தளர்ந்து, "சங்கம பக்தி செய்வதில் சிறந்தவனென்று யாவராலுஞ் சொல்லப்பட்ட நானே இந்தப் பக்தியில் வழுவினேனாயின், சங்கமபக்தி செய்வது பிறர்க்கு எளிதாகுமோ? இழித்துரைத்தாலும், வெறுத்துரைத்தாலும், வீட்டிலுள்ளவற்றை யழித்தாலும், உடம்பை யரிந்து கொன்றாலும் சங்கமபக்தி செய்பவன் பிறவியை யொழிப்பானென்று உயர்ந்தோர் சொல்லுவார்கள்" என்று இந்தப் பிரகாரமாகச் சொல்லிச் சிந்தித்துக் கொண்டிருக்கிற வசவண்ணரது எண்ணம் நிறைவேறும்படி, அல்லமதேவர் அந்த மடைப்பள்ளியிலுள்ள சோறு முழுவதும் உண்டு அடியார்களுடைய பசியை நீக்கும்பொருட்டுத் திருவுளம்பற்றி, வசவண்ணரை நோக்கி, "எனக்குப் பசியாயிருக்கின்றது; எனக்கு வேண்டியது சிறிது உணவே; எனக்குக் கொடுத்துப் பிறகு நீ சங்கமரை யுண்பிக்கக் கடவாய்" என்றார். அதற்கு வசவண்ணரிசைந்து, தன் மனைக்குள்ளே யழைத்துப்போய், செய்யவேண்டிய உபசாரங்களெல்லாம் செய்து, பொற்கலத்தில் உயர்ந்த அன்னம் முதலியவைகளைப் படைத்து, "உண்டருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, ஒரு இமைப்பொழுதில் சிறிதும்,

மீதியாயிராமல் அவரிட்ட உணவை யுண்டருளினர். அதைக் கண்டு அந்த வசவண்ணர் முதலியோர் ஆச்சரிய மடைந்து, பின்னும் கொண்டு வந்து படைத்த உணவை யுண்டு பசி தணியாதிருக்கக் கண்டு, தமது அடியவர் வீட்டிலுள்ள உணவையும் கொண்டுவந்து படைக்கும்படி கட்டளையிட, அவ்வாறே அவர்களுஞ் செய்து இவருக்குப் பசி தணியாமல், அடியார்களுக்காகச் சமைத்த சோற்றை யெல்லாம் கொண்டு வந்து இவர்க் கெதிரே குவித்தார்கள். இப்படிப் படைக்கிற சோறு, கறி முதலியவற்றையுண்டும் பசி தணியாதிருக்கக் கண்டு, சமைப்பவராகிய அடிசிற் றொழிலாளர் "இன்னும் மட்கலங்களன்றி வேறில்லை" யென்றார்கள். அதன்பிறகு, வசவண்ணர் அல்லமதேவரது பசியைத் தணிக்கும்பொருட்டு, அவரை, பயறு, எள், அரிசி, அவல், கொள், துவரை, கடலை, சோளம், நெல், புல் முதலியவற்றைக் கொண்டு வந்து மலைபோலக் குவித்தார். அவற்றையெல்லாம் ஒருநொடியிலுண்டருளினர். வசவண்ணரும், அல்லமரும் உணவு படைப்பதிலும், உண்பதிலும் தோல்வி யடைந்தாரில்லை. அப்போது சென்ன வசவேசர் வசவண்ணரை நோக்கி, "கண்ணப்பனிட்ட மாமிசத்தை யுண்ட பரமசிவனே யிவனும்" என்று சொன்னார். "அவர் சொன்னதைச் செய்வதே சரி" என்று மடிவாலமாச்ச தேவர் வந்து சொல்லக்கேட்ட வசவண்ணர் அல்லமதேவரை யடிவணங்க, அப்பொழுது அல்லமதேவர் வசவண்ணரை நோக்கி, "நான் பசியினால் வந்தவனல்லேன்; பொருளைக் குறித்து வந்தவனல்லேன்; உன் மனத்திலுள்ள பக்தியைக் காணும் பொருட்டு வந்தேன்" என்று சொல்லி, வசவண்ணரை யெடுத்து மார்போடணைத்துக் கொண்டார். "கண்ணைப் போல வுயிர்கள் கண்டறியும்படி சூரியனைப்போலக் காட்டுகிற அல்லமபெருமானே! எல்லாச் சீவர்களுக்கும் ஊட்டுகின்ற வுனக்கு நான் ஊட்டுவேனென் றெழுந்தமையால் என்னைப்போலப் பேதையர் ஒருவரு மில்லை" என்று

அஞ்சலிசெய்து நிற்க, அப்போது அல்லமதேவர் அவரை நோக்கி, "நீ போய் அடியார்களை யெல்லாம் வணங்கி அமுதுசெய்ய வாருங்களென்று அழைத்து வருவாயாக" என்றார். அப்படியே சென்ற வசவண்ணர், அல்லமதேவரது திருமேனியிலணிந்த புஷ்ப சந்தனங்களைத் தாமுமணிந்து, தொந்தி சரியத் தின்ற கறிவகைகள் மணக்க ஏப்பம் விட்டுக்கொண்டு, முகமலர்ச்சியோடிருக்கிற அடியார்களைக் கண்டு, "அடியேன் செய்த பிழையை யெல்லாம் பொறுத்து வந்து அமுதுசெய்தருள்க" என்று பிரார்த்திக்க, அந்த அடியார்கள் வசவண்ணரை நோக்கி, "உன் பெருமை யெங்களால் சொல்லவெளிதோ? இன்று வாயும் கையும் தொழிற்படாமலே வயிறாரவுண்டு களித்தோம். தேவர்களுண்ணும்பொருட்டு அவிர்ப்பாகமாகிய வுணவைச் செந்தீயிலிடுவதுபோல, நாங்களெல்லோருமுண்ணும் பொருட்டுச் சோற்றுண்வை அல்லமதேவரது திருநாவி லிட்ட வுன்னைப் புகழ்தற்கு யாங்கள் படைத்த ஒரு நாவோ வல்லது!" என்றுசொல்லி, "உலகில் ஒரு சிவயோகி யுண்டது சராசர வுயிர்கள்யாவு முண்டதாகுமென்று வேதங்கள் சொல்லாநின்றன; அதனை அல்லமதேவரால் இன்று பிரத்தியக்ஷமாகக் கண்டோம். ஆதலால், அந்த அல்லமதேவரை யுண்பித்தல் எங்களை யுண்பித்தலே; அவரைத் திருவடி வணங்குதல் எங்களை வணங்குதலே; பேதமில்லை; நீ சொல்லக்கடவாய்" என்று சொல்ல, வசவண்ணர் அவர்களை வணங்கி, மீண்டும் வந்து அல்லமதேவரை வணங்கி, "ஐயரே! தாயுண்ட வுணவைக் கருப்பத்திலிருக்கிற சிசுவுமுண்டு களித்தல்போலத் தேவரீர் உண்டவுணவை அடியார்களெல்லா முண்டு களித்திருக்கிறார்கள்" என்று சொன்னார். "பாண்டியனடித்த அடியைப்பட்ட உயிர்களின் தன்மைபோல, வசவண்ணரிட்ட வுணவை யடியாரெல்லோரும் உண்டு களித்தன ராதலால் அல்லமதேவர் பரிபூர்ணரென்பதற்கு ஐயமில்லை" என்று புகழ்ந்து உலகத்தாரெல்லோரும் களித்திருந்தார்கள். இவ்வாறு உண்டு அமைதி

பெற்றிருந்த பரமயோகியாகிய அல்லமதேவர் வசவண்ணரைப் புகழ்ந்து, அவர்க்குச் சைவாகமமும் வேதமும் சொல்லாநின்ற பொருளை அநுக்கிரகிக்கத் திருவுளங் கொண்டு ஏகாந்தமாக வீற்றிருந்தார்.

ஆரோகண கதி முற்றிற்று.

இருபத்துநான்காவது

மனோலய கதி

அல்லமதேவர் வசவண்ணரை நோக்கி, "மனோலயமடைந்தால் முத்தியடையலாம்" என்று அருள்செய்த விதத்தைச் சொல்லுவோம்.

அடியார்களுடைய பசி தணியும்பொருட்டுத் தானுண்ட அல்லமதேவர், வசவண்ணருக்குத் தத்துவோபதேசஞ் செய்யக்கருதி வீற்றிருக்க, வசவண்ணர் வந்து வணங்கி விண்ணப்பஞ் செய்கிறார்:—"விருப்பு வெறுப்புக் தனி னுருவாகிய பிரபஞ்சத்தோற்ற மில்லாமல், எல்லாம் பரப்பிரமமாகப் பார்க்கும்படி எனக்குக் கிருபைசெய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்க, அவரது பிரார்த்தனைக்கு அல்லமதேவர் இரங்கி அருள் செய்யலுற்றார்: "ஒருவன் யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை விடாத அளவும் அவன் ஞானத்தை யடையமாட்டான். அதை யடையாதபோது நிலையற்ற பிரபஞ்சந் தோன்றும்; பிரமப் பொருள் தோன்றாது. காற்றாடிபோலச் சுழலாநின்ற மனமானது பிரமத்தில் நசித்தால், யான் எனது என்னும் அகந்தை மறைந்துபோகுமேயன்றி வேறு விதத்தால் மறையாது. யான் பிறர்க்கு இதனைச் செய்வேன், அவர்கள் எனக்கு இன்னது செய்வார்களென்னுங் கருத்தினால் முத்தியை விரும்புதல், இருட்டைக்கொண்டு சூரியனை யடைய விரும்புதல்போலும். யான் என்னும் அகங்காரத்

தால் இருவினைக ளுண்டாகும்; அது இல்லையானால் இரு வினைகளால் வரும் இன்பதுன்பங்க ளுளவாகா. இருவினைக ளில்லையாயின் பிறவியில்லை. மனத்தை யடக்குதற்கு மனமே துணையாகும்; வேறு துணை யில்லை. அது பெற்றவன் ஒப்பற்ற சிவசொரூபமாய் விளங்குவான்; உலகத்தில் பிறந்திறந் துழலமாட்டான். மதயானைபோ லடங்காது திரிகிற மனத்தை யடக்கினால், பூர்ண ஞானத்தைப் பெற்றுப் பிரமமாவன். விஷயங்களை யறிதற்கு விரிந்த மனம் கருவியாகும். விரிந்த மன முடையவனைப் பிறவி விடாது; குவிந்த மன முடையவனைப் பிறவி தொடாது. அந்தக்கரண சுத்தியே அறிவையறிதற்குச் சாதனமாகும். அந்தக்கரண சுத்திக்குச் சற்கருமங்கள் சாதநங்களாகும். அந்தக்கரண சுத்தியினால் பிரமத்தை யடைவான். ஆசையற்றிருத்தல் நேரே முத்தியின்ப மடைதற்குக் காரணமாகும். ஆசையற்றவன் சிவமாதல் நிச்சயம். குற்றமற்ற மனத்திலன்றி அறிவு தோன்றுது; களங்கமற்ற கண்ணுடியிலன்றி முகம் தோன்றுமோ? பாசமற்ற பரஞ்சோதியை நினைக்கின்ற நினைவால் மனமானது தன்னை யறிதற்குச் சாதகமாய் விளங்கும். யான் ஆகாயமல்லேன், வாயு வல்லேன், நெருப்பல்லேன், நீரல்லேன், மண்ணல்லேன், ஞானமல்லேன், வினையல்லேன், நானே சிவம், என்று நினைத்துச் சலியாதிருப்பவன் சிவமேயாவன். இவ்வாறு நினையாதவன் எக்காலத்தும் உடம்பெடுத்துச் சுழன்று கொண்டேயிருப்பான். தன்னைச் சிவமென்றறிந்தவனே தன்னை யுண்மையா யறிந்தவன்; அப்படி யறியாதவன் தன்னுண்மை யறியாதவன். தன்னைச் சிவமென்று என்று அறிவானே, அன்றே பாசத்தை யொழித்துவிடுவன். தன்னைச் சிவமென் றறியாதவனுக்குப் பிறவியே துணையாகும். சோகம்பாவனையில் மனத்தை நிறுத்தி விஷயங்களைத் துறவாது, துறந்த சிவயோகியின் திருவடியை வாழ்த்தி வணங்காத தேவர் முனிவர் முதலியோரில்லை என்று வேதங்கள் முழங்காநின்றன" என்றிவ்வாறு அல்லமதேவர் வசவண்ணருக்கு அருள்செய்ய, வசவண்ணர் முத

லிய சிவசரணரெல்லோரும் அல்லமரை வாழ்த்தி வணங்கி னார்கள். அல்லமர் இன்னமும் பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசஞ் செய்யும்பொருட்டு, அவரவர்க்குத் தகுதி யான வடிவோடுசென்று உபதேசித்து எங்கும் சஞ்சரித் துக்கொண்டிருந்தார்.

மநோலய கதி முற்றிற்று.

இருபத்தைந்தாவது

மான்மிய கதி

நிலவுலகத்திலுள்ள அடியார்களுக்கெல்லாம் அல்லம தேவர் செய்த நன்றியை, கைலாயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனானவர் தமது இடப்பாகத்தி லமர்ந்திருக்கிற உமாதேவியார்க்குச் சொன்னவிதத்தைச் சொல்லுவோம்.

அல்லமதேவர் வசவண்ணர் முதலிய அடியார்களை அவ்விடத்தில் நிறுத்திவிட்டுப் பூமியிலுள்ள மற்ற அடியார்களுக் கெல்லாம் அருள்செய்யும் தொழிலில் முயன்றுகொண்டிருந்தார். இப்படி யிருக்க, ஸ்ரீ கைலாயத் தில் உமாதேவியானவள் பரமசிவனை நோக்கி, "சுவாமீ! அல்லமதேவது அருளைப் பெறும்பொருட்டுச் சென்ற நந்தி தேவரும், உன் கணங்களும், எனது சாத்துவிகக் கலையா கிய அக்கமாதேவியும் பூமியிற்போய்ச் செய்தகாரியம் யாது? அதனைச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்திக்க, பரமசிவனானவர் சொல்லுற்றார்: "நந்தியானவன் வச வண்ணன் என்னும்பெயர் பூண்டு என்னடியார்களை யா னென்றே பாவித்து, அவர்களுக்கு வேண்டும் பொருள் களைக் கொடுத்துச் சிறப்படைந்தான். உன் சாத்துவிகக் கலையாகிய பெண் மாதேவி யென்னும் பெயர் பூண்டு, மன் மதனது வலியை வென்று, துறவடைந்து ஞானாசாரியனைத் தேடிச்சென்றாள். எமது கணநாதர்கள் எம்மைக் காணுதற் குரிய பல சற்கருமங்களைச் செய்துகொண்டு அவரவர்க்

கிசைந்த இடங்களில் வாழ்ந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் மிகச் சிறந்ததாகிய வீரசைவத்தின் பெருமையை விளங்கச்சொல்லி, அவர்கள் யாவரும் பேரின்பமடையும் வண்ணம் அல்லமர் செய்தார். எல்லாச் சமயங்களிலும் சைவசமயம் சிறந்தது; அதினும் வீர்சைவம் மிகச்சிறந்தது'' என்று சொல்லிச் சிவபெருமான், உமையவளை நோக்கி, ''பெண்ணே! எல்லாச் சமயங்களிலும் சைவம் சிறந்ததென்றும், அதினும் வீரசைவம் சிறந்ததென்றும் காமிகாதி ஆகமங்கள் சொல்லாநின்றன. ஒருவன் எந்தச் சற்கருமத்தைச் செய்தாலும், வீரசைவத்திற் பிரவேசித்தாலன்றி முத்தியடையமாட்டான். வேதம் ஆகமம் இரண்டின் பொருள்களும் தம்முளொத்துப் பிரமத்தை விளங்கக் காட்டுதலால், இந்த இரண்டு நூல்களும் பிரமாணமாகக் கொள்ளத்தக்கன. எமக்கு நிவேதித்த பிரசாதத்தை யுட்கொண்டு சலனமற்றிருத்தல் இந்த வீரசைவத்திலன்றி வேறு மார்க்கங்களில் உண்டோ? ஆதலால் வீரசைவத்தை-மாதேவி, வசவண்ணர் முதலியோர்க்கு அல்லமர் போதித்தார். அன்றியும், முநிவர் சித்தர் யோகர் முதலானோர்க்கும் அவரவர் பக்குவத்திற் கிசைந்தவண்ணம் போதித்து அவர்களை யாட்கொண்டார்'' என்று சொல்லக் கேட்ட உமாதேவியானவள் மனமகிழ்ந்து, ''அல்லமதேவர் மாயையை வென்றாரென்ற உண்மையை தேவரீர் திருப்பவளவாயாற் சொல்ல நானறிந்தேன்'' என்று சொல்லி வணங்கினாள். இதுநிற்க, அல்லமதேவரோ வென்றால், மூத்தவர், இளையவர், முதியோர் என்கிற வேற்றுமை பாராமல், எல்லாவிடத்திலும் பெய்யும் மேகம்போல அருளாகிய மழைபொழிந்து அவர்களை உய்வித்தார். இந்த அல்லமதேவர் சரித்தத்தை யோதினால் அறம்பொருளின்பங்களுண்டாகும்; இதைக் கேட்டோரும் அந்த அறமுதலியவற்றை யடைவர், விவேகமில்லாதவர் விவேகமுள்ளவராவர்; புதல்வர்ப்பேறில்லாதவர் புதல்வரைப் பெறுவர்; செல்வமிலலாதவர்கள செல்வத்தை யடைவார்கள்.

இந்தச் சரிதத்தை ஆயிரத்தைந்நூற்றெழுபத்துநான்காவதாகிய கர வருடம் இடப மாதம் ஆதிவாரத்தில் ஸ்ரீ சிவப்பிரகாசதேசிகர் பாடி முடித்தார்.

இந்தச் சரிதத்தைப் படிப்போனை மானிடனென்று சொல்லவொண்ணாது; பரமசிவனென்றே சொல்லலாம்.

உலகிலுள்ள புண்ணியர் வாழ்க; ஐம்புலன்களை வெல்லத்தகுந்த தவமுதலியவை வாழ்க; சிவபூஜை செய்யும் அடியார்கள் வாழ்க; சைவசமயம் வாழ்க; அல்லமதேவர் சரித்தைக் கேட்க விரும்புவோர் வாழ்க; திருவெண்ணீறு வாழ்க; அதனை யணிவோர் வாழ்க; ருத்ராக்ஷ கண்டிகை வாழ்க; ஸ்ரீ பஞ்சாக்ஷரம் வாழ்க; குருவருள் வாழ்க; மெய்யர் வாழ்க; பிறவியை யொழிக்கின்றவர்கள் வாழ்க.

அல்லமதேவரது சரிதச் செய்யுட்களில் ஒரு செய்யுள் கற்கவல்லவர் அர்த்தஞ் சொல்ல வல்லவராவர். இதுவே நமக்குச் செல்வமென்று அன்பு பாராட்டிச் செவி நிறைத்துக்கொள்ள வல்லவரெல்லோரும் இந்தப் பூலோகத்தில் எக்காலத்தும் வாழ்ந்திருக்கக்கடவர்.

மான்மியகதி முற்றிற்று

பிரபுலிங்கலீலை வசனம்

முற்றிற்று.